வெளியீடு 12-3-2007 | Issued 12-3-2007

758
03.07.07
6
3/7/07

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஆகஸ்ட் 11, 2006—தொகுதி 10—எண் 1

**Friday, the 11th August 2006—Volume 10—No. 1**

C

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

D
V211, 31;Pct
P06-10 1.
227424

11-8-2006

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. அறிவிப்பு—** | |
| பல்கலைக்கழகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம் | 1-3 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) சென்னை, வண்ணாரப்பேட்டையில் மின் கசிவால் ஒருவர் இறந்ததும், சிலர் காயமடைந்ததும் | 4-5 |
| (ஆ) உரங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்தல் | 5 |
| (இ) தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் குறித்து அரசின் நிலையைத் தெளிவுபடுத்துதல் | 7-14 |
| **3. சேலம் மாவட்டம், கருமந்துறை, முந்தைய ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நிவாரணம் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கி வாழ்வளித்த முதலமைச்சருக்கு நன்றியும், பாராட்டும்** | |
| திரு. சி. கோவிந்தசாமி | 6 |

| | பக்கங்கள் |
|---|---|
| **4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்–** | 14-230 |
| (அ) கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | |
| (ஆ) கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | |
| *மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின் | 15,41,65,67, 69-70,71-72, 83,95-96, [illegible] |
| *திரு. கே.பி. அன்பழகன் | 65-79,81,82 |
| *திரு. எஸ்.ஆர். இராஜா | 83-94 |
| திரு. கரி. இராமசாமி | 94-101 |
| திரு. தி. வேல்முருகன் | 104-118,211 |
| *திருமதி ரா. லீமா றோஸ் | 120-125 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 125-132, 166,167,212 |
| திரு. மு. கண்ணப்பன் | 132-137 |
| *திரு. விஜயகாந்த் | 137-145 |
| திரு. வி.எஸ். பாபு | 145-151 |
| திரு. எஸ். ராஜகுமார் | 151-158 |
| திரு. தா. மலரவன் | 158-162 |
| **5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 231 |




## ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, மொலாசஸ், சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி–தமிழ்ப் பண்பாடு மற்றும் கடவுச் சீட்டுகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றம் மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. கூட்டுறவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

கூட்டுறவு மற்றும் புள்ளியியல்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு

7. பொதுப் பணித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற் திட்டப் பணிகள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்

227424
சென்னை-600 009
நூலகம்



9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திச் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. வருவாய் மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள் மற்றும் சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் அளவைகள் குறித்த சட்டம், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

12. சுற்றுலாத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

13. செய்தித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

14. உணவுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் விலைக் கட்டுப்பாடு

15. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

16. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

17. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர்கள், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



18. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

19. கைத்தறித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

20. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல்பொருளியல்

21. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

22. சுற்றுச்சூழல் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு, இஸ்லாமிய அறக்கட்டளை (வக்ஃபு)

23. வனத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனம் மற்றும் சின்கோனா

24. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

25\. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் மறுவாழ்வு

26\. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

27\. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள்

28\. மீன்வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

29\. பால் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

30\. கதர்த் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1\. **Chief Minister** – **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Mines and Minerals, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture and Passports

2\. **Minister for Finance** – **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislature and Elections

3\. **Minister for Electricity and Rural Industries** – **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development, Rural Industries including Cottage Industries and Small Industries

4\. **Minister for Rural Development and Local Administration** – **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Union, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Co-operation** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Co-operation and Statistics

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology and Welfare of Ex-Servicemen

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indian Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act



11. **Minister for Revenue and Law** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Law, Courts, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

12. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

13. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

14. **Minister for Food** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection and Price Control

15. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing and Housing Development, Slum Clearance Board, Accommodation Control and Wasteland Development

16. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

| | | |
|---|---|---|
| 17. Minister for Labour | .. | **The Hon. Thiru T.M. Anbarasan:** Labour, Population, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control, Census, Urban and Rural Employment |
| 18. Minister for Hindu Religious and Charitable Endowments | .. | **The Hon. Thiru K.R. Periakaruppan:** Hindu Religious and Charitable Endowments |
| 19. Minister for Handlooms | .. | **The Hon. Thiru NKK. P. Raaja:** Handlooms and Textiles |
| 20. Minister for School Education | .. | **The Hon. Thiru Thangam Thenarasu:** School Education and Archaeology |
| 21. Minister for Commercial Taxes | .. | **The Hon. Thiru S.N.M. Upayathulla:** Commercial Taxes |
| 22. Minister for Environment | .. | **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:** Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs |
| 23. Minister for Forests | .. | **The Hon. Thiru N. Selvaraj:** Forests and Cinchona |



| | | |
|---|---|---|
| 24. Minister for Highways | .. | **The Hon. Thiru M.P. Saminathan:** Highways and Ports |
| 25. Minister for Social Welfare | .. | **The Hon. Dr. (Tmt.) Poongothai:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Home |
| 26. Minister for Animal Husbandry | .. | **The Hon. Tmt. P. Geetha Jeevan:** Animal Husbandry |
| 27. Minister for Adi Dravidar Welfare | .. | **The Hon. Tmt. A. Tamilarasi:** Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour |
| 28. Minister for Fisheries | .. | **The Hon. Thiru K.P.P. Samy:** Fisheries and Fisheries Development Corporation |
| 29. Minister for Dairy Development | .. | **The Hon. Thiru U. Mathivanan:** Milk and Dairy Development |
| 30. Minister for Khadi | .. | **The Hon. Thiru K. Ramachandhiran:** Khadi and Village Industries Board, Bhoodan and Gramdhan |

# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

## பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

## பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

## மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

## செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 24-7-2006 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. ஊ.கு. சுப்ரமணியன், எம்.ஏ. | - குழு அலுவலர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எல்., பி.எட். | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-I |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடனை |

21. இராமசாமி, திரு. தி. - ஸ்ரீவில்லிபுத்தூர்
22. இராமசுவாமி, திரு. கே.பி. - ராசிபுரம்
23. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
24. இராமச்சந்திரன், திரு. டி. - தளி
25. இராமன், டாக்டர் இஎஸ்.எஸ். - பள்ளிப்பட்டு
26. இராம்பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
27. இராஜா, திரு. எஸ்.ஆர். - தாம்பரம்
28. இராஜேந்திரன், திரு. ஆ. - வீரபாண்டி
29. இராஜேந்திரன், திரு. இரா. - பனமரத்துப்பட்டி
30. இராஜேந்திரன், திரு. க. - ஜெயங்கொண்டம்
31. இராஜேந்திரன், திரு. சபா - நெல்லிக்குப்பம்
32. இராஜ்குமார், திரு. ம. - பெரம்பலூர் (செ.வ.)
33. இளமதி சுப்பிரமணியன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
34. இளவரசன், திரு. வீர. - திருமங்கலம்
35. இளவழகன், திரு. கே.எல். - ஆற்காடு
36. உதயசூரியன், திரு. தா. - சின்னசேலம்
37. உதயம் சண்முகம், திரு. - அறந்தாங்கி
38. உபயதுல்லா, திரு. சி.நா.மீ. - தஞ்சாவூர்
39. உலகநாதன், திரு. கே. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
40. எதிரொலி மணியன், திரு. கோ. - பெரணமல்லூர்
41. ஐயப்பன், திரு. கோ. - கடலூர்
42. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
43. கணேசன், திரு. ஆர்.டி. - தேனி



44. கண்ணப்பன், திரு. மு. - தொண்டாமுத்தூர்
45. கண்ணன், திரு. பெ. - தாரமங்கலம்
46. கண்ணன், திரு. வே. - செஞ்சி
47. கமலாம்பாள், திருமதி பெ. - காஞ்சிபுரம்
48. கருணாநிதி, கலைஞர் மு. - சேப்பாக்கம்
49. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
50. கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. - தென்காசி
51. கலியவரதன், திரு. வீ.ஏ.டி. - முகையூர்
52. கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. - அரவக்குறிச்சி
53. கலைராஜன், திரு. வி.பி. - தியாகராய நகர்
54. காந்தி, திரு. ஆர். - இராணிப்பேட்டை
55. காமராஜ், திரு. பெ. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
56. காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. - மதுராந்தகம்
57. காவேரி, திரு. வை. - எடப்பாடி
58. கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ்.. கலசப்பாக்கம்
59. கீதா ஜீவன், திருமதி பி. - தூத்துக்குடி
60. குணசேகரன், திரு. சு. - சிவகங்கை
61. குணசேகரன், திரு. ம. - மானாமதுரை (செ.வ.)
62. குத்தாலம் க. அன்பழகன், திரு. - குத்தாலம்
63. குமரகுரு, திரு. இரா. - திருநாவலூர்
64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்

66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்காவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. எஸ்.வி. - மதுரை மேற்கு
72. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
73. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
74. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
75. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
76. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
77. சாமி, திரு. ஆர். - மேலூர்
78. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
79. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
80. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
81. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
82. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
83. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
84. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
85. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
86. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்
87. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி



88. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
89. சின்னப்பன், திரு. பொ. - விளாத்திகுளம்
90. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
91. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
92. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
94. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
95. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
96. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
97. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
98. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
99. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
100. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
101. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
102. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
103. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
104. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
105. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
106. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
107. செல்வராஜ், திரு. என். - முசிறி
108. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
109. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி
110. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

| | | |
|---|---|---|
| 111. | சேகர், திரு. எஸ்.வி. | - மயிலாப்பூர் |
| 112. | சேகர்பாபு, திரு. பி.கே. | - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 113. | சௌந்தரபாண்டியன், திரு. அ. | - லால்குடி |
| 114. | சௌந்திரபாண்டியன், திரு. அ. | - குன்னூர் (செ.வ.) |
| 115. | ஞானசேகரன், திரு. சி. | - வேலூர் |
| 116. | ஞானதாஸ், திரு. ஆர். | - சிவகாசி |
| 117. | டில்லி பாபு, திரு. ப. | - அரூர் (செ.வ.) |
| 118. | தங்கமணி, திரு. பி. | - திருச்செங்கோடு |
| 119. | தங்கம் தென்னரசு, திரு. | - அருப்புக்கோட்டை |
| 120. | தங்கவேலன், திரு. சுப. | - கடலாடி |
| 121. | தண்டபாணி, திரு. மா. | - வேடசந்தூர் |
| 122. | தமிழரசி, திருமதி ஆ. | - சமயநல்லூர் (செ.வ.) |
| 123. | தமிழரசு, திரு. அ. | - ஓமலூர் |
| 124. | தமிழ்செல்வன், திரு. சி. | - ஏற்காடு (ஆ.வா.) |
| 125. | தம்பிதுரை, முனைவர் மு. | - பர்கூர் |
| 126. | தர்மலிங்கம், திரு. எல்.பி. | - சத்தியமங்கலம் |
| 127. | தாமோதரன், திரு. செ. | - கிணத்துக்கடவு |
| 128. | தியோடர் ரெஜினால்டு, திரு. த. | - பத்மநாபபுரம் |
| 129. | திருநாவுக்கரசு, திரு. கே. | - உளுந்தூர்பேட்டை (செ.வ.) |
| 130. | துரைக்கண்ணு, திரு. இரா. | - பாபநாசம் |
| 131. | துரை சந்திரசேகரன், திரு. | - திருவையாறு |
| 132. | துரைசாமி, திரு. வீ.பெ. | - சங்கரி (செ.வ.) |
| 133. | துரைமுருகன், திரு. | - காட்பாடி |



| | | |
|---|---|---|
| 134. | துரைராஜ், திரு. சி. | - சேடப்பட்டி |
| 135. | தேன்மொழி, திருமதி எஸ். | - நிலக்கோட்டை (செ.வ.) |
| 136. | நன்மாறன், திரு. என். | - மதுரை கிழக்கு |
| 137. | நெடுஞ்செழியன், டாக்டர் க. | - கபிலர்மலை |
| 138. | நெடுஞ்செழியன், திரு. ரெ. | - புதுக்கோட்டை |
| 139. | நேரு, திரு. கே.என். | - திருச்சிராப்பள்ளி-2 |
| 140. | பதர் சயீத், திருமதி | - திருவல்லிக்கேணி |
| 141. | பத்மாவதி, திருமதி பி. | - நன்னிலம் (செ.வ.) |
| 142. | பரஞ்ஜோதி, திரு. மு. | - ஸ்ரீரங்கம் |
| 143. | பரிதி இளம்வழுதி, திரு. | - எழும்பூர் (செ.வ.) |
| 144. | பலராமன், திரு. பி. | - பொன்னேரி (செ.வ.) |
| 145. | பழனிசாமி, திரு. ஆர்.எம். | - மொடக்குறிச்சி |
| 146. | பன்னீர்செல்வம், திரு. எம். | - சீர்காழி (செ.வ.) |
| 147. | பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | - குறிஞ்சிப்பாடி |
| 148. | பன்னீர்செல்வம், திரு. ஓ. | - பெரியகுளம் |
| 149. | பாண்டுரங்கன், திரு. கு. | - அணைக்கட்டு |
| 150. | பாபு, திரு. வி.எஸ். | - புரசைவாக்கம் |
| 151. | பாரதி மோகன், திரு. ஆர்.கே. | - திருவிடைமருதூர் |
| 152. | பாலபாரதி, செல்வி கே. | - திண்டுக்கல் |
| 153. | பிச்சாண்டி, திரு. கு. | - திருவண்ணாமலை |
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |

157. புஷ்பராஜ், திரு. செ. - கண்டமங்கலம் (செ.வ.)
158. பூங்கோதை, டாக்டர் திருமதி - ஆலங்குளம்
159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். - திருப்பத்தூர்
160. பெரியசாமி, திரு. இ. - ஆத்தூர்
161. பெரியசாமி, திரு. மு.க. - பூம்புகார்
162. பெரியண்ணன், திரு. பி.என். - பெண்ணாகரம்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. - கோயம்புத்தூர் கிழக்கு
164. பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. - பொள்ளாச்சி
165. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
166. பொன்னுசாமி, திரு. கே. - சேந்தமங்கலம் (ஆவா.)
167. பொன்னுதுரை, திரு. செ. - பெருந்துறை
168. போளூர் வரதன், திரு. ம. - செங்கம் (செ.வ.)
169. போஸ், திரு. ஏ.கே. - திருப்பரங்குன்றம்
170. மகேந்திரன், திரு. இ. - உசிலம்பட்டி
171. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)
172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. - திருவோணம்
173. மணி, திரு. எஸ். - பொங்கலூர்
174. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
175. மணி, திரு. ஜி.கே. - மேட்டூர்
176. மதிவாணன், திரு. உ. - திருவாரூர் (செ.வ.)
177. மலரவன், திரு. தா. - கோயம்புத்தூர் மேற்கு
178. மாணிக்கம், திரு. இரா. - குளித்தலை
179. மாரிமுத்து, திரு. வே. - நாகப்பட்டினம்



180. மாலைராஜா, திரு. என். - திருநெல்வேலி
181. முருகவேல், திரு. கே. - முதுகுளத்தூர்
182. முல்லைவேந்தன், திரு. வ. - மொரப்பூர்
183. மூர்த்தி, திரு. டி. - திருப்போரூர் (செ.வ.)
184. மூர்த்தி, திரு. பி. - சோழவந்தான்
185. மேகநாதன், திரு. த.அ. - காவேரிப்பட்டினம்
186. மோகன், திரு. பெ. - ஒட்டப்பிடாரம் (செ.வ.)
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
189. ரங்கநாதன், திரு. ப. - வில்லிவாக்கம்
190. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
191. ரவிக்குமார், திரு. து. - காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
192. ரவிச்சந்திரன், திரு. எல். - சேலம்-I
193. ராணி வெங்கடேசன், திருமதி - சாத்தான்குளம்
194. ராதாகிருஷ்ணன், திரு. ல. - கோவில்பட்டி
195. ராமசந்திரன், திரு. கா. - கூடலூர்
196. ராமநாதன், திரு. கே.வீ. - பவானி
197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். - இளையான்குடி
198. ராஜகுமார், திரு. எஸ். - மயிலாடுதுறை
199. ராஜசேகரன், திரு. மா. - தொட்டியம்
200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பெ. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்

203. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்-2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
221. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி
223. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு



226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
234. (வெற்றிடம்) - மதுரை மத்தி
235. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஆடி 26, விய—திருவள்ளுவர் ஆண்டு 2037

## 2006 ஆகஸ்ட் 11, வெள்ளிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்*
*சொல்தெரிதல் வல்லார் அகத்து"*

மாசற்ற சொற்களைத் தேர்ந்தெடுத்து உரை நிகழ்த்துவோரிடமே அவர் கற்றுத் தேர்ந்த கல்வியின் பெருமை விளங்கும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி(*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 1. அறிவிப்பு

### பல்கலைக்கழகக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமனம்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடு) உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு மாண்புமிகு உறுப்பினர்களிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன.

| | | |
|---|---|---|
| 1 | அழகப்பா பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. கரி. இராமசாமி |

| | |
|---|---|
| 2 அண்ணா பல்கலைக்கழகம் (ஆட்சிக் குழு) | திரு. டி. சுதர்சனம் |
| 3 அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. ஆ. அருண்மொழிதேவன்<br>திரு. ம. போளூர் வரதன்<br>திரு. ஜி.கே. மணி |
| 4 பாரதியார் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. அ. சௌந்திரபாண்டியன் (குன்னூர்)<br>திரு. கோவை தங்கம் |
| 5 பாரதிதாசன் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. அன்பில் பெரியசாமி<br>திரு. என். மாலைராஜா |
| 6 தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. இ.ஏ.பி. சிவாஜி<br>திரு. வே. செந்தில் பாலாஜி |
| 7 சென்னைப் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திருமதி சங்கரவல்லி (எ) சங்கரிநாராயணன்<br>திரு. கோ. ஐயப்பன்<br>திரு. ஞா. செந்தமிழன்<br>திரு. கு. சீனிவாசன்<br>திரு. அருள் அன்பரசு<br>திரு. கி. ஆறுமுகம் |
| 8 மதுரை காமராசர் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. பி. மூர்த்தி (சோழவந்தான்)<br>திரு. ஆர்.டி. கணேசன்<br>திரு. என். நன்மாறன்<br>திரு. சு. குணசேகரன் (சிவகங்கை) |
| 9 மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திருமதி ராணி வெங்கடேசன்<br>டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் |



| | |
|---|---|
| 10 தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் (நிர்வாகக் குழு) | திரு. செ. குருசாமி |
| 11 தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் (நிர்வாகக் குழு) | திரு. ப. ரங்கநாதன் |
| 12 தமிழ் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. துரை சந்திரசேகரன்<br>திரு. து. ரவிக்குமார் |
| 13 பெரியார் பல்கலைக்கழகம் (ஆட்சி மன்றப் பேரவை) | திரு. ஆ. இராஜேந்திரன் (வீரபாண்டி)<br>திரு. எல். ரவிச்சந்திரன் |
| 14 திருவள்ளுவர் பல்கலைக்கழகம் (கல்விக் குழு) | திரு. ஆர். காந்தி<br>திரு. தி. வேல்முருகன் |

தேர்ந்தெடுக்கப்பெறவேண்டிய உறுப்பினர்கள் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்கள் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால் வேட்புமனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிகளுக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சி மன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் 5-12-2007 வரை ஆகும்.

பிற பல்கலைக்கழகங்களின் ஆட்சிக் குழு, ஆட்சி மன்றப் பேரவை, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழுக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர் ஏதாவதொரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

[2006 ஆகஸ்ட் 11

## 2. தகவல் கோரல்

### (அ) சென்னை, வண்ணாரப்பேட்டையில் மின் கசிவால் ஒருவர் இறந்ததும், சிலர் காயமடைந்ததும்

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 6 ஆம் தேதி அன்று புது வண்ணாரப்பேட்டை போஜராஜ நகர் பகுதியிலே ஏற்பட்ட மின் கசிவால் 11 பேர்கள் காயமடைந்து ஸ்டான்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அதில் கார்த்திக், லோகநாதன் என்ற இருவர், மேல் சிகிச்சைக்காக கீழ்ப்பாக்கம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றையதினம் கார்த்திக் என்பவர் இறந்து விட்டார். மேல்சிகிச்சைக்காகத் தொடர்ந்து லோகநாதன் என்பவர் கீழ்ப்பாக்கம் மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருக்கின்றார். இதில் 12 வயதுடைய 3 சிறுவர்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இந்த அரசு அவர்களுக்குப் போதிய சிகிச்சை அளிப்பதோடு இறந்துவிட்ட அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு 5 இலட்சம் ரூபாய் வரையிலாவது நிவாரண உதவி வழங்க வேண்டும். பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்த மக்கள் குடியிருக்கின்ற பகுதியை இரயில்வே நிருவாகம் 3 மாதங்களில் காலி செய்யச் சொல்லியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு மாற்று இடத்தையும் ஒதுக்கித் தர இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9–35

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் தெரிவித்ததைப்போல, வண்ணாரப்பேட்டை, போஜராஜா நகர் குடியிருப்பில் ஏற்பட்ட மின் கசிவால் 11 பேர் காயமடைந்து, இருவர் மருத்துவமனையிலே சேர்க்கப்பட்டபோது, கார்த்திக் என்பவர் 45 சதவிகிதம், burns இருந்த காரணத்தினாலே அவரைக் காப்பாற்ற முடியாமல் இறந்துவிட்டார். அவர் சொன்னதுபோல, லோகநாதனைப் பொறுத்தவரையில் 15 சதவிகிதம்தான் burns இருந்திருக்கிறது. எனவே,





அவருக்கு எந்தவிதமான ஆபத்தும் இல்லை. ஆனால், இறந்துவிட்ட கார்த்திக் குடும்பத்திற்கு நிதியுதவி 5 இலட்சம் ரூபாய் கொடுக்க முடியுமா? என்று கேட்டிருக்கிறார். கடந்த காலத்திலே எந்த அளவிற்கு இந்த மாதிரி நிகழ்வுகளுக்கு நிதி கொடுத்தார்களோ அதைப்போல,-- இதிலே இன்னொரு பிரச்சினை இருக்கிறது. மின்சார இலாகா கொடுப்பதா அல்லது இரயில்வே இலாகா கொடுப்பதா என்ற ஒரு பிரச்சினை இருக்கிறது. ஏனென்றால், இரயில்வே இலாகாவிற்குக் கொடுத்த அந்த மின்சார இணைப்பிலேயிருந்துதான் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இருந்தாலும், இரயில்வே இலாகாவோடு தொடர்புகொண்டு, முடிந்தால் அவர்களிடமிருந்து பெற்றுத் தரவும் அவர்களால் கொடுக்க முடியாவிட்டால், மின்சார வாரியம் அந்த இழப்பீட்டைக் கொடுப்பதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்ற கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எல்லாம் பரிசிலனையில் இருக்கின்றன. அடுத்து, மானியக் கோரிக்கை எண் (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) என்ன, திரு. பொள்ளாச்சி ஜெயராமன், சொல்லுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

### (ஆ) உரங்கள் தட்டுப்பாடின்றிக் கிடைக்கச் செய்தல்

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ நிலை நன்றாகத் தொடங்கி, விவசாயம் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிற நேரத்தில், Super Phosphate, Vijay Complex 17 17, Potash, Urea போன்ற உரங்களுக்கு மாநிலம் முழுவதும் பெரிய அளவில் தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிய வருகிறது. இதுகுறித்து அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து--குறிப்பாக Super Phosphate உரம் தயாரிப்பதே நிறுத்தப்பட்டு இருப்பதாகப் பரவலாக சொல்லப்படுவதால், விவசாயிகளுக்கு அடிஉரம் இட வேண்டிய நேரம் இது. இதற்காக இந்த அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி டெல்டா பகுதியிலே குறுவை சாகுபடிக்கு D.A.P., Super Phosphate, போன்ற உரங்களைத் தேவையான அளவுக்கு வழங்கியிருக்கிறோம். ஆனால், Super Phosphate தயாரிக்கின்ற அந்தக் கம்பெனிகள், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, உற்பத்தியை அவர்கள் குறைத்திருக்கின்றார்கள். D.A.P.–யைப் பொறுத்தவரைக்கும், கூட்டுறவு மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இப்பொழுதும் கையிருப்பு இருக்கிறது. கேட்கக்கூடிய விவசாயிகளுக்கு உரம் வழங்கப்பட்டு வருகிறது.

### 3. சேலம் மாவட்டம், கருமந்துறை, முந்தைய ஆட்சிக் காலத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நிவாரணம் மற்றும் வேலைவாய்ப்பு வழங்கி வாழ்வளித்த முதலமைச்சருக்கு நன்றியும் பாராட்டும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி (குறுக்கீடு) உட்காருங்கள். முடிந்தது, உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில், 2003 ஆம் வருடம் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கல்ராயன்மலையில் கருமந்துறை என்கிற ஊரில் உள்ள ஒரு பள்ளியில் இரவுக் காவலராகப் பணியாற்றி வந்த மாணிக்கம் என்பவர், அவருடைய மகள் பழனியம்மாள், அதே பள்ளியிலே படித்துவந்தார். அந்தப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றிய, ஸ்ரீதர் என்கிற ஒரு காமக் கொடூரனால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டு, மலைவாழ் மக்கள் சங்கம் தொடர்ந்து எடுத்த முயற்சியின் காரணமாக, நீதிமன்றம் வரை சென்று, அந்தத் தவறான நடவடிக்கையில் ஈடுபட்ட ஆசிரியருக்குத் தண்டனையும் பெற்றுத் தரப்பட்டது. ஆனால், பாதிக்கப்பட்ட அந்தப் பெண்ணின் எதிர்காலத்திற்கு நீதிமன்றத்தால் எந்த உதவியும் அறிவிக்கப்படாத நிலையில், கடந்த ஆட்சியாளர்களிடத்தில் பல முறை மனு போட்டும், உதவி எதுவும் கிடைக்காத நிலையிலே, நம்முடைய இன்றைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்தச் செய்தியை எடுத்துச் சென்றோம்.

கருணை உள்ளத்தோடு, பாதிக்கப்பட்ட பலதரப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்கிவரும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே நிதியுதவி வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். அவர், ஏற்கெனவே பல உறுப்பினர்கள் இந்தச் சபையில் சொன்னதைப்போல, கேட்டதை மட்டுமல்ல, கேட்காததையும் வழங்கக்கூடிய முதல்வர் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மேலும் உறுதிப்படுத்துகிற வகையில், மிகுந்த மனிதநேயத்தோடு, அந்தப் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவியும், அந்தப் பெண்ணினுடைய எதிர்காலத்திற்காக, சத்துணவு அமைப்பாளராகப் பணி நியமன உத்தரவும் வழங்கினார். அந்தக் குடும்பத்தின் எதிர்காலத்திற்கு ஒரு சிறந்த வாழ்வளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, மலைவாழ் மக்கள் சங்கத்தின் சார்பிலும், அந்தக் குடும்பத்தின் சார்பிலும் நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.



முற்பகல் 9-40

### 2. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) தரிசுநில மேம்பாட்டுத் திட்டம் குறித்து அரசின் நிலையைத் தெளிவுபடுத்துதல்

**திரு. சி. கோவிந்தசாமி:** அடுத்ததாக, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்காக ஒரு செய்தியை இங்கே எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இந்த அவையிலே பலமுறை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் சம்பந்தமாகவும், அது அமல் நடத்தப்படும் வழிமுறைகள் சம்பந்தமாகவும், தெளிவாக விளக்கியிருக்கிறார்கள். ஆனால், நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இப்பொழுது சிறு குறு விவசாயிகள், இந்த அரசினுடைய நடவடிக்கையால் அச்சத்தோடு வாழ்ந்து கொண்டிருப்பதாகவும், அந்த சிறு குறு விவசாயிகளைப் பாதுகாக்க போராட்டம் நடத்தப் போவதாகவும், ஒரு செய்தியை இன்றைக்கு வெளியிட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்லாமல், நிலப் பங்கீட்டிலே மிகச் சிறப்பான முறையில் பணியாற்றி வருகிற மேற்கு வங்க அனுபவத்தைப் பெறுவதற்காக, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தலைமையிலே ஒரு குழுவை அனுப்பி ஆய்வு செய்வதைப் பற்றி கொச்சைப்படுத்துகிற வகையிலேயும், ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இந்தத் தரிசு நிலம் ஏழைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அவர் ஆட்சியிலே இருந்த காலத்திலே, கம்யூனிஸ்ட் தலைவர்கள் வலியுறுத்தியபோது, அதை ஏற்றுக்கொள்ள மறுத்த அன்றைய முதல்வர், இன்றைக்கு விவசாயிகளைப் பாதுகாப்பதைப்போல (குறுக்கீடுகள்) அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள். சொல்லுங்கள். அவர் சொல்லிக் கொண்டு இருக்கிறார் இல்லையா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நடப்பைச் சொல்கிறார். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் தங்கமணி, அரி, உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, (குறுக்கீடுகள்) கூச்சலிடுவதனாலே மட்டும் உண்மையை மறைத்துவிட முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[2006 ஆகஸ்ட் 11

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலில் உறுப்பினர்கள் உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) அமைச்சர் பதில் சொல்வார், உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** இன்றைக்கு நடந்த நிகழ்ச்சியைத்தான் நான் குறிப்பிடுகிறேன். ஆகவே, எல்லோரும் எழுந்து நின்று சத்தமிடுவதனால் உண்மையை மறைத்துவிட முடியாது என்பதை மீண்டும் அழுத்தமாகப் பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள், உட்காருங்கள், அமைதியாக உட்காருங்கள். முதலில் அமைச்சர் பதில் சொல்லப் போகிறார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. சி. கோவிந்தசாமி:** ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த சிறு குறு விவசாயிகளுடைய நலனைப் பாதுகாக்கக்கூடிய வகையில் அரசின் நிலையை மீண்டும் தெளிவுபடுத்த வேண்டும் என்று நான் தங்கள்மூலம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், கையை நீட்டிப் பேசாதீர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலில். எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) திரு. சண்முகம் உட்காருங்கள். சண்முகம் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எச்சரிக்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் நீங்கள். முதலிலே உட்காருங்கள், உட்காருங்கள் அதற்குப் பிறகு சொல்கிறேன். முதலில் உட்காருங்கள் நீங்கள். திரு. ஜெயக்குமார், not allowed. உட்காருங்கள் முதலில். அமைச்சர் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) பொறுங்கள். நான் அனுமதித்தால்தான் பேச வேண்டும். திரு. சி.வி. சண்முகம், இது முறையல்ல. மீண்டும் மீண்டும் எச்சரிக்கிறேன். உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள் திரு. சண்முகம். (குறுக்கீடுகள்) யாரும் எழுந்திருக்கக் கூடாது. நான் அனுமதித்தாலொழிய எழுந்திருக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) நீங்களும் உட்காருங்கள், கொறடா, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள் நீங்கள். என்னுடைய அனுமதி இல்லாமல் எழுந்து நிற்கக் கூடாது. உட்காருங்கள் முதலில். நீங்கள் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) Not allowed. உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். திரு. சிவபுண்ணியம் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) என் பர்மிஷன் வாங்கித்தான் அவர் சொல்ல முடியும். உட்காருங்கள் முதலில். நான் கொடுக்கவில்லை. (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள், நான் அதற்குப் பிறகு தருவேன். உட்காருங்கள்.



2006 ஆகஸ்ட் 11]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாடு குறித்த ஒரு செய்தியை மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவைக்கு விரோதமானதாகவோ, நாட்டுக்கு விரோதமான செய்தியாகவோ அவர் ஒன்றும் சொல்லவில்லை. முன்னாள் முதலமைச்சர் அவர்களுடைய அறிக்கை தெளிவாக அனைத்துப் பத்திரிகைகளிலும், அனைத்துத் தொலைக்காட்சிகளிலும் தொடர்ந்து சொல்லப்பட்டுக் கொண்டிருக்கிற செய்தி அது. ஆகவே, ஏழைகளுக்கு நிலம் வழங்குகிற இந்தப் பிரச்சினையைப் பற்றி, அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், முன்னாள் முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து இந்தக் கருத்தைப் பற்றி தவறான பிரச்சாரமாக வெளியிடுவதன் மூலமாக, ஏழைகளுக்கு இந்தத் தரிசு நிலங்களை வழங்குவதைப்பற்றி அண்ணா தி.மு.க.விற்கு விருப்பமில்லை. அப்படி வழங்கப்படுமானால், அது திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், இந்தக் கூட்டணிக்கும் மகத்தான ஆதரவாக மாறிவிடும் என்ற காரணத்தினாலே அவர்கள் அச்சப்பட்டு, எப்படியாவது அந்த நல்ல திட்டத்தைத் தடுப்பதற்கான முயற்சியைத் தொடர்ந்து அண்ணா தி.மு.க.வினுடைய உறுப்பினர்களும், அவர்களுடைய தலைவர் அவர்களும் தொடர்ந்து செய்து கொண்டே இருக்கிறார்கள். ஆகவே, நல்ல திட்டத்தை ஏன் அவர்கள் எதிர்க்கிறார்கள்? இதைக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்களா, வேண்டாம் என்று அ.தி.மு.க. சொல்கிறதா? தெளிவாக இந்த அவையில் அறிவிக்க வேண்டுமென்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. அரி, குறுக்கீடு பேச்செல்லாம் இருக்கக் கூடாது, என்ன?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி அவர்கள் பேசுகிறபோது, zero hour என்று சொல்லி ஒரு கருத்தைச் சொன்னார்கள். மற்றொரு கருத்தைச் சொல்வதற்கு இந்த அவையில் இதுவரை அனுமதி அளித்திருக்கிறீர்களா? ஒன்று. இரண்டாவதாக, 94 பேர்களோடு சேர்ந்து 163 பேர் இவர்கள் கூட்டணி என்று சொல்லிக் கொணடு, பிரதான எதிர்க்கட்சியாக இருக்கின்ற எங்களைப் பேசுவதற்கு அனுமதிக்காமல்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொறுங்கள், நீங்கள் பேசுகிறீர்கள் அல்லவா? சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அனுமதிக்க மறுத்து, 163 பேர்களை வைத்து இன்றைக்கு ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறபோது, இந்தப் பக்கத்திலே அவர்கள் அமர்ந்து கொண்டு அவர்களுடைய கூட்டணி என்ற முறையில் வேண்டுமென்றே சில பிரச்சினைகளை எழுப்புவதும், அதற்கு ஆளுங்கட்சியிலிருந்து கருத்துகள் சொல்வதும், எதிர்க்கட்சி மறுக்கின்றபோது அதற்கு அனுமதியளிக்காமல் இருப்பதும், இது அவைக்குச் சரியானதுதானா? இந்த முறையில் அவையை நீங்கள் தொடர்ந்து நடத்தப் போகிறீர்களா என்பதை இந்த அவையின் மூலமாக நாங்கள் தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

*முற்பகல் 9–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே இருக்கிற உறுப்பினர்கள் அனைவருக்கும், ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரே விதமான உரிமைதான் இந்த அவை சட்டப்படி, விதிமுறைப்படி இருக்கிறது. எந்த உறுப்பினருக்கு இந்த நேரத்தில் அவர்களுடைய வேண்டுகோளைச் சொல்லுவதற்கு அல்லது ஒரு பிரச்சினையை எழுப்புவதற்கு உரிமை அளிப்பது என்பது அவைத் தலைவருடைய தீர்மானம். எல்லா நேரத்திலேயும் எதிர்க்கட்சிதான் என்று முறை கிடையாது. சில நேரத்தில்தான் எதிர்க்கட்சிக்கு முதல் உரிமை, வாதத்திலே முதலிலே பங்குகொள்ள வேண்டுமே தவிர, இங்கே கவன ஈர்ப்புத் தீர்மானமோ, அவசரப் பிரச்சினையோ கொண்டு வரப்படுமானால், அப்படிக் கொண்டுவருகிறபோது தனிப்பட்ட உறுப்பினர் என்ற அடிப்படையிலேதான் அந்தப் பிரச்சினையை அவைத் தலைவர் அவர்கள் இந்த அவையிலே எடுத்துக்கொள்ள அனுமதிப்பது மரபு, சட்டம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.தி.மு.க. கொறடா திரு. செங்கோட்டையன் அவர்கள் குறிப்பிட்டார்கள். தோழமைக் கட்சி வரிசையிலே பிரதானக் கட்சியாக இருக்கிற காங்கிரஸ் கட்சி, பா.ம.க., எல்லாம் எழுந்து நின்றோம். எங்களுக்கு அனுமதியை நீங்கள் கொடுக்கவில்லை, அமருங்கள் என்று சொன்னீர்கள் உடனடியாக அமர்ந்துவிட்டோம். ஆனால்,



திரு. சேகர்பாபு அவர்களுக்கும், திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுக்கும் நீங்கள் அனுமதி கொடுத்தீர்கள், மறுக்கவில்லை. இது எந்த வகையிலே எதிர்க்கட்சியை நீங்கள் அடக்குவதாகும்? அதுமட்டுமல்ல, அவர்கள் எழுந்து பேச முற்படுகிறார்கள். எல்லோரும் எழுந்து கொண்டு கூச்சலிடுவது, மற்றவர்கள் மனம் புண்படும்படி பேசுவது எந்தவகையிலே பொருத்தமாக இருக்கும்? ஆகவே, எங்களைப் பொறுத்தவரையிலே தோழமைக் கட்சிகளைவிட, எதிர்க்கட்சிகளுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கிறீர்கள். அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்கள் எதிர்க்கட்சியினுடைய, பிரதான எதிர்க்கட்சிக்காரர்கள் பதில் சொல்லவேண்டும் என்று சொன்னதால் நான் இந்தப் பதிலைச் சொல்லவேண்டிய அவசியம் ஏற்பட்டது. நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசின் சார்பாக 2 ஏக்கர் அல்லது 10 ஏக்கர் கொடுத்தாலும் எங்களுக்கு முழுச் சம்மதம். நாங்கள் மிகுந்த ஆதரவு தரக் காத்துக்கொண்டிருக்கின்றோம். தேர்தல் அறிக்கையில் நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம் கொடுக்கப்படும் என்று சொன்னதனால் திரும்பத் திரும்ப அதைச் சொல்லிக் கொண்டிருக்கின்றோமேயொழிய, அதற்குத் தெளிவான பதிலை அரசிடமிருந்து நாங்கள் கேட்டுப் பெறவேண்டும் என்பதற்காகத்தான் அதை மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம். நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு எந்தக் காலத்திலும் அரசு நிலம் கொடுப்பதை யாரும் தடை சொல்லமாட்டார்கள் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம் அவர்களும் தெளிவாகத் தெரிந்துகொள்ளவேண்டும். நாங்களும்கூட ஆதரவு கொடுக்கின்றோம். அதைக் கொடுப்பதற்குண்டான வழிவகைகளை அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து அரசிடம் எதிர்பார்க்கின்றோம்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுப்பப்பட்டுள்ள பிரச்சினை தரிசு நிலங்களைப் பற்றியது. இந்தத் தேர்தலை முன்னிட்டு வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்குத் தலா இரண்டு ஏக்கர் தரிசு நிலம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அப்படி அறிவித்ததற்கு அடிப்படையாக அமைந்தது எவ்வளவு தரிசு நிலம் இருக்கிறது என்ற அந்தக் கணக்குதான். அந்தக் கணக்கைக் கடந்த காலத்திலே 2001 ஆம்

[கலைஞர் மு. கருணாநிதி] [2006 ஆகஸ்ட் 11

ஆண்டு அ.தி.மு.க.-வினுடைய ஆட்சியில் வெளியிடப்பட்ட அல்லது இந்த அவையில் நிதிநிலை அறிக்கையில் வாசிக்கப்பட்ட, பத்திரிகைகளுக்குத் தரப்பட்ட செய்தி—50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாக அதிலே குறிப்பிடப்பட்டிருந்தது. அது யாருக்குச் சொந்தம், எவருக்குச் சொந்தம் என்ற விவரங்கள் எல்லாம் இல்லை. தரிசு நிலம் தமிழகத்தில் 50 இலட்சம் ஏக்கர் இருக்கிறது. அதை மேம்படுத்தப் போகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. அதை அடிப்படையாக வைத்து திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் அந்த 50 இலட்சம் ஏக்கர் தரிசு நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்குத் தலா இரண்டு ஏக்கர் வீதம் பிரித்துத் தருவோம் என்று குறிப்பிட்டது உண்மை.

முற்பகல் 9–50

அதைப்போலவே, அ.தி.மு.க.-வினுடைய தோழமைக் கட்சியான மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலும் நாங்கள் குறிப்பிட்டிருந்த அதே வாசகத்தை அவர்களும் குறிப்பிட்டிருந்தார்கள். இதிலே ஒரு தவறான கருத்தின் அடிப்படையிலே நாங்கள் முடிவு எடுத்திருந்தால், அதே அடிப்படையிலேதான் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் அந்த முடிவை எடுத்ததாக நான் கருதுகின்றேன். ஒருவேளை அண்ணனும், தம்பியும் சேர்ந்து ஏமாந்திருக்கலாம். அது வேறு விஷயம். ஆனால், நான் இதைக் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த அறிக்கை வெளிவந்து, தேர்தல் முடிந்த பிறகு எதிர்க்கட்சித் தலைவர், அம்மையார் அவர்கள் இந்த அவையிலே பேசும்போது நிலம் அவ்வளவு இல்லை, வேண்டுமென்றே தவறாக தி.மு.க. குறிப்பிட்டிருக்கிறது என்று சொல்லிவிட்டு, நிலத்திற்கு எங்கே போவீர்கள் என்று கேட்டபோது, அதையொட்டி வளர்ந்த விவாதத்தில் நான் இறுதியாகத் தெரிவித்தது, “கை அகலம்”தான் தமிழகத்திலே தரிசு நிலம் இருக்கிறது என்றாலும், அதை ஒரு ஏழை விவசாயிக்குத்தான் தருவேனே அல்லாமல் (மேசையைத் தட்டும் ஒலி) வேறு யாருக்கும் தரமாட்டேன் என்று இந்த அவையிலே நான் சொன்னதை யாரும் மறந்திருக்க முடியாது. ஏடுகளிலே அந்தச் செய்தி வெளிவந்திருக்கிறது. அதற்குப் பிறகு இதைப் பற்றி விவாதங்கள் முற்றிய சூழ்நிலையில் பத்திரிகைகளிலே தெளிவாக ஒரு பக்க விளம்பரமே வெளியிடப்பட்டிருக்கிறது.

மூன்று வகையாக தரிசு நிலங்கள் பிரித்துத் தரப்படும். ஒன்று, அரசுக்குச் சொந்தமான நிலம், அதைப் பிரித்து, மேம்படுத்தி தலா இரண்டு ஏக்கர் வீதம் தரப்படும் என்பது ஒன்று. இரண்டாவது, அரசு தரிசு நிலத்தை



2006 ஆகஸ்ட் 11] [கலைஞர் மு. கருணாநிதி]

யாராவது ஆக்கிரமித்திருந்தால், அவர்களை அணுகி, அவர்களிடமிருந்து பறித்து அல்ல, அவர்களை அணுகி, அந்தத் தரிசு நிலத்தை அரசே செப்பனிட்டுத் தரும் என்று சொல்லி, செப்பனிட்டு அவர்களுக்கே திருப்பிக் கொடுத்துவிடுவது; மூன்றாவது, நெடுங்காலமாக ஒருவருக்குப் பட்டா நிலமாக, தரிசு நிலம் இருந்தால், அவர்களிடத்திலே கேட்டு, உங்களுக்கு விருப்பம் இருந்தால் இதை அரசாங்கம் மேம்படுத்த அனுமதியுங்கள்; இல்லாவிட்டால் தேவையில்லை, உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது என்று கூறி, விரும்பினால் பெற்று, அதைப் பண்படுத்தி, அவர்களிடமே ஒப்படைப்பது என்று இப்படி மூன்று வகையாக தரிசு நிலத்தைப் பங்கிட்டுத் தருவது என்ற முறையில்— அது 50 இலட்சமா, 60 இலட்சமா என்பதைவிட கொடுக்கின்ற அந்த ஒரு தன்மை அரசிடமும், அதைப் பெறுகின்ற நிலை ஏழையெளிய விவசாயிகளிடமும் ஏற்படக்கூடும் என்பதாலும், மிக முக்கியமாக தரிசு நிலங்களின் மேம்பாட்டால் உற்பத்திப் பெருகும் என்ற நோக்கம் நிறைவேறவும், வேலைவாய்ப்புகள் விரிவடையும் என்ற நோக்கத்தின் அடிப்படையிலும், ஏழை விவசாயிகள் தங்களுடைய தனி நபர் வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள இயலுமென்ற அடிப்படையிலும், இந்தக் காரணங்களால் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற நாங்கள் ஒல்லும் வகையெல்லாம் முயன்று வருகின்றோம்.

இதை விமர்சனங்களுக்காகவோ அல்லது வேடிக்கை, கிண்டல் இவற்றிற்காகவோ, தரிசு நிலங்களை ஏழைகளுக்கு ஒப்படைப்பதா என்கின்ற ஒரு நிலப்பிரபுத்துவ ஆதிக்கத்தின் மனப்பான்மைக்குப் பயந்தோ இந்த அரசு செயல்படத் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த அவைக்குத் தெரியும், 30 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று இருந்த நில உச்சவரம்பை, 15 ஸ்டாண்டர்டு ஏக்கர் என்று மாற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அதன் காரணமாக பல இலட்சம் ஏக்கராக்களை ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளித்த அரசுதான் திராவிட முன்னேற்றக் கழக அரசு.

அதுமாத்திரமல்ல, பொதுவுடைமை இயக்கத்தினுடைய மாபெரும் தலைவர், மணலி கந்தசாமி அவர்களே வந்திருந்து பாராட்டிய திருத்துறைப்பூண்டி நிகழ்ச்சியில், குடியிருப்பு மனைகளை விவசாயிகளுக்குச் சொந்தமாக்கி, ஒரே நாளில் இரண்டு இலட்சம் பேருக்கு அந்தக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் பல நாட்கள் இரத்தம் சிந்திப் போராடியும் கிடைக்காத ஓர் உரிமையை கருணாநிதி ஒரு துளி மையால் சாதித்தார் (மேசையைத் தட்டும் ஒலி) என்று மணலி கந்தசாமி அவர்களே பாராட்டுகின்ற அளவுக்கு, நிலங்களை ஏழையெளியவர்களுக்குத்

தருவதிலே இந்த அரசு பெருந்தன்மையோடு, பொதுவுடைமைத் தத்துவக் குறிக்கோளோடு, அந்த முற்போக்கு எண்ணத்தோடு செயல்பட்டு வருகிறது.

முற்பகல் 9–55

இப்பொழுதும் நான் எதிர்க்கட்சியைக் கேட்டுக்கொள்கிறேன். இங்கே எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் பேசினார்கள். 'வரவேற்கிறேன் 10 ஏக்கர்கூட கொடுங்கள்' என்று சொன்னார்கள். நீங்கள் அப்படிக் கொடுப்பதற்கான யோசனைகளைச் சொல்லுங்கள். "இதை எதிர்ப்போம், இதை நாங்கள் செயல்பட விடமாட்டோம் என்ற தோரணையிலே போராடுவோம்" என்று பத்திரிகைகளிலே தலைப்பு வருகின்ற அளவிற்குச் செய்திகளைத் தராதீர்கள். ஏழைகளுக்குச் செய்யக்கூடிய நன்மைகளை, அவர்களுக்காக நாங்கள் செய்கின்ற இந்தச் சாதனைகளை, யார் தடுத்தாலும், நாங்கள் அதற்காக அஞ்ச மாட்டோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாத்திரம் தெரிவித்து, என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த அலுவலுக்குப் போகிறோம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) 2006–2007 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் (குறுக்கீடு) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) நிரம்ப விளக்கமாக, தெளிவாகச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) எல்லோருக்கும் புரிந்துவிட்டது. (குறுக்கீடு) உங்களுக்கு மட்டும் புரியவில்லையா? (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு)

## 4. மானியக் கோரிக்கைகள், 2006–2007, விவாதமும் வாக்கெடுப்பும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 10 நிமிடம் முடிந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, "அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்ற ஒரு சிறப்பான திட்டம் உருவாக்கப்பட்டிருந்தது. ஆக, அந்தத் திட்டத்தைத்தான் கடந்த கால உங்களுடைய ஆட்சியிலே மாற்றி, அதை "நமது கிராமம் திட்டம்" என்ற அடிப்படையிலே, அந்தத் திட்டத்தை உருவாக்கித் தந்தீர்கள். அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் அடிப்படையிலே, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி உறுப்பினருடைய தொகுதியிலே, ஒரு கிராமத்தை எடுத்து, அதனுடைய அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலே, அந்தத் திட்டம் நடந்தது. ஆனால், உங்களுடைய ஆட்சிக் காலத்திலே, "நமது கிராமம் திட்டம்" என்ற பெயரிலே அந்தத் திட்டத்தை உருவாக்கி, ஒவ்வொரு கிராமத்திற்கும் 1 இலட்சத்து, 15 ஆயிரம் ரூபாய் முதற்கட்டமாக, அடுத்த கட்டமாக 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் நிதியை வழங்கினீர்கள். அந்த நிதியைப் பொறுத்தவரையிலே, ஏதோ குறைந்த அளவிலே சாலைகள் அமைக்க அல்லது குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய வகையிலேதான், அந்த நிதி பயன்படுததப்பட்டதே தவிர, சிறப்பான வகையிலே அது கிராம மக்களுக்குப் பயனளிக்கவில்லை. அதனால்தான் இப்பொழுது மீண்டும் கலைஞர் தலைமையிலே அமைந்திருக்கக்கூடிய இந்த ஆட்சி, "அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" என்று ஒரு சிறப்பான திட்டத்தை உருவாக்கி,

ஒவ்வொரு கிராமத்திற்கும் 20 இலட்சம் ரூபாய், அதற்காக நிதியையும் ஒதுக்கியிருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், 12 நிமிடம் ஆகிவிட்டது. 10 நிமிடம்தான் கொடுக்கப்பட்டது. சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு, ஒரு கோடி ரூபாய் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும், ஒரு ஊராட்சிக்கு வழங்கப்பட்டது என்று சொன்னார். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, நான்கு ஆண்டுகள், 843 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, 276 கோடியே 88 இலட்சம் ரூபாய்தான் வழங்கப்பட்டிருக்கிறது. மீதியை, அனைத்துத் துறைகளின் வாயிலாக அப்படியே செலவழிக்கப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல்தான், இன்று அறிவித்திருக்கின்ற, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தையும், மற்றத் துறைகளிலிருந்து வருகின்ற பணத்தைச் சேர்த்துதான் 20 இலட்சம் ரூபாய் வழங்கப் போகிறீர்கள். அதேபோல, ஊக்க நிதியாக 6 சதவிகிதம் வழங்கப்படுவதையும், அதற்காகச் செலவழிப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆகவே, மற்றவற்றையெல்லாம் ஒருங்கிணைத்துச் செலவழித்துவிட்டு, தனியாக வழங்குவதுபோல, இங்கே ஒரு மாயையை உருவாக்கியிருக்கிறீர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகள் என்னும் உள்ளாட்சி அமைப்புகளின் எண்ணிக்கை அதிகமாக இருக்கும் ஒரே மாநிலம் நம் தமிழ்நாடுதான். மத்திய அரசின் பல்வேறு திட்ட நிதிகள், சிறப்புச் சிற்றூராட்சிகளுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காக, 561 பேரூராட்சிகளைச் சிறப்புச் சிற்றூராட்சிகளாக வகைப்படுத்தி, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதனுடைய நோக்கம் அனைத்துப் பகுதிகளுக்கும் அடிப்படை வசதிகளையும், உள்கட்டமைப்பு வசதிகளையும் தரவேண்டும் என்பதேயாகும். அனைத்துப் பகுதிகளிலும் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தால்தான், அந்த மக்களின் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டு, வாழ்க்கைத் தரம் உயர்வதற்கு உதவியாக இருக்கும் என்பதால்தான், பேரூராட்சிகளைச் சிறப்புச்



சிற்றூராட்சிகளாக மாற்றினார்கள். மத்திய அரசால், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், தமிழகத்தின் நிலை உயர்த்தப்பட்டு, நற்பெயர் கிடைக்கக்கூடாது என்று இங்கேயிருப்பவர்களின் தூண்டுதலால், அந்த முயற்சிகளுக்குத் தடையாக இருந்தார்கள். தற்போது புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் இந்த ** அரசானது, பழைய நிலை தொடர அறிவித்ததிலிருந்து—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புச் சிற்றூராட்சிகளின் வளர்ச்சியை இந்த அரசு சீர்குலைக்கின்ற போக்கினைக் கடைப்பிடிக்கின்றது என்பது தெரிகிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அனைத்து நல்ல திட்டங்களையும் தொடர்வோம் என்று சொல்கின்ற இந்த அரசு இந்தத் திட்டத்தை ஏன் கைவிட்டது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அடுத்து, உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா. (குறுக்கீடுகள்) அவரை முடிக்கச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) சீக்கிரம் பேசி முடியுங்கள். முடியுங்கள் சீக்கிரம். 10 நிமிடங்கள் கொடுத்தேன். 14 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று இந்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை குறித்து அளிக்கப்பட்டுள்ள விவரங்களில், சென்னை மாநகராட்சி பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதில், சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், மாநகராட்சி வரலாற்றிலே இல்லாத அளவிற்கு, 10 ஆண்டுகளுக்குப் பின்னர் 2003-லிருந்து 2006 வரை சுமார் 632.19 கிலோ மீட்டர் நீளத்திற்கு ரூ.30 கோடியே 52 இலட்சம் செலவிலே, நடைபாதைகள் எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் புதுப்பித்துத் தரப்பட்டன. 100 ஆண்டு கால பாரம்பரியமிக்க பூங்காக்கள்கூட, காய்ந்து, கருகி இருந்த நிலையை மாற்றி, பூத்துக் குலுங்குகின்ற பூந்தோட்டமாக மாற்றி, "பசுமை நகரம்" என்று பெயரெடுத்த பெங்களூரையும் பின்னுக்குத் தள்ளிக்காட்டி, சென்னை மாநகருக்குப் பெருமை சேர்த்தவர் எங்களது அம்மா அவர்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முற்பகல் 10-25

சென்னை நகரமே குப்பை இல்லா நகரமாகத் திகழ்கிறது. அதற்குக் காரணம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய நடவடிக்கை. அந்தவகையில், அன்று மேயராகவும், இன்று உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களின் காலத்தில், சென்னை மாநகராட்சியின் உட்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்காக, 1996 முதல் 2001 வரை செலவிடப்பட்ட தொகை ரூ. 164.89 கோடி. 2001-2006 ஆம் ஆண்டில் எங்களது அம்மா அவர்களுடைய ஆட்சியில் செலவிடப்பட்ட தொகை 281.44 கோடி ரூபாய்.

அதேபோல, பேருந்து செல்லும் சாலைகளைச் சீரமைப்பதற்காக 1996-இல் இருந்து 2001 வரை செலவிடப்பட்ட தொகை 41.34 கோடி ரூபாய். 2001 முதல் 2006 வரை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்தில் செலவிடப்பட்ட தொகை ரூபாய் 120 கோடி. இப்படி மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்துப் பிரிவுகளிலுமே அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காக புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேபோன்று, 2001 ஆம் ஆண்டு ரூ. 232 கோடியாக இருந்த சென்னை மாநகராட்சியினுடைய கடனை, ரூ. 108 கோடியாகக் குறைத்ததும் எங்களுடைய அம்மா அவர்களுடைய ஆட்சிதான் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டவனாக இருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த ஒப்புவமைகளை இங்கே ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், உள்ளாட்சித் துறையின் ஓர் அங்கமான ஒரு மாநகராட்சிக்குப் போதிய நிதி ஒதுக்கி திறம்பட நடத்துவதற்கு வழிவகைக் காணாதவர்கள், எப்படி இவ்வளவு பெரிய துறையில் தமிழகம் முழுவதும் நிதியை ஒதுக்கீடு செய்து நிர்வகிக்கப் போகிறார்கள் என்ற ஐயம் எனக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் எழுதி வைத்து வாசிக்கிறீர்கள். அமைச்சர் கையில் கொடுங்கள், படிப்பார்கள். (குறுக்கீடுகள்) அடுத்த உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, (குறுக்கீடுகள்) அவர் எழுதி வைத்திருக்கிறார். இன்னும் 10 பக்கங்களை வைத்துக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) (கூச்சல் - குழப்பம்) முடியுங்கள், ஒரு நிமிடத்தில் முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். திரு. அன்பழகன், ஒரு நிமிடம், உடனே முடியுங்கள்.



**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய கோரிக்கைகளை எல்லாம் அமைச்சரிடம் கொடுத்தால், அமைச்சர் செய்து தருவார். (குறுக்கீடுகள்)

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவியேற்றபோது கடுமையான குடிநீர்ப் பஞ்சம் நிலவியது. அன்று பல்வேறு வகைகளிலே அம்மா அவர்கள் முயற்சி எடுத்து, பணச் செலவினைப் பற்றிக் கவலைப்படாமல், குடிநீர் எங்கெல்லாம் கிடைக்கின்றதோ, அங்கிருந்தெல்லாம் குடிநீர் பெற்று மாநகர மக்களின் குடிநீர் தாகத்தைத் தீர்த்தார்கள். இந்த நடவடிக்கையால்தான் மாநகரைவிட்டு மக்கள் குடிபெயர இருந்த நிலை மாற்றப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்ப்பதற்காகத்தான், கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தையும், புதிய வீராணம் திட்டத்தையும் செயல்படுத்த எங்கள் அம்மா அவர்கள் முடிவெடுத்தார்கள். இதில், புதிய வீராணம் திட்டத்தின்மூலம், மாநகர மக்களுக்கு தினந்தோறும் 180 M.L.D நீரானது தற்போது கிடைத்துக்கொண்டிருக்கின்றது. 2005 ஆம் ஆண்டுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவர் அளித்த அறிக்கையில், புதிய வீராணம் திட்டத்தில் பல்வேறு காரணங்களைக் குறிப்பிட்டு, 295 கோடி ரூபாய் கூடுதல் செலவு என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதற்கான போதிய விளக்கங்கள் அவர்களுடைய அறிக்கையிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அமைச்சர், (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசுகிறார்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அமைச்சர் பேசுகிறார்கள். அமைச்சர் பேசுகிறார்கள், எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். (கூச்சல்—குழப்பம்)

***மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே முதலமைச்சர் அவர்கள் ஒரு குழு நியமிக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். அதைவிட, நான் தெரிந்துகொள்ள விரும்புவது, அந்த வீராணம் குடிநீர் திட்டத்திலே இரண்டு tenders வந்தன. இரண்டு பேர்தான் tender போட்டார்கள். அதிலே L&T-ஐ reject செய்துவிட்டு, மலேஷியா

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2006 ஆகஸ்ட் 11

நிறுவனத்தின், single tender மட்டும்தான் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேண்டுமானால், முன்னாள் அமைச்சர் அந்த இரண்டு டெண்டரிலே ஒன்றை ஏன் நிராகரித்தீர்கள் என்பதற்கான விளக்கம் சொல்ல முடியுமானால் சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அன்பழகன், சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடு)...

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, தேவையில்லாமல் எழுந்து நிற்காதீர்கள். உட்காருங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் கேட்ட கேள்விக்கு விளக்கத்தை நான் தருகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் விளக்கம் கொடுத்ததெல்லாம் போதும். உங்களுடைய point-ஐச் சொல்லி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** அமைச்சர் கேட்டிருக்கிறார். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ... (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று கத்தக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஒட்டுமொத்தமாக எழுந்து நின்று சத்தம்போடக் கூடாது. உட்காருங்கள். அன்பழகன், நீங்கள் எல்லாம் எழுதி வைத்திருக்கின்றீர்கள் அல்லவா, எழுதி வைத்திருக்கிறதை அமைச்சரிடம் கொடுங்கள், செய்து தரச் சொல்கிறேன். அவரிடம் கொடுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.பி. அன்பழகன்:** இதை எப்படிக் கொடுக்கமுடியும்? (கூச்சல்—குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள், பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.பி. அன்பழகன்:** கடந்த இரண்டு தினங்களாக, அந்த அறிக்கையிலுள்ள, தங்களுக்கு வேண்டிய ஒருசில பகுதிகளை மட்டும் இந்தச் சட்டமன்றத்திலே எடுத்துக்கூறி, தவறு நடந்திருப்பதைப்போல காட்ட முயற்சிக்கின்றார்கள். இந்தத் துறையின் அமைச்சராக இருந்தவன் என்ற முறையிலே சில விவரங்களைக் கூற விரும்புகின்றேன்.



2006 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதாவது, திரு. அன்பழகன், Auditor Report-ஐ criticize பண்ணக்கூடாது. முதலில் அதைத் தெரிந்துகொள்ளுங்கள். உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர்.

முறபகல் 10-30

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது யாரோ, தி.மு.க.வோ அல்லது காங்கிரசோ தயாரித்த அறிக்கை அல்ல. ஆடிட்டர் ஜெனரல் தயாரித்த அறிக்கை. நான் கேட்க விரும்பிய கேள்விக்கு அவர் பதில் சொல்லவில்லை. நான் கேட்க விரும்புவது, புதிய வீராணம் திட்டத்திற்கு டெண்டர் கேட்டீர்கள். இரண்டு பேர் அதிலே கலந்துகொண்டார்கள். ஒரு நிறுவனம் மலேசிய நிறுவனம். இன்னொரு நிறுவனம் தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய எல். & டி. நிறுவனம். எதற்காக எல். & டி. நிறுவனத்தை பரிசீலனை செய்யாமலேயே, அதை நிராகரித்துவிட்டு சிங்கிள் டெண்டராக மலேசிய நிறுவனத்திற்கு நீங்கள் அந்தப் பணியை வழங்கினீர்கள் என்பதற்குத்தான் விளக்கம் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில் இருக்கிறது. நான் பின்பு சொல்கிறேன். இதை எதற்கு (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். நீங்கள் 20 நிமிடங்களாக பேசிக் கொண்டிருக்கின்றீர்கள். 10 நிமிடங்கள்தான் அனுமதிக்கப்பட்ட time. 20 நிமிடங்களாக நீங்கள் உரையாற்றுகிறீர்கள். (குறுக்கீடுகள்) உடனே முடியுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்காகக் கடனை திருப்பிச் செலுத்த நீண்ட கால அவகாசத்தைத் தர L.I.C. நிறுவனம், முன்வந்த காரணத்தினால், சென்னை குடிநீர் வாரியம், L.I.C.-யிடமிருந்து கடன் பெற்றது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முடிக்கப் போகிறீர்களா, அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லவா?

**திரு. கே.பி. அன்பழகன்:** பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பதில் சொல்வதாகச் சொல்லியிருக்கிறார். பதிலைச் சொல்லிவிடுங்கள் – பதிலைச் சொல்லச் சொல்லுங்கள். பதில் சொல்லாமல் அடுத்ததற்குப் போனால் என்ன அர்த்தம்? பேரவைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்வது பதில் இருந்தால் பதில் சொல்லட்டும். அதைவிட்டுவிட்டு, மறுபடியும் படித்தால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) அதற்கு பதில் சொல்லுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, L.I.C. நிறுவனம் என்பது மத்திய அரசு நிறுவனம். (குறுக்கீடுகள்) தனிப்பட்ட நபரிடமோ அல்லது வட்டிக் கடைக்காரர் மூலமோ வாங்கப்பட்டது அல்ல. L.I.C.-யிடமிருந்து கடன் பெற்றது. இதனால் அதிக வட்டிக்கு L.I.C. மூலம் கடன் பெற்றதால், அரசுக்கு நஷ்டம் என்று தணிக்கையிலே சுட்டிக்காட்டியுள்ளதை அ.தி.மு.க அரசு முறைகேடு செய்ததாக எவ்வாறு கூற முடியும்? இதிலே முறைகேடு எங்கே வந்தது? அதேபோன்று ஒப்பந்தம் அளிப்பதிலே எந்தவித...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பர்ட்டிகுலராக ஒரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்லிவிட்டு, பிறகு நீங்கள் விளக்கத்தைச் சொல்லுங்கள். அந்தக் கேள்விக்குப் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு வேறு எதை எதையோ பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) அதைச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், அதாவது சிங்கிள் டெண்டரை நீங்கள் accept செய்திருக்கிறீர்கள் என்று அமைச்சர் சொல்கிறார்கள். அதற்கு பதில் சொல்லுங்கள். அதற்குரிய கருத்தைச் சொல்லுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** அதற்குக் காரணத்தைச் சொல்லுங்கள். அதற்குரிய காரணத்தைச் சொல்லச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அதற்காக L.I.C.-கருப் போனால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.





***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அன்பழகன் அவர்கள் பதில் சொல்லித்தான் தீர வேண்டுமென்று யாரும் கட்டாயப்படுத்த முடியாது. பதில் சொல்லக்கூடிய ஆற்றல் இல்லாதவர் அல்ல அவர். பதில் சொல்லக்கூடிய சரக்கு இருந்தால் நிச்சயமாக சொல்வார். அவரை யாரும் வலியுறுத்தி, பதில் சொல்லித்தான் தீரவேண்டும் என்று சொல்வது முறையல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடியுங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்தம் அளிப்பதில் எவ்வித காலதாமதமும் செய்யப்படவில்லை. ஒப்பந்தப் புள்ளியில் குறிப்பிடப்பட்டிருந்த கால அவகாசம் 180 நாட்களுக்குள்ளேயே ஒப்பந்தம் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் வீராணம் திட்டத்தில் மே 2004 லிருந்து தண்ணீர் வரத்துத் தொடங்கியது. அக்டோபர் 2004-லிருந்துதான், கணிசமான அளவிற்கு தண்ணீர் வரத்து இருந்தது. அதுவரை சென்னை நகர மக்களின், அப்போதிருந்த கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கிட போர்க்கால நடவடிக்கையாக, தொலைதூர நீராதாரங்களிலிருந்து லாரிகள் மூலமாக, தண்ணீர் கொண்டு வர, சென்னை குடிநீர் வாரியமானது, ரூ.163.82 கோடி செலவினம் மேற்கொண்டது. இதை எவ்வாறு முறைகேடு என்று கூற முடியும்? வீராணம் திட்டப் பணிகளுக்காக, ஒப்பந்த ஆணைகள் ஜூலை 2002-லே வழங்கப்பட்டபோது, குறைந்த விலைப்புள்ளி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதோ பாருங்கள். 23 நிமிடங்கள் ஆகிவிட்டன. (குறுக்கீடுகள்) நீங்கள் தேவையில்லாமல் அவையினுடைய நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கின்றீர்கள். (குறுக்கீடு) அடுத்த உறுப்பினரைப் பேசச் சொல்லப்போகிறேன்.

**திரு. கே.பி. அன்பழகன்:** இல்லை, ஜூலை 2002-ல் வழங்கப்பட்டபோது, குறைந்த விலைப்புள்ளி கோரிய தேர்ந்தெடுக்கப்பட்ட ஒப்பந்ததாரர், இரும்பு விலை வெகுவாக உயர்ந்ததன் காரணமாக, ரூ.152 கோடி, கூடுதல் தொகையை ஆகஸ்ட் 2002-லே கோரினார். எனவே, அவர் செலுத்திய பிணைத் தொகை 1.52 கோடி ரூபாயை வாரியம் இரத்து செய்து அந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சு நடத்தி குறைந்த விலைப்புள்ளியை அளித்தவருக்கு பணி ஆணை வழங்கி பணி செய்து முடிக்கப்பட்டது. இதனால் ஏற்பட்ட காலதாமதத்திற்கு, அ.தி.மு.க. அரசு வேண்டுமென்றே முறைகேடு செய்ததாகத் தவறான தகவலை எவ்வாறு இந்த அரசு வெளியிடுகிறது? அதேபோல, வெள்ளோட்டத்தினால் ஏற்படும் வேகமான...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எதைப்பற்றிப் பேசினாலும், அதைப்பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால், ஆடிட்டர் ரிப்போர்ட்டைப்பற்றி இங்கே குறை கூறுவதற்கு யாருக்கும் உரிமையில்லை. இது மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனம். (குறுக்கீடுகள்) மத்திய அரசாங்கத்தினுடைய நிறுவனம். சுதந்திரம்பெற்ற காலத்திலே இருந்து அந்த நிறுவனம்தான் இந்த ஆட்சியினுடைய எல்லாத் துறைகளையும் தணிக்கை செய்கிறது. அந்த அறிக்கைமீது விவாதம் நடத்தலாமே தவிர, அதிலே குறிப்பிட்டிருப்பவை எல்லாம், அவ்வளவும் தவறு என்று யாரும் விவாதிப்பதற்கு உரிமை இல்லை. வேண்டுமானால் அரசாங்கம் அதற்கு விளக்கம் தரலாம். அதிலே ஏதாவது தவறு இருந்திருக்குமானால். ஆனால், கடந்தகால ஆட்சியிலே மட்டுமல்ல; தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, சில துறைகளிலேகூட, 1 இலட்சம் ரூபாய், 2 இலட்சம் ரூபாய் அரசுப் பணம் வீணாக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். எந்த ஆட்சிக் காலத்திலே தவறு நடந்தாலும், அதை Auditor General Report-லே குறிப்பிடுவார்கள். அதைப்போலத்தான் இந்த ஆண்டு புதிய வீராணம் திட்டத்திலே 24.5 கோடி ரூபாய் வீணடிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை இந்த அவையிலே பேசுவது சரியல்ல.

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் தணிக்கைத் துறை ஆய்வு செய்து அறிக்கை அளித்ததற்குப் பிறகு, அதை மீண்டும் ஓராண்டு காலம் கழித்து, அரசுத் துறை அதிகாரிகளைக் கலந்து, இதிலே தவறுகள் இருக்கின்றனவா இல்லையா என்பதை ஆய்வு செய்கின்ற நிலையும் இருக்கிறது. ஆகவே, அதைக் கொடுத்தவுடனேயே அதுதான் தீர்ப்பு என்று நீங்கள் நினைத்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Speaker sir... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த உறுப்பினர். (குறுக்கீடு) மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர். (குறுக்கீடுகள்) எல்லோரும் சும்மா இருங்கள்.

***மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர், மதிப்பிற்குரிய திரு. அன்பழகன் அவர்கள் பேசும்போது இந்த ஆட்சியைப்பற்றி ** என்று சொன்னார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்பட்டு விட்டது.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று, அதிலே சென்னையிலே மேயராக, பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற அண்ணன் தளபதி அவர்களை, சட்டம் கொண்டு வந்து பதவி நீக்கம் செய்தவர்கள், majority-ஐப் பற்றிப் பேசுவது எந்தவிதத்திலே நியாயம் என்பதை உங்கள் மூலமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. அன்பழகன். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். சும்மா இருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) அவர் பேசி முடிக்கட்டும். உறுப்பினர், நீங்கள் பேசி முடியுங்கள். ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள். 27 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1968-லே ஆரம்பித்து, 1975 வரை முயன்று, கோடிக்கணக்கில் பணம் செலவழித்து, பின்னர் கைவிட்ட வீராணம் திட்டத்தினை இந்த தி.மு.க அரசு சாதிக்க முடியாததை, "வீராணம் திட்டம், ஒரு வீணான திட்டம், நிறைவேற்றவே முடியாது" என்று சொல்லிய (மேசையைத் தட்டும் ஒலி) வீணர்கள் வாயடைத்துப் போகும் வகையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா. (குறுக்கீடுகள்) முடியாது. எவ்வளவு நேரம் அவர்பாட்டிலே பேசிக்கொண்டிருப்பது? (குறுக்கீடு) அவர்பாட்டிலே பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு) எதிர்கட்சித் துணைத் தலைவருக்குச் சொல்கிறேன். உங்கள் உறுப்பினர் எழுதிவைத்து, வாசித்துக்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கொண்டிருக்கிறார். நான் அப்போதே சொல்லிவிட்டேன் அமைச்சரிடம் கொடுங்கள் என்று. அதற்குப் பிறகும் வாசித்துக்கொண்டே இருந்தால் என்ன அர்த்தம்? மாண்புமிகு உறுப்பினர் திரு எஸ்.ஆர். இராஜா. (குறுக்கீடு) திரு. எஸ்.ஆர். இராஜா, பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடந்து முடிந்த 13-வது சட்டப் பேரவைத் தேர்தலில், தாம்பரம் தொகுதியில்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசி முடியுங்கள். மற்றவர்கள் உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.பி. அன்பழகன்:** சென்னை முதல் சேத்தியாத்தோப்பு வரை நினைவுச் சின்னங்களாகவும், சாலையோரங்களில் போக்கற்றவர்களின் புகலிடங்களாகவும் இன்றைக்குக் காட்சியளித்துக் கொண்டு, சர்க்காரியா கமிஷனை நினைவுபடுத்திக் கொண்டிருக்கின்ற நிலைவினை மாற்றி, தமிழகத்து மக்களின் தாகத்தைத் தீர்த்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு சென்னை மாநகர மக்களுடைய...

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மிக அதிகமாகப் போகிறார். நீங்கள் அதிக நேரம் கொடுக்கக் கொடுக்க, அவரும் அதிகமாகப் போய்க் கொண்டிருக்கிறார். சர்க்காரியா கமிஷனுடைய தீர்ப்பு என்ன என்றே தெரியாமல் இங்கே உளறிக் கொட்டுவது சரியல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) சர்க்காரியா கமிஷனுடைய தீர்ப்பில், வீராணம் திட்டத்தைப்பற்றிய ஆய்வில், அந்த விசாரணையில், எந்தக் குற்றச்சாட்டும், ஊழலும், இதிலே சொல்லப்பட்டாலும், அவை எல்லாம் நிரூபிக்கப்படவில்லை என்றுதான் சர்க்காரியா கமிஷன் தீர்ப்பு அளித்திருக்கிறது. அதைப் படித்துப் பார்த்துவிட்டு அவர் பேசுவது நல்லது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, பேசுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.



முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அ.தி.மு.க.-வைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் அவர்கள் பேசுகிறபோது, அவர்கள் ஆட்சியிலே நிதி ஒதுக்கீடு அதிகமாக இருந்ததாகவும், அதற்கு முன்பு இருந்த தி.மு.க. ஆட்சியிலே நிதி ஒதுக்கீடு குறைவாக இருந்ததாகவும் ஒரு கணக்கை இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஒரு விளக்கம் தர விரும்புகிறேன். நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையிலே, ஒவ்வொரு வருடமும் மத்திய அரசினுடைய வருவாய்களும், அதேபோல, மாநில அரசினுடைய வருவாய்களும் அதிகரித்துக் கொண்டுதான் இருக்கும். எனவே, திட்டங்களுக்கான ஒதுக்கீடு அந்தச் சூழ்நிலையிலே அதிகரிக்கப்படுகிறது. எனவே, முந்தைய ஆண்டுகளின் ஒதுக்கீடுகளைவிட இந்த ஆண்டு கூடுதலான நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் விவரமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சென்ற ஆண்டு உங்களுடைய ஆட்சிக் காலத்திலே நீங்கள் சொன்ன அடிப்படையிலே, திருத்திய மதிப்பீட்டின்படி, 2,919 கோடி ரூபாய். இந்த ஆண்டு, இப்பொழுது இருக்கக்கூடிய ஆட்சியிலே ஒதுக்கீடு செய்திருக்கக்கூடிய தொகை 3,212 கோடி ரூபாய் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இருங்கள். உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட நேரம் 10 நிமிடங்கள். ஆனால், நீங்கள் எடுத்துக்கொண்டது 29 நிமிடங்கள். இதற்கு மேலே அனுமதிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் எஸ்.ஆர். இராஜா.

***திரு. எஸ்.ஆர். இராஜா:** நடந்து முடிந்த பதின்மூன்றாவது சட்டப் பேரவைத் தேர்தலில் தாம்பரம் தொகுதியில் (குறுக்கீடுகள்) 48,752 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெறுகின்ற சூழ்நிலையை உருவாக்கிக் கொடுத்த அஞ்சுகத் தாயின் புதல்வர், முத்தமிழ் அறிஞர், செம்மொழிச் செம்மல், இந்தியாவின் தலைவர் கலைஞர்போல் இன்னொரு தலைவர் இல்லை ... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதிக்க முடியாது. உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** ....என்று சொல்லும் அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) 83 வயதிலும், 69 ஆண்டு பொது வாழ்க்கையிலும், ஐந்தாவது முறை தமிழக முதலமைச்சராக சாதனைப் படைத்தவர். (மேசையைத் தட்டும் ஒலி) நடந்து முடிந்த சட்டப் பேரவைத் தேர்தலிலே உலக மக்களே மூக்கின்மீது விரல் வைத்து வியக்கும் அளவிற்கு தமிழகத்தில் அலை கடல் என..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இடையூறு செய்தீர்கள் என்றால் அவையிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் முதலிலே. (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மக்கள் சேரும் அளவிற்குப் பிரச்சாரத்தை செய்து வெற்றி வாகை சூடியவர். இது தலைவரின் வியர்வைக்குக் கிடைத்த வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் தலைவர்களில் கலைஞரே முதுபெரும் தலைவராகவும், இந்திய நாட்டின் பல பிரதமர்களையும், பல குடியரசுத் தலைவர்களையும் உருவாக்கிய..(குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதி இல்லை சார். நேரத்தைப் பாருங்கள். 29 நிமிடங்கள் கொடுத்திருக்கிறேன். அதற்கு மேலே அனுமதி இல்லை. உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** ஒடுக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கும் அல்லும் பகலும் அயராது உழைக்கும் மக்கள் தலைவர் கலைஞரோடு பணியாற்ற எனக்குக் கிடைத்த வாய்ப்பு, என் தாய் செய்த புண்ணியம் என்று இந்த நேரத்திலே கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ், தமிழன், தமிழ் நாடு, என்று தமிழ் மூச்சாக வாழும் எங்கள் கழகத்தின் பொதுச் செயலாளரும், அவை முன்னவரும், இனமானப் பேராசிரியர் அவர்களையும் வணங்கி மகிழ்கின்றேன். தமிழகத்தில் இலட்சோப இலட்சம் இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும், கழகத்தின் மாநில இளைஞர் அணிச் செயலாளராகவும், தளபதியாகவும் திகழ்ந்து வரும் எங்கள் தளபதியே, (மேசையைத் தட்டும் ஒலி) தாம்பரம் நகராட்சியில் இரண்டு முறை நகர மன்றத் தலைவராகப் பணியாற்றுவதற்கு அடித்தளம் அமைத்துக்கொடுத்து, என்மீது அக்கறையும் கொண்டு, என் வெற்றிக்கு வீரத் திலகம் இட்டவர். நான் பெற்ற வெற்றிக்கு மட்டுமல்லாமல், இந்த அவையிலே பேசிய ஜனநாயக முற்போக்குக் கூட்டணி உறுப்பினர்கள் வெற்றிக்கும் தளபதிதான் காரணம் என்று இந்த அவையிலே உச்சரிக்காத உறுப்பினர்களே இல்லை



என்று சொல்லும் அளவிற்குத் தமிழகம் முழுவதும் சுற்றி வந்து, தமிழகத்திலே பெரும்பான்மை அரசு அமையக் காரணமாக இருந்தவர் கழகத் துணைப் பொதுச் செயலாளர் எங்கள் தளபதியே ஆவார். என் வெற்றிக்கு உழைத்திட்ட ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களுக்கும், கழகத் தோழர்களுக்கும், தோழமைக் கட்சித் தோழர்களுக்கும், கழக நண்பர்களுக்கும், தாம்பரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்கள் தளபதி மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்பான முறையில் தனது பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றார்கள். இந்தியாவில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் மேயர் என்ற பெருமையோடும், இரண்டுமுறை மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர், எழில்மிகு சென்னையை உருவாக்கி, (மேசையைத் தட்டும் ஒலி) ஆசியாவிலேயே சிறந்த மேயர் என்றும் பிரேசில் நாடு அழைத்து தளபதியைப் பாராட்டியது. இந்தப் பாராட்டு தளபதிக்கு மட்டும் அல்லாமல், எங்கள் கழகத்திற்கும், தமிழகத்திற்கும், இந்தியாவிற்குமே கிடைத்த பாராட்டு. (மேசையைத் தட்டும் ஒலி) ஆற்றல் பெற்ற எங்கள் தளபதி பொறுப்பேற்றுள்ள உள்ளாட்சித் துறை மானியத்திலே பங்கேற்று என் கன்னிப் பேச்சில் கருத்துகளைத் தெரிவிப்பதில் நான் பெருமைப்படுகின்றேன்.

நான் இரண்டு முறை நகர மன்றத் தலைவர் பொறுப்பில் இருந்த காரணத்தினால், உள்ளாட்சி நிர்வாகத்திலே சில பிரச்சினைகள் இருக்கின்ற காரணத்தினால், இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை நான் முழுவதும் படித்திருக்கின்றேன். எந்தக் கோரிக்கையை, எந்தத் திட்டத்தை, எப்படி எடுத்துச் சொல்வது என்று சொன்னால், நேரம் போதாத ஒரு சூழ்நிலை இருந்தாலும், நீண்ட இடைவெளிக்குப் பிறகு உள்ளாட்சித் தேர்தல்களை இந்த அரசுதான் 1996 ஆம் ஆண்டு வெற்றிகரமாக நடத்தி, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்பில் உள்ளாட்சி நிர்வாகத்தையும், பெண்களுக்கு 33 சதவிகித இட ஒதுக்கீட்டையும், இந்தியாவிலேயே முதன்முதலாகக் கொடுத்தவரும், 73 மற்றும் 74–வது இந்திய அரசியலமைப்புச் சட்டத் திருத்தங்களுக்குப் பிறகு, நடந்து முடிந்த முதல் முன்னோடியான தேர்தலாக இது அமைந்தது. அந்த அமைப்புகளுக்கு உரிய காலத்தில் தேர்தல்கள் நடத்தப்படும் என்று நிதிநிலை அறிக்கையிலே உறுதி அளித்திருப்பது மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

தேர்தல்களைத் தள்ளிப்போடப் பார்க்கிறார்கள் என்று வதந்தி பாப்பியவர்களுக்குச் சரியான பதிலாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

*முற்பகல் 10-45*

உள்ளாட்சி நிர்வாகம் சிறப்பாக நடைபெற அவற்றிற்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். சிறிய பணிகளுக்குக்கூட அரசு அதிகாரிகளின் ஒப்புதல் தேவை என்ற நிலை மாறினால்தான் நல்லது. கடந்தகால ஆட்சியில் இருந்ததுபோல் அல்லாமல். ஒவ்வொரு செயல்பாட்டுக்கும் ஏதாவது ஒருவகையில் வெளிக் கட்டுப்பாடு உள்ளது. புதிய குடிநீர் பொதுக் குழாய் தேவை என்று சொன்னாலும், சென்னையில் அனுமதி பெற வேண்டும். புதிய சோடியம் ஆவி விளக்கு அமைக்க வேண்டுமென்று சொன்னாலும், கட்டுப்பாடு; சிமெண்ட் சாலை அமைக்க வேண்டுமென்று சொன்னாலும், கட்டுப்பாடு என்று நிர்வாக ரீதியில் நிறைய கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டுள்ளன. உள்ளாட்சி மன்றங்களின் பொறுப்பில் உள்ள கடமைகளையாவது முழுமையாகச் செயலாற்ற அனுமதிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.மு.க. ஆட்சியில் விளம்பரப் பலகைகளின் மீதான விளம்பர வரி விதிக்கவும், கேபிள் வரியை விதிக்கவும், உரிய வரம்பு நிர்ணயித்தது. உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. ஆனால், அவற்றை அ.தி.மு.க. ஆட்சியில் உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து பறித்து, விளம்பரப் பலகை அமைக்க உரிமம் வழங்கவும், விளம்பரப் பலகையில் உள்ள விளம்பரத்திற்கு வரி விதிக்கும் அதிகாரத்தை மாவட்ட ஆட்சியருக்கும், கேபிள் வரி விதிக்கும் அதிகாரத்தை விற்பனை வரித் துறைக்கும் மாற்றி உத்தரவு பிறப்பிக்கப்பட்டன. இழப்பீட்டுத் தொகை தருவதாகச் சொல்லப்பட்டது. ஆனால், அதுவும் வழங்கப்படவில்லை. எனவே, இந்த இரண்டு பொறுப்புகளையும் மீண்டும் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டும். கடந்த மூன்றாண்டுகளில் வசூலித்த தொகையையும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் சட்டமன்றத் தொகுதி மிகப் பெரிய தொகுதியாகும். எட்டு இலட்சத்திற்கும் மேல் வாக்காளர்கள் உள்ளனர். திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக உயர்த்த நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது. தாம்பரம் சென்னையின் நுழைவு வாயிலாக உள்ளதோடு, சுற்று வட்டாரத்தில் நிறைய தொழில்கள் தொடங்கப்பட்டு பெரும் வளர்ச்சியைக் கண்டு வருகின்றது.



திட்டமிட்ட வளர்ச்சியைக் காண்பதற்காக நகர எல்லைகளை விரிவுபடுத்த வசதியாகவும், சென்னையின் நெரிசலைக் குறைக்கவும் தாம்பரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதி முழுமையையும் உள்ளடக்கிய தாம்பரம் மாநகராட்சியை உருவாக்க வழிவகுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தாம்பரம் மட்டுமல்லாமல், அதை ஒட்டியிருக்கின்ற பல்லவபுரம், அதை ஒட்டியிருக்கின்ற ஆலந்தூரையும் இணைத்தால்கூட, தாம்பரம் தொகுதியில் எட்டு இலட்சத்து எண்பதாயிரம் வாக்குகள் என்று சொன்னால், எல்லாம் சேர்த்தால் 10 இலட்சம் வாக்காளர்கள் இருந்தாலே ஒரு மாநகராட்சியாக தரம் உயர்த்த தகுதியுண்டு என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு வருவாயிலிருந்து 8 விழுக்காடு உள்ளாட்சி மன்றங்களுக்குப் பிரித்து வழங்குவதற்கு 1997 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது முதன்முறையாக ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்தத் தொகை கிடைத்ததிலிருந்து உள்ளாட்சி மன்றங்களின் நிதிநிலை மேம்பட்டுள்ளது. கூடுதலான மூலதனப் பணிகள் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. சென்ற ஆட்சியில் இதே 8 விழுக்காடு பகிர்வு தொடர்ந்து வந்திருந்தாலும், கணிசமான தொகை இன்னும் நிலுவையில் விடுபட்டுள்ளதாக அறிகிறேன். நிலுவையில் உள்ள தொகை முழுவதையும் உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்க வழிவகை செய்யுமாறு இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

நகர மன்றக் கூட்டங்கள் நடைபெறுவதற்கான விதிகள் மிகவும் பழமையானவை. சுமார் நூறாண்டுகள் பழமையானவை. தற்போதுள்ள சூழ்நிலைக்கேற்பவும், மன்றக் கூட்டங்கள் சுமூகமாக நடைபெறவும், நிர்வாகம் சீராக இயங்குவதற்கும் புதிய நடைமுறை விதிகள் கொண்டு வரப்பட வேண்டும்.

தமிழ்நாடு நகராட்சிச் சட்டம், 1920 மற்றும் கூட்ட நடைமுறை விதிகள் தமிழில் இல்லை. தொடர்ந்து சட்டப் புத்தகம் அரசு வெளியீடு பல வருடங்களாக வரவே இல்லை. தமிழில் சட்டமும், விதிகளும் வெளியிடப்பட்டால், பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நகர்ப்புற அமைப்புகளின் உறுப்பினர்களுக்குப் பயன்படுவதோடு, பொது மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும். மன்ற நிர்வாகமும் மேம்படும்.

குறிப்பாக, நகராட்சிக் கட்டடங்களையும், வணிக வளாகங்களையும் காலி இடங்களையும் குத்தகைக்கு விட்டு நகராட்சிகள், மாநகராட்சிகள்,

பேரூராட்சிகள் நல்ல வருமானம் ஈட்டி வந்தன. தற்போது இதில் மிகுந்த குழப்பம் நிலவுகிறது. பெரும்பான்மையான சொத்துகள் உள் குத்தகைக்கு விடப்பட்டு, பல வருடங்களாக நகர்ப்புற அமைப்புகளின் உரிமைகள் பாதிக்கப்பட்டு வருமான இழப்பு ஏற்பட்டு வருகிறது. நகராட்சிகளுக்கு வரவேண்டிய வருமானத்தைத் தனியார் கைப்பற்றி வருகிறார்கள். இதில் ஒரு தெளிவான கொள்கை முடிவும், ஏற்கெனவே பல வருடங்களாக ஏலத்தில் எடுக்காமலும், உள் குத்தகை விட்டும் இலாபம் சம்பாதித்து வரும் இனங்களைத் திரும்பப் பெற்று, பொது ஏலத்திற்குக் கொண்டு வருவது குறித்து தெளிவான விதிகளைப் பிறப்பித்தால் நல்லது. உள்ளாட்சிக்கு வருவாய் பெருகவும், உயரவும் இது உதவும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த G.O. 147–லே, ஒருவர் குத்தகை எடுத்திருந்தால், கணவர் இறந்துவிட்டால்கூட, துணைவியாருக்கு அந்தக் கடை கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

நகர்ப்புற அமைப்புகளின் கடன்கள் சுமார் ஆயிரம் கோடியைத் தாண்டிவிட்டது. இவற்றில் பெரும் பகுதி குடிநீர்த் திட்டங்களுக்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், நகராட்சிகள், மாநகராட்சிகள் சார்பாகப் பெற்ற கடன்கள் ஆகும். தண்ணீர்ப் பற்றாக்குறையினாலும், அதிகமான திட்டச் செலவுகளினாலும், பராமரிப்புச் செலவினங்களாலும், நகர்ப்புற அமைப்புகள் கடனை உரிய நாளில் திரும்பச் செலுத்த முடியாமல் அல்லல்படுகின்றன. இக்கடன் தொகையின் ஆண்டு ஈவுத் தொகையை நகர்ப்புற மன்றங்களுக்கு வழங்கப்படும் 8 விழுக்காடு அரசு வருவாய்ப் பகிர்மானத்தில் பிடித்துக்கொள்ளப்படுவதால், நிர்வாகச் செலவுகளுக்கும் முதலீட்டுத் திட்டச் செலவுகளுக்கும் நகர்ப்புற அமைப்புகள் மிகவும் சிரமப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** தி.மு.க. ஆட்சியின்போது சுமார் 20 நகராட்சிகளுக்கு, வட்டித் தொகையைக் குறைக்கவும், தள்ளிப் போடவும், அசல் தொகையைச் சற்று காலம் கடந்து செலுத்தத் தொடங்கவும் சலுகைகள் தரப்பட்டன. அதனைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த சில ஆலோசனைகளும் வழிகாட்டிகளும் தரப்பட்டன. ஆனால், கடந்த ஐந்தாண்டுகளில் இந்த இனங்களின்மேல்



நடவடிக்கை எதுவும் தொடர்ந்து எடுக்காததோடு, கடன் நிவாரணம் தருவது குறித்த இரண்டாவது தமிழ்நாடு நிதி ஆணையத்தின் பரிந்துரைகளும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. எனவே, நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிதிநிலையையும் சிரமத்தையும் கருதி, அவற்றிற்குக் கணிசமான கடன் சலுகை அளிக்க வேண்டுமென இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்பற்றிய மாநில அளவிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், அதேபோல் ஊரக உள்ளாட்சி அமைப்புகள்பற்றிய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய இரு உயர்மட்டக் குழுக்கள் தி.மு.க. ஆட்சியில் ஏற்படுத்தப்பட்டன. கடந்த ஐந்தாண்டு காலத்தில் இதுபற்றி போதிய கவனம் செலுத்தப்படாததால், உள்ளாட்சி மன்றங்களின் பொதுப் பிரச்சினைகளுக்குப் போதிய தீர்வுகள் காணப்படாமலேயே நிலுவையாக உள்ளன. உள்ளாட்சிப் பிரதிநிதிகளுடன் சேர்த்து, உயர்மட்டக் குழுவில் பொதுப் பிரச்சினைகள் விவாதிக்கப்பட்டு, தீர்வு காணப்பட்டால் உள்ளாட்சி நிர்வாகம் சீர்படும்.

உள்ளாட்சித் தேர்தல்களில் சில பதவிகளுக்கு அரசியல் கட்சி ரீதியாகவும், சில பதவிகளுக்கு அவ்வாறில்லாமலும் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. நகர்மன்றத் தலைவர் தேர்தல்கள் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறையை மாற்றி, மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை அவசரச் சட்டம்மூலம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக, சட்டமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி மாறினால் நடவடிக்கை எடுக்கச் சட்டம் இருப்பதுபோல், நகர்மன்ற, மாநகராட்சி மன்ற உறுப்பினர்களும் மற்றும் கட்சி சார்பாகப் போட்டியிட்டுத் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் கட்சி மாறினால் நடவடிக்கை எடுக்க சட்டம் கொண்டு வருவதுபற்றி அரசு பரிசீலிக்கலாம்.

அரசியலமைப்பு சட்டத் திருத்தம் 73–வது மற்றும் 74–வது திருத்தங்களின்படி, இத்திருத்தங்களுக்கு முரண்பாடாக உள்ள மாநில மற்றும் மத்திய அரசு சட்டப் பிரிவுகள், திருத்தச் சட்டங்கள் அமலுக்கு வந்த ஓராண்டிற்குப்பின் செல்லத்தக்கதல்ல என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. கேரளாவில் இதுபோன்ற முரண்பாடான சட்டப் பிரிவுகளை மாற்ற பொதுவாக ஒரு மசோதா கொண்டு வந்து அனைத்துச் சட்டங்களுக்கும் திருத்தம் கொண்டு வந்துள்ளனர்.

அதுபோல் இங்கும் முரண்பாடான சட்டப் பிரிவுகளை ஆராய்ந்து - உதாரணமாக, நகாமைப்பு சட்டப் பிரிவுகள், குடிநீர் வடிகால் வாரிய சட்டப் பிரிவுகள் - அவற்றைத் தக்க முறையில் மாற்றியமைக்கத் திருத்தங்கள் கொண்டு வருவது பற்றிப் பரிசீலிக்கலாம். தொழிற் தகராறு சட்டம் மற்றும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், அடுத்து நிறையப் பேர் பேசவேண்டி இருக்கிறது. அமைச்சர் நிறையப் பேச வேண்டி இருக்கிறது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மத்திய அரசின் தொழிற் தகராறு சட்டம் மற்றும் குறைந்தபட்ச ஊதியச் சட்டம் ஆகியவை உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்குப் பொருந்தும்படியாக உள்ளன. உள்ளாட்சி மன்றங்கள் மாநில அரசு சட்டங்கள், விதிகள் மற்றும் ஆணைகளின்படியே தங்கள் ஊழியர்களுக்கு ஊதியம் வழங்கி வருகின்றன. அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளே அவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. இந்நிலையில் இவ்விரண்டு சட்டங்களையும் உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்குப் பொருத்துவது சரியல்ல. எனவே, இச்சட்டங்களிலிருந்து உள்ளாட்சி மன்ற ஊழியர்களுக்கு விலக்கு அளிக்கப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாடு பஞ்சாயத்து சட்டம் பிரிவு 114 (2)-ல், ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் பல்வேறு அரசுத் துறைகள் நடைமுறைப்படுத்தும் திட்டங்களின் செயலாக்கத்தை ஆய்வு செய்ய ஊராட்சி ஒன்றிய மன்றங்களுக்குப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேபோல் மாநகராட்சி, நகராட்சி உள்ளிட்ட இதர நகர்ப்புற அமைப்புகளில் நடைபெறும் இதர துறையினரின் வளர்ச்சிப் பணிகள் குறித்த செயலாக்கத்தை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆய்வு செய்ய பஞ்சாயத்து சட்டத்தில் உள்ளது போன்ற ஏற்பாடுகள் நகர்ப்புற அமைப்புகளுக்கான சட்டங்களிலும் தக்க ஏற்பாடுகள் தேவை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், நாம் ரோடு போட்டுக் கொண்டு போனால், இன்னொருவர் வெட்டிக் கொண்டே இருப்பார். டெலிபோன் இலாகாவில் வெட்டிக் கொண்டே இருப்பார்கள். மற்ற இலாகாவில் இருந்து வருவார்கள். ஒரு co-ordination இல்லாமல் நகராட்சிக்குப் பெரும் பணம் செலவாகிறது என்பதைத்தான் இந்த நேரத்தில் சொல்கிறேன்.

அனைத்து உள்ளாட்சி மன்றங்களிலும் தொழில்கள் நடத்த தொழில் உரிமங்கள் 'அச்சமும் அருவருக்கத்தக்கதுமான தொழில் உரிமங்கள்'



என்ற பெயரில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பெயரை முதலில் மாற்றி, 'தொழில் உரிமங்கள்' என்று எளிமையாக அழைக்கலாம். மேலும் உரிமங்கள் பெறவேண்டிய இனங்களின் பட்டியல் முப்பது ஆண்டுகளுக்கு முன்னர் திருத்தப்பட்டது. அதற்குப்பிறகு பல்வேறு வகையான புதிய தொழில்கள் உள்ளாட்சிப் பகுதிகளில் நடத்தப்படுகின்றன. எனவே, உள்ளாட்சித் தொழில் உரிமங்களுக்கான பட்டியலைத் தற்போது நிலவிவரும் சூழ்நிலைக்கேற்ப மாற்றி, விரிவுபடுத்தி, ஆணை பிறப்பித்தால், உள்ளாட்சி மன்றங்களின் நிதிநிலை சிறப்பாக இருக்கும்.

முற்பகல் 10-55

மூன்று அடுக்கு முறையில் மாவட்டத் திட்டக் குழு என்ற ஒன்று செயல்படாத வகையிலே இருக்கின்றது. அதை முறையாகச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். மூன்றடுக்கு ஊராட்சி இணைப்பு. அதையும் இன்றைக்கு நம்முடைய அரசு வரவேற்றிருக்கிறது. அதையும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு நலத் திட்டப் பணிகள் தேர்ந்தெடுக்கும் பொறுப்பை உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் கூட்டுப் பொறுப்பில் ஒப்படைத்தால், பயனாளிகள் தேர்வில் நெறிமுறைகள் ஏற்படும் என்று நான் கருதுகின்றேன்.

இந்த T.N.U.D.P. உலக வங்கி, அதாவது T.N.U.D.P.-ல் ஆரம்பித்து T.N.U.D.P.-லே இரண்டும் மற்றும் மூன்றும் நம்முடைய ஆட்சியில்தான் நடைபெற்று இன்றைக்குப் பல்வேறுபட்ட வளர்ச்சிப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புதுப்பித்தல் திட்டத்தை இன்றைக்கு மத்திய அரசாங்கம் கொண்டு வந்தாலும், அதிலே மாநில சர்க்காரை ஈடுபடுத்தி நடத்தவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இலட்சக்கணக்கான சென்னை மக்களிடம் வாக்குகளைப் பெற்று 23 ஆண்டுகளுக்குப் பிறகு 1996 ஆம் ஆண்டு தேர்தலில் பல தடைக்கற்களை மீறி, 2001 ஆம ஆண்டு நம்முடைய சென்னை மாநகா மேயராகப் பொறுப்பேற்று அருமபணியாற்றிய மாண்புமிகு உள்ளாட்சி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** குறிப்பாக, சென்னையிலே மேம்பாலங்கள். அந்த 10 மேம்பாலங்களில் மட்டும் சற்றேறக்குறைய 9 மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு இருக்கின்றன. அதற்கு 30 கோடி ரூபாய் அரசாங்கத்திற்கு நிதி. அத்தகைய பெருமை சேர்த்தவர். இன்றைக்கு நகராட்சி, மாநகராட்சி, பேரூராட்சி, சிற்றூராட்சி, சிறப்புச் சிற்றூராட்சி இப்படிப் பல்வேறுபட்ட அமைப்புகள் இருந்தாலும் 561 பேரூராட்சிகளை மாற்றியமைத்து குறிப்பாக 90 ஆயிரம் lay out-களை தமிழகம் முழுவதும் அடிப்படை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க முடியாமல் இருந்த நீண்ட கால பிரச்சினையைப் பொதுமக்கள் நலன் கருதி தீர்த்து வைத்து சாதனை நிகழ்த்தியவர் நம்முடைய தளபதி என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நகராட்சி மன்றத் தேர்தலில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி. (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முடிக்கமாட்டேன் என்கிறீர்களே, நான் எத்தனை தடவை சொல்வது? முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** இல்லை, இன்னும் தொகுதிப் பிரச்சினையே சொல்ல வரவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது எல்லாம் இருக்கட்டும். எழுதிக் கொடுங்கள் அவரிடம்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** தொகுதிப் பிரச்சினையிலே, குறிப்பாக இன்றைக்கு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அமைச்சரிடம் எழுதிக் கொடுங்கள். அமைச்சர் நிறையப் பேச வேண்டியிருக்கிறது.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** இரண்டே இரண்டு பிரச்சினையை மட்டும் குறிப்பாகச் சொல்லிவிடுகின்றேன். நான் மீதியை வேண்டுமானால் அப்படியே எழுதிக் கொடுத்துவிடுகின்றேன். தாம்பரம் தொகுதி மிகப் பெரிய தொகுதியாகும். சுமார் 8 இலட்சத்து 80 ஆயிரம் வாக்காளர்களைக் கொண்டதாகும். இப்பொழுது மக்களின் தேவை மிக அதிகமாக இருக்கிறது. குறிப்பாக பெருங்குடி பகுதியிலே...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா, சீக்கிரம் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நன்றி சொல்லுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** ஒரே ஒரு நிமிடம். குறிப்பாக பெருங்குடி பகுதியிலே கல்லுக்குட்டை என்ற ஒரு பகுதி இருக்கின்றது. அந்தக் கல்லுக்குட்டை பகுதியிலே 310 ஏக்கர் பரப்பளவில் சற்றேறக்குறைய 9 ஆயிரம் குடும்பங்கள் இருக்கின்றன. அந்த 9 ஆயிரம் குடும்பங்களுக்கு குடிப்பதற்குத் தண்ணீர் இல்லை, பொதுக் கழிப்பிடம் இல்லை. எந்த ஒரு வசதியும், படிப்பதற்குக்கூட குழந்தைகளுக்கு வசதி இல்லை. இரவு நேரத்திலே படிப்பதற்கு விளக்குகள்கூட இல்லை. ஆனால், அதற்கு நீதிமன்ற உத்தரவு இருக்கிறது என்று தெரியும். கடந்த கால ஆட்சியிலே, அதிமுக ஆட்சியிலே அவர்கள் நேராக கோட்டைக்கு வந்தார்கள். ஆனால், அடித்து விரட்டப்பட்டார்கள். நான் சொல்ல வருவது என்னவென்று சொன்னால், சென்னையை ஒட்டியிருக்கின்ற இந்தப் பகுதியிலே கண்ணகி நகர், செம்மஞ்சேரி போன்ற பகுதிகளிலே பல்வேறு திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஒன்று அடிப்படை வசதிகளை அவர்களுக்கு செய்து கொடுங்கள், இல்லையேல் அதற்கு மாற்று வழி செய்யுங்கள் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன். அதைத் தொடர்ந்து விமானதளம். இப்பொழுது தாம்பரம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராஜா, நீங்கள் நகர் மன்றத் தலைவராக எல்லாம் இருந்திருக்கிறீர்கள். எனக்குத் தெரியாதா? ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** விமானதளம் விரிவாக்கம் என்பது சென்னையை ஒட்டிய பொழிச்சலூர் பகுதி, பம்மல் பகுதி, அனகாபுத்தூர் பகுதி, கவுல்பஜார் போன்ற பகுதிகளிலே இன்றைக்கு அது ஒரு பெரிய பிரச்சினையாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்றைக்குப் பத்திரிகையிலேகூட பார்த்திருக்கலாம். பிரதமரைச் சந்திக்கக்கூடிய ஒரு சூழ்நிலை. இப்போது காண வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். நான் தயவுசெய்து

சொல்கிறேன், இன்னும் ஒரு பிரச்சினையைக்கூட நான் இங்கே எடுத்துக் கூறவில்லை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொடுத்துவிடுங்கள். அமைச்சரிடம் கொடுத்துவிடுங்கள். செய்து கொடுப்பார்கள்.

**திரு. எஸ்.ஆர். இராஜா:** இதிலே நன்றியைக்கூட நான் சொல்லவில்லை. ஒரே ஒரு கருத்தை மட்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் நிறைய நேரம் பேச வேண்டியிருக்கிறது. உட்காருங்கள். திரு. இராமசாமி, பேசுங்கள் (குறுக்கீடு) மீண்டும், மீண்டும் சொல்லியாகிவிட்டது. கேட்கமாட்டேன் என்கிறார். பேசுங்கள். இராமசாமி பேசுங்கள்.

*முற்பகல் 11-00*

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை என்பது மிக முக்கியமான துறையாகும். இந்த உள்ளாட்சித் துறைதான் ஏழை எளிய மக்களுக்கு நேரடியாக பல நன்மைகளைச் செய்வதற்கு ஒரு சிறந்த துறையாக இன்றைக்கு தமிழகத்திலே அமைந்திருக்கிறது. உள்ளாட்சித் துறைக்கு ஒரு நல்ல அமைச்சர் பொறுப்பேற்றிருக்கிறார். உள்ளாட்சித் துறையைப் பொறுத்தமட்டில் நல்ல அதிகாரிகள் இங்கே பணியாற்றுகிறார்கள். இந்தச் சூழ்நிலையிலே உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் வந்திருக்கிறது. உள்ளாட்சித் தேர்தல் என்பது சுழற்சி முறையிலே தேர்தலை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். உள்ளாட்சித் தேர்தலில் சுழற்சி முறையை ஏற்படுத்துவதால் பல பிரச்சினைகளைச் சரி செய்ய முடியும் என்பது எல்லோருக்கும் நன்றாகத் தெரியும். அதனால், இந்தச் சுழற்சி முறையை நாங்கள் வரவேற்கிறோம். சுழற்சி முறை என்பது, எந்த அளவுகோலின்படி சுழற்சிகளைச் செய்கிறீர்கள் என்பதை நீங்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அடுத்தபடியாக... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுழற்சி முறை என்பது: 2001 மக்கள்தொகையின் அடிப்படையிலேதான் நடைபெறவிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்.



**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்றடுக்கு முறையிலே தேர்தலை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், அதிலே கொள்கைக் குறிப்பிலே மற்றொன்றையும் சொல்லியிருக்கிறீர்கள். இரண்டடுக்கு முறையை மத்திய அரசிடம் வற்புறுத்துவதாகச் சொல்லியிருக்கிறீர்கள். வரவேற்கத்தக்கது. அதை நீங்கள் மத்திய அரசிடம் பெற்று சிறிய ஒரு சட்டத் திருத்தத்தை ஏற்படுத்தி அந்த முறையை தமிழகத்திலே பயன்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அதிலே பல பிரச்சினைகள் இருக்கின்றன. இப்பொழுது பஞ்சாயத்து ராஜ் சட்டத்தை முழுமையாக அமல்படுத்தக்கூடிய நிலை தமிழகத்திலே இல்லை. அதற்கு, இதற்கு முன்பாக இருந்த இரண்டடுக்கு முறையே சிறப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால், ஒன்றுக்கொன்று தொடர்பு இல்லாத நிலை. ஊராட்சி ஒன்றியத்திற்கும், ஊராட்சிக்கும் தொடர்பு இல்லாத நிலை. ஊராட்சி ஒன்றியத்திற்கும் மாவட்ட அமைப்புகளுக்கும் தொடர்பு இல்லாத நிலை இப்பொழுது இருக்கிறது. எவ்வளவு விரைவாக இரண்டடுக்கு முறையை நமது தமிழகத்திலே ஏற்படுத்த முடியுமோ அந்த வகையிலே நமது தமிழக அரசு செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூன்றடுக்கு முறையைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் ஒரு கருத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆக, இந்த மூன்றடுக்கு முறையை இரண்டடுக்கு முறையாகக் கொண்டு வர வேண்டுமென்று ஆட்சிக்கு வந்தவுடனே முதன் முதலில் கவர்னர் உரையிலேகூட தெளிவாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல, தொடர்ந்து நிதிநிலை அறிக்கையிலும் அதைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறோம். அதுமட்டுமல்ல, பிரதமர் அவர்களை நம்முடைய முதல்வர் அவர்கள் டெல்லியிலே சந்தித்தபோதும் இந்தத் பிரச்சினை பற்றி எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அண்மையிலே மத்திய அமைச்சர் திரு. மணிசங்கரய்யர் அவர்கள் சென்னைக்கு வந்து நம்முடைய முதல்வர் அவர்களைச் சந்தித்தபோதும் இது குறித்து விவாதித்திருக்கிறோம். எனவே, முறையாக நாடாளுமன்றத்திலே சட்டம் கொண்டு வந்து அதை நிறைவேற்ற வேண்டிய ஒரு சூழ்நிலையிருக்கின்ற காரணத்தால் அதற்கான ஆயத்தப் பணிகளில்

இந்த அரசு ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கரி. இராமசாமி:** அடுத்தபடியாக, மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி ஒன்றியத் தலைவர்களை மறைமுக தேர்தலின் வழியாகத் தேர்ந்தெடுப்பதற்கு இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே வகை செய்திருக்கிறீர்கள். ஆனால், இதிலே நடக்கக்கூடிய தவறுகளைத் தடுப்பதற்கு நேரடியாக மக்களே தேர்ந்தெடுத்தால் பல பிரச்சினைகளை, இதிலே நடக்கக்கூடிய ஊழல்களை ஒழிப்பதற்கு, குறிப்பாக, குதிரை பேரங்கள் போன்றவற்றை (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றுவதற்கு வழியிருக்கிறது. அதைப் பற்றியும் நமது அரசு சிந்திக்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் நமது தமிழகத்திலே ஆறு மாவட்டங்களை, சிவகங்கை, திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களை மத்திய அரசு தேர்ந்தெடுத்திருக்கிறது. இந்த மாவட்டங்களிலே இந்தத் திட்டத்தின்கீழ் மத்திய அரசு 90 சதவிகிதமும், மாநில அரசு 10 சதவிகிதமும் ஒதுக்கி, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறார்கள். இந்தத் திட்டத்தை இன்னும் நமது தமிழகத்திலே சிறப்பாகச் செயல்படுத்தவில்லை. அதைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான வேலைகளை நமது அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11–05*

இந்தத் திட்டங்களை மத்திய அரசு, 6 மாவட்டங்களிலே அறிமுகம் செய்து இருக்கிறது. அந்த 6 மாவட்டங்களிலும் S.G.R.Y. திட்டத்தை, அந்த மாவட்டத்தில் இருந்து எடுத்து இருக்கிறார்கள். நமது தமிழக அரசுதான் இப்போது அந்தத் திட்டத்தை அங்கே செயல்படுத்தாமல் நிறுத்தி வைத்து இருக்கிறது. குறிப்பாக கட்டுமானப் பணிகள், Concrete Road போன்றவற்றைப் போடுவதற்கு S.G.R.Y. திட்டம்தான். அந்தந்தப் பகுதிகளிலே சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அந்தத் திட்டத்தை தற்போது நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அந்தத் 6 மாவட்டங்களிலும், இந்தத் திட்டத்தையும் சேர்த்து நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை மீண்டும் செயல்படுத்துவதாகச் சொல்லி இருக்கிறார்கள். அது வரவேற்கத்தக்க ஒன்றாகும். இன்றைக்கு ஒரு ஊராட்சிக்கு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு



செய்வதாகச் சொல்லி இருக்கிறீர்கள். அதை இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்தி – அந்தத் தொகையை அதிகப்படுத்திக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தத் திட்டம் மிக மிக நல்லத் திட்டம். இது சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால இன்னும் கொஞ்சம் நிதியை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தற்போது 5 பஞ்சாயத்துகள் என்ற அடிப்படையிலே நீங்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து இருக்கிறீர்கள். இந்த 5 பஞ்சாயத்துக்களின் எண்ணிக்கையை இன்னும் அதிகப்படுத்தினால், இன்னும் சிறப்பாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இப்பொழுது குடிமை வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் நடந்துகொண்டு இருக்கிறது. ஒரு வீடு கட்டுவதற்கு குறிப்பாக ரூ.34,000/– செலவு செய்கிறோம். ரூ.34 ஆயிரம் செலவு செய்து ஒரு வீட்டைக் கட்டினால் அது மிக மிகச் சிறிய வீடாக இருக்கிறது. குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இந்தத் திட்டத்தை நாம் செயல்படுத்துகிறோம். அவர்கள் அதிலே குடியிருக்க வேண்டும் என்றால் இன்னும் கொஞ்சம் பெரிய வீடுகளாக அமைய வேண்டும். குறைந்தது 50,000 ரூபாயாவது அதற்காக ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களிலே, பல அதிகாரிகள் இருந்தாலும் அவர்களைத் தொடர்பு கொள்ளும்போது, பல தடவைகளிலே வாரத்திற்கு 4 நாட்கள், 5 நாட்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் ஏற்பாடு செய்து இருப்பதாகவும், அதனால் வாரத்திலே 4 நாட்களிலே இருந்து, 5 நாட்கள் அந்தக் கூட்டத்திலே கலந்துகொள்ள தலைமை இடங்களுக்குச் சென்று விடுகிறார்கள். இதை ஒரு வான்முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் ஒரு தடவை, திட்ட அலுவலர் ஒரு தடவை, இன்னும் அதற்குக்கீழே இருக்கக்கூடிய அதிகாரிகள் ஒரு தடவை என்று பல தடவைகளிலே B.D.O.-க்களை அழைத்துக் கொள்கிறார்கள். இதனால் அதிகாரிகள் கிராமப்புறங்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு நல்லது செய்யக்கூடிய திட்டங்களை, நேரடியாகப் பார்க்கக்கூடிய நிலை இல்லாமல் இருக்கிறது. இதற்கு எல்லா அதிகாரிகளையும் ஒரே நாளிலே அந்தக கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி, வாரத்திற்கு ஒரு நாள் அவர்களை அனுப்பி வைத்தால் இந்தக் கிராம மக்களுடன் அந்த அதிகாரிகளுக்குத் தொடர்பு ஏற்பட வசதியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

இப்போது ஊராட்சி ஒன்றியங்கள், ஊராட்சி மன்றங்களுக்கு நிதி நிலை மிக மிக மோசமான நிலைமையில் இருக்கிறது. குறிப்பாக மின் கட்டணத்தைக் கட்ட முடியாமல் பல சிரமங்களுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கிறார்கள். இந்த மின் கட்டணத்தை முழுமையாக மானியமாக அரசே ஏற்று, கட்ட வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இந்த மின்சாரத்திற்குரிய தொகையைக் கட்டவில்லையென்றால் அதற்கு வட்டிகூட சேர்த்து வாங்குகின்ற நிலை இன்றைக்கு இருக்கிறது. இதை மாற்றி அமைக்க வேண்டும். இந்த நிதிநிலையை அதிகப்படுத்துவதற்கு, உள்ளாட்சித் துறையினுடைய நிதி நிலையை அதிகப்படுத்துவதற்கு நமது கொள்கைக் குறிப்பில் விரிவான திட்டங்கள் ஒன்றும் கூறப்படவில்லை. அதற்கு ஒரு சரியான திட்டத்தை வகுத்து, உள்ளாட்சித் துறைக்கு அந்தந்த உள்ளாட்சி அமைப்புக்களே, தங்களது நிதியை பலப்படுத்திக்கொள்வதற்கு ஒரு சரியான திட்டத்தை, நமது உள்ளாட்சித் துறை வகுத்துத் தரவேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-10*

ஊராட்சி ஒன்றியங்களிலே பல பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. தட்டச்சர், இளநிலை உதவியாளர், இரவுக் காவலர், உதவியாளர்கள், பதிவறை எழுத்தர்கள், ஒன்றிய மேலாளர்கள், சாலைப் பணியாளர்கள் போன்ற இடங்கள் தொடர்ந்து காலியாக இருக்கின்றன. இரவுக் காவலர்கள்கூட இல்லாத நிலை இன்றைக்கு தமிழகத்திலே ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கிறது. இதையெல்லாம் உடனடியாக நமது அரசு சரி செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இந்த உள்ளாட்சித் துறை சரியாக இயங்குவதற்கு வழிவகைகள் ஏற்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். ஊராட்சிகளில் எழுத்தர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்யவேண்டும். அவர்களுக்கு ஊதியம் வரைமுறை செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு பஞ்சாயத்துத் தலைவரும் மாறும்பொழுது இவர்களையும் மாற்றக்கூடிய நிலை இப்பொழுது தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிறது.

உள்ளாட்சித் துறைக்குச் சொந்தமான கண்மாய்கள் பற்றி நான் இதற்கு முன்பாகப் பேசும்போதும் சொன்னேன். வெள்ளத்தால் உடைக்கப்பட்டு கண்மாய்கள் அடைக்கப்படாமல் இருக்கின்றன. உடனடியாக அடைப்பதற்கு நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும். நீங்கள்



இராமநாதபுரம் மாவட்டத்திற்கு வருகை தந்திருந்தபொழுது உடனடியாக அடைப்பதற்கு ஏற்பாடு செய்வதாகச் சொன்னீர்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமும் சொல்லிவிட்டு வந்தீர்கள். ஆனால் அந்த வேலைகள் தற்பொழுது இராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களிலே நடைபெறவில்லை. அவற்றை உடனடியாகச் செய்வதற்கு ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியில் முன்னுரிமை அடிப்படையிலே 60 சதவிகிதத்திற்கு நிதியை ஒதுக்க வேண்டுமென்று நமது அரசு சொல்லியிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 40 சதவிகிதமும் முன்னுரிமை அடிப்படையிலே 60 சதவிகிதமும் என்று சொல்லியிருக்கிறார்கள். என்னைப் பொறுத்தமட்டில் எனது தொகுதியிலே 3 ஊராட்சி ஒன்றியங்களும், ஒரு நகராட்சியும் இருக்கின்றன. இதற்கு நான் நிதியை ஒதுக்கிக் கொடுக்கும்பொழுது 10 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. இது போதாது. அரசு 60 சதவிகிதத்திற்கு வழிகாட்டு முறைகளைச் சொன்னால் தயவுகூர்ந்து இந்த நிதியை ரூ.2 கோடியாக நீங்கள் மாற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது தொகுதியிலே தேவகோட்டை என்ற ஒரு நகராட்சி இருக்கிறது. அதேபோல தொண்டி என்ற ஒரு பேரூராட்சி, இந்த இரண்டிற்கும் பாதாளச் சாக்கடை அமைத்துத் தர வேண்டுமென்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

குடிதண்ணீரைப் பொறுத்தமட்டில் 671 கோடி ரூபாய் திட்டத்திலே இராமநாதபுரத்திற்கு ஒரு பெரிய குடிநீர்த் திட்டத்தை ஏற்பாடு செய்து தந்திருக்கிறீர்கள். அதற்காக நான் நன்றி சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்திலே இடையிலே விடுபட்டிருக்கக்கூடிய கிராமங்களையும் அதிலே இணைக்க வேண்டும் என்று உங்களை நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். நமது உள்ளாட்சித் துறை அமைச்சரும், பொதுப் பணித் துறை அமைச்சரும் ஆந்திர மாநிலத்திற்கு சென்று அங்கே கிருஷ்ணா நதி நீர் திட்டத்தைப் பற்றி விரிவாகப் பேசி வந்திருக்கிறார்கள். ஆந்திர மாநிலத்தில் இன்னும் 13 கி.மீ. தூரத்திற்கு அந்தக் கால்வாய் ஏற்படுத்தப்படவில்லை. அந்தக் கால்வாயை ஏற்படுத்த இன்னும் 13 கி.மீ. அளவுக்கு நிலங்களைக் கையகப்படுத்தாத நிலை இருக்கிறது. இதற்கடுத்தாற்போல நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆந்திர முதல்வருடன் பேசுவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அப்பொழுது இந்த 13 கி.மீ. கையகப்படுத்த வேண்டிய நிலங்களைப்

பற்றியும் அந்தக் கால்வாயைப் பற்றியும் விரிவாக ஆந்திர முதல்வரிடம் விவாதித்து அதை ஏற்பாடு செய்திட வேண்டும் என்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். இந்தத் திட்டம் ஜப்பான் நிதியுதவியுடன் செய்வற்கான ஆக்கபூர்வமான வேலைகள் இப்பொழுது நடந்து கொண்டிருக்கின்றன. 1,500 கோடியில் இந்தத் திட்டம் செயல்படவிருக்கிறது. இது தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்குப் பயன்படக்கூடியது. இதை வேலூர் மாவட்டம் வரை நீட்டித்துத் தர வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தைச் செய்தால் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் அளவிற்கு மீதம் எற்படும் என்று சொல்கிறார்கள்.

*முற்பகல் 11–15*

இதேபோல, வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடி தண்ணீர் கொண்டு வருகின்ற திட்டத்தில் அதிகமாக 295.21 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டதாகச் சொல்லி அதைப்பற்றி (குறுக்கீடு) இழப்பீடு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த இழப்பீடு ஏற்படுவதற்குக் காரணம் என்ன? அரசினுடைய பணம் இழக்கப்பட்டிருக்கிறது, வீணடிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை மீண்டும் நம்முடைய கருவூலத்திற்குக் கொண்டு வருவதற்கு என்ன வழி என்பதை நீங்கள் சிந்திக்க வேண்டும். பல கமிஷன்களை நாம் பார்த்திருக்கிறோம். எந்தக் கமிஷன் போட்டாலும், அந்தக் கமிஷன் விசாரணை, அதற்குப் பிறகு அந்த அறிக்கை, அறிக்கையோடு எல்லா கமிஷன்களும் அத்தோடு முடிவடைந்துவிடுகின்றன. யார் தவறு செய்தார்களோ, அதனால் யார் வருமானத்தைப் பெற்றார்களோ, அவர்களிடமிருந்து அந்தப் பணத்தை மீண்டும் தமிழக அரசுக்குக் கொண்டு வந்து சேர்ப்பது இந்த அரசினுடைய கடமை. அதை நீங்கள் சரியாக செய்து தரவேண்டும் என்று உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் நகராட்சியை மாநகராட்சியாக மாற்றித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அதேபோல ஈரோடு நகராட்சியையும் மாநகராட்சியாக மாற்றித் தர வேண்டும்.

இன்னொன்று. இன்றைக்கு பல கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுகின்றன. எனது தொகுதியிலே நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது. அந்த நீரை எடுத்து தண்ணீர் இல்லாத இடத்திற்கு, இராம[illegible]த்துச் செல்வதிலே மாறுபட்ட கருத்து

227424



கிடையாது. நமது முன்னாள் உள்ளாட்சித துறை அமைச்சர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது அந்தப் பகுதிக்கு வந்திருந்து, இந்தப் பகுதியிலிருந்து நாங்கள் தண்ணீரை எடுத்துச்செல்கிறோம், ஆனால், இங்கே போதுமான அளவு தண்ணீரை கொடுத்துவிட்டு நாங்கள் பாக்கியை எடுத்துச் செல்கிறோம் என்று சொன்னார்கள். அதற்கு நாங்கள் ஒத்துக்கொண்டு எடுத்துச் செல்லுங்கள் என்று சொன்னோம். ஆனால், இன்றைக்கு எங்கள் பகுதியிலே நிறைய நிலத்தடி நீர் இருந்தும் அந்தப் பகுதியில் இருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் குடி தண்ணீர் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை. இதிலே தனிக் கவனம் செலுத்தி நீங்கள் அந்தப் பகுதி மக்களுக்கு தினந்தோறும் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். இதைப்போல, அரியலூர் பகுதியில் இருந்தும் தண்ணீர் எடுத்துச் செல்கிறீர்கள். அந்தப் பகுதி மக்களுக்கும் அந்தத் தண்ணீர் கிடைக்க ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று, கேட்டு இந்த வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள், திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது, இந்த வீராணம் திட்டத்தில் ஏற்பட்டிருக்கிற, அந்தத் திட்ட நடவடிக்கையில், இந்தியத் தணிக்கைக் குழு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்லிய ஒரு புள்ளிவிவரத்தை இங்கே சொல்லி, இதை கஜானாவுக்கு கொண்டு வர வேண்டுமென்று சொன்னார்கள். இந்தியத் தணிக்கைக் குழு சொன்னது—அது final authority அல்ல—முடிவல்ல. அதை மீண்டும் ஓராண்டு காலம் கடந்ததற்குப் பிறகு அந்தத் துறையிலே இருக்கிற அதிகாரிகளோடு கலந்து, என்னென்ன காரணத்தின் அடிப்படையில் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது, என்னென்ன குறைகள் இருக்கின்றன என்று ஆய்வு செய்ததற்குப் பிறகு, அதுதான் முடிவாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் தணிக்கைத் துறை என்பது மத்திய அரசு ஏற்கெனவே permanent-ஆக வைத்திருக்கக்கூடிய ஒரு அமைப்பு. அரசாங்கத்தினுடைய

[திரு. சி. ஞானசேகரன்] [2006 ஆகஸ்ட் 11

கணக்குகளை அவ்வப்போது சரிபார்த்து, ஏன் இதே அ.தி.மு.க. அரசினுடைய அதிகாரிகளிடம் எல்லாம், இதை எல்லாம் சுட்டிக்காட்டி அதற்கான விளக்கத்தையும் பெற்று, உங்களுடைய விளக்கம் ஏற்புடையதாக இல்லை, நீங்கள் 295 கோடி ரூபாயை உங்களுடைய கவனக் குறைவால் L & T-யினுடைய tender போன்றவற்றையெல்லாம் cancel செய்து single tender-ஐ accept செய்த காரணத்தினால்—இரும்பு விலை உயர்வு என்று ஏற்கெனவே வருவதற்கு முன்னாலே நீங்கள் tender-ஐ finalise செய்திருக்க வேண்டும். இரும்பு விலை உயர்ந்துவிட்டது என்று ஒருவன் அங்கே tender எடுத்தவன் கொடுத்த மனுவை accept செய்து, அவனுடைய ஒரு கோடி ரூபாயை நீங்கள் பறிமுதல் செய்தும்கூட, பல கோடி ரூபாய் இழப்புக்கு அ.தி.மு.க. அரசுதான் காரணம் என்பது மிகத் தெளிவாக அந்த இடத்திலே சொல்லப்பட்டிருந்தும்கூட, (மேசையைத் தட்டும் ஒலி) அது final இல்லை என்று இங்கே இருக்கக்கூடிய உறுப்பினர்கள் வாதிடுகிறார்கள். ஏற்கெனவே உண்மையைக் கண்டறிய வேண்டும் என்றுதான் நாங்கள் சொல்கிறோம். இப்போதுகூட, இது இந்தியத் தணிக்கைத் துறை கொடுத்திருக்கிற ஒரு audit report. Audit என்பதில் எப்போதுமே இவர்கள் செய்தது தவறா, அல்லது தவறில்லையா என்பதில் இவர்கள் செய்தது தவறு என்று ஒரு முடிவான அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அது குறித்து நீங்கள் எல்லாம் விளக்கத்தைக் கொடுத்தாகிவிட்டது. இப்போது Public Accounts Committee இதை ஆய்வு செய்யப்போகிறது. அதற்கும் மீறி, உடனடியாக இப்படிப்பட்ட தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் விசாரணை வேண்டும் என்று எங்களுடைய உறுப்பினர் கேட்டாரேயொழிய, இது முடிவானதல்ல, இது final அல்ல என்று சொல்லிக் கொண்டிருப்பது அழகல்ல.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் அறிக்கை என்பது... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசியாகிவிட்டது. உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தணிக்கைத் துறைத் தலைவர் அவர்களின் அறிக்கை என்பது, மேம்போக்காக நுனிப்புல் மேய்ந்ததாக அல்ல...(குறுக்கீடுகள்)



2006 ஆகஸ்ட் 11]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், திரு. அன்பழகன் இரண்டுபேரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சி.வி. சண்முகம், அன்பழகன், இரண்டுபேரும் உட்காருங்கள். திரு. சண்முகம், நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். முதலிலே உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) சண்முகம் உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய தணிக்கைத் துறைத் தலைவர் அவர்களின் அறிக்கை என்பது ஏதோ மேம்போக்காக, நுனிப்புல் மேய்ந்ததாகக் கொடுக்கப்படவில்லை. அந்தத் திட்டத்திலே, ஒப்பந்தப்புள்ளி கோரியதிலிருந்து நிறைவுபெற்ற வரையிலே, எந்தெந்த வகையில் நடைபெற்றது; அதுமட்டுமல்ல, எந்தெந்த இடங்களில் தவறுகள் நடைபெற்றிருக்கின்றன, அது எவ்வளவு தொகைக்கான தவறுகள் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. ஆகவே, அதை உள்நோக்கம் கற்பிக்கிற வகையில், அதிலே இன்னும் அவகாசம் இருக்கிறது, நிவர்த்தி செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றெல்லாம் இப்படி அவகாசத்தை எடுத்துக்கொண்டு பேசுவது முறையல்ல. நடந்த தவறுகள் உண்மை. குறைபாடுகள் உண்மை. முறைகேடுகள் உண்மை. இதை யாரும் மறுக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) 295 கோடியே 21 இலட்சம் ரூபாய் முறைகேடு என்பது உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். (குறுக்கீடுகள்) அன்பழகன், சி.வி. சண்முகம், இரண்டுபேரும் உட்காருங்கள், நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பச் சொல்கிறேன், நடவடிக்கை எடுப்பேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருகிறீர்களா, நடவடிக்கை எடுக்கவா? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முடியாது. (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி.வி. சண்முகம், உட்காருகிறீர்களா அல்லது நடவடிக்கை எடுக்கவா? உட்காருங்கள் முதலில். அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரும்பத் திரும்ப இதைப்பற்றியே பேசி, நேரத்தை வீணாக்கிக்கொண்டிருக்க வேண்டாம். ஏற்கெனவே, முதலமைச்சர்

அவர்கள் இதுகுறித்து விசாரிப்பதற்கு ஒரு குழு அமைக்கப்படும் என்று தெரிவித்திருக்கிறார். அந்தக் குழு அறிக்கை தந்ததற்குப் பிறகு விவாதிக்கலாம். இன்று, பல்வேறு உறுப்பினர்கள் பேசி, அமைச்சர் பதிலுரைக்க வேண்டும். இரண்டு மானியக் கோரிக்கைகளும் முக்கியமான மானியக் கோரிக்கைகள். எனவே, உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 10 நிமிடத்திற்கு நேரத்தை ஒதுக்கி, பேசி முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், 10 நிமிடத்திற்கு மிகாமல் பேச வேண்டும். அது கண்டிப்பு.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே வாழ்கின்ற அடித்தளத்தில் இருக்கின்ற மக்கள் முதல் மேல்மட்டம் வரையில் இருக்கின்ற அனைத்து மக்களுடைய வாழ்க்கையையும், அவர்களுடைய வாழ்க்கை ஆதாரங்களையும், அவர்களுடைய பாதுகாப்பையும், குடிநீரையும் சேர்த்து பராமரிக்கின்ற ஒரு மகத்தான துறையாக இருக்கின்ற இந்த உள்ளாட்சித் துறையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒரு மாநகராட்சியினுடைய மேயராக இருந்து, சென்னை மாநகரத்துக்குள்ளடங்கிய மக்களுக்குப் பணி செய்த, வெள்ளை மாளிகையின் வெண் புறா, திராவிட முன்னேற்றக் கழக இலட்சோபலட்ச இளைஞர்களுடைய தளபதி (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களை, எப்படியாவது அந்தப் பதவியிலிருந்தே இறக்க வேண்டும் என்பதற்கு சட்டம் கொண்டுவந்து, அவர்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கை எடுத்த அவர்களை, இன்றைக்கு தமிழகத்தினுடைய ஆட்சிக் கட்டிலிலிருந்து தமிழகத்தினுடைய மக்கள் அப்புறப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு மாநகராட்சியினுடைய மேயராக பணி செய்வதற்கு வாய்ப்பு தருவதற்கு மறுத்து, சட்டம் கொண்டுவந்தவர்களுக்கு மத்தியில், இன்றைக்கு 6 மாநகராட்சிகளையும், 152 நகராட்சிகளையும் உள்ளடக்கி, சிறப்பான உள்ளாட்சித் துறையை மிகச் சிறப்பாக செயலாற்றி வருகின்ற அந்தத் துறையின்மீது பேசுவதற்காக வருகிறேன்.

இந்த நகர்ப்புற வளர்ச்சிக்கான அவர்களுடைய கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே, மிக அழகாக, ஆணித்தரமாக இந்த அரசு, இதை எப்படி செய்யப்போகிறது, எப்படி செய்ய வேண்டும்



என்பதையெல்லாம் மிகத் தெள்ளத் தெளிவாகப் பட்டியலிட்டு நகர்ப்புற வளர்ச்சி, மனித வள மேம்பாட்டு அறிக்கையைத் தயாரித்தல், அதேபோல் தமிழகத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், உள்கட்டமைப்பு. ஒரு நாடு முன்னேற வேண்டும் என்று சொன்னால் infrastructures மிக அவசியமானது. அந்த உள்கட்டமைப்பு, வசதிகளைத் தயார்படுத்துவதற்கு மிக அருமையாக அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே, சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், நவீனப் பேருந்து நிலையங்கள், பாதாளச் சாக்கடைகள், மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பணி, தொற்று நோய்கள் கட்டுப்படுத்துதல், திடக்கழிவு மேலாண்மை, இறைச்சிக் கூடங்கள், எரிவாயுக்கள், பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மையங்கள் மேம்படுத்துதல், நீராதாரங்களைத் தூய்மைப்படுத்துதல், மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்குதல், பள்ளிகளில் விளையாட்டுக்கான ஊக்குவிப்பு, இதோடுமட்டுமல்லாமல், வெளிப்படையான ஒரு நிருவாகத்தையும் என்னுடைய துறை ஏற்படுத்தும் என்கிற அறிவிப்புகளும், நகர்ப்புற வறுமைக் குறைப்புத் திட்டத்திற்கு பொன் விழா ஆண்டுத் திட்டங்கள், அது மத்திய அரசாங்கத்தினுடைய திட்டங்களை எந்தவொரு பாகுபாடும் இல்லாமல், எந்தவொரு முறை தவறிய நடவடிக்கையும் இல்லாமல், என்னுடைய துறை மேற்கொள்ளும் என்கிற அறிவிப்புகளையெல்லாம் இன்றைக்கு இந்த அவையிலே மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

*முற்பகல் 11-25*

அதேபோல, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி வந்தால்தான், அடித்தளத்திலே இருக்கிற மக்கள், சென்னை போன்ற பெரு நகரங்களில் வாழ்கின்ற மக்கள் போக்குவரத்து நெரிசலிலே தத்தளித்துக் கொண்டிருக்கிற அந்த நிலையை மாற்றுவதற்கு, தளபதி அவர்கள் மாநகராட்சியினுடைய மேயராக இருக்கின்றபோதுதான், இந்த மாநகரத்தில் அழகான பாலங்கள் கட்டப்பட்டு, அற்புதமான அந்தச் சாலை போக்குவரத்திற்கு வழியாகக் காட்டப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலே எப்படியாவது குறை காண வேண்டும் என்பதற்காகத்தான், கடந்த கால ஆட்சியாளர்கள் அதை ஆய்வு செய்வதற்கு முற்பட்டார்கள். அப்படி ஆய்வு செய்வதற்கு முற்படுகின்றபோது, அந்த ஆய்வை மேற்கொள்வதற்கான கருவிகள் முன்னாளில் தமிழகத்தினுடைய முதல்வராக இருந்த முத்தமிழ்

அறிஞர் கலைஞர் அவர்களுடைய தலைமையின்கீழ் கட்டப்பட்ட பாலங்களை, ஆய்வு செய்வதற்கு, அந்த சிமெண்ட் துகள்களையும், கம்பிகளையும் உடைத்தெறிந்து ஆய்வு செய்வதற்கான கருவிகள் இந்தியாவிலிருந்து கொண்டுவரப்படவில்லை. வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து, அந்தப் பாலத்தினுடைய துகள்களை ஆய்வு செய்வதற்கு எடுக்கிறார்கள் என்று சொன்னால், அந்தப் பாலங்கள் எப்படிப்பட்ட தாமான பாலங்களாக கடந்த கால ஆட்சியில் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்ல, கடந்த கால ஆட்சியில் எங்கு பாலம் கட்டினார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. ஆனால், இன்றைக்கு சென்னை மாநகர மக்களுடைய போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, கத்திவாக்கம் மற்றும் பேசின்சாலை இரயில்வே சந்திப்புகளில் வாகன மேம்பாலம் 12 கோடி ரூபாயில், கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திப்பில் வாகன சுரங்கப் பாதை 4.30 கோடி ரூபாயில், வில்லிவாக்கம் இரயில்வே சந்திப்பு 2-ல் சுரங்கப் பாதை ரூ.13.86 கோடியில், எம்.சி. ரோடு இரயில்வே சந்திப்பில் வாகன சுரங்கப் பாதை ரூ.11.60 கோடியில், ரங்கராஜபுரம் இரயில்வே சந்திப்பில் வாகன மேம்பாலம் ரூ.15.20 கோடியில், அதேபோல் இன்றைக்கு சிறு பாலங்கள், டர்ன்புல்ஸ் சாலை-பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை சந்திப்பு ரூ.9.50 கோடி, உஸ்மான் சாலை-கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு ரூ.6.50 கோடி, ஜிஎன்.செட்டி சாலை-திருமலைப் பிள்ளை சாலை சந்திப்பு ரூ.15 கோடி, உஸ்மான் சாலை- துரைசாமி சாலை சந்திப்பு ரூ.15.00 கோடி என்று இந்த ஆட்சியினுடைய அத்தனை நலத் திட்டங்களையும் கொள்கைக் குறிப்பில் முத்தாக மக்களுக்கு இன்றைக்கு அள்ளித் தந்திருக்கிற இந்த உள்ளாட்சித் துறையை நாங்கள் பாராட்டுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இன்றைக்கு உள்ளாட்சித் துறை மாநகரங்களில், கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகரங்களில், அந்த மாநகரங்களை மேம்படுத்துவதற்கான ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்க்கான திட்டங்களை உருவாக்குவதற்கான பணிகள் கொள்கைக் குறிப்பிலே இடம் பெற்றிருக்கின்றன. எதற்காக இவற்றையெல்லாம் சொல்கிறேன் என்று சொன்னால், இந்த ஒரு துறை, தமிழகத்திலே இருக்கின்ற அனைத்து மக்களுக்கான வாழ்வியல் ஆதாரங்களையும், பாதுகாப்பான குடிநீரையும், சாலை வசதிகளையும், போக்குவரத்து நெரிசல்களைக் கட்டுப்படுத்துவது, சுகாதாரத்தைப் பேணிக் காப்பது, அதோடுமட்டுமல்ல,



இன்னும் கீழே போய், தெருக்களிலே இருக்கின்ற நாய்களைக்கூட அந்தத் தெரு நாய்கள் கடித்துக் குதறி, பள்ளி மாணவிகள், சில அப்பாவிகள் பாதிப்புக்குள்ளாகின்றனர். அதைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல், சுற்றித் திரிகிற ஆடு மாடுகள், போக்குவரத்திற்கு இடைஞ்சல்களாக பள்ளிக்கூடங்களில் திரிகின்ற ஆடு மாடுகள், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கும் இந்த அரசு நடவடிக்கை என்ற அளவிலே இன்றைக்கு இந்த மாநகராட்சியினுடைய அனைத்து நிலைகளிலும் இருக்கின்ற, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து மாநகராட்சியினுடைய அந்த முன்னேற்றத்திற்கான நல்ல பல திட்டங்கள், மக்களுக்கான நல்ல பல திட்டங்களைத் தந்திருக்கின்றது.

அதேபோல், ஊரக வளர்ச்சித் துறை. ஊரக வளர்ச்சித் துறை என்று எடுத்துக்கொண்டால், இன்றைக்கு பெரும்பான்மையாக 58 சதவிகிதத்திற்கு மேல் இருக்கின்ற கிராமப்புற மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு, அந்த மக்களுடைய வாட்டங்களைப் போக்குவதற்கு, அந்த மக்களுக்குச் சீரான குடிநீர், சுகாதாரமான குடிநீர் இவற்றையெல்லாம் உருவாக்குவதற்கு அற்புதமான நல்ல பல திட்டங்களை இந்தக் கொள்கைக் குறிப்பிலே வெளியிட்டிருக்கிறார்கள்.

கடந்த கால ஆட்சியின் முழு சுகாதாரத் திட்டத்தைப் பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நான் விவாதத்திற்குச் செல்லவில்லை. இன்றைக்கு இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய அறிக்கை புள்ளிவிவரம் கூறுகிறது. வீராணம் திட்டத்திற்கு ஆய்வு என்று சொன்னார்கள். கடந்த காலத்தினுடைய முதல்வர் அவர்களே இந்தியத் தணிக்கைத் துறையினுடைய தலைவராக இருந்த திரு. தீதன் அவர்கள்மீது பத்திரிகையில் ஒரு குற்றச்சாட்டை சொல்லி, ஒரு மிகப் பெரிய விவாதத்திற்குப் போன வரலாறுகளை எல்லாம், இந்த அவை பார்த்திருக்கிறது. ஆனால், அப்படி ஜனாதிபதியினுடைய ஒப்புதலோடு மத்திய அரசாங்கமே ஏற்படுத்துகின்ற, தணிக்கைத் துறையின் மீதே குற்றம் சாட்டுகின்ற அரசுகள் இருக்கும் இடத்திலே நான் விவாதம் செய்வதற்கு வரவில்லை. ஆனால், நடந்த தவறுகளைச் சுட்டிக்காட்டி இந்த அவையிலே நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

முழு சுகாதார கிராமத் திட்டத்தின்மூலம் 2¼ இலட்சம் ரூபாயில் sanitary complex கட்டித் தந்தார்கள். தமிழ்நாட்டிலே கட்டப்பட்டிருக்கிற

12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அந்தக் கட்டடங்களில் இன்றைக்கு எத்தனை சதவிகிதம் பயன்பாட்டில் இருக்கிறது என்பதை மாண்புமிகு மூன்று அமைச்சர்கள், ஒரு அமைச்சர், இரண்டு அமைச்சரல்ல, மூன்று அமைச்சர்களை கடந்த கால ஆட்சியில், உள்ளாட்சித் துறைக்குப் பொறுப்பேற்ற மூன்று முன்னாள் அமைச்சர்களும் இன்றைக்கு என்னோடு வருகிறீர்களா, அரசு அதிகாரிகளை அழைத்துச் செல்வோம். எத்தனை சுகாதார வளாகங்கள் மக்களுடைய பயன்பாட்டிலே இருக்கின்றன என்பதை இந்த நாட்டு மக்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு அவர்கள் தயாரா என்பதை நான் இந்த நேரத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன்.

முற்பகல் 11-30

அதோடுமட்டுமல்ல, மத்திய அரசாங்கத்ினுடைய SGRY திட்டத்தின்கீழ், மத்திய அரசாங்கம் கோடிக்கணக்கான ரூபாய்க்கு அரிசியை வழங்குகிறது. அந்த அரிசியை முறை தவறி பல்வேறு திட்டங்களுக்குக் கடந்த கால ஆட்சி பயன்படுத்தியிருக்கிறது என்பது புள்ளிவிவரங்கள் மூலமாக இங்கே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, 1.88 கோடி ரூபாய் மதிப்பிலான அரிசி எந்தச் செலவினத்தில் செலவிடப்பட்டது? ரேஷன் கடைக்கு வழங்கியிருக்கிறதா? உணவுக்கு வேலை திட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறதா? வேறு பணிகளுக்கு வழங்கியிருக்கிறார்களா? எதற்கு வழங்கப்பட்டது என்பதைக்கூட தணிக்கைத் துறையாலே கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு ஒரு மாபெரும் ஊழல் நடந்திருக்கிறது என்பதைத் தணிக்கைத் துறை சுட்டிக்காட்டியிருக்கிறது.

அதோடுமட்டுமல்ல, கடந்தகால அரசின் வீராணம் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். வீராணம் திட்டத்திற்குள்ளே நான் போக விரும்பவில்லை. முத்தமிழ் அறிஞர் கலைஞர் முதல்வர் அவர்கள் இந்த அறிக்கையில் தவறுகள் இருக்குமாயினும் அதன்மீது விசாரணை செய்து அதில் சரியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். நான் அதற்குள்ளே போக விரும்பவில்லை. ஆனால், கடந்த கால ஆட்சியில், 5 ஆண்டு காலத்திலும் மன்றாடினேன். வீராணம் திட்டம், என் மக்களுடைய குடிநீர் ஆதாரத்தைச் சுரண்டுகிற திட்டம். வீராணத்தில் நீர் நிரம்பி, காவிரியில் திறந்துவிடப்பட்ட நீர் நிரம்பி, அதற்கு மேலே வருகின்ற நீரை நீங்கள் சென்னை மக்களுக்குக் கொண்டு செல்வதற்கு எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. ஆனால், எங்களுடைய கிராமப் பகுதிகளிலே 54 bore well-களைப் போட்டு எங்கள் மக்களுடைய நிலத்தடி நீரையும்,



விவசாய நீரையும் உறிஞ்சுகின்றீர்களே, இதேபோன்று உறிஞ்சினால் அந்த மக்களுக்குப் பாதிப்பு ஏற்படும் என்ற அடிப்படையிலேதான் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தைக் கைவிட்டார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதாவது சொல்லவேண்டுமென்றால் பதில் சொல்லும்போது சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உடகாருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மக்களுக்குக் குடிநீர் கொடுக்கக்கூடாது என்பது எங்களுடைய கொள்கை அல்ல. பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நோக்கம் அல்ல. இராட்சத bore well-களை அமைத்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், அனுமதியில்லாமல் நிற்கக் கூடாது, உட்காருங்கள். அனுமதியில்லை, உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** எங்களுடைய நிலத்தடி நீரை உறிஞ்சக் கூடாது என்று நாங்கள் வேண்டுகோள் வைத்தோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அனுமதியில்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** கேட்பதற்கு நாதி இல்லை. ஆனால், இன்றைக்கு அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறதே, அந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதற்கான டெண்டர் முறைகள் மட்டுமல்ல, அந்த வீராணம் திட்டத்தை ஆழப்படுத்தி அதற்கான shutter-கள் கதவுகள் இரும்புத் தகடுகளால் உருவாக்கப்பட வேண்டும் என்று அந்தத் திட்டத்தை மேலாண்மை செய்த நிறுவனம் வலியுறுத்தியும்கூட, எந்தவித அடிப்படை வசதிகளும் செய்து தராமலேயே அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக அப்பகுதியிலே இருக்கிற நிலத்தடி நீர் இன்றைக்கு 300 அடியிலிருந்து, 600 அடி, 700 அடிகளுக்குச் சென்று கொண்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல,... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். No point of order. உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எந்தத் தவறான புள்ளிவிவரங்களையும் இந்த அவைக்குச் சொல்ல

விரும்பவில்லை. இன்றைக்கு Accountant General-உடைய Report கையிலே இருக்கிறது. கொள்கை விளக்கக் குறிப்பு கையிலே இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியினுடைய வரைவு நிதிநிலை அறிக்கை கையிலே இருக்கிறது. நம்முடைய தமிழகத்தினுடைய நிதி அமைச்சர் அளித்த நிதிநிலை அறிக்கையும் கையிலே இருக்கிறது. (குறுக்கீடு) அந்த அடிப்படையிலே நான் சொல்கிறேன். அதேபோல கடந்த கால...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அன்பழகன் நீங்கள் அப்போதிருந்தே குறுக்கீடு செய்துகொண்டிருக்கிறீர்கள். அப்போதிருந்து நீங்கள் குறுக்கீடு செய்துகொண்டே இருக்கிறீர்கள். இடையூறு செய்துகொண்டே இருக்கிறீர்கள். உட்காருங்கள் முதலில், எச்சரிக்கிறேன். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடு) அனுமதியில்லை உட்காருங்கள். (குறுக்கீடு) முடியாது. யாருக்கும் அனுமதி கொடுக்க முடியாது. உட்காருங்கள் முதலில். எல்லோருமே உட்காருங்கள். (கூச்சல்--குழப்பம்) எல்லோருமே உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்தகால அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் உள்ளாட்சித் துறை நிருவாகத்தினுடைய முறைகேட்டின் காரணமாக அரசுக்கு ஏற்பட்டிருக்கிற பல கோடி ரூபாய் ஊழலில் கோயம்புத்தூர் மாநகராட்சியிலேயே 23 கோடி ரூபாயை அந்த அரசு வீண் செலவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) வரவேண்டிய பணத்தை அரசு வீணாகத் தவிர்த்திருக்கிறது என்று புள்ளிவிவரம் இங்கே காட்டுகிறது. நான் எதற்காக இதையெல்லாம் சொல்கிறேன் என்று சொன்னால், கடந்த கால ஆட்சியில் மூன்று அமைச்சர்கள் மாறினார்கள். அதோடு மட்டுமல்ல, ஒரு துறையினுடைய அதிகாரி அந்தத் துறைக்குப் பொறுப்பேற்கிறார் என்றால், அந்தத் துறையிலே எத்தனை பேரூராட்சிகள் இருக்கின்றன, எத்தனை சிற்றூராட்சிகள் இருக்கின்றன, எத்தனை கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன, எந்தத் திட்டங்களை இந்த மக்களுக்கெல்லாம் சென்றடைவதற்கான நல்ல திட்டங்களாக நாம் தீட்டவேண்டும் என்பதற்கான கால அவகாசம்கூடக் கொடுக்கவில்லை. மூன்று DRDA-க்கள், மூன்று துறைச் செயலாளர்கள் மாற்றம். எதெற்கெடுத்தாலும், எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற நிலையில்தான் உள்ளாட்சித் துறை இருந்தது. உள்ளாட்சித் துறை என்பது இந்த மக்களுடைய நாடி, நரம்புகளை மட்டுமல்ல, இந்த மக்களுடைய வாழ்வாதாரத்தை, இந்த மக்களுடைய பிரச்சினைகளை, ஆயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான மக்களுடைய வாழ்க்கையைத் தீர்மானிக்கிற ஒரு துறையாக இல்லை.



துறையினுடைய தலைமைப் பொறுப்பேற்றிருக்கிற அமைச்சர்கள். அந்தத் துறையிலே, எத்தனை IAS அதிகாரிகள், எத்தனை இயக்குநர்கள், எத்தனை துணை இயக்குநர்கள் இருக்கிறார்கள என்ற விவரங்களைக்கூடத் தெரிந்துகொள்வதற்கு முன்பாக மாற்றப்பட்டிருக்கிறார்கள் கடந்தகால ஆட்சியிலே. (குறுக்கீடுகள்) அதோடுமட்டுமல்ல (கூச்சல்--குழப்பம்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...(கூச்சல்--குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதைப் பேச வேண்டுமென்றாலும் அனுமதி இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னொரு செய்தியை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேல்முருகன், நீங்கள் 12 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள். (கூச்சல்--குழப்பம்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்--குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். (கூச்சல்--குழப்பம்) அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எல்லோரும் உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-ல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆட்சியில் கொண்டுவரப்பட்ட சுய உதவிக் குழுவை முன்னாள் முதல்வர் அவர்கள் நான் கொண்டுவந்தேன் என்று பத்திரிகையில் பேட்டி தந்திருக்கிறார். ஆதாரங்கள் என்னிடத்தில் இருக்கின்றன. நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 51 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தமிழ்நாட்டிலே இருக்கிறார்கள்....

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. தி. வேல்முருகன்:** 51 இலட்சம் சுய உதவிக் குழு உறுப்பினர்களை ஒரு கோடி சுய உதவிக் குழு உறுப்பினர்களாக ஆக்குவேன் என்று சொன்ன அரசு நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா உறுப்பினர்களும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உண்மைக்கு மாறான செய்திகளை இந்த அவைக்குத் தருவதும், உண்மைக்கு மாறான செய்திகளை...(குறுக்கீடுகள்)

முற்பகல் 11-35 .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) எல்லோரும் முதலில் உட்காருங்கள். உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது குறுக்கிடக் கூடாது. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஓர் உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கும்போது யாரும் குறுக்கிடக் கூடாது. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேசி முடிக்கட்டும். பிறகு பார்க்கலாம். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** அவர் அனாவசியமாகப் பேசுகிறாரே? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அரி, உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** குற்றச்சாட்டைச் சொல்லும்போது அதை மறுப்பதற்கு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா?

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...(குறுக்கீடுகள்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரு குற்றச்சாட்டைச் சொல்லும்போது, அதை மறுப்பதற்கு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறதா, இல்லையா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், நான் சொல்வதைக் கேளுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** ஒரு குற்றச்சாட்டைச் சொல்லும்போது, அதை மறுப்பதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். நீங்கள் அமைச்சராக இருந்தவர்கள்.

**திரு. தி. வேல்முருகன்:**. சுய உதவிக் குழுக்கள் தலைவர் கலைஞர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டதா அல்லது அண்ணா திமுக. அரசால்



ஆரம்பிக்கப்பட்டதா என்பதை ஆதாரத்தோடு நிரூபிக்கிறேன். அதற்குத் தயாரா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசிக் கொண்டிருக்கும்போது, நீங்கள் எழுந்து நின்றால் எப்படி? நான் அன்றைக்கே உங்களிடம் சொல்லியிருக்கிறேன். அப்படியிருந்தும் இத்தனை உறுப்பினர்களும் எழுந்து நின்றால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) முதலில் அனைவரையும் உட்காரச் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்பச் சொல்கிறேன், உட்காருங்கள் எல்லோரும். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் முதலில் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் அனைவரும் உட்காருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. விசுவநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பாண்டுரங்கன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அவர் பேசி முடிக்கட்டும், நான் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உறுப்பினர் பேசட்டும். பேசிய பின்னர் பார்க்கலாம். (குறுக்கீடுகள்) கடைசியாக உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. வேல்முருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வேல்முருகன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை. அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் உட்காருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில், மத்திய அரசாங்கத் திட்டத்திற்கும், மாநில அரசுப் பங்களிப்போடு ஒதுக்கப்பட்ட திட்டங்களுக்கும் 164 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. நிதி கையிலே இருந்தது. உள்ளாட்சித் துறை, அமைச்சகத்தின் கையிலே இருந்தது. ஆனால், அந்த அரசாங்கம், அந்த அமைச்சகம் செய்த செலவு எவ்வளவு தெரியுமா? 164 கோடி ரூபாயில் வெறும் 3 கோடி ரூபாய் என்பதை நான் இந்த அவையிலே பதிவு செய்ய விரும்புகிறேன். என்ன நிருவாகத் திறமை இருந்திருக்கிறது? ஆனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை. பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் நான் கோரிக்கைகளுக்கே வரவில்லை, அதற்குள்ளே முடிக்கச் சொல்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உரையை முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சரி, நான் கோரிக்கைக்கு வருகிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும்,-- இந்தக் கிராம உதவியாளர்கள், பகுதி நேர எழுத்தாளர்கள், பல ஆண்டுக் காலமாக, சொற்ப சம்பளத்தில், வெறும் ஆயிரம் ரூபாய் சம்பளத்திலே பணி செய்துகொண்டிருக்கிறார்கள். அதுபோன்று, ஏழையெளிய கிராமப்புற, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுடைய வாழ்க்கையை மேன்மைப்படுத்துகின்ற வகையில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அவர்களுக்குப் பணி நிரந்தரமோ அல்லது நம்முடைய ஆசிரியர்களை காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வந்ததுபோல், அவர்களையும் காலமுறை ஊதியத்தின்கீழ் கொண்டு வரவோ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையாற்றத் தொடங்கி 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. தி. வேல்முருகன்:** அதேபோல் பேரூராட்சி, மூன்றாம் நிலை உதவியாளர்கள் குறைந்தபட்சம் 250 பேர்கள் பல ஆண்டுக் காலம் இன்றைக்கு ஒப்பந்தப் பணியிலே இருக்கின்றார்கள். அவர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல Tank Operator-கள், அவர்களுக்கான ஒரு வழியையும் இந்த அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒரு கொடுமை. இந்தக் கம்ப்யூட்டர் உலகத்தில், இந்தக் கணினி உலகத்தில் இன்றைக்கு மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றுகின்ற அந்த முறை மாற்றப்பட வேண்டும். அதற்குத் தீர்வு ஏற்பட வேண்டுமென்று, கடந்த கால ஆட்சியில் நான் கோரிக்கை வைத்தேன். இந்த அவையில் நான் கோரிக்கை வைப்பதற்கு முன்பாகவே,



இந்தத் துறை அதற்கான ஒரு நல்ல அறிவிப்பைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நிலையைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதற்காக இந்த அரசை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். அதேவேளையில் இன்னும்கூட சில மாநகராட்சிப் பகுதிகளிலே மனிதக் கழிவுகளால் கால்வாய்களில் அடைப்புகள் ஏற்படுகின்றபோது, அதில் மனிதர்களே இறங்கி, அந்தக் கழிவுகளை அகற்றுகிற அவலம் நீண்டுகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையாற்றத் தொடங்கி 16 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. தி. வேல்முருகன்:** அந்த நிலையைப் போக்க சரியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், தமிழ்நாடு தேர்வாணைக் குழுமத்தின் மூலமாக Radio—வானொலி, தொலைக்காட்சிகளை கிராமப்புறங்களிலே பழுது நீக்குவதற்குப் பணியில் அமர்த்தப்பட்டிருந்தவர்கள், அந்தக் காலத்தில் ஒரு G.O.-வின்மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு training-க்குப் போனார்கள். 30 ஆண்டுக் காலமாக இன்னும் அந்த training-இலேயே இருக்கின்றார்கள். அவர்களை உள்ளாட்சித் துறையின்கீழ் கொண்டுவந்து, பணியைத் தருவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதிப் பிரச்சினை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு நிமிடம், ஒரேயொரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள். பேசுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** இங்கே 9 பாலங்களைத் தந்திருக்கின்ற நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய பண்ருட்டிக்கு ஓர் இரயில்வே மேம்பாலமும், ஒரு புறவழிச் சாலையும் அமைத்துத் தர வேண்டும். அதேபோல் சட்டமன்ற உறுப்பினருடைய மேம்பாட்டு நிதியாக ஒரு கோடி ரூபாயைத் தருகின்றீர்கள். அதை இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தித் தருவதற்கான ஆணையை (மேசையைத் தட்டும் ஒலி) முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் இங்கே அறிவிப்பார் என்று ஆவலோடு எதிர்பார்க்கிறோம். அதோடு

மட்டுமல்லாமல் அந்த நிதியை, நாங்கள் மக்களிடத்திலே சென்று குறை கேட்கின்றபோது, மக்கள் கொடுக்கின்ற மனுக்களின் அடிப்படையில் அந்த மக்களுடைய விருப்பத்திற்கிணங்க, நாங்கள் செலவு செய்யக்கூடிய அதிகாரத்தை, சட்டமன்ற உறுப்பினர்களாகிய எங்களுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒரேயொரு திட்டம். உள்ளாட்சித் துறையினுடைய பொன்னான திட்டம். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய அற்புதமான திட்டம் குறித்த கருத்தை இந்த அவையில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன். அது என்னவென்று சொன்னால், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அவர்கள் இன்றைக்கு அந்த மறுமலர்ச்சித் திட்டத்தினை மாற்றி, அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்கின்ற அடிப்படையில் ஓர் ஊராட்சிக்கு 20 இலட்சம், ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு சராசரியாக 12 ஊராட்சிகளுக்கு வழங்கப்படும், அப்படியென்று சொன்னால், ஓர் ஆண்டுக்கு மட்டும் ஒரு சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதிக்கு 12 x 2 = 24. 2 கோடியே 40 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்தின் மூலமாக எங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய குறைகளைப் போக்குவதற்கு பால் வார்த்திருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நாங்கள் நன்றிக்கடன் பட்டிருக்கிறோம். அவர்கள் கொண்டுவந்த கிராமத் திட்டம், வெறும் ஒரு இலட்சம் ரூபாய். அதுவும் எம்.எல்.ஏ.-க்களின் நிதியில், நாங்கள் கிராமத்திற்கு ஒதுக்குவோம். அந்தப் பணி எங்கே நடக்கிறது என்றே எங்களுக்குத் தெரியாது. இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் முடிவு கட்டுகின்ற ஓர் அரசாக இந்த அரசு இருக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டு, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கடலூர், (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கடலூர் சிப்காட் வளாகத்தில் இன்றைக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. அதற்கான மின்சாரக் கட்டணத்தை அந்தந்தப் பஞ்சாயத்துக்களே கட்ட வேண்டும்.

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ். *(குறுக்கீடு)*

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை மாற்றி... *(குறுக்கீடு)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், நான் அப்போதே சொன்னேன். 10 நிமிடம்தான் தந்தேன். நீங்கள் நேரத்தைப் பாருங்கள். கிட்டத்தட்ட 18 நிமிடங்கள் எடுத்திருக்கிறீர்கள். இதற்குமேல் அனுமதியில்லை. *(குறுக்கீடு)* சரி, ரைட், ரைட். அது நான் கொடுக்கிற time தான். நான் கொடுத்த நேரத்திற்குள்தான் பேச வேண்டும். *(குறுக்கீடு)* பேசுங்கள், பேசுங்கள். ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு...*(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்தவர்களுக்குக் கொடுத்திருக்கிறீர்கள் என்றெல்லாம் கேட்கமுடியாது.

**திரு. தி. வேல்முருகன்:** கூட்டுக் குடிநீர்த் திட்டம் தத்தளித்துக் கொண்டிருக்கின்றது. அங்கே இருக்கின்ற மக்களுக்கு அந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக சரியாக நீர் கிடைப்பதில்லை. காரணம், பஞ்சாயத்துகளிலே...*(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். பேசிக் கொண்டிருக்கிறார் அல்லவா? *(குறுக்கீடு)* ஒரு நிமிடத்தில் முடியுங்கள், திரு. வேல்முருகன். *(குறுக்கீடு)*

**திரு. தி. வேல்முருகன்:** மைக் கொடுக்கச் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் தண்ணீர்கூடக் குடிக்கக் கூடாதா என்ன?

**திரு. தி. வேல்முருகன்:** அதேபோல கடந்த கால ஆட்சிக் காலத்தில் *(குறுக்கீடு)* பேரவைத் தலைவர் அவர்களே, மைக் கொடுக்கச் சொல்லுங்கள். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், முடியுங்கள். *(குறுக்கீடு)* முடியுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மைக்கே கொடுக்கவில்லையே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மைக் கொடுத்திருக்கிறார்கள், பேசுங்கள். நீங்கள் பேசுவது எனக்குக் கேட்கிறது. *(குறுக்கீடு)* மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய வேண்டுகோள் அனைத்தையும், கோரிக்கை அத்தனையையும் இந்த

அவையிலே சொன்னால்தான், பேசினால்தான் கவனிக்கப்படும் என்று தவறாகக் கருதக் கூடாது. இங்கே பேசக்கூடிய நேரத்தில் எதைப் பேச முடியுமோ அதைப் பேசி, என்னென்ன கோரிக்கை மிச்சம் இருக்கிறதோ, அதைக் கடைசியிலே, என்னுடைய கோரிக்கைகளை அமைச்சரிடத்திலே எழுத்துமூலமாகத் தெரிவிக்கிறேன், இதற்கு உரிய பதில் தர வேண்டுமென்றால், பேசியதை மறந்தாலும் மறப்போம், கோரிக்கையை மறக்க மாட்டோம் என்று மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், 20 நிமிடங்கள் ஆகின்றன, நீங்கள் பேச ஆரம்பித்து. என்ன அர்த்தம் இது? உரையை சீக்கிரம் முடியுங்கள். ஒரு நிமிடம்தான்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலங்களில் உள்ளாட்சி அமைப்புகள் நிதி ஆதாரங்களே இல்லாமல், அதிகாரமே இல்லாத கையேந்தும் அமைப்புகளாக இருந்து வந்தன. எனவே, உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கவும், கூடுதல் நிதி வழங்கிட வேண்டும் என்று இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, செங்கல்பட்டு அருகில் குடிநீர்ப் பிரச்சினை அதிகமாக உள்ள காரணத்தால், உடனடியாக அதைத் தீர்ப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தருமபுரியிலே இன்றைக்கு வரி வசூல் என்பது 22 சதவீதம் அதிகமாக இருக்கிறது. அந்த வரி மற்ற மாநகராட்சி, நகராட்சிகளைவிடக் குறைவாக வசூல் செய்வதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு, உள்ளாட்சி மானிய கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுத்துள்ள அனைத்து அம்சங்களையும் பா.ம.க. வரவேற்கிறது. குறிப்பாக ஒரு பஞ்சாயத்துக்கு 20 இலட்சம் ரூபாய் என்று பத்துக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு 2 கோடியே 40 இலட்சமும், சட்டமன்ற உறுப்பினருடைய நிதி, முத்தமிழ் அறிஞர் அறிவிக்கின்ற இரண்டு கோடி ரூபாயும் சேர்த்தால், கிட்டத்தட்ட நான்கரை, ஐந்து கோடி ரூபாய் இந்த ஐந்தாண்டு காலத்தில் அடித்தளத்தில் இருக்கின்ற மக்களுடைய வாட்டங்களையும், வாழ்க்கைப் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு ஏதுவாக இருக்கும். அள்ளித் தாருங்கள் அறிவிப்புகளை என்று கேட்காமல் கொடுக்கின்ற கலைஞர் அரசைக் கேட்கிறேன். கொடுங்கள் என்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றிகூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லீமா றோஸ். (குறுக்கீடு) செங்கோட்டையன், என்ன வேண்டும், சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள், ஒரு வரியிலே சொல்லுங்கள், என்னவென்று.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையினுடைய நேரம்தான் முக்கியம். (குறுக்கீடு) சொல்லுங்கள். சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்கள் பேசுகிறபோது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருக்கின்றபோது, மேயர் பதவியைப் பிடுங்கிவிட்டார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். இரட்டைப் பதவிகளில் ஒருவர் இருக்கக் கூடாது என்று ஒரு சட்டம் கொண்டுவந்தார்களே தவிர, எந்தப் பதவியை வேண்டுமானாலும் அவர் இராஜினாமா செய்திருக்கலாம். மேயர் பதவியை அவர் இராஜினாமா செய்ததற்குப் பிறகு. வேண்டுமென்றே, எங்கள்மீது பழியைச் சுமத்துவது சரியானதல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள். திருமதி லீமா றோஸ். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை. இல்லை, அனுமதி இல்லை. உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேண்டுமென்றே இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடைய பதவியைப் பறிக்க வேண்டுமென்பதற்காகத்தான் அந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) இருங்கள். ஆனால், வேடிக்கை என்னவென்றால், உயர் நீதிமன்றத்திலே அந்தச் சட்டம் செல்லாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், திருமதி ரா. லீமா றோஸ். (குறுக்கீடுகள்)

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன், உட்காருங்கள், (குறுக்கீடுகள்) திரு. ஜெயக்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அனுமதியில்லை, உட்காருங்கள். உங்களுக்கு வாய்ப்பு வரும்போது பேசுங்கள். உட்காருங்கள்.

***திருமதி ரா. லீமா றோஸ்:** கடந்த நான்கரை ஆண்டுகளாகச் சீரழிக்கப்பட்டுக் கிடந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு புத்தொளி பாய்ச்சி, ஊழலற்ற, தூய்மையான (குறுக்கீடுகள்) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நல்லாட்சி அமைப்புகளாக அவற்றை மாற்ற, ஓய்வறியாது உழைத்துவரும் தந்தை வழி தனயனாம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், தளபதி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இப்பேரவையில் தாக்கல் செய்துள்ள, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்புகளில் பல்வேறு திட்டங்களைச் சுட்டிக்காட்டியிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மனமார வரவேற்கிறது.

அவர் மேயராக இருந்தபோது, சென்னை மாநகராட்சியின் அசடுவழிந்த முகம் எங்ஙனம் புதுப்பொலிவு பெற்றதோ, அங்ஙனம் தமிழகத்தின் உள்ளாட்சி நிறுவனங்கள் அன்னாரின் கைபட்டு துலங்கும் என்பதில் ஐயமில்லை.

முழு சுகாதாரத் திட்டத்தில், நிர்மல் புரஸ்கார் விருது பெற்ற, மேல்புறம் ஊராட்சி ஒன்றியத்தின் கடந்த பத்து ஆண்டுகளில் தலைவராகவும், கவுன்சிலராகவும் இருந்த பெருமையான அனுபவத்தோடு, இந்த மானியக் கோரிக்கைகளின்மீது எமது கட்சியின் சார்பாக கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அங்கீகரிக்கப்படாத குடிமனைக்காரர்களின் அடிப்படை வசதிகளை நிறைவு செய்ய, விதி 110-ன் அறிக்கையின்படி நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. மாவட்ட ஊராட்சித் தலைவர் தலைமையிலுள்ள, மாவட்ட திட்டமிடும் குழுவிற்கு திட்டமிடும் அதிகாரம் வழங்க வேண்டும்.

2004-ல் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு மத்தியில் பொறுப்பேற்றபின், ஏழு முறை மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர்கள்



கூட்டம் நடந்துள்ளது. இதில் ஒரு முறைகூட கடந்த அ.தி.மு.க. அரசாங்கத்தின் உள்ளாட்சித் துறை அமைச்சர் கலந்துகொள்ளாதது வேதனை அளிப்பதாகவே உள்ளது. மத்திய அரசு, மாநில அரசை dismiss செய்யக்கூடாது என்பதுபோல, உள்ளாட்சி மன்றத் தலைவர்களை, மாவட்ட ஆட்சித் தலைவர் டிஸ்மிஸ் செய்யக்கூடாது. உள்ளாட்சி அமைப்புகளின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். முறைகேடுகளைத் தடுக்க மாவட்ட நீதிபதிகளைக் கொண்டு ஊழல் தடுப்பு கமிட்டி அமைக்கலாம்.

பேரூராட்சிக் கூட்டங்களில் M.P., M.L.A., M.L.C. கலந்து கொள்ளலாம் என்ற அவசரச் சட்டத்தின் ஷரத்து தேவையில்லை. ஊராட்சிகளாக நீடிக்க விரும்பும் பேரூராட்சிகளை, மன்றத் தீர்மானத்தின்படி தீர்மானிக்கவும், பேரூராட்சிகளுக்குத் தலைவர் தேர்தலை முன்போல் நடத்தவும் வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் சுழற்சி முறையை வரவேற்கும் அதேநேரத்தில் பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், கொட்டக்காச்சியேந்தல் ஆகிய ஊராட்சிகளில் கடந்த பத்து ஆண்டுகளாகத் தலித் இட ஒதுக்கீடு அமலாகாததால், அவற்றில் சுழற்சி முறையைத் தவிர்க்க வேண்டும்.

மத்திய அரசு வருவாயில் மாநிலங்களுக்கு 30 சதவிகிதம் தருவதுபோல், மாநில அரசு உள்ளாட்சி அமைப்புகளுக்கு 30 சதவிகிதம் ஒதுக்கீடு செய்து, மாவட்ட அரசாக நடத்திட வேண்டும். பெரும்பான்மையான ஊராட்சிகள் நிதி நெருக்கடியில் இருப்பதால், அ.தி.மு.க. ஆட்சியில் ஒரு யூனிட்டுக்கு ரூ.1.20 என்பதை ரூ.3.60 ஆக உயர்த்திய மின் கட்டணத்தை இந்த அரசு குறைக்கவேண்டும்.

ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சிகளுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும்வண்ணம் வாக்குரிமையின்றி கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்ற சட்டத் திருத்தம் கொண்டுவரலாம். உள்ளாட்சி அமைப்புகளுக்கு அதிக அதிகாரமும், கூடுதல் நிதி ஆதாரமும் அளிப்பதன்மூலம், ஆறு கோடிக்கும் அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட தமிழகத்தில் நல்ல வளர்ச்சியைக் காணமுடியும்.

மலையோர ஊராட்சிகளுக்கு அவற்றின் புவியியல் தன்மையைக் கருத்தில்கொண்டு, சிறப்பு நிதி அளிக்க வேண்டும். அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மீண்டும் கொண்டுவரப்பட்டதை வரவேற்கின்றோம். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத்

திட்டத்தின்கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ரூ.80/- என்ற சம்பளம், பெண் தொழிலாளர்களுக்கும் கறாராக அமல்படுத்த வேண்டும்.

மாநில அளவில் கண்காணிப்புக் குழு அமைக்க வேண்டும். சுய உதவிக் குழுக்களுக்கு மானியக் கடன், சுழல் நிதி பயிற்சிக்குக் கூடுதல் நிதி உதவி, புதிய தொழில் பயிற்சிகள், சுய உதவிக் குழுக்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்குமிடையே தொடர்பு போன்ற கொள்கைக் குறிப்பில் காணப்படும் விஷயங்களை வரவேற்கிறோம்.

சுய உதவிக் குழுக்கள் உருவாக்கும் பொருட்களை அரசே கொள்முதல் செய்து விற்பனை செய்வதற்கான சந்தையை உருவாக்கவேண்டுமென்ற ஆலோசனையை இந்த மாமன்றத்தில் பதிய வைக்க விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

ஊராட்சி மற்றும் பேரூராட்சி கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்குச் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படவேண்டும். ஒருங்கிணைந்த நகர்ப்புற உள்ளாட்சி சட்டம் 1920-ல் உருவாக்கப்பட்டது. 1973-74 ஆம் வருட உள்ளாட்சி சட்டத் திருத்தப் பின்னணியில் இதைத் தற்காலப்படுத்தி புதிய சட்டம் உருவாக்க வேண்டும்.

நகர்ப்புற உள்ளாட்சிகளில் உள்ள காலியிடங்களை நிரப்ப Appointment Committee-க்கு அனுமதி வழங்க வேண்டும். வாரிசு வேலைகேட்டு வரப்பெற்ற மனுக்களையும் கருணையுடன் பரிசீலிக்கவேண்டும்.

குமரி மாவட்டத்திலுள்ள நான்கு நகராட்சிகளுக்கும் தற்போது Commissioner-கள் இல்லை. உடனடியாக நிரப்பப்பட வேண்டும்.

*முற்பகல் 11-50*

திடக்கழிவுகளைச் சேகரிக்கத் தனித்தனியாக இடவசதி இல்லாத நகராட்சிகளுக்கு, Common composing yard அமைக்கலாம். குமரி மாவட்டத்தில், common incinerator அமைக்க, I.M.A. மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

எனது தொகுதிக்குட்பட்ட அணைக்கரை-அருவிக்கரை பாலம் அமைக்க, 2003-2004-ல், P.M.G.R.Y. திட்டத்தின்கீழ் ரூ.94 இலட்சம் ஒதுக்கப்பட்டது. இத்தொகைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டாலும், டெண்டர் கோர யாரும் முன்வரவில்லை. காரணம், இவ்வேலைக்கு



கூடுதலாகத் தேவைப்படுகிறது. கூடுதலாகத் 20 சதவிகித நிதி கூடுதலாகத் தேவைப்படுகிறது. கூடுதலாகத் தேவைப்படும் நிதியைப் பெற்றுத் தந்து, இந்தப் பணியை இவ்வாண்டிலேயே முடித்துத் தருமாறு பணிவாய் வேண்டுகிறேன்.

மேலும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு வந்திருந்தபொழுது, மார்த்தாண்டம் பேருந்து நிலையம் நவீனமயமாக்கப்படும் என்று அறிவித்ததை மக்கள் பெருமகிழ்ச்சியோடு வரவேற்றார்கள். இந்த நிதியாண்டிலேயே இப்பணியைச் செய்திடுமாறு வேண்டுகிறேன். மேலும், உலக்கருவி குடிநீர்த் திட்டத்தை விரைந்து முடித்திட வேண்டுகிறேன்.

நாகர்கோவில் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் உட்பட எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமல்படுத்த வேண்டும். நாகர்கோவில் அண்ணா பேருந்து நிலையத்திற்கும், பூங்காவிற்கும் இடையில் அமைக்கப்படவிருக்கும் சுரங்க நடைபாதைப் பணியைத் துரிதப்படுத்திட வேண்டும்.

ஊராட்சிகளில் பணிபுரியும் மோட்டார் Operator-கள் துப்புரவாளர்கள், எழுத்தர் மற்றும் உதவியாளர்கள் போன்ற ஊழியர்கள் குடிநீர் விநியோகம், துப்புரவு, வரி வசூல், தெரு விளக்கு அமைத்தல், குடிநீர்க் குழாய் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்பு, பதிவேடுகள் பராமரிப்பு உள்ளிட்ட ஏராளமான பணிகளைச் செய்கின்றனர். இவர்கள் பெயரளவில் பகுதிநேர ஊழியர்களாக இருந்தாலும், யதார்த்தமாகப் பார்த்தால், முழு நேரத்திற்கும் அதிகமான நேரம் ஊராட்சிகளில் வேலை செய்கின்றனர். எனவே, இந்தத் தொகுப்பூதியப் பணியாளர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

குமரி மாவட்ட கிராம ஊராட்சிகளிலுள்ள 24 தொகுதி எழுத்தர் மற்றும் வரி வசூலர்களுக்கு, அரசாணை (2-D), எண் 97-ன்படி, பேரூராட்சி வரி வசூலர்களுக்கு இணையான ஊதியம் வழங்கப்பட்டு வந்தது. நியதிகளுக்கு மாறாக, அந்த ஊதியம் பாதியாகக் குறைக்கப்பட்டு, தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு அரசாணையின்படி ஊதியம் வழங்க வேண்டும்.

வறுமைக்கோடு பட்டியல் மறு ஆய்வு செய்ய, தகுந்த கால அவகாசம் கொடுக்கப்படாமல், ஆகஸ்ட் 15-க்குள் முடிக்க வேண்டும் என்பது, மீண்டும் குளறுபடிகளை உருவாக்கும். ஆகவே, மீண்டும் உரிய கால அவகாசம் கொடுத்து, மக்கள் நலப் பணியாளர்கள் மற்றும் ஊராட்சி ஊழியர்கள் இணைந்து, வீடு வீடாகச் சென்று, ஆய்வு செய்து, பட்டியல் தயாரிக்கப்பட ஏதுவாக, அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், 1997–க்குமுன் பணியமர்த்தப்பட்ட மேற்குறித்த குடிநீர் வினியோக உடனாளர்கள், தினக்கூலிப் பணியாளர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்களையும், அதேபோன்று, 1997–ல் தடை ஆணையை இரத்து செய்து, புதியதாகப் பணியிடங்களை உருவாக்கியிருக்கக்கூடிய பகுதியில், அந்தப் பணியிடங்களையும் நிரப்பி நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாணை நிலை எண் 60–ன்படி, சிறப்பு ஊராட்சிகளின் தொகுப்பூதிய ஊழியர்கள் கால முறை நிர்ணய ஊழியர்களாக மாற்றப்பட்டுள்ளனர். சிலருடைய பெயர்கள் அதிலே விடுபட்டிருக்கின்றன. அவர்களையும் காலமுறை ஊதியத்திற்குட்படுத்த வேண்டும்.

குமரி, ஈரோடு, உதகை, திருச்சி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட, 23 பேரூராட்சிகள்..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** 1999–ல் சிற்றூராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள மோட்டார் Operator, துப்புரவுப் பணியாளர்கள் ஆகியோரை வேறு பேரூராட்சிகளில் பணியமர்த்த ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால், கடந்த ஆட்சி அந்த ஆணையை அமல்படுத்தவில்லை. எனவே, இவர்களையும் பணி நிரந்தரம் செய்து, வேறு பேரூராட்சிகளில் பணியமர்த்த வேண்டுகிறேன்.

ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சிகளில் தொழில்நுட்ப உதவியாளர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, அவர்களையும் பணிவரன்முறை செய்து உதவிடுமாறு வேண்டுகிறேன். அதேபோன்று, மாநகராட்சி, நகராட்சிகளில், 250 குடியிருப்புகளுக்கு அல்லது 3 கி.மீ. சாலைக்கு, 3 துப்புரவுப் பணியாளர்கள் என்பது உட்பட பல அளவுகோல்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. கடந்த ஆட்சி அமல்படுத்தாத அந்த அரசாணையை, இந்த அரசு அமல்படுத்த வேண்டும்.

அதேபோன்று, இன்றைக்கு நிரந்தரமாக்கப்படாத மதுரை, திருச்சி, சென்னை, கோவை, நெல்லை, சேலம் ஆகிய மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள தொகுப்பூதிய ஊழியர்களை, தினக்கூலி, பதிலி, N.M.R., ஆகியவர்களைப் பணி நிரந்தரமாக்க வேண்டுகிறேன். மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள காலியிடங்களை நிரப்பவேண்டும். (மணியடிக்கப்பெற்றது) அவ்வமயம் இறந்தோரின் வாரிசுகளுக்கும் வேலை வழங்க வேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், 10 நிமிடங்கள் எடுத்துக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இல்லை; நேரம் இல்லை. (குறுக்கீடு) Please, உட்காருங்கள். திரு. வை. சிவபுண்ணியம், எழுந்திருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் உங்களைப் பேச அழைத்துவிட்டேன்; நீங்கள் எழுந்திருங்கள். (குறுக்கீடு) Nothing will go on record. (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுவது அவைக் குறிப்பிற்குப் போகாது. Please, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வி.பி. கலைராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே..

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இருங்கள், பேசி முடித்துவிடட்டும்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** குடியாத்தம் தொகுதியில், மோர்தானா அணையிலிருந்து குடிநீர் ஏற்பாட்டினை அரசு செய்தால், கிராமப்புறத்திற்கும், நகரப் பகுதிகளுக்கும் குடிநீர்ப் பிரச்சினை தீரும். தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டத்தில், கணினிகளை இயக்கி வந்த பெண்களை, வேலையிலிருந்து நீக்கியதை மறுபரிசீலனை செய்து, தூசி படியும் கம்ப்யூட்டர்களையும், வேலை செய்த பெண்களையும் பாதுகாக்க வேண்டுகிறேன். உள்ளாட்சித் துறையின் மேற்குறிப்பிட்ட கோரிக்கைகளை முன்வைத்து பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு) மாண்புமிகு திரு. வை. சிவபுண்ணியம், ஏழு நிமிடங்களுக்குள் பேசி முடித்துவிடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. வி.பி. கலைராஜன், உறுப்பினர் பேசி முடித்தபிறகு வாய்ப்புத் தருகிறேன், உட்காருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சியை நல்லாட்சியாகத் திறம்பட நிருவகிப்பதற்காகப்

[திரு. வை. சிவபுண்ணியம்] [2006 ஆகஸ்ட் 11

பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் துறையானது மிக முக்கியமான துறையாகக் கருதப்படுகிறது. இதன்மீது பல்வேறு கருத்துகளைச் சொல்ல வேண்டிய அவசியம் இருக்கிறது என்றாலும், காலத்தின் அருமை கருதி சுருக்கமாக நான் உரையாற்ற விரும்புகிறேன்.

குறிப்பாக சுழற்சி முறையிலே தேர்தல் நடைபெறுவதைப்பற்றி இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 10 ஆண்டுகள் கழிந்துவிட்ட காரணத்தாலே இந்த முறை அப்படி தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அப்படி நடத்துவதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகிறபோது, இந்த அவையிலே பல முறை பல செய்திகள் இங்கே சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக பாப்பாப்பட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம் மற்றும் கொட்டக்காச்சியேந்தல் இந்த நான்கு ஊராட்சிகளுடைய தேர்தல் என்பது நடைபெறாமலே போய்விட்டது. இது நம்முடைய ஜனநாயகத்திற்கு மிகப் பெரிய கேள்விக்குறியை உண்டாக்கியிருக்கிறது.

நான் ஏற்கெனவே இந்தச் சபையிலேயே சென்ற ஆட்சியின்போது பதிவு செய்திருக்கிறேன். தந்தை பெரியார் பிறந்த மண்ணில், அண்ணா ஆண்ட மண்ணில், நமது கலைஞர் அவர்கள் ஆண்டுகொண்டிருக்கின்ற இந்த மண்ணில், சமூக நீதி மறுக்கப்படுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. ஆகவே, இதற்குத் தீர்வு காணுவதற்கான வகையிலே அப்படி சுழற்சி முறை வருகிறபோது இந்த நான்கு ஊராட்சிகளுக்கான தேர்தல்களையும் பழைய நிலையிலேயே நீடிக்க வேண்டும் என்பதை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்துகிறேன். அதற்கான வகையிலே பரிசீலனையை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் தாழ்த்தப்பட்ட மக்களுடைய, தலித் பகுதி மக்களுடைய உரிமைகள் பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கை ஏற்படும். இன்னொருபுறத்திலே இப்படி இதை அனுமதித்துவிட்டால் இதைப்போல சிந்திப்பவர்களுக்கு மேலும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி அப்படி ஒரு முயற்சியிலே ஈடுபடுவதற்கான ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிடுவதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுவிடும். ஆகவே, இந்த இரண்டையும் கவனத்திலே கொண்டு இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர்



2006 ஆகஸ்ட் 11] [திரு. வை. சிவபுண்ணியம்]

அவர்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இந்தத் தேர்தலைப் பொறுத்தவரையிலும் பல்வேறு கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, எங்களுடைய மாநிலத் தலைமையின் தீர்மானம் என்ற அடிப்படையில் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகள் என்ற வகையிலே மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கான தேர்தலைப் பற்றி குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே நடைமுறை ரீதியாகப் பார்த்தால், மாநகராட்சித் தேர்தல் என்பது கிட்டத்தட்ட 25 இலட்சம் வாக்காளர்கள் ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் இருக்கிறது. ஆகவே, இந்த நடைமுறை ரீதியாக இருக்கக்கூடிய இந்தச் சிரமங்களைப் பார்க்கின்றபோது, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்றால் ஏழு இலட்சம் வாக்காளர்களுக்குள்ளாக இருக்கிறார்கள், சட்டமன்ற உறுப்பினர் என்றால் இரண்டு இலட்சத்திலிருந்து மூன்று இலட்சம் வாக்காளர்களுக்குள்ளாக இருக்கிறார்கள். தேர்வு செய்யப்படுகிறார்கள். ஆனால், மாநகராட்சி என்று சொல்லுகிறபோது 25 இலட்சம் வாக்காளர்களைக் கொண்டு ஒரு தலைவரைத் தேர்வு செய்வது என்பது அது ஒரு நிர்வாக ரீதியாகவும், நடைமுறை ரீதியாகவும் சிரமமாக இருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதற்கான முயற்சிகளைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்கலாம் என்பது என்னுடைய பணிவான கருத்து. நகராட்சிகள், பேரூராட்சிகளைப் பழைய நிலையிலே தொடர வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே பதிவு செய்ய விரும்புகிறேன். அப்போதுதான் பல்வேறு தவறுகள் நடக்காமல் இருப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

என்னுடைய சொந்த அனுபவம், எங்களுடைய மன்னார்குடி நகராட்சியில் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குத்தான் தனிப்பெரும் மெஜாரிட்டி இருக்கிறது. ஆனால், துணைத் தலைவர் தேர்தல் நடக்கிறபோது, இந்த ஆள்தூக்குகிற வாய்ப்பைப் பயன்படுத்தி, துணைத் தலைவரை அன்றைய ஆளுங்கட்சியாக இருந்த அ.தி.மு.க. கொண்டு வருவதற்கான முயற்சிகளை எடுத்துவிட்டார்கள். நடைபெற்ற உண்மை இது. ஆகவே, இப்படிப்பட்ட காரியங்கள் இந்த முறையினாலே வந்துவிடுவதற்குரிய வாய்ப்பு இருக்கின்ற காரணத்தினாலே, அதைப்பற்றி இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, நமது 29 மாவட்டங்களிலும் 385 வட்டார ஊராட்சிகளில், 12,618 கிராம ஊராட்சிகளிலே 3,000–க்கு மேற்பட்ட மக்கள்தொகை கொண்டிருக்கிற ஊராட்சிகள் என்பது 3,948 ஆகவும், 10,000–க்கு மேலே 25,000க்கு உட்பட்ட மக்கள்தொகை கொண்டிருக்கிற ஊராட்சிகள் 174 ஆகவும், 25,000 மக்கள்தொகைக்கு மேலே இருக்கிற ஊராட்சிகள் 12 என்றும் நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, இவ்வளவு பெரிய, மிகப் பெரிய எண்ணிக்கையிலே இருக்கிற இந்த ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான முயற்சிகளை நம்முடைய மாநில அரசும், நம்முடைய உள்ளாட்சித் துறையும் மேற்கொள்ள வேண்டும். இது நிர்வாக ரீதியாக பல சிரமங்களை ஏற்படுத்துகிற காரணத்தினாலே, அதிக மக்கள்தொகையைக் கொண்டிருக்கிற இந்த ஊராட்சிகளைப் பிரிப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12–00

இந்த ஆட்சியின் மூலமாக, குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்காக பல்வேறு திட்டங்கள், மிகச் சிறப்பாகக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் மனதாரப் பாராட்டி, வரவேற்கிறேன். அதிலே குறிப்பாக, ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது இந்த அவையிலே பல உறுப்பினர்கள் தொடர்ந்து பேசி வந்த திட்டம். அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்புக் கவனம் செலுத்தி, அதை நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுத்திருக்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், அதை விரைந்து நிறைவேற்ற இருக்கிறார்கள். ஆகவே, அந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படுகிறபொழுது, மிகப்பெரிய வாய்ப்பை, தருமபுரி மாவட்ட மக்கள் பயனடைவதற்கான அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தியிருக்கிற நமது அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே என்னுடைய பாராட்டுதலையும், வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அத்திக்கடவு–அவினாசி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதை விரைவாக மேற்கொள்ள வேண்டும் என்று நான் அன்போடு



கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பல்வேறு கூட்டுக் குடிநீர்த் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான பல்வேறு திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதுதான் அடிப்படையாகவே நாட்டு மக்களுக்குத் தேவையாக இருக்கிறது. கிராமப்புறங்களிலே வாழ்ந்து கொண்டிருக்கிற மக்களுக்கு ஒரு நாளைக்கு 40 லிட்டர் என்ற அளவிலே, குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கான திட்டம் வகுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதை உறுதி செய்வதற்கான முயற்சி என்ற அடிப்படையிலே, இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் வெகுவாகப் பயன்படும் என்ற காரணத்தினாலே, இவற்றை நிறைவு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சென்னை நகரினுடைய தேவையை அறிந்து, அதற்கான பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு அறிவித்திருக்கிறது. அதற்கான குடிநீர்த் தேவையை தொடர்ந்து நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். அதிலே குறிப்பாக, கடல்நீரைக் குடிநீராக மாற்றுவதற்கான திட்டம். இதைப்பற்றி நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, சென்ற ஆட்சிக் காலத்திலே இதைப் பற்றிய விவாதங்கள் வந்தன. இதன்மீது பல்வேறு கருத்துகள் சென்ற ஆட்சியின்மூலமாகச் சொல்லப்பட்டன. ஆனால், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்காமலே போய்விட்டது. ஆகவே இப்பொழுது, நம்முடைய மாநில அரசு, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலேயே கடல்நீரைக் குடிநீராக்குவதற்கான அந்தத் திட்டத்தை நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். இதை நான் வரவேற்கிறேன். இதை விரைந்து நிறைவேற்றுவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அதிலே ஏற்கெனவே இருக்கின்ற, சென்ற ஆட்சியிலே நடைமுறைப்படுத்தப்படுவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்ட பல திட்டங்களை, இந்த ஆட்சி, அவற்றைச் சிறப்பாகச் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. இது ஒரு ஜனநாயகபூர்வமாக, ஜனநாயகத்திலே நம்பிக்கை ஏற்படுத்துவதற்குரிய ஒரு நல்ல முயற்சி. அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, கடல்நீரைக் குடிநீராக்குவதற்கான அந்தத் திட்டத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கான முயற்சியை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஊராட்சிகளுக்கான அதிகாரங்கள் என்று சொல்கிறபொழுது, 29 துறைகளுடைய அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென்பது, உள்ளாட்சித் துறையினுடைய கோரிக்கையாகத்

தொடர்ந்து இருக்கிறது. இது பல மாநிலங்களிலே வித்தியாசப்படுகிறது. நம்முடைய மாநிலத்திலேயும் இந்த அதிகாரங்களை வழங்குவதற்கான முயற்சி எடுக்கப்படும் என்று, நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருப்பது, மகிழ்ச்சிக்குரிய ஒன்று. ஜனநாயகபூர்வமாக உள்ளாட்சி அமைப்புகளைச் செயல்படுத்துவதற்காக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். ஆனால், நிதி என்று சொல்கிறபொழுது, 8 சதவிகிதம் நம்முடைய அரசால் நிதி ஒதுக்கப்படுகிறது, உள்ளாட்சிகளுக்கு. இது போதுமானதாக இல்லை என்ற ஒரு குறைபாடு தொடர்ந்து இருக்கிறது. இது சென்ற ஆட்சிக் காலத்திலே பேசப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி, வரும் ஆண்டுகளிலாவது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் சிந்தித்து, இந்த 8 சதவிகிதம் என்பதை -- குறைந்தபட்சம் அடிப்படை, அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுவது என்பதே உள்ளாட்சித் துறைதான். ஆகவே, உள்ளாட்சித் துறையை வைத்துத்தான் மற்ற துறைகளே செயல்பட வேண்டிய அவசியம்கூட வந்துவிடுகிறது, கிராமப்புறங்களிலே. அப்படி இருக்கிற காரணத்தினாலே இதற்குக் குறைந்தபட்சம் — 30 சதவிகித நிதியை உள்ளாட்சித் துறைக்காக ஒதுக்கீடு செய்வதற்கான முயற்சியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைப்பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லிவிட்டார்கள். ஓர் அற்புதமான திட்டம். சென்ற ஆட்சியிலே, 1996 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட திட்டம் அது. அதை மீண்டும் நடைமுறைப்படுத்தி வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கான முயற்சி என்பது சிறப்புக்குரிய ஒன்று. அதிலே, கோரிக்கை என்ற அடிப்படையிலே, ஊராட்சி உதவியாளர்கள், எழுத்தர்கள், அவர்கள் தொடர்ந்து இந்தப் பணியிலே சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு திட்டங்களையும் நிறைவேற்றுவதற்குரிய பொறுப்பாக அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு வழங்கப்படுகிற ஊதியம் என்பது, மிகக் குறைவாக இருக்கிறது. அவர்களுக்குரிய பணியும் நிரந்தரமில்லாமல்' இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி, கலைஞர் காலத்திலேதான், இதையெல்லாம் நடைமுறைப் படுத்துவதற்கான முயற்சிகள், உங்கள் காலத்திலே எடுக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலே, இந்த ஊராட்சி உதவியாளர்கள், எழுத்தர்களுடைய,



அந்த ஊதிய உயர்வினையும் உயர்த்தித் தர வேண்டும். அதைக் காலமுறை ஊதியமாக மாற்றுவதற்கான முயற்சிகளை உங்கள் காலத்திலே எடுக்க வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் வைக்கிறார்கள். அதைப் பரிவோடு பரிசிலித்து, நிறைவு செய்ய, ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, பேரூராட்சிகளிலேயும் அந்தக் கோரிக்கை இருக்கிறது.

இன்னொன்று, மக்கள் நலப் பணியாளர்கள். 1990 ஆம் ஆண்டிலே, உங்களுடைய ஆட்சிக் காலத்திலே 25,000 பேர் நியமிக்கப்பட்டார்கள். 1991 ஆம் ஆண்டில், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தவுடன் பணிநீக்கம் செய்யப்பட்டார்கள். 1997 ஆம் ஆண்டிலே, திரும்பவும் உங்களது ஆட்சிக் காலத்திலே நீங்கள் நியமனம் செய்தீர்கள் 13,000 பேரை. திரும்ப 2001 ஆம் ஆண்டிலே அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. பணி நீக்கம் செய்தது. திரும்பவும், 2006 ஆம் ஆண்டிலே நீங்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறீர்கள். இப்பொழுது 11,000 பேர்களை மீண்டும் பணி நியமனம் செய்திருக்கிறீர்கள். இந்த நிலைமைகள் மாறி மாறி வந்துகொண்டே இருக்கிறபோது, அவர்களுடைய நிலைமை என்பது கேள்விக்குறியாக மாறிவிட்டது என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள் என்ற காரணத்தினாலே, இவர்களை பணி நிரந்தரம் செய்வதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்கவேண்டும். அப்பொழுதுதான் அந்த வேலை என்பது உத்தரவாதமாக மாறும். இல்லையென்றால் மாறி மாறி மிகப் பெரிய அளவிலே அவர்கள் பாதிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

குடியிருப்பு மனைப் பட்டா பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி நத்தம் புறம்போக்கு, மேய்க்கால் புறம்போக்கு இவற்றிலே வாழ்ந்துகொண்டிருக்கக் கூடியவர்கள் இலட்சக்கணக்கிலே இருக்கிறார்கள். இது நம்முடைய வருவாய்த் துறை மானியத்திலே சொல்லப்பட்ட செய்தி, திரும்பவும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

நீர் நிலைகளைப் பாதிக்கின்ற பிரச்சினைகளைத் தவிர்த்து மற்ற அனைவருக்குமே அந்தக் குடியிருப்பு மனைப் பட்டாவினை வழங்கச் செய்வதற்கான முயற்சிகளை நீங்கள் எடுக்கவேண்டுமென்று கேட்டு, என்னுடைய தொகுதியின் சார்பிலே ஒரே ஒரு கோரிக்கை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வைத்திருக்கிறேன்.

மன்னார்குடி நகராட்சி என்பது பழமையான நகராட்சி. அதிலே பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். நேரிலே பேசியிருக்கிறேன். ஏனோ தெரியவில்லை, மன்னார்குடி அதிலே வரவில்லை. ஆகவே, பல நகராட்சிகள் அதிலே வந்திருக்கிற காரணத்தினாலே, தயவுசெய்து அந்த மன்னார்குடியையும் இணைத்து, இந்த ஆண்டுத் திட்டத்திலே நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய நகராட்சிக்கு உட்பட்ட தருமபுரி நகராட்சியிலே எம்.ஜி.ஆர். நகர் பகுதியிலே ஏரியா புறம்போக்கு பகுதியிலே 700 குடும்பங்கள் வாழ்கின்றன. இவர்களுக்கு இது ஒரு நீண்டகால பிரச்சினையாக இருக்கிறது. அவர்களுக்கும் பட்டாக்களை வழங்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டும்.

தாம்பரம், ஒக்கியம் துரைப்பாக்கத்திலே 680 குடியிருப்பு மனைகளைக் கொண்ட நம்முடைய தலைமைச் செயலக ஊழியர்கள் குடியிருப்புப் பகுதி இருக்கிறது. அங்கும் குடிநீர் தேவைகளை நிறைவு செய்வதற்கான திட்டங்கள் இல்லையென்று அவர்கள் சொல்கிறார்கள். 1,000, 2,000 ரூபாய் செலவு செய்துதான் அவர்கள் குடிநீர் பெறவேண்டியிருக்கிறது. நம்முடைய அரசு அலுவலர் குடியிருப்பாக இருக்கின்ற காரணத்தாலே, முன்னுரிமையின் அடிப்படையிலே இந்த ஆண்டே அவர்களுக்கு குடிநீர் வழங்கச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டு, இந்தத் துறை மிகச் சிறப்பாக, நமது தமிழக மக்களுக்குப் பயன்படும், பயன்படச் செய்வதற்கான முயற்சிகளை நமது அமைச்சர் அவர்கள் மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டு முடிக்கின்றேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. கண்ணப்பன்.

**திரு. மு. கண்ணப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சி அமைப்புகள்தான் மக்களாட்சியினுடைய அடித்தளமாக இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. மத்திய, மாநில அரசுகளால் உருவாக்கப்படுகின்ற அனைத்துத் திட்டங்களையும் மக்களுக்கு நேரடியாகக் கொண்டுபோய் சேர்க்கக்கூடிய ஒரே அமைப்பு உள்ளாட்சி அமைப்புகள்தான். ஆனால், அப்படிப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் 1958 ஆம் ஆண்டில் தமிழகம் முழுவதும் உருவாக்கப்பட்ட நேரத்திலே இருந்த அதிகாரங்கள் நாளாவட்டத்திலே கொஞ்சம் கொஞ்சமாக பறிக்கப்பட்டு, இன்றைக்கு



அடிப்படை வசதிகளைச் செய்வதற்குத் திட்டங்கள் தீட்டுவதற்குக்கூட, அரசாங்கத்திடத்திலேயிருந்து அனுமதி வாங்கக்கூடிய ஒரு சூழ்நிலை உள்ளாட்சி அமைப்புகளிலே ஏற்பட்டிருக்கின்றது. தாமதம் இல்லாமல் மக்கள் தேவைகள் நிறைவேற்றப்படுவதற்கு உள்ளாட்சி அமைப்புகளுக்கு, கூடுதலான அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரசியல் அமைப்புச் சட்டத் திருத்த மசோதா 73, 74-ல் குறிப்பிட்டுள்ளபடி, அனைத்து அதிகாரங்களும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்குவதற்கு அரசு பரிசீலிக்கவேண்டுமென்று இதே நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஊராட்சி நிர்வாகத்திலே ஏற்கெனவே இருந்த இரண்டு அடுக்கு முறை மாற்றப்பட்டு, மூன்று அடுக்கு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த மூன்று அடுக்கு முறை காரணமாக ஊராட்சியினுடைய தத்துவமே இன்றைக்கு நிலைகுலைந்து, ஊராட்சியினுடைய செயல்பாடுகள் முடக்கப்பட்டு, இதனாலே மிகப்பெரும் பாதிப்புக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. எனவே, பழையபடி இரண்டு அடுக்கு முறையைக் கொண்டுவந்து, ஊராட்சி மன்ற உறுப்பினர்களிலிருந்து தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள், மாவட்ட வளர்ச்சி மன்றம், இப்படிப்பட்ட இரண்டு அடுக்கு முறையை ஏற்படுத்துவதற்கு, ஏற்கெனவே அரசு முயற்சிகளை எடுத்து வருவதாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்பொழுது தெரிவித்தார்கள். எனவே, அந்த முயற்சியைத் தொடர்ந்து வலியுறுத்தி, விரைவில் அதற்கான முடிவுகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்தபடியாக, பெரும்பாலான உள்ளாட்சி அமைப்புகளுக்குப் போதுமான அளவிற்கு நிதி ஆதாரங்கள் இல்லை. வீட்டு வரியைத் தவிர, அத்தியாவசிய பணிகளைச் செய்ய முடியாமல், பணியாளர்களுக்குக்கூட சம்பளம் கொடுக்க முடியாத நிலைமையில், பல உள்ளாட்சி மன்றங்கள் இருக்கின்றன. உள்ளாட்சியினுடைய நிதி நிலைமையைப் பரிசீலித்து, மாநில நிதி ஆணையம் தக்க பரிந்துரைகளைச் செய்து, நிதிநிலையை மேம்படுத்தவும், தேவையான நிதியை அரசாங்கம் பகிர்ந்தளிக்கவும் ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வரிக் கட்டணங்கள் முதலியவற்றில் கணிசமான தொகையை ஊராட்சிகளுக்கு ஒதுக்கலாம்.

பிற்பகல் 12–10

அதேபோல, மணல் குவாரிகள் தனியாருக்கு ஏலம்விட்ட காலத்தில், அதில் குறிப்பிட்ட ஒரு தொகை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டது. அரசே மணல் குவாரிகளை ஏற்று நடத்தும்போது, உள்ளாட்சி அமைப்புகளுக்கு அந்த உரிய பங்கு வழங்கப்படுவதில்லை. ஆகவே, நதிக் கரையை ஒட்டியிருக்கக்கூடிய பல ஆயிரக்கணக்கான கிராமங்கள் பயன்படுகின்ற வகையில், இந்த மணல் குவாரிகளை, அரசாங்கம் ஏற்று நடத்தும்போது அதற்குரிய பங்கை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கல்குவாரிகள்மூலம் கிராமப்புறங்களிலே வருமானம் வருகிறது. அதிலேயும் இத்தொகைகள் உள்ளாட்சி மன்றங்களுக்கு ஒதுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சிப் பகுதிகளில் கேபிள் டி.வி. நடத்துபவர்கள், கேபிள் இணைப்பு ஒன்றிற்கு 10 ரூபாய் வீதம் உள்ளாட்சி மன்றங்களுக்கு வரியாக முன்னாலே செலுத்திக் கொண்டிருந்தார்கள். இடையிலே அரசே வசூல் செய்கின்ற நிலைமை ஏற்பட்ட காரணத்தினால், உள்ளாட்சி மன்றங்களுக்கான வருமானம் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, வருமானத்தை அதிகப்படுத்துவதற்கு மீண்டும் கேபிள் இணைப்புகளுக்கான வரிவசூல் செய்யும் உரிமையை உள்ளாட்சி மன்றங்களுக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட வருமான இழப்புகளை ஈடுகட்டுவதன்மூலம் உள்ளாட்சி அமைப்புகளின் நிதியாதாரங்களை சீர்படுத்த முடியும் என்று நான் கருதுகிறேன்.

பெரும்பாலான உள்ளாட்சி மன்றங்களில் குடிநீர் வசதிக்கும், தெரு விளக்குகளுக்கும் பயன்படுத்தப்படும் மின்சாரத்திற்கு உரிய கட்டணத்தைச் செலுத்த முடியாத நிலைமை இருக்கிறது. எனவே, உள்ளாட்சி மன்றங்கள் நிதி நெருக்கடிகளுக்கு ஆளாகின்றன. அதனால்தான் இங்கே பேசிய காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் மாண்புமிகு திரு. இராமசாமி அவர்கள்கூட இலவசமாக, மின்சார வாரியம் வழங்க வேண்டும் அல்லது உள்ளாட்சித் துறை மின்சாரத் தொகைக்கு கட்டணத்தைச் செலுத்திவிட வேண்டுமென்கின்ற யோசனையைச் சொன்னார்கள். முடிந்தால், அதை அரசு பரிசிலிக்க வேண்டும். இல்லையென்று சொன்னால், உள்ளாட்சி மன்றங்கள் பயன்படுத்தக்கூடிய மின்சாரத்திற்கான கட்டண விகிதத்தை வீட்டு உபயோகத்திற்கான கட்டண விகிதப்படி மாற்றியமைத்தால் உள்ளாட்சி



மன்றங்கள் நிதி நெருக்கடியிலிருந்து ஓரளவு காப்பாற்றப்படும். அந்தக் கருத்தையும் பரிசிலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உள்ளாட்சி அமைப்புகளில், தேர்தல்களைப் பொறுத்தவரையில், அனைத்து நிலைகளிலும் ஊராட்சி மன்ற உறுப்பினரிலிருந்து, மாவட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர் வரை அனைத்து நிலைகளிலும் வாக்காளர்கள் நேரிடையாக தேர்ந்தெடுக்கின்ற முறையில் அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதிலே, நிர்வாகம் நடத்துவதிலே சில சிக்கல்கள் இருப்பதாக அரசின் சார்பிலே, கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தலைவர் ஒரு கட்சியாகவும், உறுப்பினர்கள் வேறு கட்சியாகவும் அமைந்துவிட்டால் பல இடங்களிலே மெஜாரிட்டி இல்லாத காரணத்தினாலே நிர்வாகத்திலே குழப்பங்கள் ஏற்படுகின்றன என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கென்று சில சிறப்பு அதிகாரங்களை அந்தத் தலைவர்களுக்கு அரசாங்கம் வழங்கலாம். அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி அபிவிருத்தித் திட்டங்கள், வேலைகள் நடைபெறுவதிலே யாரும் தலையிடமுடியாது, தடுக்க முடியாது என்ற அளவில் அந்த அதிகாரத்தைத் தரலாம். வேண்டுமென்றே தகராறு செய்து நிர்வாகத்தைச் சீர்குலைப்பதற்கு எந்த எதிர்க்கட்சி முனையுமானாலும், அவர்களை பதவி நீக்கம் செய்வதற்குக்கூட மேலமைப்புகளுக்கு அதிகாரம் வழங்கக்கூடியவகையில் இதை யோசித்து பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஜனநாயகத்தின் தத்துவத்துக்கே வேட்டு வைக்கும் இந்த அவசர சட்டத்தைக் கைவிட வேண்டும். மக்கள் நேரடியாக, நிர்வாகிகளை, பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கக்கூடிய சட்டத்தை மீண்டும் கொண்டு வர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாநகராட்சி வட்டங்களைப் பொறுத்தவரையில், ஒரே சீராக பிரித்து சீரமைக்க வேண்டும். உதாரணமாக கோவை மாநகராட்சியில், 72 வட்டங்கள் இருக்கின்றன. அதிலே ஒன்றாவது வட்டத்தில் 4,491 பேர் வாக்காளர்கள். 72–வது வட்டத்தில் 28,704 பேர். மிகப் பெரிய ஒரு தனி நகராட்சியே நடத்தக்கூடிய அளவிற்கு ஒரு வட்டம் அமைக்கப்பட்டிருக்கின்றது. அதையெல்லாம் மாற்றியமைத்து, இடைப்பட்ட, இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வுகள் உள்ளதை நீக்கி, கூடுமானவரை நிலப்பரப்பும், வாக்காளர் எண்ணிக்கையும் சீராக இருக்கின்றவகையிலே மாற்றியமைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மக்கள் நலப் பணியாளர்கள். நீண்டகாலமாகப் போராடி வருகின்ற மக்கள் நலப் பணியாளர்களை அரசு மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொண்டிருப்பதற்கு நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வேலையிழந்த மக்கள் நலப் பணியாளர்கள் 13,500 பேர். வேலைக்கு மீண்டும் விண்ணப்பித்து இருப்பவர்கள் 12,415 பேர். வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களுடைய எண்ணிக்கை சுமார் 10 ஆயிரம் பேர். வேலைக்காக காத்திருப்பவர்கள் மேலும் 2,500 பேர். அவர்களுக்கு இன்னும் வேலைவாய்ப்பு கிடைக்காமல் காத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு எல்லாம் முடிந்தால், ஊராட்சிப் பகுதிகளிலே வேலைவாய்ப்பைக் கொடுக்கலாம்.

*பிற்பகல் 12–15*

அதேபோல, கல்வித் தகுதியுடையவர்கள். அதிலே நிறைய பேர் பட்டதாரிகள், 2 பட்டங்கள், 3 பட்டங்கள் பெற்றவர்கள்கூட இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் பரிசீலித்து, அரசுப் பணியிடங்களில் நிரப்பப்பட வேண்டிய 3 இலட்சம் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன; அந்தப் பணியிடங்களிலேகூட அவர்களை அமர்த்தலாம்.

வேலையிழந்த மக்கள் நலப் பணியாளர்களை, அவர்களுக்கு தொகுப்பு ஊதிய முறை ரத்துச் செய்யப்பட்டு காலமுறை ஊதியம் வழங்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுடைய பணி நிரந்தரம் செய்யப்பட வேண்டும். பணி நீக்கம் செய்யப்பட்ட காலத்தில் பலபேர் தற்கொலை செய்து கொண்டு மடிந்திருக்கிறார்கள். அப்படி இறந்துபோன குடும்பங்களுடைய வாரிசுதாரர்கள் ஒவ்வொருவருக்கும் தகுதி அடிப்படையிலே வேலை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

கோவையிலே இருக்கக்கூடிய, என்னுடைய சொந்தத் தொகுதியிலே இருக்கக்கூடிய சில பிரச்சினைகள். அந்த மாவட்டம் மிகப் பெரிய தொழில் மாவட்டம். அரசாங்கத்திற்கு அன்னியச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கக்கூடிய பெரிய மாவட்டம். அந்தப் பகுதியில் மேலும் தொழில்கள் வளர்ச்சி பெறுவதற்கும், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதற்கும் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேலும் உருவாக்க வேண்டும்.



குறிப்பாக, கோவை மாநகரத்தைச் சுற்றி ஒரு Ring road- வட்டச் சாலை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவினாசி சாலையையும், மேட்டுப்பாளையம் சாலையையும் இணைக்கக்கூடிய Bye-pass சாலை அமைக்க வேண்டும். கோவை–அவினாசி ரோடு மேம்பாலத்திலிருந்து நீலாம்பூர்வரை நான்கு வழிப் பாதை அமைக்க வேண்டும். காந்திபுரத்திலும், இலட்சுமி மில்லுக்கு அருகிலும் Fly over–மேம்பாலங்கள் அமைக்கப்பட வேண்டும். பில்லூர் குடிநீர்த் திட்டம், இரண்டாவது கட்டத் திட்டத்தை உடனே நிறைவேற்ற வேண்டும். கவுண்டம்பாளையம்–வடவள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்ட வேலை உடனே துவக்கப்பட வேண்டும். பிரதான சாலைகளாக இருக்கக்கூடிய மேட்டுப்பாளையம் சாலை, திருச்சி சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை நீக்கி சாலைகளை மேம்பாடடையச் செய்ய வேண்டும்.

ஆவாரம்பாளையம் railway crossing, காந்திபுரம்–இரத்னபுரி railway crossing, பொள்ளாச்சி ரோட்டில் குறிச்சி railway crossing இவற்றில் எல்லாம் railway மேம்பாலங்கள் உடனடியாக உருவாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை நிறைவு செய்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள்.

***திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் கிராம சுயராஜ்யம் வேண்டுமென்றார். கிராமங்கள்தான் இந்தியாவின் உயிர்நாடி என்றார். கிராம முன்னேற்றமே இந்தியாவின் முன்னேற்றம் என்று சொல்லப்பட்டது. ஆனாலும், சுதந்திரம் பெற்று 60–வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும்பொழுதும் கிராமங்களின் நிலை என்ன?

குடி தண்ணீர், படிக்கப் பள்ளிக்கூடம், போக, வர சாலை மற்றும் பேருந்து வசதி, ஆரம்ப சுகாதார வசதி, ஏரி மராமத்து, குடியிருக்க வீடு, மின்சார வசதி, சுடுகாட்டுப் பாதை என்று எதை எடுத்துக்கொண்டாலும் மிகப் பின்தங்கிய நிலையிலேயே கிராமங்கள் உள்ளன. ஏழைகளின் எண்ணிக்கையும் கிராமப்புறங்களிலேயே அதிகமாக உள்ளது. அரைப் பட்டினியாக உள்ளோர் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அதிகம் என்று நாடாளுமன்றத்தில் மத்திய இணை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் உள்ள மக்களில் மேல்மட்டத்தில் உள்ள 10 சதவீதம் பேர்கள் அமெரிக்க வாழ்க்கையில் திளைக்கின்றனர். அடிமட்டதில் உள்ள 60 சதவீதம் பேர் ஆப்பிரிக்காவை விட கேவலமான நிலையில் உள்ளனர். அமெரிக்காவும் வேண்டாம், ஆப்பிரிக்காவும் வேண்டாம். எல்லோரும் இந்தியாவாக வாழ்ந்தால் அதுவே போதுமானது. அதற்கு முக்கியப் பொறுப்பு கிராமங்களின் முன்னேற்றத்திலேயே உள்ளது. ஆகவே, இந்த அரசு, கிராம முன்னேற்றத்திற்கு என்ன செய்யப் போகிறது என்பதே இன்றைய கேள்வியாகும்.

எங்களுடைய தேர்தல் அறிக்கையில் ஒரு கிராமத்திற்கு ரூபாய் 25 இலட்சம் வழங்கி 5 ஆண்டு காலத்தில் எல்லாக் கிராமங்களும் வசதிபெறப் பாடுபடுவோம் என்று அறிவித்திருந்தோம். இப்போது 'அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்' என்ற பெயரில் ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கி, அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு' என்ற அறிஞர் அண்ணா அவர்களின் பெயரில் இந்தத் திட்டம் செயல்படுவது பொருத்தமானது.

இந்தத் தொகை ஒவ்வோர் ஊராட்சி மன்றத்திற்கும் நேரடியாகத் தரப்பட வேண்டும். அந்த ஊர் மக்களின் பொதுச் சபையைக் கூட்டி, எந்தெந்தத் திட்டங்களை எடுக்க வேண்டும் என்பதையும், அவற்றின் முறைவைப்பையும் பொதுச் சபையின் மூலமே தீர்மானிக்க வேண்டும். குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கும் பகுதிகள், அந்தந்த ஊர்களைவிட மோசமான நிலையில் உள்ளன. ஆகவே, அந்தப் பகுதிகளை மேம்படுத்த இந்த நிதியில் முன்னுரிமை அளிக்க வேண்டும். இந்தத் திட்டங்களையும், அதற்கு ஆகும் செலவையும் அந்த ஊர் முகப்பிலேயே விளம்பரப் பலகைமூலம் அறிவிக்க வேண்டும். அப்போதுதான் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுவதில் ஏற்படக்கூடிய முறைகேடுகளைத் தவிர்க்க முடியும். கிராமப்புறங்களில் இருக்கும் ஏழைகளின் வாங்கும் சக்தியை அதிகரிக்கவே தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஏட்டுச் சுரைக்காய் ஆகிவிடக் கூடாது. உண்மையிலேயே உழைத்தால்தான் பிழைக்கலாம் என்ற நிலையில் உள்ள ஏழை மக்களுக்கு இது பயன்பட வேண்டும்.

*பிற்பகல் 12–20*

மராட்டிய மாநிலத்தில் இதைச் செயல்படுத்தும்போது, இதில் பல குறைகள் காணப்பட்டன. இறந்தவர்கள் பெயரிலும், வயது



முதிர்ந்தவர்களின் பெயரிலும், அரசு அலுவலகங்களில் பணிபுரிபவர்களின் பெயரிலும், கற்பனைப் பெயர்களிலும் பட்டியல் போட்டு, அரசு அதிகாரிகளும், உள்ளூர் அரசியல்வாதிகளும் பணத்தை முறைகேடாக எடுத்துக்கொண்டது தெரிய வந்துள்ளது. சாலைகளோ, நீர்ப்பாசன அமைப்புகளோ செம்மைப்படுத்தவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் சென்னை மாநகராட்சியில் Muster Roll வழக்கு வந்தது நாம் எல்லாம் அறிந்த ஒன்றாகும். அத்தகைய நிலை ஏற்படாமல் இருக்க இந்தத் திட்டத்தின்மூலம் பலன் பெறுகின்றவர்கள் பட்டியல், யார் கேட்டாலும் கிடைக்கும் வகையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் விளம்பரப்படுத்தப்பட வேண்டும். இந்தத் திட்டத்தின்மூலம் பயன் பெறுபவர்கள் படிக்கத் தெரியாத பாமர மக்கள் என்பதால், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களோ அல்லது பொது நலனில் நாட்டம் கொண்டவர்களோ, இந்தப் பட்டியலை எளிதில் பெற வழிவகை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களை நிர்ணயிப்பதில் கட்சிக் கண்ணோட்டத்துடன்தான் செயல்படுகின்றனர் என்று இரு தரப்பிலுமிருந்து குற்றச்சாட்டு இதே மன்றத்தில் எழுந்துள்ளது. 1979-ல் ஒருவருக்குத் தேவைப்படும் உணவின் அளவைப்பொறுத்து, அதற்கு ஏற்ற வருமானத்தை வறுமைக்கோடாக நிர்ணயித்தனர். பிறகு 2004 ஆம் ஆண்டு, 13 அளவுகோல்களின் அளவில் கணக்கிடப்பட்டது. தமிழ்நாட்டில் 25.48 இலட்சம் ஏழைக் குடும்பங்கள் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளனர் என்று கணக்கிடப்பட்டுள்ளது. கிராமங்களில் கேட்டாலே ஏழைக் குடும்பங்கள் எவை என்ற பட்டியலை எளிதில் பெற முடியும். கிராமங்கள்தோறும் விரிவான முறையில் ஏழைக் குடும்பங்களின் பட்டியலை எடுத்து, அத்தகைய குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்க வேண்டும். 25 அல்லது 30 கிராமங்கள் கொண்ட ஒரு பகுதியை எடுத்து, அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளோடு, தன்னிறைவு கொண்ட பகுதியாக அபிவிருத்திச் செய்வதன்மூலம் கிராமங்களிலிருந்து நகரங்களுக்குக் குடி பெயர்வதைத் தடுக்கலாம்.

வீடுதோறும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இலவசமாக வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது, வரவேற்கத்தக்கது. முதல்கட்டமாக, 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட உள்ளது. அரசின் கணக்குப்படி, ஏழைக் குடும்பங்கள் 25 இலட்சத்திலிருந்து 40 இலட்சம் வரை உள்ளன. அதாவது, ஏழைகள் 2 கோடி என்றால், 40 இலட்சம் குடும்பங்கள் எனக் கணக்கிடப்படும்.

ஏழைகள் அல்லாத, வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் இல்லாத குடும்பங்களும் இருக்கக்கூடும். இத்தனை இலட்சம் குடும்பங்களுக்கும், எத்தனை ஆண்டுகளில் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது? ஏழைக் குடிசைகளுக்கு வழங்கப்படும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு இலவச மின்சாரம் அளிக்கப்படும் என்ற அறிவிப்பை வரவேற்கிறேன். அத்தியாவசிய செலவிற்கே போதிய வருமானம் இல்லாதவர்கள்தான் ஏழைகள் என்பதால், இச்சலுகை மிகவும் பொருத்தமானது. ஆனால், அதே நேரத்தில், அந்த ஏழைகள் cable கட்டணமாக மாதம் 100 ரூபாய் எப்படி கட்ட முடியும்? இந்தத் தொகை மேலும் அதிகரித்தால் என்ன செய்வது? இதைக் கருத்தில்கொண்டு அரசே இந்த cable கட்டணத்தையும் செலுத்தி ஏழைகளின் வாழ்க்கைச் சுமையைக் குறைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

எனது விருத்தாசலம் தொகுதியைப் பொறுத்தவரையில், ஒரு நகராட்சி, விருத்தாசலம், கம்மாபுரம், நல்லூர் ஆகிய 3 ஊராட்சி ஒன்றியங்கள், 167 வருவாய் கிராமங்களை உள்ளடக்கியதாகும். இக்கிராமங்கள் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. குறிப்பாக, சாலை வசதிகள் கிடையாது. எந்தப் பக்கம் சென்றாலும் செம்மண் சாலையில்தான் செல்ல வேண்டியுள்ளது. அந்தக் கிராமங்களில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி இல்லை. இருக்கின்ற குடிநீர்த் தேக்கத் தொட்டிகளும் பழுதடைந்து, இடிந்துவிழும் நிலையில் உள்ளன. அடிபம்புகளும் சரியாக வேலை செய்வதில்லை. மின்சாரம் சரிவர கிடைப்பதில்லை என்பதோடு, அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. தெரு விளக்குகள் zero watt பல்புகளுடன் காட்சி அளிக்கின்றன. இருக்கின்ற மின் கம்பங்களிலும் விளக்குகள் பொருத்தப்படவில்லை. குறிப்பாகச் சொல்லப்போனால், விருத்தாசலம் தொகுதிக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து, அதனை மேம்பாடு அடையச் செய்யவேண்டும் என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

விருத்தாசலம் நகரம் மிகப் பழமை வாய்ந்த நகரம். அருள்மிகு விருத்தகிரீஸ்வரர் ஆலயம், அருள்மிகு கொளஞ்சியப்பர் ஆலயம், அருள்மிகு வேடப்பர் ஆலயம், அருள்மிகு ஏகநாயகர் ஆலயம் போன்ற பழமை வாய்ந்த ஆலயங்களை உள்ளடக்கி இருப்பதால், விருத்தாசலத்தை பாரம்பரியம் மிக்க நகரமாக Heritage Town-ஆக அறிவிக்க வேண்டுகிறேன். ஒவ்வோர் ஆண்டும் தமிழ்நாட்டில் பழமை வாய்ந்த 12 கோயில்களைத் தேர்வு செய்து இத்திட்டத்தின்கீழ் கொண்டு வருவதைப் போன்று, இந்த ஆண்டு விருத்தாசலத்தை பாரம்பரியம்



மிக்க நகரமாக அறிவித்து, அதற்கான நிதியை மைய அரசிடமிருந்து பெற்றுத் தர வேண்டுகிறேன்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர வேண்டுகிறேன். இருக்கின்ற வீடுகளும் இடிந்துவிழும் நிலையில் உள்ளன. எனவே, முடிந்தவரை இந்த ஏழைகளுக்கு மனைப் பட்டா வழங்கி, வீடுகள் கட்டி, அவர்கள் வாழ்வில் மலர்ச்சி ஏற்படுத்த வேண்டுகிறேன்.

*பிற்பகல் 12–25*

சரியான பஸ் வசதி இல்லாத காரணத்தால் மாணவர்கள், குறிப்பாக, சிறுமிகள் பள்ளிக்குச் செல்ல முடிவதில்லை. இந்தக் குறையைப் போக்க அனைத்துக் கிராமங்களையும் இணைக்கும் வகையில் தார்ச் சாலைகள் அமைத்து, பேருந்து வசதியை ஏற்படுத்தித் தர வேண்டும். அப்போதுதான் மாணவ, மாணவிகள் பள்ளிக்குச் சென்று படிக்க வாய்ப்பு ஏற்படும்.

பெருவாரியான கிராமங்களிலும், நகரங்களிலும் அடிப்படைத் தேவைகளான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியும், வடிகால் வசதியும் இல்லை. இரண்டு பெரு வாரியங்கள் இதற்கு இயங்கி வந்தும் பயனில்லை என்றே தோன்றுகிறது. இதற்கான முக்கிய காரணம், இத்தகைய திட்டங்கள் உள்ளாட்சி மன்றங்களில் மேற்கொள்ள உரிமை இல்லை என்பதுதான்.

அந்தந்த மக்கள் தங்களுக்குத் தேவையான நீராதாரங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், புதிதாக ஏற்படுத்திக்கொள்ளவும், மழைநீர் சேகரிப்பு மற்றும் நிலத்தடி நீர்த் திட்டத்தை நிர்வகிக்கவும், பொறுப்புகள் வழங்கப்பட வேண்டும். இந்த வாரியங்கள் உள்ளாட்சி மன்றங்களின் திட்டங்களை நிறைவேற்ற தொழில்நுட்ப உதவி அளித்தால் அதுவே போதுமானது என்று கருதுகிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த தாய்மார்கள் நாள் முழுவதும் கூலி வேலை செய்துவிட்டு வீட்டிற்கு வந்து சமையல் செய்ய வேண்டியுள்ளது. அடுப்பெரிக்க விறகுகள் மற்றும் வறட்டியை நாட வேண்டியிருக்கிறது. இந்தப் புகையால் அவர்களின் உடல் நலன் மிகவும் பாதிக்கப்படுகிறது. இதைத் தவிர்க்கும் வகையில் இலவச சமையல் எரிவாயு அடுப்பு தருவது ஒரு நல்ல திட்டமாகும். அதற்கான எந்த அறிவிப்பும் இதுவரையில் அரசின் சார்பில் வெளியிடப்படாதது கண்டு வருந்துகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வறுமை ஒழிப்புத் திட்டங்களாக ஆங்காங்கே செயல்படுகின்றன. குறைந்த வட்டியில் எளிதில் கடன் கிடைக்கச் செய்தலும், தெரிந்த தொழிலில் தாய்மார்களை ஈடுபடுத்தலும், உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு உரிய விலை கிடைக்க சந்தைக்கு வழிவகுத்தலும் ஆகியவற்றின்மூலம் ஏழைக் குடும்பங்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்வதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். பெரும்பாலும் படிக்காத ஏழைத் தாய்மார்களே பயனடைகின்றனர். இத்தகைய சுய உதவிக் குழுக்கள் நன்றாக இயங்கவும், மேலும் வளரவும் இவற்றில் அரசியல் தலையீடு இல்லாமல் பார்த்துக்கொள்வது அவசியம். கடந்த ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் அன்றைய ஆட்சியாளர்களால் அரசியல் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இந்த ஆட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் சமூக நலத் துறையிடமிருந்து உள்ளாட்சித் துறைக்கு தேர்தலுக்கு முன்பே மாற்றப்பட்டுள்ளது. இது குற்றச்சாட்டுக்கு இடமளிக்காதா? சென்னை மாநகராட்சியின் குடிநீர்த் தேவையை.. (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடம், முடிந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள்.

**திரு. விஜயகாந்த்:** சென்னை மாநகராட்சியின் குடிநீர்த் தேவையை நிரந்தரமாக நிறைவு செய்யும்வகையில், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் அன்றைய ஆந்திர முதல்வர் என்.டி. ராமாராவ் அவர்களுடன் கிருஷ்ணா குடிநீர்த் திட்ட ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. கிருஷ்ணா ஆற்றுநீர் சென்னை மாநகரை நோக்கி இயற்கையாக ஓடிவரும் நில அமைப்பைக் கொண்டது. பம்ப்செட்டுகள் தேவை இல்லை. மேலும், எதிர்காலத்தில், பெருகிவரும் மக்கள் தொகையைச் சமாளிக்க இந்தக் கால்வாயை அகலப்படுத்தி, கூடுதலான குடிநீர் கொண்டு வர முடியும். கிருஷ்ணா ஆற்றுநீரில் வெள்ளம் ஏற்படும் காலத்தில்தான், இந்த நீர்ப் பகிர்வும் போடப்பட்டுள்ளது. எந்த மாநிலத்திற்கும் இதனால் இழப்பு எதுவுமில்லை. இந்தத் திட்டம் இப்போது என்ன ஆயிற்று?

வீராணத்தில் இருந்து கொண்டுவரும் நீருக்கு, பழைய திட்டமானாலும், புதிய திட்டமானாலும் பம்புசெட்டுகளும், மின்சாரமும் தேவை. போதிய தண்ணீர் ஆதாரமும் இல்லை. கூடுதல் செலவு மட்டுமல்ல, வீண் செலவும் ஏற்படும் என்பதை இந்தியத் தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்போது, பொருளாதார ரீதியில் குடிநீர்க் கட்டணம் உயராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.



உள்ளாட்சி மன்றங்கள் நிர்வாக அமைப்புகள், சட்டமன்றங்களைப்போல் கொள்கையின் அடிப்படையில் விவாதித்து, சட்டங்களை இயற்றும் அமைப்புகளல்ல. உள்ளாட்சி அமைப்புகளின் பணிகள், சாலைகள் அமைத்தல், பள்ளிகள் நிர்வகித்தல், குடிநீர் வசதி செய்து தருதல், கழிப்பிட வசதிகள் அமைத்தல், புதிய கட்டடங்களுக்கு அனுமதி கொடுத்தல் போன்ற பொதுவான பணிகளே ஆகும். இத்தகைய பணிகளைச் செய்ய தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகள் அரசியல் கட்சி ரீதியாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற அவசியம் இல்லை.

நகரங்களில் கிராமங்களின் நலனில் நாட்டம் கொண்டோர் யார் வேண்டுமானாலும், தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெறும் வாய்ப்பை ஏற்படுத்துவது வரவேற்கத்தக்கது. அரசியல் கட்சிகளின் ஆதிக்கத்தால் இத்தகையோர் எவரும் போட்டியிட முன்வருவது இல்லை. உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் அரசியல் கட்சி ரீதியில் போட்டியிட வேண்டாமென்று அனைத்து அரசியல் கட்சிகளும் சேர்ந்து முடிவெடுத்தால்.. (மணியடிக்கப்பெற்றது) இதோ, முடியப் போகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், படிக்கிறதை அமைச்சரிடம் கொடுங்கள், செய்து தருவோம்.

**திரு. விஜயகாந்த்:** அதை வரவேற்பதில் முதல் கட்சியாக நாங்கள் இருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உள்ளாட்சி மன்றங்களில் தேர்தலில் வேட்புமனு தாக்கல் செய்த பிறகு அதிக நாட்கள் கால அவகாசம் தந்து, தேர்தல் நடத்தப்படுகிறது. சட்டமன்றத் தேர்தலிலோ, நாடாளுமன்றத் தேர்தலிலோ நிறைய வாக்காளர்களைச் சந்திக்க வேண்டியிருப்பதால் அவர்களுக்கு அதிக நாட்கள் கால அவகாசம் தேவைப்படுகிறது.

ஒருசில வாக்காளர்களை மட்டுமே கொண்ட உள்ளூரில் போட்டி இருக்கிறபோது, நீண்டகால அவகாசம் தேவை இல்லை. இது வீண் செலவுக்கே வழிவகுப்பதாகும். ஏழையெளிய மக்கள் போட்டியிட முடியவில்லை. கால அவகாசத்தை எவ்வளவுக்கு எவ்வளவு குறைக்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு தேர்தல் செலவுகளும் மிச்சமாகும். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் இலஞ்ச ஊழல்களில் ஈடுபட வேண்டிய அவசியமிருக்காது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி மன்ற உறுப்பினர்கள் தவறு செய்வார்களானால் அவர்களைத் திரும்ப அழைக்கின்ற உரிமை வாக்காளர்களுக்குக் கிடைக்க வேண்டும். உள்ளாட்சி மன்றத் தொகுதிகள் சிறிய தொகுதிகள் என்பதால் இது சாத்தியமாகும். தவறு செய்பவர்களை நீக்குவதற்கு இப்போது அதிகாரிகளிடம் அதிகாரம் வழங்கப்படுகிறது. இது ஜனநாயகம் ஆகாது. யார் நியமிக்கிறார்களோ அவர்களுக்குத்தான்– (மணியடிக்கப்பெற்றது) இதோ முடிந்துவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைக் கொடுங்கள், அமைச்சரிடம் கொடுங்கள். (குறுக்கீடு) படிக்கத்தானே செய்கிறீர்கள், அதை அவரிடம் கொடுத்தால் அதைப் படித்து, என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்து கொடுப்பார் அல்லவா? (குறுக்கீடு) அதைக் கொடுத்தீர்கள் என்றால் செய்து கொடுப்பார்கள். (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது.

*பிற்பகல் 12–30*

**திரு. விஜயகாந்த்:** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லோருக்கும் அரை மணி நேரம் கொடுக்கிறபோது, எனக்கு 15 நிமிடங்கள்கூட கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள். மைனாரிட்டி மக்களைக் காப்பாற்றுகின்ற தி.மு.க. அரசில், நானும் மைனாரிட்டிதானே, எனக்குக் கொஞ்ச நேரம் கொடுத்தால் என்ன?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி, சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. விஜயகாந்த்:** யார் நியமிக்கிறார்களோ அவர்களுக்குத்தான் நீக்குகிற அதிகாரம் இருக்கவேண்டும். அந்த அடிப்படையில் திரும்பப் பெறும் உரிமை அளிக்கும் வகையில் இந்த அரசு சட்டத் திருத்தம் கொண்டு வரவேண்டும்.

மக்களுக்குச் சேவை செய்யவே ஆட்சி அமைப்பில் பல கட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. மத்திய அரசு, மாநில அரசு, மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகள் என்று பல படிக்கட்டுகளாக அதிகார அமைப்புகள் பிரிக்கப்படுகின்றன.



சில வளர்ச்சித் திட்டங்களை ஊராட்சி மன்றங்கள்தான் சிறப்பாகச் செயல்படுத்த முடியும். இன்னும் சில வளர்ச்சித் திட்டங்கள், உதாரணமாக, கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஊராட்சி ஒன்றியங்களால்தான் செயல்படுத்த முடியும். இதேபோன்றுதான் மாநில அரசுக்கும், மத்திய அரசுக்கும் பொறுப்புகளும், அதிகாரங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. ஆனால், உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்புகளுக்கு ஏற்ப, அவற்றிற்கு நிதி திரட்டும் வாயில்கள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், 15 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. விஜயகாந்த்:** இன்னும் ஒரே ஒரு லைன்தான். நடைமுறையில் உள்ளாட்சி அமைப்புகள் பட்டினி போடப்படுகின்றன என்பதே உண்மை. புதிதாகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊட்டச்சத்து வழங்குவாரா என்று கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.எஸ். பாபு. அனுமதிக்கப்பட்ட நேரம் 5 நிமிடங்கள்.

**திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். தமிழகத்திலே உள்ள அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர தன்னுடைய உடல்நிலையைப் பொருட்படுத்தாமல், 83 வயதிலேயும் இந்தத் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்து, அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற வகையில் ஒரு தேர்தல் அறிக்கையை உருவாக்கி, அதனை மக்களிடம் உரிய வகையில் எடுத்துச் சென்று, ஒரு மாபெரும் ஆட்சி மாற்றத்திற்குக் காரணமாக இருந்து, தான் பதவியேற்ற நாளிலிருந்து இன்று வரை, கிட்டத்தட்ட அறிவித்த வாக்குறுதிகளில் 75 சதவிகிதம் வரை நிறைவேற்றி, உன்னதமான ஆட்சியைச் செய்து கொண்டிருக்கின்ற, ஓய்வுக்கு ஓய்வு கொடுத்துள்ள தன்னிகரில்லாத் தலைவர், மாண்புமிகு தமிழக முதல்வர், எங்கள் தலைவர் அவர்களே, (மேசையைத் தட்டும் ஒலி) இந்த எளிய தொண்டனுக்கும் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பு தந்து, என் போன்ற தொண்டர்களுக்கும் தன் இதயத்தில் இடம் உண்டு என்று உலகத்திற்கு உணர்த்தி, என்னை

தமிழக மக்களுக்கு அடையாளம் காட்டிய உலகத் தமிழர்களின் ஒப்பற்ற தலைவர் அவர்களே, உங்கள் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன். நம் நாட்டில் இதுவரை எந்த நிதியமைச்சரும் அளிக்காத வரியில்லாத நிதிநிலை அறிக்கையை அளித்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்லவேண்டுமானால் தலைவருக்கு மட்டும் ஒரு வார்த்தையில் சொல்லிவிட்டு, உரையைத் தொடங்கினால்தான் 5 நிமிடங்களில் பேசி முடிக்க முடியும். மற்றவர்களுக்கெல்லாம் நன்றி சொல்வதை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று அவை உறுப்பினர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், (சிரிப்பு) எங்களுடைய இளைஞர்களின் நம்பிக்கை நட்சத்திரம், கழகத்தின் போர்ப்படைத் தளபதி, கழகத்தின் வெற்றிக்கு தமிழகம் முழுவதும் இரவும், பகலும் அயராது உழைத்து (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றிவாகை சூடி வரும், வருங்கால தமிழகத்தின் விடிவெள்ளியுமான இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் மறைந்த மாமேதை முரசொலியார் அவர்களை இந்தத் தருணத்தில் நினைவு கூர்ந்து, அவருடைய மகனான மத்திய அமைச்சர், மரியாதைக்குரிய திரு. தயாநிதி மாறன் அவர்களுக்கும், எனது வெற்றிக்கு உழைத்த கூட்டணி கட்சித் தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் மற்றும் எனக்கு வாக்களித்த வாக்காளப் பெருமக்களுக்கும் என் மனமார்ந்த நன்றியை அன்புடன் தெரிவித்துக்கொண்டு, என் பேச்சை இந்த மன்றத்தில் பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996–2001 வரை நடைபெற்ற நம்முடைய கழகத் தலைவர் ஆட்சியில் சென்னை மாநகராட்சியை, மக்களுக்குச் சேவை செய்கின்ற மாநகராட்சியாக நம்முடைய மேயர் அவர்கள், 44–வது வயதில், இந்தியாவிலேயே, 44–வது மேயராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது மேயர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் சிறப்பாக அந்த ஆட்சியை செய்து வந்தார். அந்த ஆட்சியின் காரணமாக, மீண்டும் 2001–ல் அவர் இரண்டாவது முறையாக மாநகராட்சித் தேர்தலில் நின்று,



இரண்டு இலட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றவரை, தோற்கடிக்க வேண்டுமென்று முயற்சி செய்து, கடந்தகால ஆட்சியாளர்கள் அதனை முன்னிட்டு, கழகத் தலைவர் அவர்கள் அன்றைய கவர்னரிடத்திலே முறையிட்டதன்பேரில் 5,000 வாக்குகள் வித்தியாசத்தில் தான் ஜெயித்தார் என அறிவித்து, அதையும் அவர்கள் வயிற்றெரிச்சலில், தாங்க முடியாமல் ஒரு கறுப்புச் சட்டத்தைக் கொண்டு வந்து, அந்தப் பதவியையும் பறித்ததன் காரணமாக சென்னை மாநகராட்சியில், இங்கே பேசிய பினாமி சட்டமன்ற அஇஅதிமுக உறுப்பினர்களில் ஒருவர் பேசினார் ** என்று. எங்களுடைய ஆட்சிக் காலத்தில் (கூச்சல்–குழப்பம்) ஆட்சி செய்கின்ற மாநகராட்சி (குறுக்கீடுகள்) அந்த ஆட்சிக் காலத்தில் கொள்ளையர்கள் கூடாரமாக...

*பிற்பகல் 12–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் ஒன்றுபோல கத்தினீர்கள் என்றால் எப்படி? உட்காருங்கள். அமைதியாக இருங்கள்.

**திரு. வி. எஸ். பாபு:** சுரண்டுபவர்களுடைய இருப்பிடமாக, மக்களுக்கு எந்தவிதத்திலும் பயன்படாத மாநகராட்சியாக இயங்கி வந்தது என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள். 1997 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை – (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது கன்னிப் பேச்சு, உட்காருங்கள்.

**திரு. வி.எஸ். பாபு:** எங்கள் தளபதி மேயராக இருந்தபோது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கன்னிப் பேச்சு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் பேசி முடித்த பிறகு பேசலாம். உட்காருங்கள்.

**திரு. வி.எஸ். பாபு:** சென்னையை சிங்காரச் சென்னையாக்கி உலக அரங்கில் சென்னையின் பெருமையை உயர்த்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) மாநகராட்சியில் கல்வியின் தரம் உயர அனைத்துப் பள்ளிகளுக்கும் கணினி வழங்கினார். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**திரு. வி.எஸ். பாபு:** மழைநீர் வடிகால் மேம்படுத்தப்பட்டது. தடையில்லா மின்சாரம் வழங்கப்பட்டது. எப்பொழுதும் தடையில்லா குடிநீர் வழங்கப்பட்டது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேயராக இருந்தபொழுது எங்கள் புரசைவாக்கம் தொகுதிக்கு, சென்னை மாநகராட்சி மண்டலம் நான்கில் பள்ளிக் கூடங்கள், சமூக நலக் கூடங்கள், விளையாட்டுத் திடல்கள், கணினிப் பயிற்சி மையங்கள், சிறிய மேம்பாலங்கள், கூடுதல் மருத்துவமனைகள், மழலைப் பள்ளிகள் போன்ற பல்வேறு நலத் திட்டங்களை நிறைவேற்றித் தந்ததை இந்த நேரத்தில் நினைவுகூர ஆசைப்படுகிறேன். குண்டு, குழி இல்லாத சாலைகள், புதிய பேருந்து வசதிகள், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க 10 மேம்பாலங்கள் போன்ற திட்டங்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மேயராக இருந்தபோது நிறைவேற்றினார்.

அதேபோல், இப்பொழுது ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி அத்தனைக்கும் தந்தையாக உள்ள நீங்கள் தமிழ்நாட்டை சிங்கார மாநிலமாக்க, இந்தியாவின் முதல் மாநிலமாக்குவீர்கள் என்று நம்புகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், கடந்த கால அதிமுக ஆட்சியில் சென்னை மாநகராட்சியை சீரழித்து, அது சோம்பேறிகளின் இருப்பிடமாக இருந்தது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தளபதி மேயராக இருந்தபோது 10 மேம்பாலங்கள் கட்ட அனுமதித்து அதில் 9 மேம்பாலங்களைச் சிறப்பாகக் கட்டி முடித்தார். அதில் ஒரு மேம்பாலத்தில்தான் முன்னாள் முதலமைச்சரும், இன்றைய எதிர்க்கட்சித் தலைவருமானவர் தினமும் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அந்த மேம்பாலங்கள் உறுதியாகக் கட்டப்படவில்லை என்று காவல் துறை அதிகாரிகளை வைத்து சுரண்டிப் பார்த்து, இடித்துப் பார்த்து, ஏதோ ஊழல் நடந்தது என்று தவறான குற்றச்சாட்டை முன்னாள் முதலமைச்சர் சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால், அந்தப் பாலமோ இன்று நிலையாக இன்னும் 100 ஆண்டுகள் உறுதியாக இருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், குறை கூறியவர்கள் எங்கே இருக்கின்றார்கள் என்றே தெரியவில்லை.

கடந்த 2001 ஆம் ஆண்டில் அதிமுக ஆட்சி பொறுப்பேற்றவுடன் அதிகாரிகளை வற்புறுத்தி கைக்கூலிகளின் துணையுடன் ஒரு மணி நேரத்தில் பொய்ப் புகார் தயார் செய்து அதன் அடிப்படையில் நள்ளிரவில் இன்றைய மாண்புமிகு முதல்வர் தலைவர் அவர்களை



அவருடைய வயதைக்கூட எண்ணிப் பார்க்காமல், கைது செய்ததுடன், மறைந்த மாமேதை முரசொலியாரையும் தாக்கி, அவருடைய மரணத்திற்குக் காரணமாகவும், மாண்புமிகு தளபதி அவர்களைக் கைது செய்து, சித்ரவதை செய்வதற்கும் கடந்த கால ஆட்சியாளர்கள் காரணமாக இருந்தார்கள். ஆனால், கடந்த 5 வருடங்களில் அந்தப் பொய்ப் புகார்மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க முடியாமல் திணறினார்கள். அதிலிருந்து தெரிவது, தமிழினத் தலைவர் மற்றும் தளபதி ஆகியோரை கைது செய்து சித்ரவதை செய்வதுதான் அவர்களது நோக்கம் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் அந்த நாட்டின் கல்வித் தரம் உயர வேண்டும். விவசாயம் செழிக்க வேண்டும். ஆனால், கடந்த கால ஆட்சியில் ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள், மக்கள் நலப் பணியாளர்கள் ஆகியோரை சிறையில் அடைத்தும், விவசாயிகள் எலிக் கறி சாப்பிட வேண்டிய அளவிற்குத் தள்ளப்பட்ட கையாலாகாத ஆட்சிதான் நடந்தது என்பதை நாடு அறியும். (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் மழைக் காலங்களில் (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வி.எஸ். பாபு:** மழைக் கால நிவாரணம் வழங்குகிறோம் என்ற போர்வையில் 51 அப்பாவி மக்களை பலி வாங்கியதுதான் மிச்சம். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்த முன்னாள் முதலமைச்சர் மற்றும் அதற்குத் துணை போன அதிகாரிகள் யார் என்பதை சுட்டிக்காட்ட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் கட்டுப்பாட்டோடு இருக்க வேண்டும். திரு. பாபு, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வி.எஸ். பாபு:** நிதிநிலை அறிக்கையை அளித்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், கட்டி முடிக்கப்படாமல் இருக்கும் பெரம்பூர் மேம்பாலத்தை, விரைவில் அப்பணியைத் தொடங்க மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் உத்தரவிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியில் மேடவாக்கம் நெடுஞ்சாலையில் கெல்லிஸ் சந்திப்பில் ஒரு மேம்பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் கனிவுடன் பரிசீலித்து உத்தரவிடுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-40*

எனது தொகுதியிலுள்ள லோக்கோ ஒர்க்ஸ் மேம்பாலத்தை (மணியடிக்கப்பெற்றது) அகலப்படுத்த இரயில்வே நிர்வாகத்திடமிருந்து கடிதம் வந்துள்ளது. அதை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கொடுத்துள்ளோம். அம்மேம்பாலப் பணிகளை விரைவில் தொடங்க ஆணையிடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களையும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள், பாபு.

**திரு. வி.எஸ். பாபு:** எங்கள் தொகுதியிலுள்ள மனநல மருத்துவமனையிலுள்ள புறநோயாளிகள் பகுதியிலிருந்து உட்புறநோயாளிகள் இருக்கும் பகுதிக்குச் செல்ல அயன்புரம் சாலையில் ஒரு சுரங்கப்பாதையை அமைத்துத் தர உத்தரவிடுமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகுமார். (குறுக்கீடு) நன்றி சொல்லி முடியுங்கள். நன்றி சொல்லுங்கள் சீக்கிரம். (குறுக்கீடுகள்) யார் கத்துவது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. கலைராஜன், உட்காருங்கள். தேவையானபோது நான் சொல்கிறேன். போய் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதி வரும். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. வி.எஸ். பாபு:** அடிக்கடி விபத்து ஏற்படுகிறது. அதேபோல், 59-வது வட்டத்தில் கொன்னூர் நெடுஞ்சாலையில் மழைநீர் வடிகால் மேல் சுமார் ஆயிரம் வீடுகள் இருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் (குறுக்கீடுகள்) (மணியடிக்கப்பெற்றது) ஆகவே, இவற்றையெல்லாம், நான் எழுதிக்கொடுக்கின்றவற்றையெல்லாம் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு-



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜகுமார். (குறுக்கீடு)

**திரு. வி.எஸ். பாபு:** இந்த அளவிலே நான் இந்த அவையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தளபதி அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கலைராஜன் உட்காருங்கள், time ஆகிவிட்டது. உட்காருங்கள். திரு. ராஜகுமார், ஐந்து நிமிடங்களில் பேசி முடியுங்கள். ஐந்து நிமிடங்கள்.

***திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய திருநாட்டின் நான்காம் காந்தியான எங்கள் அன்னை சோனியா காந்தியை வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை எளிய மக்களின் வாழ்விலே வளம் காண ஐந்தாவது முறையாக மீண்டும் முதல்வராக பொறுப்பேற்று, சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என சொல்லியதையெல்லாம் முதல்வராக பொறுப்பேற்ற நிகழ்ச்சியிலேயே ஒப்பமிடத் தொடங்கிய முத்தமிழ் அறிஞரே, (மேசையைத் தட்டும் ஒலி) தாங்கள் மாண்புமிகு முதல்வராக வீற்றிருக்கும் இந்த அவையிலே நானும் உறுப்பினராக இருப்பதிலே பெருமகிழ்வோடு தலை வணங்குகின்றேன்.

என்னுடைய அரசியல் ஆசானும், குடும்பத்தின் தலைவருமான எனது வழிகாட்டி மாண்புமிகு மத்திய அமைச்சர் மணிசங்கரய்யர் அவர்களை வணங்கி, தமிழ் மண்ணிலே பெருமை சேர்த்திட தன்னையே அர்ப்பணித்திருக்கும் என் அன்புத் தளபதியே, ஈடு இணையற்ற நின் பணியே கடந்த தேர்தலின் சாதனை. உங்கள் ஆட்சித் துறையிலே சாதனைகள் பல படைத்திட உள்ளாட்சித் துறையின்மூலம் தமிழகத்திற்கு நல்லாட்சியினை வழங்கிட அமைச்சர் பொறுப்பேற்றிருக்கும் தங்களுக்கு என் பணிவான வணக்கங்களைச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

எங்கள் மாவட்டத்தின் மூத்த அமைச்சர், கூட்டுறவுத் துறையில் பல சாதனைகள் படைத்துள்ள எங்கள் அன்பு அண்ணன் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தஞ்சை மண்ணில் காங்கிரஸ் கட்சிக்குப் பெருமை சேர்க்கின்ற மக்கள் தளபதி, பாசமிகு தலைவர் மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு. ஜி.கே. வாசன் ஐயா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) எளிமையாகவும், இனிமையாகவும் பழகக்கூடிய நாகை நாடாளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் திரு. ஏ.கே.எஸ். விஜயன் அவர்களுக்கும், என்னை

தேர்தலில் வெற்றி பெறச் செய்த ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்களான பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மருத்துவர் ஐயா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக காங்கிரஸ் கட்சித் தலைவர் அவர்களுக்கும், இரு கம்யூனிஸ்ட் தோழர்களுக்கும், தோழமைக் கட்சியினர் அனைவருக்கும், என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறி, சேவை புரிய என்னைத் தேர்ந்தெடுத்த மயிலாடுதுறை மக்களுக்கும், எங்கள் கூட்டணிக்கு வாக்களித்த நல்ல உள்ளங்களாகிய, உங்களுக்கெல்லாம் இந்த அவையிலே என் நன்றியைத் தெரிவித்து உரையைத் தொடங்குகிறேன்.

மத்திய அரசினுடைய திட்டமான (PMGSY) கிராமப்புறச் சாலைகள் திட்டத்தைப் பொறுத்தவரையிலே கடந்த 25-12-2000 ஆம் ஆண்டு மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இந்தத் திட்டமானது, ஐந்து கட்டங்களாகத் திட்டமிடப்பட்டு, மூன்று கட்டங்களாக ஆரம்பத்திலே ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக செயல்படுத்தப்பட்டு வந்தது. தற்போது யாருடைய துறையிலே இருக்கிறது என்பது தெரியாத சூழ்நிலை. ஏற்கெனவே 3159 கிலோ மீட்டர் சாலைப் பணிகள், 372.9 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் நான்காவது கட்டமாக செயல்படுத்துகின்ற பொறுப்பினை திடீரென்று ஏன் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றினார்கள் என்பது யாருக்கும் தெரியவில்லை. அந்த வகையில் கடந்த ஆட்சிக் காலத்திலே நடந்த இன்னொரு நிகழ்வையும் இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதே சட்டமன்றத்தில் முந்தைய உள்ளாட்சித் துறை அமைச்சர், 29-4-2003 அன்று, 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கை விவாதத்தின்போது மத்திய அரசின் தேசிய தரக் கட்டுப்பாடு கண்காணிப்புக் குழு இங்கே வந்து தமிழகத்திலுள்ள 353 சாலைகளைப் பார்வையிட்டு, 92 சதவீதம் சாலைகள் சிறப்பாக உள்ளதாக அவர்கள் தெரிவித்ததாக இந்தச் சட்டமன்றத்திலே பெருமையாக வேறு சொல்லிக்கொண்டனர். இப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே எதற்காக இந்தச் சாலைப் பணி திட்டத்தினை ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றினார்கள் என்பது தெரியவில்லை. இதன் உள்நோக்கம் என்ன? ஊரகத் துறையிலே ஏதாவது குற்றம் கண்டுபிடிக்கப்பட்டதா அல்லது வேறு எந்த இலாபத்திற்காக இப்படி மாற்றப்பட்டது என்று தெரியவில்லை. கடந்த 6 மாத காலமாக எங்கேயும் எந்தவித பணியும் தொடங்கப்படாமல் உள்ளது. இந்த நிலையில் ஊரக வளர்ச்சித் துறைதான் எந்தெந்த சாலைகள் எது எது எனப் பட்டியலிட்டு, அதனை



மூன்று ஆண்டு காலம் சிறப்பாக வேறு செய்திருக்கிற நிலையிலே எதற்காக இப்படி மாற்றப்பட்டது என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்தத் திட்டத்தில் இன்னொரு நெறிமுறையும் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசு வழிகாட்டுதலிலே இந்தச் சாலையை எடுக்கின்ற ஒப்பந்தக்காரர்கள் ஐந்து ஆண்டு காலம் அதை நிர்வகிக்கின்ற, அதனைச் சீரமைக்கின்ற பொறுப்பினையும் அவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஒரு விதியும் சொல்லப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-45

இன்றைக்கு நீங்கள் போய் அச்சாலைகளைப் பார்த்தீர்களானால், எல்லா சாலைகளும் மிகவும் மோசமான நிலையிலே இருந்துகொண்டு இருக்கின்றன. நம்முடைய மக்களின் தளபதி அவர்கள் இந்த அமைச்சர் பொறுப்பினை ஏற்றவுடனேயே, குறுகிய காலத்திற்குள், தமிழகம் முழுவதும் ஆய்வு செய்து பல உண்மைகளை நன்கு அறிந்து இப்பணியை ஊரக வளர்ச்சித் துறைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்து, இன்றைக்கு மீண்டும் ஊரக வளர்ச்சித் துறைக்கே இப்பணியினைக் கொடுத்ததற்கு எங்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக நன்றியினைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இங்கே குறிப்பிட்டுப் பேசிய சுகாதார வளாகத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 12,618 ஊராட்சிகளிலே ரூ.2.25 இலட்சத்தில் கட்டப்படுவதாகச் சொல்லி, கிட்டத்தட்ட ரூ.300 கோடி செலவில், முதலாண்டில் துவக்கப்படுவதற்கு ஹட்கோ நிறுவனத்தினை அணுகி அதற்குரிய நிதி பெற்றது. இதற்காக இன்றும் அதற்குரிய வட்டியினைக் கட்டிக் கொண்டு இருக்கிறோம். அந்த அளவிற்கு இந்தத் திட்டத்தை அவர்கள் பெண்களுக்குத் தேவையான இடங்களில் கட்டபடுவதாகச் சொன்னார்கள். ஆனால், ஒரு இடத்திலேகூட பெண்களுக்குப் பயன்படக்கூடிய இடத்திலே கட்டப்படவில்லை என்பதுதான் இன்றைய நிலையில் உண்மை. இது இன்றைக்கு இருக்கின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் மிக நன்றாகத் தெரியும். கூடுமான வரையிலே இந்தக் கட்டடங்கள், சுடுகாட்டிற்கு அருகிலும், ஊர் கடைக்கோடியிலும்தான் கட்டப்பட்டு இருக்கின்றன என்பதை இங்கே நான் உங்களுக்கு சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி ஒரு அரசினுடைய பணத்தை இத்தனை கோடி ரூபாய் தேவையில்லாமல் வீணாக்கியதைப் போய் அவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள்

பெண்களுக்கு என்று நாங்கள் சிறப்பாகச் செய்ததாக. உண்மையிலேயே பல கட்டடங்கள் இடிந்த நிலையிலும், பூட்டப்பட்ட நிலையிலும்தான் இருந்துகொண்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். ஏற்கெனவே மத்திய அரசின் மூலமாக ஒவ்வொரு வீட்டிற்கும் முழு சுகாதாரத் திட்டத்தின் அடிப்படையிலே கட்டிக்கொள்வதற்காக 60 சதவிகிதம் மத்திய அரசு மானியமாகவும், 20 சதவிகிதம் மாநில அரசின் மானியமாகவும், பயனாளிகள் 20 சதவிகிதமும் ஒவ்வொரு வீட்டிலேயும் கட்டிக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கின்றபட்சத்தில் இப்படி திட்டம் இருக்கின்ற நேரத்திலே, எதற்காக இப்படி ஒன்றைக் கட்டி, இந்த ரூ.300 கோடி பணத்தை அவர்கள் தேவையில்லாமல் வீணடித்து இருக்கிறார்கள் என்பதைப புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) இதை வேறு பெருமையாகச் சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள் என்று சொன்னால், Operation success, patient dead என்கின்ற கதைதான் என் நினைவுக்கு வருகிறது.

அதேபோல், 2002 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட வறுமைக் கோட்டின்கீழ் இருக்கின்றோர் கணக்கினைப் பற்றி ஏற்கெனவே நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசி இருக்கின்றார்கள். இருந்தாலும் அந்தக் கணக்குகள் சத்துணவு அமைப்பாளர்களின் மூலமாக எடுக்கப்பட்ட காரணத்தால் பல குளறுபடிகள் ஏற்பட்டு இருக்கின்றன. அந்தப் பகுதியிலே வசிக்கின்றவர்களுடைய வருவாய் என்ன, அவர்களுடைய நிலை, அவர்கள் யார், யார் என்றெல்லாம் அறிய ஒரு கமிட்டியை அமைத்து, அதில் ஊராட்சி மன்றத் தலைவர், ஊரக வளர்ச்சித் துறை, விவசாயத் துறை மற்றும் வருவாய்த் துறை போன்ற துறைகளை ஒருங்கிணைத்து அவர்கள்மூலமாக வறுமைக் கோட்டிற்குகீழ் உள்ளோர் பட்டியலை அதாவது வருகின்ற 2007-க்கான பட்டியலை எடுப்பதற்குமுன் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். இது குறித்து ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விசாரிக்கவும் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதேபோல், மிக முக்கியமாக கிராம சபை. வருடத்திலே 4, 5 முறை கூட்டப்படுகின்ற அந்த கிராம சபையைப் பொறுத்தவரையிலே, கிராம சபைக்கு 10 சதவிகிதம் மக்கள் வந்தாலே போதுமானது என்ற சூழ்நிலை இருந்தாலும், உண்மையிலேயே கிராம சபையில் தீர்மானிக்கப்படுகின்ற பணிகள் நிறைவேற்றப்படாமலேயே இருக்கின்ற காரணத்தினாலே, அந்த கிராம சபைக் கூட்டத்திற்கு வருகிற கூட்டம்



குறைவாக இருக்கின்றது. இந்த கிராம சபை உறுப்பினர்களுக்கென ஒரு குடும்ப கார்டு போல கிராம சபை கார்டு ஒன்று வழங்கி -அதே நேரத்திலே அந்தக் கிராமத்திலே உள்ள எந்தப் பயனாளிக்கும் அரசு சார்பாகக் கொடுக்கின்ற உதவிகள் எதுவாக இருந்தாலும், அந்தக் கிராம சபை கார்டைக் காட்டினால்தான் கொடுப்போம் என்ற ஒரு கட்டாயத்தைக் கொண்டு வருவீர்களேயானால், நிச்சயமாக அதை மக்கள் பயன்படுத்திக்கொண்டு, அந்த உணர்வோடு, கண்டிப்பாக ஒவ்வொரு கிராம சபைக் கூட்டத்திற்கும் வருவார்கள். ஏனென்று சொன்னால், இன்றைக்கு மத்தியிலே கொண்டு வரப்பட்டு இருக்கின்ற 100 நாட்கள் வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம். அதேபோல, நமது அரசு, நமது தளபதி அவர்கள் இப்போது அறிவித்த அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் போன்ற இவ்வளவு நிதிகளை கிராமங்களுக்கு கொடுக்கின்ற நேரத்தில், இந்தப் பணிகளைச் செய்வதற்கு முன் அந்த கிராம சபை ஒப்புதலைப் பெறுவது மிக மிக அவசியம். இதுபோன்றத் திட்டங்கள் வீணாகிவிடக்கூடாது என்பதை கருத்திலே கொண்டு இந்த கிராம சபை உறுப்பினர்களுக்கென கார்டு ஒன்று வழங்கினால் அவர்களுக்கு மிக பயன் உள்ளதாக அமையும் என்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேநேரத்திலே, சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் இன்றைக்கு அதிலே ஒரு நல்ல திட்டமாக, நமது அரசு, நமது தளபதி அவர்கள், சுய உதவிக் குழுவை சமூக நலத் துறையில் இருந்து ஊரக வளர்ச்சித் துறைக்கு, அதாவது கிராமத்திற்குத் தொடர்புடைய ஊரக வளர்ச்சித் துறைக்கு மாற்றியதற்கு எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் நன்றியினையும், பாராட்டையும் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–50

வருகின்ற 5 ஆண்டுகளுக்குள்ளாக கிட்டத்தட்ட ஒரு கோடி சுய உதவிக் குழுக்களைப் பெண்கள் உருவாக்க வேண்டுமென்ற திட்டத்தைத் தொலைநோக்கோடு சிந்தித்து 2006–2007 ஆம் ஆண்டு குறைந்தது 25000 குழுக்களாவது உருவாக்க வேண்டுமென்று சிறப்புக் கவனம் கொடுத்திருக்கின்ற நம்முடைய அரசுக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். இதிலே பல இடங்களில், பல குளறுபடிகள் ஏற்பட்டு இருந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜகுமார், பேச்சை முடியுங்கள்.

**திரு. எஸ். ராஜகுமார்:** ஐயா, 2 நிமிடங்கள். ஒவ்வொரு சுய உதவிக் குழுவினுடைய உறுப்பினர்களுக்கும் நீங்கள் அடையாள அட்டை வழங்கி, அதற்கு அரசு சார்பில் உள்ளவர்களுடைய கையொப்பமிடுவீர்களென்றால், ஒரு குழுவில் உள்ளவர்கள் இன்னொரு குழுவில் சேராமல் இருக்க ஒரு கண்டிப்பினைக் கொண்டு வர முடியும். பல சுய உதவிக் குழுக்கள் தொடர்ந்து எல்லாவித பயன்களையும் பெற்றுக் கொண்டிருக்கின்றன. அதையெல்லாம் மாற்றியமைக்க இது வாய்ப்பாக அமையுமென்று கூறி நகராட்சியிலே தற்காலிக பணியாளர்களாக 15 ஆண்டுகளாக இருக்கின்ற என்.எம்.ஆர்.களுக்கு கடந்த ஆட்சி காலத்தில் ஒரு உத்தரவைப் போட்டார்கள். ஊதியம் மற்றும் ஓய்வூதிய வருவாய் 49 சதவிகிதம் உட்பட்டிருந்தால் அப்பணியாளர்களை வரன்முறைப்படுத்தலாம் என்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த நிபந்தனையை நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்றும், இதற்கு அரசு தனிக் கவனம் அளிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கின்றேன். கடைசியாக என்னுடைய தொகுதியினுடைய கோரிக்கையாக கடந்த ஆட்சியிலே 1-2-2006 ஆம் நாளன்று மயிலாடுதுறையில் புதிய பேருந்து நிலையம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மீதம் இருப்பதை எழுதிக் கொடுத்து விடுங்கள் அமைச்சரிடத்திலே.

**திரு. எஸ். ராஜகுமார்:** சொல்லிவிடுகிறேன். மயிலாடுதுறை பேருந்து நிலையத்திற்கு தலைமைச் செயலகத்திலே முன்னாள் முதல்வர் அடிக்கல் நாட்டியதாக செய்தி வந்தது. நான் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்குப் பின்னால் அந்தத் துறை அதிகாரிகளிடம் இதுபற்றி கேட்கின்றபொழுது இதுவரை அரசு அனுமதியே கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகின்றார்கள். அரசு அனுமதி கொடுக்காமல் எப்படி அடிக்கல் நாட்டினார்கள் என்பது தெரியவில்லை. இந்த நிலையத்திற்கு நகர மன்றத்திலும் எந்தவித தீர்மானமும் போடவில்லை. ஆகவே, நீங்கள் இந்த நிலையை நம்முடைய தலைவர் தளபதி உள்ளாட்சித் துறையினுடைய அமைச்சர் அவர்கள் சிந்தித்து செயலாக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜகுமார், பேச்சை முடியுங்கள். இன்னோர் உறுப்பினர் பேச வேண்டும். அதற்குப் பிறகு அமைச்சர் இரண்டு மானியங்களுக்குப் பதிலளிக்க வேண்டியிருக்கிறது. பேச்சை முடியுங்கள். நன்றி சொல்லி முடியுங்கள்.



**திரு. எஸ். ராஜகுமார்:** அதேநேரத்தில் 3½ கோடி ரூபாய் நிலம் வாங்குவதற்கும் அதனைக் கட்டுவதற்கு 3½ கோடி ரூபாய் தேவையிருக்கிறது. ஆகவே, அந்த நிலம் வாங்குகின்ற பொறுப்பினை அரசே எடுக்க முடியுமா அல்லது அரசுத் துறை சம்பந்தப்பட்ட நிலங்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று கேட்டுக் கொண்டு, மயிலாடுதுறையிலே ஆடவர்களுக்கு என்று தனிக் கல்லூரி இல்லை. மூவலூர் பகுதியிலே நிலம் இருக்கின்றது. மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் அவர்களுடைய நினைவாக அங்கே ஓர் ஆடவர் கல்லூரி கட்டப்பட்டால் மிகச் சிறப்பாக இருக்கும். ஆடவர்களுக்கு என்று தனிக் கல்லூரி குடந்தையிலே கிட்டத்தட்ட 45 கி.மீ. தூரம் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதேபோல நீண்டகால கோரிக்கையான மணல்மேல்குடியிலிருந்து அந்த...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன். (குறுக்கீடு) சொல்லுங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். உட்காருங்கள் திரு. கலைராஜன்.

**திரு. எஸ். ராஜகுமார்:** காட்டுமன்னார்குடியை இணைக்கின்ற முட்டம் கிராமத்தில் இருக்கின்ற... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ். ராஜகுமார்:** ஒரு பாலத்தை நாங்கள் நீண்டகாலமாக கேட்டுக் கொண்டிருக்கிறோம். நம்முடைய மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்கூட என்னுடைய கோரிக்கையை ஏற்கெனவே இங்கு வைத்துள்ளார்கள். அதேபோல நான் பல கோரிக்கைகளை நம்முடைய அமைச்சர்களிடமும் கொடுத்திருக்கின்றேன். அவற்றை செய்து கொடுப்பதற்கும்... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள், கலைராஜன் உட்காருங்கள். உறுப்பினர்கள் அனைவரும் பேச வேண்டும்.

**திரு. எஸ். ராஜகுமார்:** அதோடு இந்த அவையில் என்னைப் பேசுவதற்கு அனுமதியளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் எங்கள் காங்கிரஸ் கட்சியின் சட்டசபை அன்புத் தலைவர் திரு. சுதர்சனம் அவர்களுக்கும் அனைத்துத் துறை

அமைச்சர்களுக்கும், அவையில் அமர்ந்திருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து நிறைவு செய்கிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன். நீங்கள் 10 நிமிடத்திற்குள் பேசி முடிக்க வேண்டும்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.- (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் உறுப்பினர்தானே பேசுகிறார். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர்தான் பேசுகிறார். (குறுக்கீடு) நீங்கள் ஏதாவது கேட்க வேண்டும் என்றால் அமைச்சர் பேசியதற்குப் பின்னர் கேளுங்கள். அமைச்சர் உரையாற்றியதற்குப் பின்னர் கேள்வி கேளுங்கள். உட்காருங்கள்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் முதன்முதலில் என்னுடைய பேச்சை இங்கே பேசுகின்றேன். நான் கன்னிப் பேச்சைப் பேசுவதால், நீங்கள் உறுப்பினர் வேல்முருகனுக்கு 25 நிமிடங்கள் கொடுத்தீர்கள், எனக்கு நீங்கள் 45 நிமிடங்கள் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் கொடுப்பதுபற்றி, உங்கள் பாணியில் சொல்ல வேண்டுமென்றால்; உங்களுக்கு கொடுக்கப்படுவதே 9 நிமிடங்கள்தான். அதற்குள் பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. தா. மலரவன்:** இந்தப் பேரவையில் பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். புரட்சித் தலைவி அம்மா போன்ற மனிதநேயமிக்க முதல்வர்கள் அமர்ந்திருந்த இந்தப் பேரவையில் பேசுகின்ற பெரு வாய்ப்பை எனக்குப் பெற்றுக் கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம், ஏழைகளின் இதய தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய நாட்டு மக்களின் நம்பிக்கை நட்சத்திரம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தொண்டர்களை கண்ணின் இமை காப்பதுபோல் காத்து வரக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய நன்றியை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல் 12-55

அதேபோல, தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், எனக்காக இந்தத் தேர்தலிலே பாடுபட்ட கழகத் தொண்டர்களுக்கும், தலைவர்களுக்கும் என்னுடைய இதயமார்ந்த நன்றியை இந்தப் பேரவையின் வாயிலாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன். கோவை மேற்கு தொகுதி என்பது ஒரு குட்டி இந்தியாவைப் போன்றது. வடமாநிலத்தைச் சார்ந்தவர்கள், எல்லா மாநிலத்து மக்களும் அங்கே வசிக்கின்றார்கள். அந்தத் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட என்னை 15 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் இந்தப் பேரவைக்கு அனுப்பி வைத்த அந்தத் தொகுதி மக்களுக்கு, அவர்களுடைய பொற்பாதங்களிலே என்னுடைய நன்றியை நான் காணிக்கையாக்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 561 சிறப்பு ஊராட்சிகளை டவுன் பஞ்சாயத்துகளாக மாற்றியிருக்கின்றார்கள். இதனால் மக்களுக்கு என்ன இலாபம் என்பதை நாம் பார்க்க வேண்டும். டவுன் பஞ்சாயத்துகளுக்கு மத்திய அரசினுடைய நிதி ஒதுக்கப்படுவது இல்லை. அம்மா அவர்கள் மத்திய அரசினுடைய நிதி கிடைக்கும்; அந்த மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்ய முடியும் என்ற காரணத்தால்தான் அப்படி சிறப்பு ஊராட்சிகளாக வைத்திருந்தார்கள். ஆகவே, மீண்டும் அவற்றைச் சிறப்பு ஊராட்சிகளாக அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, உள்ளாட்சித் துறையில் ஓர் அவசர சட்டத்தைக் கொண்டு வந்து மறைமுகமான தேர்தல் என்று அறிவித்திருக்கின்றீர்கள். நான் கேட்டுக்கொள்வதெல்லாம், கடந்த காலத்தில் மறைமுகமான தேர்தல்தான் இருந்தது. இந்த மறைமுகத் தேர்தல் என்று அறிவித்திருப்பதன்மூலமாக திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மக்கள்மீது நம்பிக்கை இல்லை என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், மக்களைச் சந்திப்பதற்குத் தயங்குகிறார்கள் என்றுதான் கருதுகின்றேன். கோயம்புத்தூரில் இருக்கக்கூடிய மேயரை கோயம்புத்தூர் மக்கள்தான் தேர்ந்தெடுக்க வேண்டுமே தவிர, அந்த ஊருக்கு யார் வந்தால் நல்லது செய்வார்கள் என்பதை அந்த மக்கள்தான் முடிவு செய்ய வேண்டுமே தவிர, அதை விட்டுவிட்டு கவுன்சிலர்கள் முடிவு செய்வார்கள் என்று சொல்வது, நாம் கடந்த காலத்திலே பார்த்திருக்கிறோம், கவுன்சிலர்கள் முடிவு செய்வது—வெற்றி பெற்ற கவுன்சிலர்களை அழைத்துக்கொண்டு கொடைக்கானலுக்கும், ஊட்டிக்கும் போய்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மேயரையே வீட்டுக்கு அனுப்பியவர்கள், இதைப்பற்றி எல்லாம் பேசி நேரத்தை வீணாக்க வேண்டாம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மலரவன், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. தா. மலரவன்:** மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மேயரை வீட்டுக்கு அனுப்பவில்லை. நான்கூட இன்றைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறேன் என்று சொன்னால், நான் வகித்த மேயர் பதவியை இராஜினாமா செய்துவிட்டுத்தான் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்று வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, நான் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்வது, நேரடியாக மக்கள் ஓட்டுப்போட வேண்டும். இந்திய தேர்தல் கமிஷன் சொல்வது, எல்லோரும் ஓட்டுப்போட வேண்டும். ஓட்டுப்போடாமல் இருப்பதே குற்றம் என்று சொல்கிறார்கள். ஆனால், நீங்கள் இந்த அவசரச் சட்டத்தின்மூலம் ஓட்டுரிமையைப் பறிக்கிறீர்கள். மக்களுக்கு இருக்கக்கூடிய ஜனநாயக உரிமையை ஆற்றவிடாமல் தடுக்கிறீர்கள் என்பதுதான் இதிலிருந்து தெரிகிறது. நான் உங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், புரட்சித் தலைவி அம்மா அவர்களும், நம்முடைய வைகோ அவர்களும், மற்ற தலைவர்கள் எல்லாம் இந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று அறிக்கை விட்டார்கள். அதற்கு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அறிக்கையின்மூலம் சொல்லியிருந்தார்கள். வட மாநிலங்களில் இருக்கக்கூடிய மாநிலங்களில், பெரும்பான்மையான மாநிலங்களில் இந்த கவுன்சிலர்கள் ஓட்டுப்போட்டு தேர்ந்தெடுக்கக்கூடிய முறைதான் இருக்கிறது என்று அவர்கள் சொல்லியிருந்தார்கள். நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களிடத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நேரத்தில் இந்தி மொழிப் பிரச்சினை வந்தது. அந்த நேரத்திலே பண்டித ஜவஹர்லால் நேரு சொன்னார், இந்தியாவிலே அதிகப்படியான மாநிலங்களில் இந்தி மொழி பேசக்கூடிய மக்கள்தான் இருக்கிறார்கள் என்று சொன்னார். பேரறிஞர் அண்ணா அவர்கள் கேட்டார்கள், இந்தியாவிலே காக்கைகள்தான் அதிகமாகப் பறந்துகொண்டிருக்கின்றன. அப்படியென்றால், தேசிய பறவையாக



காக்கையை அல்லவா வைத்திருக்க வேண்டும், ஏன் மயிலை வைத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். ஆகவே, நான் கேட்டுக்கொள்வது, எது அதிகமாக இருக்கிறது, எது மெஜாரிட்டியாக இருக்கிறது என்று பார்க்காமல் மக்களுக்கு எது பயன்படக்கூடியது, மக்களுக்கு எது தேவை என்பதை மட்டும் நாம் கருத்திலே கொண்டு நீங்கள் இந்த அவசரச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல நம்முடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கன்னிப் பேச்சு பேசினாலும், கருத்தோடு பேசுகிற காரணத்தால், நான் விடை சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன். பெரும்பான்மையானவர்கள், ஏராளமானவர்கள் வாக்களிப்பதைவிட, சிலபேர் வாக்களித்து, கவுன்சிலர்கள் வாக்களித்து, மேயரையோ, நகராட்சி மன்றத் தலைவரையோ தேர்ந்தெடுப்பது, காகங்கள் தேர்ந்தெடுப்பதைவிட, மயில்கள் தேர்ந்தெடுப்பதைப் போன்றது ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு நிதி அமைச்சர் இதில் மக்களை காகத்திற்கு ஒப்பிடுகிறாரா, என்ன என்று தெரியவில்லை. ஆனாலும் நாங்கள் கேட்டுக்கொள்வது, நாட்டு மக்கள் எல்லோரும் வாக்களித்து, அவர்களுக்குரிய தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், கோவையிலே ஜூன் 6 ஆம் தேதி ஆய்வுக் கூட்டம் நடத்தினார்கள். அந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு பணிகள் நடைபெறாமல் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்டினேன. உடனடியாக நடைபெறும் என்று சொன்னார்கள். ஆனால், அவர்களுடைய கவனத்திற்கு நான் எடுத்துச் சொல்வது, இதுவரையிலே ஒரு பணிகூட தொடங்கவில்லை. அதற்கு என்ன காரணம் என்று சொன்னால், நான் அங்கேயே உங்களிடத்திலே சொன்னதுபோல, அந்த Schedule of Rates உயர்த்தப்படாததுதான் ஒரே காரணம். இதுவரையிலே உயர்த்தபடாததனால் அங்கிருக்கக்கூடிய ஒரு சிறிய துரும்பைக்கூட அந்த அதிகாரிகள் தூக்கி வேறு இடத்திலே

[திரு. தா. மலரவன்] [2006 ஆகஸ்ட் 11

போடவில்லை. எந்த ஒப்பந்ததாரரும் பணியைத் தொடங்கவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, திருப்பூர் எப்படிப்பட்ட வளர்ச்சி அடைந்திருக்கிறது–

பிற்பகல் 1–00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த Schedule of Rates, அவர்கள் ஆட்சியிலே விட்டுச் சென்றதுதான் இன்னும் இருக்கிறது. அதை மறுபடியும் சீரமைப்பதற்காக இந்த அரசு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சொல்லுங்கள்.

**திரு. தா. மலரவன்:** திருப்பூர் நகரம், இன்றைக்கு எப்படிப்பட்ட வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்பதை அந்த உறுப்பினர்கள் எல்லாம் கோடிட்டுக் காட்டினார்கள். ஆனால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் திருப்பூர் நகரத்திற்கு இரண்டாவது குடிநீர்த் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதேபோல, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய காலத்திலேதான் திருப்பூர் நகரத்தினுடைய வளர்ச்சியைக் கணக்கிலேகொண்டு, மூன்றாவது குடிநீர்த் திட்டம் கொண்டுவரப்பட்டது. அதனாலேதான், இன்றைக்கு திருப்பூர் நகரம் வளர்ச்சி அடைந்திருக்கிறது. அதனாலேதான், ஆயிரம் கோடி ரூபாயை அன்னியச் செலாவணி ஈட்டி–(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். அவர் எழுந்து நிற்கிறார் இல்லையா? நீங்கள் உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,– (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தசாமி. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அவர் பேசுவார், உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். உறுப்பினர் பேசுங்கள். திரு. கோவிந்தசாமி, பேசுங்கள்.



2006 ஆகஸ்ட் 11]

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் சொல்லியிருப்பதிலே சில விளக்கங்கள் சொல்ல வேண்டும். ஆகவே, அவர்கள் அமைதியாக இருந்தால் நல்லது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கருத்தைச் சொல்லட்டுமே. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். ஏன் உங்களுக்கு பயமாக இருக்கிறதா? (குறுக்கீடுகள்) இல்லை, அவர் கருத்தைச் சொல்வதிலே ஏன் உங்களுக்கு பயமாக இருக்கிறது? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் திருப்பூர்காரர். அதனால் அவர் சொல்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரினுடைய இரண்டாவது குடிநீர்த் திட்டம், அ.தி.மு.க. ஆட்சியிலே கொண்டு வந்ததாக இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். 1983 ஆம் ஆண்டில், அன்றைய முதலமைச்சர், மரியாதைக்குரிய எம்.ஜி.ஆர் அவர்கள் அடிக்கல் நாட்டினார் என்பது உண்மைதான். ஆனால், அடுத்து நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில், திருப்பூர் தொகுதியிலே அ.தி.மு.க. தோல்வி அடைந்த காரணத்தினால், ஆறாண்டுகாலம் வேண்டுமென்றே அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டு, அந்த மக்களுக்குக் குடிநீர் வழங்காமல் வஞ்சித்தது அ.தி.மு.க. என்பதையும் நான் இங்கே கவனப்படுத்துகிறேன். 1989–ல், இதே அவையிலே நான் உறுப்பினராக–(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கோட்டையன், உட்காருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** நம்முடைய பெருமதிப்பிற்குரிய தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்தபோதுதான், 20 கோடியே 34 இலட்சம் ரூபாய்க்கான அங்கீகாரம் கொடுக்கப்பட்டு, அந்தத் திட்டப் பணிகள் நடந்தன என்பதை இந்த நேரத்திலே கவனப்படுத்த விரும்புகிறேன். இவர்கள் ஆட்சியிலே வந்தது, கொடுக்கப்பட்ட அந்த இணைப்பு. இணைப்பு கொடுப்பதற்குதான் இவர்கள் வந்துசேர்ந்தார்களேயொழிய, திட்டத்தைக் கொண்டுவரவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், உட்காருங்கள். (கூச்சல்–குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள். (குறுக்கீடு) சொல்லுங்கள்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர், ஏதாவது ஒரு குற்றச்சாட்டு இருந்தால்மட்டும்தானே அவர் ஒழுங்குப் பிரச்சினையோ அல்லது ஏதாவது இருந்தால், இங்கே சட்டமன்றத்திலே Point of Order எழுப்பி, அவர்கள் அதிலே பேசலாம். ஆனால், ஆளுங்கட்சியைப் பார்த்து அவர்களுக்கு சாதகமாக ** என்றால் அதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். உறுப்பினர் பேசுங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்) அவையைவிட்டு வெளியேற்றிவிடுவேன்.. எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (கூச்சல்–குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தங்களிடத்திலே முறையிட்டேன். ஒரு மணிக்கெல்லாம் நம்முடைய அமைச்சரைப் பேசவிட்டால்தான், குறைந்தது ஒரு ஒன்றரை மணி நேரமாவது பேச முடியும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவர்கள் எல்லோரும் உட்காருங்கள். உட்காருங்கள் எல்லோரும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** எனவே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மாண்புமிகு உறுப்பினர் பேசிய பேச்சுக்கு பதில் சொல்வதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். தயவுசெய்து அனைவரும் அமைதி காத்து, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மலரவன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். யாருக்கும் வாய்ப்புக் கிடையாது. மலரவன், பேசுங்கள். (குறுக்கீடுகள்) யாருக்கும் அனுமதியில்லை. உட்காருங்கள். திரு. செங்கோட்டையன். அனுமதியில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. மலரவன், பேசுகிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) (கூச்சல்–குழப்பம்)

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் சிலர் வெளிநடப்புச் செய்தனர்.)*

*பிற்பகல் 1–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது உங்கள் இஷ்டம், போங்கள். *(கூச்சல்–குழப்பம்)*

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சிலர் கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

லாபியிலே சத்தம் எதுவும் வரக் கூடாது. அவைக் காவலர்கள் லாபியிலே எந்தச் சத்தமும் வரவிடாமல் முதலில் வெளியேற்றுங்கள். மா்ண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம். (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,– (கூச்சல்–குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இங்கே கோஷம் போடுகிறவர்கள் முதலில் வெளியே போகிறீர்களா, வெளியேற்றவா? வெளியே போகிறீர்களா, வெளியேற்றவா? போங்கள், போங்கள் வெளியே.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,– (கூச்சல்–குழப்பம்)

*(அவையிலிருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: போங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள், அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேச வேண்டியதையெல்லாம் பேசிவிட்டு, ஒரு நிமிட நேரம் இருக்கின்ற நேரத்தில் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்களுக்குப் பசி வந்துவிட்டது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அவர்களாலே பதவி பறிக்கப்பட்ட முன்னாள் மேயர், இன்றைய உள்ளாட்சித் துறை அமைச்சர் பதில் சொல்வதைக் கேட்க முடியாமல், (குறுக்கீடுகள்) அதைத் தாங்கிக்கொள்ள முடியாமல் வெளியேறுகிறார்கள். நாங்கள் அதைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால், அவருடைய பதிலுரை அவர்களுக்கு ஒரு பாடமாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியிலே உறுப்பினர்கள் சத்தம் போடக் கூடாது. அவைக் காவலர்கள் அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. சுதர்சனம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பாயிண்ட் சொல்லிவிடுகிறேன். Please, Please.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துகளைப் பதிவு செய்வதை நீங்கள் மறுக்கவில்லை. நாங்களும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால், அவர் குறிப்பிட்டுப் பேசியது திருப்பூர் தொகுதியைப் பற்றி, அந்த நகரத்தைப் பற்றிக் குறிப்பிட்டு எல்லா விஷயங்களையும் பேசுகிறார். அதற்கு சம்பந்தப்பட்டு, திருப்பூர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிற பிரதிநிதி இங்கே இருக்கிறார். அவர் அதற்குரிய விளக்கத்தைச் சொல்வதைக்கூட அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று சொன்னால், இவர்கள் ஜனநாயகத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்களா என்று தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் காவலர்கள், லாபியிலே இருக்கிறவர்களை வெளியேற்றுங்கள்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** இன்னொரு விஷயத்தையும் நான் பணிவாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தயவுசெய்து நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, திரும்பவும் அண்ணா தி.மு.க. உறுப்பினர்களுடைய நடவடிக்கைக் குறித்து ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகளை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இன்று காலை முதல் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த நண்பர்கள் இங்கே பல்வேறு விஷயங்களைப் பேசினார்கள். பேசி விட்டு, இன்னும் ஒரு நிமிடமே இருக்கின்ற நேரத்தில், மாண்புமிகு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருடைய பதிலைக் கேட்க விரும்பாமல், அவர்கள் வேண்டுமென்றே தகராறு செய்து, வெளிநடப்புச் செய்திருக்கின்றார்கள். தினம், தினம் வெளிநடப்புச் செய்கிறார்கள். வெளிநடப்புச் செய்வதோடு மட்டுமல்லாமல், அவர்கள் பேசுகின்றபோதெல்லாம் 2001-லேயிருந்து 2006 வரை அவர்கள் செய்த சாதனைகளைத்தான் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, இந்த 2006–2007–லே இன்றைய மானியக் கோரிக்கையின்மீது எதைப் பற்றியும் அவர்கள் பேசுவதில்லை. அம்மா ஆட்சிக் காலத்திலே இதைச் செய்தோம், அம்மா ஆட்சிக் காலத்திலே இதைச் செய்தோம் என்று சொல்லி (குறுக்கீடுகள்) அம்மா ஆட்சிக் காலத்திலே இதைச் செய்தோம், அம்மா ஆட்சிக் காலத்திலே அதைச் செய்தோம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, 2006–2007 ஆம் ஆண்டு தலைவர் கலைஞருடைய தலைமையிலே இந்த ஆட்சியிலே, இந்த நிதிநிலை அறிக்கையிலே, இந்த மானியத்தின்மீது என்னென்ன நிறை குறைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி அவர்கள் பேசாமல், அவர்களுடைய புகழை மட்டும் பாடி, அதற்குப் பின்னாலே இதுபோன்று தினம், தினம் வெளிநடப்புச் செய்வது கண்டனத்திற்குரியது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி டி. யசோதா.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வெளிநடப்பு என்பது தேவையில்லாத ஒன்றாக இப்பொழுது நடைபெற்றிருக்கின்றது. காரணம், அவர் பேசிய பேச்சிலே திருப்பூரைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். செய்த சாதனைகளை அவர்கள் சொல்கின்றார்கள். அந்தச் சாதனைகள் எடுபடாமல் போய், இன்றைக்கு அதை எதிர்த்து நின்றவர் வெற்றி பெற்று வந்திருக்கின்றார். வெற்றி பெற்று வந்திருக்கின்றவர் திருப்பூரிலே என்னென்ன நடந்தன என்பதைக் கண்ணாறக் கண்டு, அனுபவித்தவர், எடுத்துச் சொல்கின்றபோது, இந்த மாமன்றம் அதற்குரிய மரியாதையை கொடுக்கின்ற வகையிலே, அதை ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும். அதை விட்டு விட்டு காரணமே இல்லாமல், அவர் சொன்னதை ஏற்றுக்கொண்டார்களா, இல்லையா என்றுகூட இல்லாமல், திடீரென்று இப்படி காரணமே சொல்லாமல் வெளிநடப்புச் செய்வது என்பது, நல்லதொரு அரசியல் கட்சிக்கு இது சரியாக இருக்கும் என்று நிச்சயமாக என்னாலே ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதை இந்த மாமன்றத்திலே குறிப்பிட விரும்புகின்றேன்.

*பிற்பகல் 1–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டு காலத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றம் பஜனை மண்டபமாக மாற்றப்பட்டிருந்தது, (மேசையைத் தட்டும் ஒலி) மாற்றத்தை எல்லோரும் எதிர்பார்த்தோம். கடந்த காலங்களிலே சிறப்புமிக்க இந்த மாமன்றத்தில் ஜனநாயக ரீதியான கருத்துகளைப் பரிமாறிக்கொள்வதை விட்டு விட்டு பஜனை மண்டபமாக மாற்றி பஜனை செய்தவர்கள், அர்ச்சனை செய்தவர்கள், இப்பொழுதும் மீண்டும் இங்கே அதே நிலை நீடிக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். எப்படி முடியும்? ஜனநாயகத்திலே நம்பிக்கை உள்ளவர்கள் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது, அவர்களுக்கும் பேச வாய்ப்பு கொடுக்கப்படுகிறது, பேச வேண்டிய கருத்துகளை எல்லாம் பேசி விட்டு, வெளியேறுகிறார்கள். ஆக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அரிய கருத்துகளை, நல்ல அறிவிப்புகளையெல்லாம் அறிவிக்க இருக்கின்ற இந்த நேரத்தில் அதைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், ஏற்றுக்கொள்ள மனம் இல்லாதவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் செய்திக்கு மாற்றாக ஒரு செய்தியைப் பதிவு செய்ய வேண்டும். வெளிநடப்பு என்ற பெயராலே பத்திரிகைகளில் நாட்டு மக்களுக்கு



ஏதோ செய்தி சொல்ல வேண்டுமென்று செல்லுகிறார்கள். இது இங்கேயிருந்து வந்தது அல்ல, எங்கோயிருந்து திடீரென்று வந்தது, (மேசையைத் தட்டும் ஒலி) திட்டமிட்ட நாடகம் அரங்கேற்றப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, நான் அ.தி.மு.க.–வினருக்கு இப்பொழுதும் வேண்டுகோள் விடுக்கிறேன். உங்களுக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கையிருந்தால், நாட்டு மக்கள்மீது அக்கறையிருந்தால் மீண்டும் வாருங்கள், இல்லையென்று சொன்னால் உங்கள் போக்கிலே இருங்கள்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஆளுகிற கட்சிக்குத் தோழமைக் கட்சியாக இருப்பதே மகாபெரிய பாவம் என்பதைப்போல, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கக்கூடியவர்கள் ஏதாவது எழுந்து பேச நினைத்தாலே, அதைக் கொச்சைப்படுத்துகிற வகையில், அநாகரீக முறையில் அண்ணா தி.மு.க உறுப்பினர்கள் தொடர்ந்து இந்த அவையிலே பேசிக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவில்லையென்றால் இந்தச் சபையில் ஜனநாயகம் காப்பாற்றப்படமாட்டாது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்களுக்கு என்னுடைய அறிவிப்பாக ஒன்றை வைக்க விரும்புகின்றேன். குறிப்பிட்டு எந்த உறுப்பினர், எந்த மாதிரியான வார்த்தைகள் என்று சொல்லி, மற்ற உறுப்பினர்கள் பேசினார்கள் என்று நீங்கள் எழுத்துமூலமாகப் புகார் கொடுத்தால், மேல்நடவடிக்கை எடுப்பேன் என்பதை நான் அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கே மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை வழங்குவார்கள்.

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாதா, பிதா, குரு, தெய்வம் எனப்படுபவை, என் போன்றோருக்குக் கழகம், பெரியார், அண்ணா, கலைஞர் என்பதே, (மேசையைத் தட்டும் ஒலி) எந்நாளும் இன்பம் தருபவை. அறிவால் சிறந்தவர், நிருவாகத்தில் சிறந்தவர், பொதுத் தொண்டுக்காக தியாகம் செய்வதில் சிறந்தவர் என்று தந்தை பெரியார் அவர்களால் பாராட்டப்பட்டு, ஏதுமறியா தமிழர் தூய வாழ்வை, எனக்குப்பின் சீர்படுத்தும் மறவன் நீதான். அண்ணன் என் சொல் வழியில் நடந்து சென்று அவனியெல்லாம் போற்றும் வண்ணம் ஆளுக தம்பி என்று

அறிஞர் அண்ணா அவர்களால் அடையாளம் காட்டப்பட்டு, இவர் தொடாத துறைகள் எதுவும் இல்லை, தொட்ட துறை எதிலும் வெற்றிபெறாமல் விட்டதும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ் கூறும் நல்லுலகத்தின் தனிப்பெரும் தலைவராக, தன்னிகரற்ற தலைவராக விளங்கிவரும் நமது தலைவர், தமிழக முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் (மேசையைத் தட்டும் ஒலி) தாள்களை என் இரண்டு கண்களாலும் ஆயிரமாயிரம் முறை ஒற்றி உணர்ந்து, நாத்தழும்பேற நன்றி நவின்று, என்னுடைய பதிலுரையைத் தொடங்குகிறேன்.

பெரியார் காட்டிய பகுத்தறிவுப் பாதையிலிருந்து சிறிதும் பிசகாமல், அண்ணா வழியில் அயராது உழைத்து, தலைவர் கலைஞர் அவர்களின் உற்ற துணையாய், கழகத்தைக் கட்டிக் காத்து, எங்களையெல்லாம் பேணி பாதுகாத்து வரும் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களின் திருவடியைத் தொட்டு (மேசையைத் தட்டும் ஒலி) என் பதிலுரையைத் தொடங்குகிறேன்.

1989 ஆம் ஆண்டு தி.மு. கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து, அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் ஆற்றிய அரும் பணியையும், 1996–லிருந்து 2001 ஆம் ஆண்டு வரையிலே உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து, அண்ணன் கோ.சி. மணி அவர்கள் ஊர், நகரம், நாடு என்று சுற்றிச் சுழன்று, ஆற்றிய பெரும் பணியையும் முன்மாதிரிப் பணியாக எண்ணி என் பதிலுரையை நான் தொடங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–15

நான் 1989, 1996, 2001, அதேபோல 2006 என்று நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இன்றைக்கு அமைச்சராகவும் நான் விளங்குவதற்கு வேராகவும், விழுதாகவும் இருந்து, ஒளியும், உரமும் ஊட்டியவர்கள்தான் ஆயிரம் விளக்குத் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்கள். எனது நெஞ்சத்தின், நெருக்கமான நேசத்திற்குரிய அவர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றி உணர்வுகளைக் காணிக்கையாக்க விரும்புகிறேன்.

நீண்ட, நெடிய, வரலாற்றுப் பாரம்பரிய, சிறப்புகளைப் பெற்றிருக்கக்கூடிய இந்தப் பேரவையில், அமைச்சர் என்ற அந்த முறையிலே என்னுடைய துறைகளுக்கான மானியக் கோரிக்கையைப்



படைத்தளித்து உரையாற்றும்போது, என்னுடைய நினைவுகளில், ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது.

அந்த நிகழ்ச்சி மின்னல் கீற்றாய் ஒளிர்ந்து கொண்டிருக்கிறது. ஆம். 25–10–1996 ஆம் ஆண்டு சென்னை, ரிப்பன் கட்டட வளாகத்தில் திராவிட பேரியக்கத்தினுடைய முன்னோடிகளில் ஒருவராக இருந்த, சர்.பிட்டி. தியாகராயர் அவர்களுடைய திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கிவிட்டு, மாநகராட்சிக் கூடத்திலே, தலைவர் கலைஞர், இனமானப் பேராசிரியர் பெருந்தகை, மறைந்த மக்கள் தலைவர் ஐயா மூப்பனார், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் ஐயா ஆகியோர் பங்கேற்று வாழ்த்து மொழிந்திட, சென்னை மாநகரத்தினுடைய 44–வது மேயராகப் பதவியேற்ற அந்த நாளை எண்ணிப் பார்க்கிறேன். அதைத் தொடர்ந்து, ரிப்பன் கட்டட வளாகத்திலே நடைபெற்ற நன்றி அறிவிப்புக் கூட்டத்திலே உரையாற்றுகிறபோது ஒன்றை நான் குறிப்பிட்டுச் சொன்னேன். சென்னை மாநகரத்தின் தந்தை என்று சொல்வதைவிட, இந்த மாநகரத்தின் முதல் சேவகனாக இருப்பதையே விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரத்தினுடைய முதல் குடிமகன் என்று சொல்வதைவிட, மாநகர மக்களுடைய முதல் ஊழியனாக இருப்பதையே விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) வணக்கத்திற்குரிய மேயர் என்று என்னை அழைப்பதைவிட, அனைவரையும் வணங்கக்கூடியவன் என்ற அந்த உரிமையோடு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய செயல்பாடு அமையும் என்று அன்றைக்கு நான் குறிப்பிட்டுச் சொன்னேன்.

நான் அமைச்சராகப் பொறுப்பேற்று, நம்முடைய முதல்வர் அவர்களுடைய ஆணையை ஏற்று, அறிவுரையை ஏற்றுக்கொண்டு, குறைந்தது 90 நாட்களுக்குள்ளாக ஏறக்குறைய 10 மாவட்டங்களில் சுற்றுப் பயணத்தை நடத்தி, அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய மக்களுடைய பிரச்சினைகள், அதேபோல அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், மக்களுடைய பிரதிநிதிகள், உள்ளாட்சி அமைப்பில் இருக்கக்கூடிய நிர்வாகிகள், அதேபோல அரசு அலுவலர்கள் இவர்களோடு கலந்துபேசி, அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய பிரச்சினைகளையெல்லாம் அறிந்து, புரிந்து, அவற்றைத் தொடர்ந்து ஆய்வு செய்து, செயல் திட்டங்களை வகுத்தும், தொகுத்தும், இந்த உள்ளாட்சித் துறையின் மூலமாக இன்றைக்கு நாங்கள் செயலாற்றிக்கொண்டிருக்கிறோம்.

அகநானூற்றிலுள்ள 77 ஆம் பாடலில் உள்ள 'கயிறு பிணிக் குழிசி ஓலை' என்கிற வரிகள் ஊர் மன்றங்களின் உறுப்பினர்கள். ஊர் பொது மக்கள்மூலம் குடவோலை வாயிலாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அடையாளம் காட்டுகிறது. அதேபோல், பல்லவர் காலத்தில் கிராம சபைகள் நீதி வழங்குவது மட்டுமல்லாமல், ஏரி, குளம், தோட்டம் ஆகியவற்றைப் பாதுகாத்தல், தெரு வழிகளை அமைத்தல், அவற்றைக் கண்காணித்தல், வரி வசூலித்தல், இது போன்ற பணிகளை அன்றைக்கு மேற்கொண்டிருக்கிறார்கள்.

முதல் பராந்தகச் சோழன், (இராஜ இராஜ சோழனுடைய தந்தை) ஆட்சியில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சார்ந்த உத்திரமேரூர் பகுதியில் அமைந்திருக்கக்கூடிய இரண்டு கல்வெட்டுக்கள், அதிலே ஒன்று கிராம சபை உறுப்பினர்களுடைய தகுதி, அடுத்து அவர்களைத் தேர்ந்தெடுத்த முறை பற்றி, அந்த இரண்டு கல்வெட்டுக்கள் இன்றைக்கு விளக்கிக் கொண்டிருக்கின்றன. உத்திரமேரூர், திருநின்றவூர், தலைஞாயிறு, அய்யம்பேட்டை, கிராப்பட்டீஸ்வரம், காமரசவல்லி, செம்பியன்மாதேவி, செய்நல்லூர், ஆகிய ஊர்களில் அமைந்திருக்கக்கூடிய கல்வெட்டுக்கள் கிராம சபையினுடைய விதிகள், பிற செய்திகள் உண்மையான மக்களாட்சியைப் பற்றி, அதிலே தெளிவாக எடுத்துக்காட்டப்படுகிறது.

*பிற்பகல் 1–20*

இந்தியாவினுடைய மக்களாட்சியை எடுத்துக் கொண்டால் நாடாளுமன்றம், சட்டமன்றம், மாநகராட்சி மன்றம், நகர மன்றம், மாவட்ட ஊராட்சி மன்றம், ஊராட்சி ஒன்றியம், பேரூராட்சி, கிராம ஊராட்சி என்ற அமைப்புகளை நாம் பெற்றிருக்கிறோம். 1882 ஆம் ஆண்டு Lord Rippon என்பவர் உள்ளூர் சுயாட்சி அமைப்பினுடைய சட்டத்தை அன்றைக்கு அறிமுகப்படுத்தினார். அவருடைய நினைவாகத்தான் இன்றைக்கும் சென்னை மாநகராட்சியினுடைய கட்டடத்திற்கு 'ரிப்பன் மாளிகை' என்று அந்தப் பெயர் அழைக்கப்படுகிறது. ஆகவே, இப்படி படிப்படியாக பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு சட்டங்கள், நம்முடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு இயற்றப்பட்டிருக்கின்றன. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 1992 ஆம் ஆண்டு இந்திய அரசமைப்பு 73–வது, 74–வது திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. மறைந்த இளைய தலைவர் பெருமதிப்பிற்குரிய திரு. இராஜீவ் காந்தி அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 1989 ஆம் ஆண்டு அவர் ஆற்றியிருக்கக்



கூடிய உரையிலே ஒரு பகுதியிலே குறிப்பிட்டுச் சொல்கிறார். 'பஞ்சாயத்து ராஜ் சட்டமுன்வடிவை நாடாளுமன்றத்தில் நான் அறிமுகப்படுத்தினேன். பஞ்சாயத்து ராஜ் சட்டத்தின்மூலம், கிராமப்புற மக்களுக்கு ஜனநாயகமும், அதிகாரப் பங்கீடும் கிடைக்கும். நகர்ப்புற மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் கிடைத்திடும். மக்கள் தொகையில் ஏற்படும் மாற்றத்தையொட்டி, உள்ளாட்சி அமைப்பினுடைய இலட்சியத்தை அவ்வப்போது மாற்றியமைத்திட வேண்டும்' என்று இராஜீவ் காந்தி அவர்கள் அன்றைக்கே ஒரு தொலைநோக்குக் கண்ணோட்டத்தோடு, தெளிவோடு அவர் குறிப்பிட்டிருப்பதை நான் இந்த அவைக்கு நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்களாட்சியில் அரசினுடைய நிர்வாகத்தை ஆலமரத்திற்கு ஒப்பிட்டால், அதன் வேர்களாகவும், விழுதுகளாகவும் நம்முடைய உள்ளாட்சி அமைப்பு விளங்கிக் கொண்டிருக்கிறது. அதேபோல, மனிதனோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபோது, நாடி நரம்புகளாகவும், உயிர் மூச்சாகவும் இந்த உள்ளாட்சி அமைப்பு விளங்கிக் கொண்டிருக்கிறது என்று நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கே இதுபற்றி வர்ணித்திருக்கிறார்கள்.

1991–லிருந்து 1996 வரையிலே உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தல் நடைபெறவில்லை. 1996 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான், உடனடியாக உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தலை நடத்தியிருக்கிறோம். இன்னும்கூட நான் ஒன்றை குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், சென்னை மாநகராட்சியினுடைய தேர்தல். ஏறக்குறைய 23 ஆண்டு காலமாக, ஒரு கால் நூற்றாண்டு காலமாக ஒரு தலைமுறையே தெரிந்துகொள்ள முடியாத அளவிற்கு தள்ளப்பட்டிருந்த சூழ்நிலையிலே தேர்தலே நடத்தப்படவில்லை. அதனாலேதான் 1996–லே ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த சென்னை மாநகராட்சித் தேர்தலோடு சேர்த்து ஒட்டு மொத்த உள்ளாட்சி அமைப்புகளுடைய தேர்தலை நடத்திய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே பதிவு செய்கிறேன்.

அதுமட்டுமல்ல. பல பேர் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு. அதுவும் 1996 ஆம் ஆண்டு நடைபெற்ற அந்தத் தேர்தலில்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அது நிறைவேற்றப்பட்டது. ஆக 44,133 பெண்கள், மகளிர், மேயர்களாக, துணை மேயர்களாக, நகராட்சித் தலைவர்களாக, ஒன்றியத் தலைவர்களாக, மாவட்ட கவுன்சிலர்களாக, மாநகராட்சி மன்ற

உறுப்பினர்களாக, இப்படி உள்ளாட்சி அமைப்புகளில் பொறுப்பேற்கக்கூடிய ஒரு சூழ்நிலை கழக ஆட்சிக் காலத்திலேதான் உருவாக்கப்பட்டது. எனவே, அப்படிப்பட்ட உள்ளாட்சித் துறை என்பது ஒரு முக்கியமான துறை என்பதை யாரும் மறுத்திட, மறைத்திட முடியாது.

இங்கேகூட, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அருமைச் சகோதரர் வேல்முருகன் அவர்கள்கூட பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள். மற்றவர்களும் அதை இங்கே நினைவுபடுத்திக் காட்டினார்கள். ஏற்கெனவே கடந்த காலத்தில் ஒரு ஆட்சி இருந்தது. கடந்த ஐந்தாண்டு கால அ.தி.மு.க. ஆட்சியிலே இந்த உள்ளாட்சித் துறைக்கு மூன்று அமைச்சர்கள் மாற்றப்பட்டார்கள் என்பதைத் தெளிவாக அவர் எடுத்துச் சொன்னார். அதைப்பற்றி நான் அதிகம் பேச விரும்பவில்லை. ஆனால், ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புவது, அந்த மூன்று முறை அமைச்சர்களாக இருந்தபோது, கடைசியாக ஒரு அமைச்சர் இருந்தார். இங்கேகூட அவர் பேசினார். இன்றைக்கு உறுப்பினராக இருக்கிறார். முன்னாள் அமைச்சராக இருந்து, இந்த அவையிலே தொடக்கத்தில் அவர்தான் பேசியிருக்கிறார். மாண்புமிகு திரு. அன்பழகன் அவர்கள். அவர் அந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தார். அவர் இருந்தாரேதவிர, தனி அமைச்சராக இருந்தாரா என்று கேட்டால், இல்லை. ஒரு பொறுப்பு வகிக்கக்கூடிய அமைச்சராகத்தான் இருந்தார். அவர் செய்தி மற்றும் விளம்பரத் துறையினுடைய அமைச்சர். அந்தத் துறையோடு சேர்த்து இந்தத் துறையையும் சேர்த்து தந்திருந்தார்களே தவிர, கூடுதலாகத் தந்திருந்தார்களே தவிர, தனியாக அந்தத் துறையைப் பிரித்து அவரிடத்திலே தரவில்லை. நான் எதற்காக இதைக் குறிப்பிட்டுச் சொல்கிறேன் என்று சொன்னால், உள்ளாட்சித் துறையின்மீது கடந்த கால ஆட்சிக்கு எந்த அளவிற்கு அக்கறை இருந்திருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, ஊரகத் துறையைப் பொறுத்தவரையில், ஒரு காலத்திலே வருவாய்த் துறையிலே ஒரு அங்கமாக விளங்கிக் கொண்டிருந்தது. ஆனால், அதையும் 1974 ஆம் ஆண்டு அன்றைக்கு நம்முடைய முதல்வராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள் மாற்றி, இந்த ஊராட்சித் துறையை தனித் துறையாக உருவாக்கினார்கள். நான் இங்கே ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். 1974 ஆம் ஆண்டு இந்தத் துறையினுடைய அமைச்சராக யார் இருந்தார்கள் என்று



கேட்டால் மறைந்த மரியாதைக்குரிய பெரியவர் அன்பில் அவர்கள் அன்றைக்கு அமைச்சராக இருந்தார். அவர் தொடர்ந்து, நம்முடைய முதல்வரிடத்திலே, அன்றைக்கு இந்த ஊரகத் துறையை எப்படியாவது தனித் துறையாக்க வேண்டுமென்று பிடிவாதமாகக் குரல் கொடுத்துக்கொண்டே இருந்தார். அந்தப் பிரச்சினையைக் கேட்டறிந்து, நம்முடைய முதல்வர் அவர்களும் அதற்கு ஆணையிட்டார்கள். அதற்குப் பிறகு, 1974 ஆம் ஆண்டு திருச்சியிலே நடைபெற்ற ஊரக வளர்ச்சி மாநாட்டிலேகூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் பேசுகிறபோது, ஒரு கருத்தை எடுத்துச் சொன்னார்கள். ஆக, ஊரகத் துறையை உள்ளாட்சித் துறையோடு சேர்க்கவேண்டுமென்று அன்பில் என்னை அரித்தார், நான் அறிவிக்கிறேன் என்று அந்த மாநாட்டிலே நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்குச் சொல்லியிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-25

அதேபோல் தொகுப்பு வீடுகள். இன்றைக்கு இந்த மன்றத்திலே பலர் பேசியிருக்கிறார்கள். இந்தத் தொகுப்பு வீடுகளைப் பொறுத்தவரையிலே, 1972-73 ஆம் ஆண்டிலேதான் நம்முடைய தமிழகத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, முதன்முதலில் அந்தத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்னும்கூட பெருமையோடு சொல்லவேண்டுமென்று சொன்னால், மத்திய அரசு இன்றைக்கு நாடு முழுவதும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் துணை நின்று கொண்டிருந்தாலும், இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழ்நாட்டில், தி.மு.க. ஆட்சிக் காலத்திலேதான் அந்தத் தொகுப்பு வீடுகள் திட்டம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, --நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், அண்ணன் கண்ணப்பன் அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டுச் சொன்னார்கள்-- கூடுதலாக அதிக அதிகாரத்தை, கூடுதலாகச் சலுகைகளையெல்லாம், உள்ளாட்சி அமைப்புகளுக்கு வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கையை 1996-லே உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, அப்போது தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடந்தபோது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், 1997 ஆம் ஆண்டு, இதற்கு என்று ஒரு குழுவைக்கூட நியமித்தார்கள். இங்கே அமர்ந்திருக்கக்கூடிய, நம்முடைய இந்தத் துறையினுடைய முன்னாள் அமைச்சராக இருந்த,

அண்ணன் திரு. கோ.சி. மணி அவர்களை தலைவராகக் கொண்டு, இந்த அவையிலே அன்றைக்கு அமர்ந்திருந்த எல்லா சர்வ கட்சிகளினுடைய தலைவர்களையெல்லாம் அதிலே உறுப்பினர்களாக நியமித்து, உயர் மட்டக் குழு ஒன்றை, அன்றைக்குத் தலைவர் கலைஞர் அவர்கள் நியமித்தார்கள். அந்த உயர் மட்டக் குழு ஓராண்டு காலம் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் நடத்தி, அந்தச் சுற்றுப்பயணத்தின் விளைவாக, 1,008 பரிந்துரைகளைக் கொண்டுவந்து நம்முடைய முதல்வரிடத்திலே ஒப்படைத்தார்கள். அந்த 1,008 பரிந்துரைகளில் 718 பரிந்துரைகளை உடனடியாக நம்முடைய முதல்வர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அன்றைக்கே உள்ளாட்சி அமைப்புகளுக்கு உரிய அதிகாரத்தை வழங்கிய ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் தலைமையிலிருந்த ஆட்சி என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதேபோல், இன்றைக்குப் பார்க்கிறோம். ஊராட்சிகளில் சிமெண்ட் சாலைகள், சோடியம் ஆவி விளக்குகள் எல்லாம் இன்றைக்கு இருக்கக்கூடிய காட்சிகளைப் பார்க்கிறோம். ஆக, இந்தத் திட்டத்தைக்கூட 1996–2001 ஆம் ஆண்டிலே, தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான் முதன்முதலில் அறிமுகப்படுத்தி, கொண்டு வந்து நிறைவேற்றித் தந்தது. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், ஊரகப் பகுதிகளில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம், சமத்துவபுரத் திட்டம், இப்படி பல திட்டங்களைக் கொண்டுவந்து நாம் நிறைவேற்றினோம். ஆனால், அதற்குப் பிறகு வந்த ஆட்சி, கடந்த கால ஆட்சி, பல திட்டங்களை இரத்து செய்தது. பல திட்டங்களைக் கிடப்பிலே கொண்டுபோய் போட்டது. பல திட்டங்களைக் குப்பைக்கூடையிலே கொண்டுபோய் தள்ளிவிட்டது. பல திட்டங்களைப் பற்றி அவர்கள் கவலைப்படாமலே இருந்தார்கள். அதிலே ஒன்று, முக்கியமான திட்டம், எந்தத் திட்டம் என்று கேட்டால், சமத்துவபுரத் திட்டம். ஆக, இன்றைக்குச் சமத்துவபுரப் பகுதிகளிலே இருக்கக்கூடிய அந்த வீடுகளையெல்லாம் போய்ப் பார்க்கிற நேரத்தில், மிகக் கொடுமையான சூழ்நிலையிலே, பராமரிக்கப்படாத நிலையிலே, சில வீடுகள் பாழடைந்த நிலையிலே இருக்கக்கூடிய, ஒரு கொடுமையில் இன்றைக்கு அவர்கள் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். காரணம், கடந்த கால ஆட்சி. இது தி.மு.க. கொண்டு வந்த திட்டம், கலைஞர் கொண்டுவந்த திட்டம் என்ற காரணத்தால், இதைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள்.



அதனால்தான், இப்போது கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தலைவர் அவர்களுடைய உத்தரவை ஏற்றுக்கொண்டு, சமத்துவபுரங்களையெல்லாம் உடனடியாகப் பழுதுபார்க்க, பராமரிக்க ரூ.14.5 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி. இங்கே பல கோரிக்கைகளெல்லாம் எடுத்து வைக்கப்பட்டன. ஆனால், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுடைய தொகுதி மேம்பாட்டு நிதி என்பது, முதன்முதலிலே கழக ஆட்சியிலேதான், கலைஞர் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான், 1997 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது என்பதையும் நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

அடுத்து கடந்தகால அ.தி.மு.க. ஆட்சி. அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு என்னென்ன பணிகளையெல்லாம் விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்பதைப் பற்றி, இங்கே நான் பேசுகின்ற நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். எனவே, அந்தப் பிரச்சினைக்குக்கூட நான் அதிகம் செல்ல விரும்பவில்லை. ஆனால், 1996 ஆம் ஆண்டு நாம் ஆட்சிக்கு வந்தபோது ஏற்கெனவே 1991–லிருந்து 1996 வரையிலே அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது, அன்றைக்கு ஒரு இலட்சத்து 14 ஆயிரத்து 141 பணிகளை நிலுவையிலே விட்டுவிட்டுச் சென்றார்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

பிற்பகல் 1–30

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:** 1996–லே கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப்பிறகு, அவர்கள் விட்டுவிட்டுச் சென்ற அந்தப் பணிகளையெல்லாம் உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று அதற்காகக் கூடுதல் நிதியாக 26 கோடி ரூபாயை வழங்கி, அந்தப் பணிகளை, அந்தக் காலக்கட்டத்தில் முடித்த ஆட்சிதான், கலைஞர் தலைமையிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்பதையும் நான் இங்கே தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, வறுமை ஒழிப்புத் திட்டம் என்று ஒரு திட்டத்தைக் கடந்த கால ஆட்சி கொண்டு வந்து அறிமுகப்படுத்தியது. அந்தத் திட்டம்

2004 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது, அ.தி.மு.க. ஆட்சியிலே. அந்தத் திட்டத்தினுடைய நோக்கம் என்ன? ஏழையெளிய மக்களுக்கு மருத்துவச் செலவிற்காக, ஓய்வூதியத்திற்காக, அதேபோல, உணவுச் செலவிற்காக, இப்படி ஏழையெளிய மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையிலே இந்தத் திட்டம் நடக்கும் என்று சொல்லி, அந்தத் திட்டத்தை, 2004 ஆம் ஆண்டிலே, கடந்த கால ஆட்சி அறிமுகப்படுத்தியது.

2004-ல் அறிமுகப்படுத்தியபோது, 2004-2005 ஆம் ஆண்டில், அந்தத் திட்டத்திற்காக அவர்கள் ஒதுக்கிய தொகை எவ்வளவு தெரியுமா? 5 கோடி ரூபாய். அதற்குப் பிறகு, 2005-2006 ஆம் ஆண்டு, அந்தத் திட்டத்திற்காக ஒதுக்கிய தொகை 20 கோடி ரூபாய். ஆக மொத்தம், 25 கோடி ரூபாய் கடந்த கால ஆட்சியிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அப்படி ஒதுக்கீடு செய்யப்பட்ட அந்த 25 கோடி ரூபாயிலே, இதுவரையில் அவர்கள் எவ்வளவு செலவு செய்திருக்கிறார்கள் என்று கேட்டால், வெறும் 4 கோடி ரூபாய்தான் என்பதை நான் இங்கே மிகுந்த வேதனையோடு குறிப்பிடுகிறேன்.

அதேபோல, மத்திய அரசின்மூலமாக, மத்திய அரசினுடைய உதவியோடு, இன்றைக்கு நம்முடைய மாநில அரசு பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது என்பது நம்முடைய உறுப்பினர்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும். இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம், இப்படி பல திட்டங்களை நம்முடைய மாநில அரசு நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது.

இங்கே காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள்கூட பேசுகிறபோது, இந்தத் திட்டங்களைப் பற்றியெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னார்கள். ஆக, நான் உதாரணத்திற்கு ஒன்றைக் குறிப்பிடுகிறேன். தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்; இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், 6 மாவட்டங்கள்; திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திண்டுக்கல், சிவகங்கை, இந்த ஆறு மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில் இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. இது மத்திய அரசினுடைய ஆணை. ஆக, அந்த ஆணையை ஏற்றுக்கொண்டு, மாநில அரசுகள் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். ஆக, இந்தத் திட்டத்திற்கு மத்திய அரசு தொகை எவ்வளவு தெரியுமா? 90 சதவிகிதம். அவர்கள் தரக்கூடிய நிதி 90 சதவிகிதம். மாநில அரசு ஒதுக்கக்கூடிய



தொகை 10 சதவிகிதம். ஆக, மத்திய அரசு, கடந்த கால ஆட்சியிலே ஒதுக்கிய தொகை, மொத்தமாக 164 கோடி ரூபாய். அந்த 164 கோடி ரூபாயிலே, கடந்த ஆட்சியிலே செலவு செய்திருக்கக்கூடிய தொகை எவ்வளவு என்று கேட்டால், வேதனையோடு சொல்கிறேன், வெறும் 3 கோடி ரூபாய்தான். இங்கே திரு. தி. வேல்முருகன் குறிப்பிட்டுச் சொன்னார். ஆனால், இப்போது கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, கலைஞர் தலைமையிலே ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, இந்தக் குறுகிய காலத்திற்குள்ளாக, இந்தத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாயை நாம் செலவு செய்திருக்கிறோம் என்பதை பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல; இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே, இந்தத் திட்டத்திற்கு மேலும் 26 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்திருக்கிறோம். ஆக, இந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, தினசரி ஊதியமாக 80 ரூபாய் பெறக்கூடிய வகையிலே, Rural schedule of rates – அதாவது, ஊரக விலைப் பட்டியலைக்கூட, நம்முடைய ஆட்சி மாற்றியமைத்திருக்கிறது என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து சுனாமி; இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்புகூட, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதுபற்றி விளக்கமாக இங்கே பேசியிருக்கிறார்கள். எனவே, நான் அதிகம் இதுபற்றி விளக்க வேண்டிய அவசியமில்லை. இருந்தாலும், ஊரக வளர்ச்சித் துறையின்மூலமாக, அதேபோல, நம்முடைய உள்ளாட்சித் துறையின்மூலமாக, இந்தத் திட்டத்திற்கு, சில வங்கிகளிடமிருந்து பெறக்கூடிய நிதியைப் பெற்று, சில திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம் என்ற காரணத்தால், எங்களுடைய துறையைப் பொறுத்தவரையில் மாத்திரம் சிலவற்றை நான் உங்களுக்கு அடையாளம் காட்ட விரும்புகிறேன்.

சுனாமி தமிழகத்திற்கு வந்தபோது, தமிழகம் அதனால் பாதிக்கப்பட்ட நேரத்தில், உலக வங்கி, சுனாமியினுடைய மறு கட்டமைப்புப் பணிகளுக்காக, 1,350 கோடி ரூபாய் நிதியுதவியாக அனுமதித்தது. அதிலே ஒரு பைசாவாவது கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறதா என்று கேட்டால், இல்லை. அதேபோல, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தினுடைய ஒப்புதல் பெற்ற நிதி 283 கோடியே 69 இலட்சம் ரூபாய். அதிலும் ஒரு சல்லிக்காசைக்கூட கடந்த கால ஆட்சி பயன்படுத்தவில்லை. அதேபோல, ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய நிதியுதவியான 301 கோடி ரூ[illegible]

4.95 கோடி ரூபாய் மட்டுமே, கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறது. அதிலே நகராட்சித் துறையின்மூலமாக நிறைவேற்ற வேண்டிய திட்டங்களுக்கு, உலக வங்கி தந்தது 11 கோடி ரூபாய். அதிலும் செலவு கிடையாது. அதுபோல, ஆசிய வங்கி தந்த நிதி 49 கோடி ரூபாய். அதிலே எவ்வளவு செலவு செய்து இருக்கிறார்கள் என்று கேட்டால் ரூபாய் 2 கோடியே 8.5 இலட்சம்.

*பிற்பகல் 1–3.5*

TWAD Board–க்கு ஆசிய வளர்ச்சி வங்கி தந்த நிதி ரூபாய் 82.18 கோடி, அதிலே வெறும் 46 இலட்சம் ரூபாய்தான் கடந்த கால ஆட்சி செலவு செய்திருக்கிறது. அதுபோல பேரூராட்சிகளுக்காக ஆசிய வளர்ச்சி வங்கி தந்த நிதி ரூபாய் 56.84 கோடி. அதையும் கடந்தகால ஆட்சி செலவு செய்யவில்லை. அதனால்தான் நாம் ஆட்சிக்கு வந்தவுடன் நம்முடைய முதல்வர் அவர்கள் சுனாமியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களினுடைய ஆட்சித் தலைவர்களையெல்லாம் சென்னைக்கு வரவழைத்து, 24-6-2006 அன்று ஒரு கூட்டத்தை நடத்தி, ஏறக்குறைய நான்கு மணி நேரம் அந்தக் கூட்டத்திலே ஆய்வு செய்யப்பட்டு, இந்தப் பணிகளையெல்லாம் எப்படி வேகப்படுத்துவது, விரைவுபடுத்துவது, இதற்கு என்னென்ன இடையூறுகள், தடைகள் இருக்கின்றன என்பதைப்பற்றி எல்லாம் ஆய்ந்து, அதற்குப் பிறகு பல உத்தரவுகளையெல்லாம் நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்கு வழங்கினார்கள்.

குறிப்பாக கடற்கரையோர மாவட்டங்களில் நகராட்சி, ஊராட்சிகளுடைய விதிகளெல்லாம் தளர்த்தப்பட்டு மனைப் பிரிவுகளுக்கு உடனடியாக ஒப்புதல் தரக்கூடிய அந்த உத்தரவு. இன்னும் பெருமையோடு நான் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எப்படி நம்முடைய முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் அங்கே பதவியேற்பு விழா நடைபெற்ற நேரத்தில், பதவியேற்ற அதே விழாவிலே, அதே மேடையிலே ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய், விவசாயப் பெருங்குடி மக்கள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கியிருக்கக்கூடிய கடன்கள் அறவே இரத்து, சத்துணவுடன் வாரத்திற்கு இரண்டு முறை முட்டை என்று அந்த உத்தரவுகளை அந்த உறுதிமொழிகளை, அந்த விழா மேடைக்கே கோப்புகளைக் கொண்டுவரச் செய்து அந்தக் கோப்புகளிலே கையெழுத்திட்டு, உத்தரவிட்ட முதல்வர் அல்லவா நம்முடைய முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக அதே உணர்வோடு இந்த ஆட்சித்



தலைவர்களுடைய கூட்டத்திலேயே அந்தக் கோப்பைக் கொண்டு வரச் செய்து இதற்கான உத்தரவிட்டவர்தான் நம்முடைய முதல்வர் அவர்கள்.

அதேபோல கடலோரக் கட்டுப்பாட்டு பகுதிகளில் அனுமதிபெற்று பணிகள் துவங்கிட, உடனடியாக அந்த உத்தரவும் வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கு அ.தி.மு.க.வைச் சேர்ந்த திரு. மலரவன் அவர்கள் பாதியிலே பேசிவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால், பாதியிலே பேசுகிற பேச்சிலேகூட ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார். அதையும் நான் மறக்காமல் குறித்து வைத்துக்கொண்டேன். என்னவென்று கேட்டால், பேரூராட்சிகளையெல்லாம் சிறப்புச் சிற்றூராட்சிகளாக நாங்கள் ஆக்கினோம். ஆனால், இப்போது நீங்கள் அந்தச் சிறப்புச் சிற்றூராட்சிகளையெல்லாம் பேரூராட்சிகளாக மாற்றிவிட்டீர்களே, அதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று ஒரு கோரிக்கை எடுத்து வைத்தார். நான் இங்கே, தெரிவிக்க விரும்புவது, 2004 ஆம் ஆண்டு கடந்தகால ஆட்சியிலே, அவர்கள் பேரூராட்சிகளையெல்லாம் சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றினார்கள். அப்படி மாற்றுகிற நேரத்தில் ஒவ்வொரு பேரூராட்சியிடத்திலும் அதற்குக் கருத்துகளைக் கேட்டார்கள்.

கருத்துகளைக் கேட்டபோது, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் என்ன கருத்துகளை எடுத்துச்சொன்னார்கள் தெரியுமா? 385 பேரூராட்சிகள் நாங்கள் பேரூராட்சிகளாகத்தான் இருப்போம் என்று கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். 182 பேரூராட்சிகள்தான் நாங்கள் சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாறுகிறோம் என்ற ஒரு கருத்தைப் பதிவு செய்தார்கள். ஆனால், ஜனநாயக முறைப்படி என்ன செய்திருக்க வேண்டும்? ஆக, பெரும்பான்மையாக என்ன கருத்து வருகிறதோ, அதைத்தானே ஏற்றுக்கொண்டிருக்க வேண்டும்? ஆனால், கடந்த கால ஆட்சி என்ன செய்தது என்று கேட்டால், அதெல்லாம் முடியாது என்று சொல்லி, சர்வாதிகாரத் தன்மையோடு அன்றைக்குப் பேரூராட்சிகளையெல்லாம் சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றினார்கள். அதற்கு ஒரு காரணம் கண்டுபிடித்தார்கள். என்னவென்று கேட்டால், இப்போதுகூட அவர்கள் சொன்னார்கள், நிதி வர வேண்டும், மத்திய அரசு தரக்கூடிய அந்த நிதியைப் பயன்படுத்தக்கூடிய வகையிலே சிறப்புச் சிற்றூராட்சிகளுக்குக் கிடைக்கும், அதனால்தான் மாற்றினோம் என்று சொன்னார்கள். அது உள்ளபடியே தவறு. ஆனால், சிறப்புச் சிற்றூராட்சிகளாக மாற்றியதற்குப்பிறகு மத்திய அரசிலிருந்து கூடுதலாக நிதி வந்ததா? இல்லை. ஏற்கெனவே ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுக்

கொண்டிருந்த அந்த நிதியைத்தான் பகிர்ந்து பிரித்து சிறப்புச் சிற்றூராட்சிகளுக்குத் தந்தார்களே தவிர, தனியாக அவர்கள் நிதியை வழங்கவில்லை.

அதுமட்டுமல்ல, பேரூராட்சிகளிலே பணிபுரிந்து கொண்டிருந்த பணியாளர்களுடைய நிலை, ஏறக்குறைய 12,811 பணியாளர்கள் அவர்களுடைய எதிர்காலமே இப்போது கேள்விக்குறியான நிலைமைக்குத் தள்ளப்பட்டது. ஒரு குழப்ப நிலைக்கு வந்தது. அதனால்தான் இப்போது மீண்டும் கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு இந்த முரண்பாடுகளையெல்லாம் களைய வேண்டுமென்பதற்காகத்தான் அதுவும் ஜனநாயக முறைப்படி, ஒவ்வொரு அமைப்பிடமும் கருத்துகளைக் கேட்டோம். அவர்களைத் தீர்மானம் போட்டு அனுப்பச் செய்தோம். அந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலேதான் 561 அமைப்புகளில் 506 அமைப்புகள், நாங்கள் மீண்டும் பேரூராட்சிகளாக மாறுவோம், மாற வேண்டும் என்ற அந்தக் கருத்தை எடுத்துச் சொன்னதற்குப் பிறகுதான் இன்றைக்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ன்கீழ் பேரூராட்சிகளாக மாற்ற இந்த அரசு முடிவு செய்திருக்கிறது. அதனுடைய சட்டமுன்வடிவுகூட விரைவிலே சட்டமன்றத்திலே வைக்கப்பட இருக்கிறது என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள், இது பல ஆண்டுகாலமாக இருந்து வந்த பிரச்சினை, தீராத பிரச்சினையாக இருந்து கொண்டிருந்தது. அனைவருக்கும் தெரியும். ஆக, இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க பல காலகட்டங்களில் பல சலுகைகள் எல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. அது அ.தி.மு.க. ஆட்சியாக இருந்தாலும் சரி, அதேபோல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியாக இருந்தாலும் பல சலுகைகளை பல நேரங்களில் வழங்கியிருக்கிறோம்.

பிற்பகல் 1–40

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலேயிருந்தபொழுது, 1999, 2000, 2001 ஆம் ஆண்டுகளில் பல அரசாணைகள் மூலமாகச் சலுகைகளைத் தந்தோம். அதேபோல, அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, 2006 ஆம் ஆண்டு, அவர்களும் சலுகைகளைத் தந்து, பல அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளுக்குப் பல சலுகைகளைத் தந்து, அரசாணைகளை வழங்கினார்கள். ஆனால், அதில் பலன் கிடைத்ததா என்று கேட்டால், கிடையாது. அதனால்தான், இப்பொழுது கழகம் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, 6,000 மனைப்



பிரிவுகளில், 90,000 வீட்டுமனைச் சொந்தக்காரர்கள் பயன்பெறக்கூடிய வகையிலே, இன்றைக்கு வரைமுறைப்படுத்தி, அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. நான் மிகுந்த மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அரசாணை வழங்கப்பட்டதற்குப் பிறகு, அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளிலே இருக்கக்கூடியவர்கள், வரைமுறைப்படுத்திக் கொள்வதற்காக, அவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் இன்றைக்கு அரசிடம் வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. போட்டி போட்டிக் கொண்டு வந்து கொண்டிருக்கின்றன என்பதையும் நான் இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மகளிர் சுய உதவிக் குழு. ஒரு காலத்திலே, மகளிர் சுய உதவிக் குழு என்பது, நாம் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு வரை, சமூக நலத் துறையிலே ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆனால், இப்பொழுது உள்ளாட்சித் துறையிடம், இந்த மகளிர் சுய உதவிக் குழு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. என்ன காரணம் என்று கேட்டால், மக்களுடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிற நேரத்தில், அந்தப் பிரதிநிதிகளை வைத்து, அந்த சுய உதவிக் குழுக்கள் இன்னும் சிறப்பாகச் செயலாற்ற முடியும் என்ற நம்பிக்கையோடு, நம்முடைய முதல்வர் அவர்கள் உத்தரவிட்டு, இன்றைக்கு நம்முடைய துறையோடு அந்த சுய உதவிக் குழுக்கள் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைப் பொறுத்தவரையில் ஏதோ அவர்கள்தான் ஆரம்பித்ததுபோல, ஏதோ அவர்கள்தான் இந்தத் திட்டத்திற்கு உத்தியைச் சொன்னதுபோல, என்றெல்லாம் இன்றைக்குத் தொடர்ந்து அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், உள்ளபடியே, மகளிர் சுய உதவிக் குழு என்பது, முதன்முதலில், 1989 ஆம் ஆண்டு, தருமபுரி மாவட்டத்தில், தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் தொடங்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி)

1989 ஆம் ஆண்டு தொடங்கப்படுவதற்கு அரசாணை வழங்கப்பட்ட நகல்கூட என்னிடத்திலே இருக்கிறது. அவர்கள் இருந்திருந்தால், நன்றாக இன்னும் தெளிவாகக் காட்டியிருக்க முடியும். ஆகவே, 1989 ஆம் ஆண்டு, கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே, அந்த மகளிர் சுய உதவிக் குழு தொடங்கப்பட்டது. ஆனால், தொடங்கப்பட்ட நேரத்திலே எந்த நோக்கத்திற்காக, அரசியலுக்காகவா? அல்லது தேர்தலுக்காகவா? இடைத் தேர்தலுக்காகவா? கிடையாது. அவர்கள் சுயமாக, சிறுசிறு தொழில்களைச் செய்துகொண்டு, தங்களுடைய சொந்தக்

காலில் அவர்கள் நிற்க வேண்டும். மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய வங்கிகளிலிருந்து, குறைந்த வட்டியிலே கடனைப் பெற்று, அவர்கள் அந்த சிறுசிறு தொழில்களைச் செய்துகொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திட்டம் கழக ஆட்சியிலே 1989 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.

1997–லே தமிழ்நாடு முழுவதும் மகளிர் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால், இந்த சுய உதவிக் குழுத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே எப்படி இருந்தது? அதனுடைய செயல்பாடுகளெல்லாம் எப்படி இருந்தன? அதுபற்றிப் பரவலாக இந்த மன்றத்திலே பேசப்பட்டிருக்கிறது. இருந்தாலும், நான் அதிகம் பேச விரும்பவில்லை. இருந்தாலும், எங்களுடைய துறையின் மூலமாக, இந்த ஊரக உள்ளாட்சித் துறையின் மூலமாக, நாம் ஆற்றிக் கொண்டிருக்கக்கூடிய பணிகளில் சிலவற்றை நான் இங்கே குறிப்பிட்டுக்காட்ட விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே மகளிர் சுய உதவிக் குழுவிற்கு தினசரி பயிற்சித் தொகையாக 45 ரூபாய் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த அ.தி.மு.க. ஆட்சியிலே அது முழுவதுமாகக் குறைக்கப்பட்டு, வெறும் 7 ரூபாய் 50 காசாக வழங்கப்பட்டது. அதுமட்டுமல்ல. தொண்டு நிறுவனங்களுக்குக் குழு பராமரிப்புத் தொகையும், கடந்த கால ஆட்சியிலே குறைக்கப்பட்டது. மாவட்ட அளவிலே, 6 உதவித் திட்ட அலுவலர் பணியிடங்களை நம்முடைய ஆட்சிக் காலத்திலே உருவாக்கினோம். ஆனால், கடந்த கால ஆட்சியிலே அது மூன்றாகக் குறைக்கப்பட்டது. என்ன காரணத்திற்காக? வெறும் தேர்தல் ஆதாயத்தைக் கருதி, அவசர கோலத்தில் அவர்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? மகளிர் சுய உதவிக் குழுவைப் பொறுத்தவரைக்கும், 2005–2006 ஆம் ஆண்டு, அதுவும் குறுகிய அந்த ஆறு மாத காலத்திற்குள்ளாக, தேர்தல் வருவதற்கு ஒரு ஆறு மாத காலத்திற்கு முன்பாக, 2 இலட்சம் புதிய குழுக்களை அமைத்தார்கள். அதைத்தான் செய்தார்கள். ஆனால், அதில் 1 இலட்சத்து, 20 ஆயிரம் குழுக்களுக்கு உரிய பயிற்சி தந்திருக்கிறார்களா என்று கேட்டால், கிடையாது. அதேபோல, 1 இலட்சத்து 30 ஆயிரம் குழுக்களுக்கு — grading — தரமதிப்பீட்டிற்காவது, அந்தக் குழு தகுதி பெற்றிருக்கிறதா என்று கேட்டால், அதுவும் கிடையாது. அதனால்தான், இந்தக் குளறுபடிகளையெல்லாம் சரிசெய்ய வேண்டும் என்பதற்காகத்தான், இன்றைக்குக் கழக ஆட்சியிலே, கலைஞருடைய ஆட்சிக் காலத்திலே இந்த மகளிர் சுய உதவிக் குழுவிற்காக பல்வேறு திட்டங்கள்



உருவாக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் சிலவற்றை நான் உங்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வரக்கூடிய ஐந்தாண்டு காலத்திற்குள்ளாக மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுடைய எண்ணிக்கையை ஒரு கோடியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல நடப்பாண்டில், 25,000 சுய உதவிக் குழுக்கள் புதிதாய் அமைக்கப்படவிருக்கின்றன. 10,000 இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பயிற்சி மற்றும் கடன் உதவிக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பயிற்சித் தொகையை மீண்டும் பழைய நிலையிலே, 45 ரூபாய் வழங்க ஏற்கெனவே அரசு உத்தரவிட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) தொண்டு நிறுவனத்திற்குப் பயிற்சித் தொகையாக ரூ.100/–லிருந்து, ரூ.350/–ஆக உயர்த்தித் தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) பயிற்சி நாட்கள், ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 4 நாட்கள் என இருந்தன. ஆனால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்ததற்குப் பிறகு, அதை இரண்டு நாட்களாக மாற்றினார்கள். மீண்டும் இப்பொழுது 4 நாட்களாக அது மாற்றி நடத்தப்படும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–45

அடுத்து, சென்னை மாநகராட்சிக்காக ஏதோ பல திட்டங்களையெல்லாம் தீட்டியதாக அ.தி.மு.க.–வைச் சேர்ந்த உறுப்பினர் பேசுகிறபோது, இங்கே பெருமையோடு பேசிக் கொண்டார். ஆனால், சென்னை மாநகராட்சிக்கு எந்தத் திட்டங்களும், முறையாக அவர்களால் தீட்டப்படவில்லை. ஒரே நோக்கம் எப்படியாவது பழிவாங்கவேண்டும் என்பதிலேதான், கண்ணும்கருத்துமாக இருந்தார்களே தவிர, அவர்களால் எந்தத் திட்டங்களும் தீட்டப்படவில்லை. அதற்கு ஒரே ஒரு உதாரணத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

1996–2001 ஆம் ஆண்டிலே, நான் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தபொழுது, அப்பொழுது சாலைகள் அமைக்கப்பட்டன. அந்தச் சாலைகள் அமைக்கப்பட்டதிலே ஏதோ குளறுபடிகள் இருக்கின்றன, முறைகேடுகள் இருக்கின்றன என்று சொல்லி, தார் பகுதியைப் பிரித்தெடுப்பதற்குப் பயன்படுத்துகிற இரசாயனப் பொருளை வாங்குவதிலே முறைகேடுகள் நடந்துவிட்டது என்று

சொல்லி, அவர்கள் ஒரு குற்றச்சாட்டை என்மீது, நம்முடைய மாநகராட்சிமீது அன்றைக்கு வைத்தார்கள்.

அதனால், விஜிலென்ஸ் துறையினரால் இது குறித்து விசாரணையும் நடத்தப்பட்டது. அவர்கள் வைத்த அந்தக் குற்றச்சாட்டின் அடிப்படையிலே, விஜிலென்ஸ் துறை இதுகுறித்து விசாரித்தது. டெண்டர் கோரி வழங்கப்பட்டதிலும், இரசாயனப் பொருள் வாங்கி வழங்கியதிலும், எந்தவிதமான முறைகேடும் நடைபெறவில்லை என்று விஜிலென்ஸ் துறையினரால் முடிவு செய்யப்பட்டது.

மேயராக இருந்த என்மீது, மற்ற மாநகராட்சி அதிகாரிகள்மீதோ எந்த வகையிலும் தவறு செய்தார்கள் என்பதற்கான எந்தவிதமான ஆதாரங்களோ, சாட்சியங்களோ கிடையாது என்று விஜிலென்ஸ் துறையினர் விரிவான விசாரணை நடத்தி, இந்தக் குற்றச்சாட்டுக்கு எந்தவித அடிப்படை ஆதாரங்களும் கிடையாது என்று தெளிவாக எடுத்துச்சொல்லியிருக்கிறார்கள்.

விஜிலென்ஸ் துறையின் இந்த அறிக்கையை விஜிலென்ஸ் ஆணையமும் ஏற்றுக்கொண்டு, என்மீதான மேல் நடவடிக்கையைக் கைவிடலாம் என்று பரிந்துரைக்கிறது. அப்படி பரிந்துரைக்கப்பட்ட கோப்பு எங்கே போகிறது? அந்தப் பரிந்துரை கோப்பு பொதுப் பணித் துறை அமைச்சருக்குச் செல்கிறது. பொதுப் பணித் துறை அமைச்சருக்குச் சென்று, அதற்குப் பிறகு முதலமைச்சருக்கும், தலைமைச் செயலாளருக்கும் செல்கிறது. எப்போது? *14–9–2004* அன்று அந்தக் கோப்பு செல்கிறது. *2004* ஆம் ஆண்டு சென்ற அந்தக் கோப்பு, இதுவரையில் அதிலே அமைச்சரும் கையெழுத்துப் போடவில்லை, முதலமைச்சரும் கையெழுத்துப் போடவில்லை. இதுதான், *24* மணி நேரத்திலே *20* மணி நேரம் உழைக்கக்கூடிய பொருள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். ஆகவே, இந்தக் கோப்புகள் எல்லாம் கையிலேயே இருக்கின்றன. ஆனால், கையெழுத்துப் போடவில்லை. எதற்காக இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், பழிவாங்கவேண்டும் என்ற ஒரே நோக்கம் என்பதற்காகதான். அது மட்டுமல்ல. நான் ஒன்றை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புவது, ஏற்கெனவே எதிர்க்கட்சிகளைப் பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு, அ.தி.மு.க. நடந்துகொண்டது என்பதற்கு ஒரு சான்றுதான் இந்தக் கோப்பு.



அதேநேரத்தில், இந்தக் கோப்பிலே இன்னொரு பக்கத்திலே படித்துப் பார்க்கக்கூடிய ஒரு சூழ்நிலை எனக்கு ஏற்பட்டது. அதிலே என்னவென்று கேட்டால், அந்தப் பக்கத்திலே இருக்கக்கூடிய விவரம் என்னவென்று கேட்டால், சென்னை மாநகராட்சியினுடைய ஆணையர் திடீரென்று தமிழக அரசுக்கு ஓர் அறிக்கை தாக்கல் செய்கிறார். எப்படிப்பட்ட அறிக்கை என்று கேட்டால், அதிலே சென்னை மாநகராட்சி மன்றம், தான் பெற்றுள்ள பெரும்பான்மையை துஷ்பிரயோகம் செய்து சர்வாதிகாரமாக நடப்பதாகவும், மேயர் தன் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துவதாகவும் அந்தக் கோப்பிலே எழுதியிருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, சட்ட விதிமுறைகளின்படி, மாநகராட்சி, தன்னுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ளவில்லை. மாநகராட்சியைக் கலைத்து விடலாமா என்று ஆணை கோரி, மாநகராட்சி ஆணையர் அரசுக்கு அந்த அறிக்கையைத் தெரிவிக்கிறார். அப்படித் தெரிவித்த அந்தக் கோப்பு, அந்த அறிக்கை, எங்கே போகிறது என்று கேட்டால், அது அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. அனுப்பி வைக்கப்படக்கூடிய தேதி என்ன தெரியுமா? *29–6–2001*. அன்றைக்கு ஆணையராக இருந்தவர் ஆச்சாரியலு அவர்கள். அவர்தான் கையெழுத்துப்போட்டு அனுப்பி வைக்கிறார். தேதி *29–6–2001*. இதைத்தான் நீங்கள் மனதிலே பதிய வைத்துக்கொள்ளவேண்டும்.

இந்தக் கோப்பு, உள்ளாட்சித் துறை அமைச்சர், அதைப்போல சட்டம் மற்றும் நிதித் துறை அமைச்சர் ஆகியோர்மூலமாக முதலமைச்சருக்கு ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படுகிறது. மாநகராட்சி ஆணையர் அறிக்கை அரசுக்குக் கொடுத்த தேதி என்ன தெரியுமா? அதே *29–6–2001*.

அதற்குப் பிறகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மாநகராட்சியினுடைய ஆணையரின் அறிக்கையின்மீது கோப்பு தயாரித்து சுற்றுக்கு அனுப்பப்படுகிறது. அது என்றைக்குத் தெரியுமா? மாநகராட்சி ஆணையர் அறிக்கை கொடுத்த அதே நாளிலே, அவசர அவசரமாகக் கோப்பு தயாரிக்கப்பட்டு, சுற்றுக்கு *29–6–2001* அன்றே அனுப்பப்படுகிறது.

பிற்பகல் 1-50

அதே 29-06-2001-இலே, அந்தக் கோப்பிலே, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய செயலாளர் கையொப்பமிடுகிறார். அதே 29-06-2001-லே தலைமைச் செயலாளரும் கையெழுத்து போடுகிறார். பின்னர் கோப்பு உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு அனுப்பப்படுகிறது. அது எப்போது தெரியுமா? அதுவும் 29-06-2001. அதே நாளில் கையொப்பம் போடுகிறார். பின்னர் கோப்பு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சருக்கு செல்கிறது. அதுவும் 29-06-2001. பின்னர் கோப்பு, முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு செல்கிறது. ஆக, முதலமைச்சர் கையெழுத்து போடுகிறார். அது என்றைக்குத் தெரியுமா? அதுவும் 29-06-2001. ஆக, 29 ஆம் தேதி அன்று அறிக்கை அனுப்பப்பட்டு அதிலே அத்தனை அதிகாரிகளும் கையெழுத்திட்டு, அமைச்சர்களும் கையெழுத்திட்டு, முதலமைச்சரும் கையெழுத்திட்டு, அது அனுப்பிவைக்கப்படுகிறது என்று சொன்னால், இதைத்தான் நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஆக, எந்த நோக்கத்தோடு கடந்த கால ஆட்சி நடந்திருக்கிறது என்பதற்கு இதை ஒரு sample ஆகத்தான் நான் சொல்லியிருக்கின்றேனே தவிர, வேறல்ல.

அதுமட்டுமல்ல, சென்னை மாநகரத்திலே, 9 மேம்பாலங்கள் கட்டியதிலே முறைகேடுகள் நடந்ததாக ஒரு தவறான குற்றச்சாட்டைச் சொல்லி, அதற்கு வழக்கு போட்டார்கள். வழக்கைச் சந்திப்பதற்கு நாங்கள் எந்த நேரத்திலும் காத்திருக்கிறோம். நான் பல நேரங்களில், பல பொதுக்கூட்டங்களில் பேசியது உண்டு. எங்கள்மீது, குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால், ஆதாரத்தோடு நிரூபித்துவிட்டால் எந்தத் தண்டனையையும் ஏற்றுக்கொள்வதற்கு நாங்கள் காத்திருக்கிறோம், தயாராக இருக்கிறோம் என்று நான் பல நேரங்களில் சொன்னது உண்டு.

அதைப்போல நம்முடைய முதல்வர் அவர்கள்மீது இங்கே அமர்ந்திருக்கக்கூடிய நம்முடைய அமைச்சர், அன்றைக்கு அமைச்சராக இருந்த அண்ணன் கோ.சி. மணி அவர்கள்மீது, பொன்முடி அவர்கள்மீது, என்மீது, சில அதிகாரிகள் மீது எல்லாம் வழக்கு போட்டார்கள். ஆனால், என்னவாயிற்று வழக்கு? வழக்கு இதுவரையில் நடைபெறக்கூடிய ஒரு சூழ்நிலைக்கு வரவில்லை. ஆனால், அந்த வழக்கு போட்ட அதே 29 ஆம் தேதிதான், அதுதான் முக்கியம். அதே 29 ஆம் தேதி இரவுதான், நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை வீடு தேடி வந்து, வீட்டை உடைத்து, கதவை உடைத்து, பூட்டை உடைத்து, படுக்கையிலே தூங்கிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய



தலைவர் கலைஞர் அவர்களை கைது செய்த ஆட்சிதான் கடந்தகால அ.தி.மு.க. ஆட்சி என்பதை நாம் மறந்துவிடமுடியாது.

ஆக, பழிவாங்கக்கூடிய ஒரு நோக்கத்தோடு செயல்பட்ட ஆட்சியை மக்கள் அடையாளம் தெரிந்துகொண்டு, இன்றைக்கு ஒரு நல்ல தீர்ப்பைத் தந்திருக்கிறார்கள். ஆக, அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே இன்றைக்கு தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இந்த ஆட்சி அமைந்திருக்கிறது என்று சொன்னால், அந்த ஆட்சியின் சார்பிலே இன்றைக்கு பல திட்டங்கள், பல சாதனைகள் எல்லாம், இந்தத் துறையின்மூலமாக இன்றைக்கு நிறைவேற்றக்கூடிய அறிவிப்புகளையெல்லாம், நீங்கள் ஆர்வத்தோடு எதிர்பார்த்து காத்திருக்கக்கூடிய அந்த அறிவிப்புகளையெல்லாம் இப்போது உங்கள்முன் எடுத்து படிக்க விரும்புகிறேன்.

முதலில் ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையினுடைய அறிவிப்புகள்:

உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் இந்த ஆண்டு குறித்த காலத்திற்குள் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) உள்ளாட்சித் தேர்தலில் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவி இடங்களுக்கு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தேர்தல் நடத்தப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துவதற்கும், அவற்றின் எல்லைகளை மாற்றி அமைப்பதற்கும், அவற்றைப் பிரிப்பதற்கும் ஏதுவாக பரிந்துரை செய்ய ஒரு நிபுணர் குழு அமைக்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளின் தற்போதைய அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளை ஆய்வு செய்து தக்க பரிந்துரைகள் வழங்கிட, இந்த அரசு ஒரு நிபுணர் குழு அமைக்க முடிவு செய்துள்ளது.

அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம். நடப்பு ஆண்டு முதல் தமிழ்நாட்டிலுள்ள ஊராட்சிகளின் அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்யும்வகையில் ஒரு புதிய திட்டமான அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் திட்டத்தின்வாயிலாக தமிழ்நாட்டிலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளும், வரும் 5 ஆண்டுகளில் மொத்தம் ரூ. 2,500 கோடி அளவிற்கு மாநில அரசின் நேரடி நிதி உதவிபெறும். இத்துறையின்மூலம் செயல்படுத்தப்படும் மத்திய

மாநிலத் திட்டங்களில் இந்தப் புதிய திட்டமே மிகப்பெரிய திட்டமாகும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் – இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், 1998 ஆம் ஆண்டு முதல், கான்கிரீட் கூரை அமைப்பதற்கு, 12 ஆயிரம் ரூபாய் மாநில அரசு வழங்கி வந்ததை, முந்தைய அரசு 2004 ஆம் ஆண்டில், அதை 9 ஆயிரம் ரூபாயாகக் குறைத்தது. ஆனால், இந்த ஆண்டு கட்டப்படவிருக்கும் 49,850 வீடுகளுக்கு, கான்கிரீட் கூரை அமைப்பதற்கு, இந்தத் தொகை 9 ஆயிரம் ரூபாயிலிருந்து 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக மாநில அரசு கூடுதலாக, 15 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளது.

பிற்பகல் 1–55

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். ஆவலோடு எதிர்பார்த்துக் காத்திருக்கிறீர்கள். ஏற்கெனவே ஒவ்வொரு கிராமத்திற்கும், 20 இலட்சம் ரூபாய் இந்த அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ், நிதி ஒதுக்கப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். எனவே, நாங்கள்கூட, முதல்வர் அவர்களுடன் இதுபற்றி கலந்து பேசுகின்றபோது, அதிகம் உயர்த்தித் தர வேண்டுமென்று கோரிக்கைகூட வைக்கவில்லை. இருந்தாலும், முதல்வர் அவர்கள் கொஞ்சம் உயர்த்தித் தர வேண்டும் என்று எங்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். எனவே, அந்த அடிப்படையிலே சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் ஒதுக்கீடு செய்யப்படும் தொகை 1 கோடி ரூபாய் என்பதை 1 கோடியே 20 இலட்சம் ரூபாயாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் உயர்த்தியுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதனால் மாநில அரசிற்கு ஆண்டிற்கு 47 கோடி ரூபாய் கூடுதல் செலவாகும்.

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கணினி, Printer மற்றும் Broadband Internet Connection ஆகியவற்றை அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் வாங்கிக் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)



சிறந்த ஊராட்சிகளுக்கான விருது. சிறப்பான மற்றும் புதுமையான முயற்சிகளைச் செயல்படுத்தும் கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் செயல்பாட்டினைக் கௌரவிக்கக்கூடிய வகையிலே உத்தமர் காந்தி ஊராட்சி விருது வழங்கப்படும். இவ்விருதிற்காக ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்படும் 15 கிராம ஊராட்சிகளுக்கு தலா 5 இலட்சம் ரூபாய் பரிசுத் தொகை, சான்றிதழ் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி. ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊராட்சிகளில் உள்ள பேருந்துகள் செல்லும் 1,543 கிலோ மீட்டர் நீளம் உள்ள 889 சாலைகள் நபார்டு வங்கி உதவியுடன் 107 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் குடும்பங்களின் கணக்கெடுப்பு. 2002 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் மக்களின் கணக்கெடுப்பு முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற புகார்கள் காரணமாக, தற்போதுள்ள பட்டியலில் இடம் பெற்றவர்களின் பெயர்கள் மறு ஆய்வுக்காக அந்தந்த ஊராட்சி அலுவலகங்களில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும். ஆட்சேபணைகள் இருப்பின் மறு ஆய்வு செய்து, இறுதிப் பட்டியல் மீண்டும் கிராம ஊராட்சிகளில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அத்துடன் இறுதிப் பட்டியல் இணைய தளத்திலும் வெளியிடப்படும்.

நகரப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி. ஊரகப் பகுதியில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூபாய் 10,000/– பொன் விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மானியமாக வழங்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதுபோன்று நகரப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக்கீழேயுள்ள, தர மதிப்பீட்டில் தேர்வுபெற்ற சுய உதவிக் குழுக்களுக்கும் சுழல் நிதி தலா 10,000/– ரூபாய் மானியமாக இந்த ஆண்டு மாநில அரசு நிதியிலிருந்து வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களை ஊக்குவிக்க விருதுகள். சிறப்பாகச் செயலாற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கும், கிராம ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளுக்கும், ஒன்றிய, மாவட்ட மற்றும் மாநில அளவிலும் அவர்களை ஊக்குவிக்கும் விதமாக மணிமேகலை விருது

வழங்கப்படும். இதற்காக 35 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பிணை வைப்புத் தொகை விலக்கு. மகளிர் சுய உதவிக் குழுக்கள் அரசு ஒப்பந்தப்புள்ளிகளில் போட்டியிட ஏதுவாக, சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிப்பதுபோல் சுய உதவிக் குழுக்களுக்கும் பிணை வைப்புத் தொகை கட்டுவதிலிருந்து விலக்கு அளிக்க பரிசீலிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்துதல். ஊராட்சி அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளை வலுவான மக்கள் அமைப்புகளாக உருவாக்குவது இந்த அரசினுடைய மிக முக்கியமான குறிக்கோளாகும். இதற்கு ஏதுவாக பயிற்சிகள் அளிக்கப்பட்டு, இவ்வாண்டு 4,000 கூட்டமைப்புகளுக்கு தொடக்க நிதியாக 10,000 ரூபாய் வீதம் வழங்கப்படும். மேலும் இக்கூட்டமைப்புகளுக்குக் கூடுதலாக அதிகாரங்களும், பொறுப்புகளும் வழங்கப்படும்.

உலக வங்கி நிதி உதவியுடன் 'வாழ்ந்து காட்டுவோம் திட்டம்'. ஏழை எளிய மக்களின் வாழ்வில் ஒளியேற்றிட தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டம் உலக வங்கி நிதி உதவியுடன் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படும். 'வாழ்ந்து காட்டுவோம்' என்ற பெயரில் இத்திட்டம் 15 மாவட்டங்களிலுள்ள, 70 ஒன்றியங்களில், 2,432 கிராம ஊராட்சிகளில், 717 கோடி ரூபாய் செலவில், 6 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தப்படும். இவ்வாண்டு இந்தத் திட்டத்திற்காக 162 கோடி ரூபாய் ஒதுக்கப்படுகிறது.

சென்னையில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு விற்பனை மற்றும் கண்காட்சி மையம். தமிழகத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய ஏதுவாக சுமார் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் சுய உதவிக் குழு பொருட்கள் விற்பனை மற்றும் கண்காட்சி மையம் வள்ளுவர் கோட்டம் அருகில் உள்ள இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் நிறுவப்படும்.

சுனாமி வாழ்வாதார மேம்பாட்டிற்குப் பொருளாதார உதவிகள். சுனாமியால் பாதிக்கப்பட்ட 12 கடலோர மாவட்டங்களில், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டத்தின்மூலம், வங்கிக் கடன்பெற சிரமப்படும் உடல் ஊனமுற்றோருக்கு,



பொருளாதார மேம்பாட்டிற்காக 10,000/– ரூபாய் முழு மானியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–00

சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கிட இத்திட்டத்தில் 30,000/– ரூபாய் மானியமாகவும், 15,000/– ரூபாய் வங்கிக் கடனாகவும் வழங்கப்படும். பொருளாதாரக் கடனுதவிக்கு 4 சதவிகிதம் வட்டி மானியமாக வழங்கப்படும்.

சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் பொருளாதார கடனுதவிக்கு 133 கோடி ரூபாயும், திறன் வளர் பயிற்சிக்காக 19 கோடி ரூபாயும், பொருளாதார மேம்பாட்டிற்கு உதவக்கூடிய உள் கட்டமைப்பு வசதிகளுக்காக 38 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

ஊரக வளர்ச்சித் துறை சார்ந்த பணியாளர்கள் நலன். முந்தைய ஆட்சியில், ஊரக வளர்ச்சித் துறையில் பணியாளர்களுக்கு எந்தவித நலத் திட்டங்களும் செயல்படுத்தப்படவில்லை. அரசு அலுவலர் போராட்டத்தின்போது, இத்துறையைச் சார்ந்த அலுவலர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர். ஆட்குறைப்பு, காலிப் பணியிடம் நிரப்பப்படாத நிலை காரணமாக இத்துறையின் பணிகள் மிகவும் பாதிக்கப்பட்டன. இந்தத் துறை பணியாளர்களின் சிரமங்களைக் குறைக்கக்கூடிய நடவடிக்கைகளின் தொடக்கமாக, கீழ்க்கண்ட நலத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்:

தற்போது தகுதியுள்ள ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் எழுத்தர்களை இளநிலை உதவியாளர்களாகப் பதவி உயர்வு வழங்குவதற்கு 10 சதவீதம் ஒதுக்கீடு உள்ளது. இதை 20 சதவீதமாக உயர்த்துவது குறித்து அரசு பரிசீலிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் பகுதி நேர எழுத்தர்கள், தற்பொழுது பெறும் தொகுப்பூதியத்திற்குப் பதிலாக 1-9-2006-லிருந்து காலமுறை ஊதியத்திற்கு மாற்றப்படுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) முழு நேர ஊராட்சி உதவியாளர்களின் காலமுறை ஊதியம் ரூ.1300–20–1500–25–2000 என்றும், பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களின் காலமுறை ஊதியம் ரூபாய் 625-10-725-20-925 என்றும் மாற்றியமைக்கப்படும். இதன்மூலம் அரசுக்கு ஆண்டொன்றுக்கு கூடுதலாக சுமார் 3 கோடி ரூபாய் செலவாகும். இதனால் 12,618 கிராம ஊராட்சிகளில் உள்ள உதவியாளர்கள்/பகுதி நேர எழுத்தர்கள் பயன்பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அரசு ஊழியர்களுக்கு வழங்குவதுபோல ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கும் சிறப்பு சேம நல நிதி ரூபாய் 5,000/–லிருந்து ரூபாய் 10,000/– ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

துணை வட்டார வளர்ச்சி அலுவலராக பதவி உயர்வு பெற, தற்போதுள்ள விதிமுறைகளைத் தளர்த்தி, விரிவாக்க அலுவலர்கள், ஊராட்சி விரிவாக்க அலுவலர் நிலையில் ஒரு வருடம் பணிபுரிந்தாலே, பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கலாம் என உத்தரவிட அரசு பரிசீலித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

ஊரக வளர்ச்சித் துறையைச் சார்ந்த அலுவலர்கள் 4–5–2000 முதல் 15–5–2000 வரை போராட்டத்தில் ஈடுபட்ட காலம் இதுவரை பணிக்காலமாக வரன்முறை செய்யப்படவில்லை. இந்தப் போராட்டக் காலத்தைப் பணிக் காலமாக வரன்முறை செய்ய அரசு தற்போது முடிவு செய்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து நகராட்சி நிர்வாகம். அதனுடைய அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

நகராட்சி நிர்வாகம். பெருகி வரும் மக்கள் தொகை, பொருளாதார வளர்ச்சி மற்றும் நகராட்சியின் வருமானத்தைக் கருத்திற்கொண்டு, அரசு, திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்தி உள்ளது. நாடாளுமன்ற, சட்டமன்ற இட எல்லைகளைத் திருத்தியமைக்கும் ஆணையம், தற்போதுள்ள நிர்வாக அமைப்புகளின் எல்லைகளை மாற்றி அமைக்க தடை விதித்துள்ளது. ஆகவே, ஆணையத்தின் அனுமதியைப் பெற்று, விரைவில் திருப்பூர் நகராட்சியை மாநகராட்சியாக நிலை உயர்த்துவோம். (மேசையைத் தட்டும் ஒலி)

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் அமைந்துள்ள அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகளைப் பெருமளவில் மேம்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இதன்படி, பகுதி 2 (Part II) திட்டங்களின்கீழ் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள திட்டங்களைப் பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு பெய்த பெருமழையால் நகரங்களில் பாதிப்பிற்குள்ளான சாலைகள் மற்றும் மழைநீர் வடிகால்கள், இம்மழைக்காலம் தொடங்குவதற்கு முன்னர் சீர்செய்யப்படும். இதற்கு அரசு 13 கோடியே 32 இலட்சம் ரூபாயை முழு மானியமாக வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி)



நிதிப் பற்றாக்குறை உள்ள 37 நகராட்சிகளில், நிதியின்மை காரணமாக சரியான பராமரிப்பின்றி இருந்து வரும் குடிநீர்த் திட்டங்கள், 4 கோடி ரூபாய் மானியத்தில் உடனடியாக சீர்செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும், 7 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவில் அனைத்து வசதிகளுடன்கூடிய இறைச்சிக்கூடங்கள் மாநகராட்சி மற்றும் நகராட்சிகள் மூலம் 50 விழுக்காடு அரசு நிதியோடு கட்டப்படும்.

இதுபோலவே, தமிழகத்திலுள்ள 29 மாவட்டத் தலைநகரங்களிலும் பன்னிரண்டு கோடி ரூபாய் செலவில் நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின்மூலம் 50 விழுக்காடு அரசு நிதியுதவியுடன் நவீன எரிவாயு தகன மேடைகள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நிதிப் பற்றாக்குறையால் நிலம் வாங்குவதற்கு இயலாத நிலையில் உள்ள 12 மூன்றாம் நிலை நகராட்சிகள், திடக் கழிவுகளைக் கையாள நிலங்களை வாங்கி, உரக் கிடங்குகளை அமைப்பதற்கு 1 கோடியே 72 இலட்சம் ரூபாய் மானியமாக அரசு வழங்கும்.

வாணியம்பாடி நகராட்சியில் ஜின்னா ரோட்டில் பாலாற்றின் குறுக்கே பாலாற்றைக் கடந்து செல்வதற்கென்று பயன்பட்டு வந்த இரும்புப் பாலம் 1996 ஆம் ஆண்டு ஏற்பட்ட மழை வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டதால், 85 இலட்சம் ரூபாய் மானியத்தில் வாணியம்பாடி நகராட்சிமூலம் புதிதாக ஒரு பாலம் கட்டப்படும்.

இதுவரை அறிவித்த பகுதி 2 (Part II) திட்டங்களைத்தவிர, மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், மாநில அரசு, மைய அரசு மற்றும் அரசு நிறுவனங்கள் அளிக்கும் கடன் மற்றும் மானிய உதவிகளைக்கொண்டும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படவுள்ள சில முக்கிய திட்டங்களைப்பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 2–05

மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பகுதிகளில் தற்போது சுமார் 2,000 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைந்துள்ள சரளைக்கல் சாலைகளையும், மண் சாலைகளையும் இன்னும் 4 ஆண்டுகளில், 200 கோடி ரூபாய் செலவில் குறுகிய சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாகவும், பெரிய சாலைகள் தார்ச் சாலைகளாகவும் மாற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தின் அனைத்து நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை விரிவுபடுத்துவோம் என்று திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் அளித்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றும்வண்ணம் முதற்கட்டமாக, தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் நிறைவேற்றப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருச்சிராப்பள்ளி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், கரூர் மற்றும் காஞ்சிபுரம் நகரங்களிலும் நடைபெற்றுவரும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் துரிதப்படுத்தப்பட்டு, இந்த ஆண்டே இத்திட்டங்கள் யாவும் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

எஞ்சியுள்ள 23 மாவட்டத் தலைநகரங்களில் வேலூர், கடலூர், நாமக்கல், உதகமண்டலம், ஈரோடு, கோயம்புத்தூர், சேலம், புதுக்கோட்டை, விருதுநகர், இராமநாதபுரம், தூத்துக்குடி, திண்டுக்கல், சிவகங்கை, திருவாரூர், திருவண்ணாமலை, விழுப்புரம், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 18 மாவட்ட தலைநகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டங்கள் 801 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர், பெரம்பலூர், நாகப்பட்டினம், தேனி மற்றும் நாகர்கோவில் ஆகிய 5 மாவட்ட தலைநகரங்களுக்கு பாதாள சாக்கடைத் திட்டங்கள் அமைக்க ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு வரும் நிதியாண்டில் செயலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திருவொற்றியூர் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் 28 கோடியே 55 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

அடுத்து, மேட்டூர் நகராட்சி. மேட்டூர் நகராட்சிக்கு பாதாள சாக்கடை திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கு நிதியாதாரங்கள் இறுதி செய்யப்பட்டு, இந்த நிதியாண்டே செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள தக்க நடவடிக்கை எடுக்கப்படும். மீதமுள்ள நகரங்களிலும், புறநகர்ப் பகுதிகளிலும் பாதாள சாக்கடை திட்டங்கள் படிப்படியாக வரும் ஆண்டுகளில் நிறைவேற்ற ஏதுவாக ஆய்வுப் பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படும்.



நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் அனைத்துக் கட்டடங்களும், அதாவது, அலுவலகம், பேருந்து நிலையங்கள், பொதுக் கழிப்பிடங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், பூங்காக்கள், வணிக வளாகங்கள் போன்ற கட்டடங்களை உடல் ஊனமுற்றோரும் பயன்படுத்த ஏதுவாக தக்க மாற்றங்கள் இந்தாண்டிலேயே செய்து முடிக்கப்படும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் தெரு நாய் தொல்லைகளைக் கட்டுப்படுத்தவும், ரேபிஸ் என்ற கொடிய நோயிலிருந்து பொதுமக்களைக் காப்பாற்றவும், இந்திய விலங்குகள் பாதுகாப்பு வாரியத்துடன் (Animal Welfare Board of India) இணைந்து ஒரு முன்னோடித் திட்டம் 50 நகராட்சி மற்றும் மாநகராட்சிகளில் இந்த ஆண்டில் செயல்படுத்தப்படும்.

நெல்லிக்குப்பம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளிலும் மற்றும் கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் நவீன வசதிகளுடன்கூடிய புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்படும்.

திருவண்ணாமலை, மணலி, அனகாபுத்தூர், புழுதிவாக்கம், பொள்ளாச்சி மற்றும் பூவிருந்தவல்லி ஆகிய 6 நகராட்சிகளில் தற்போதுள்ள பேருந்து நிலையங்கள் நவீன வசதிகளோடு மேம்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மத்திய அரசால் கடந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வரும் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மதுரை மாநகராட்சிக்கு 1,477 கோடியே 40 இலட்சம் ரூபாயிலும், கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு 1,311 கோடியே 81 இலட்சம் ரூபாயிலும், தொலைநோக்குத் திட்டங்கள் தீட்டப்பட்டு மத்திய அரசால் ஏற்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், மதுரை மாநகராட்சிக்குக் கூடுதலாக குடிநீர் வழங்க இரண்டாம் வைகை குடிநீர்த் திட்டம் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த ஆண்டே செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வராத ஏனைய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் மத்திய அரசின் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர்ப்புற உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் முதற்கட்டமாக நடப்பு நிதியாண்டில் 10 நகரங்களில் 82 கோடி ரூபாய்

மதிப்பீட்டில் குடிநீர் அபிவிருத்தித் திட்டப் பணிகளும் 13 நகரங்களில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாலைப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

அடுத்து, பேரூராட்சிகளுக்கான அறிவிப்புகள். பேரூராட்சிப் பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த எந்த ஆண்டும் இல்லாதவண்ணம் இந்த ஆண்டு 17 கோடியே 20 இலட்சம் ரூபாயை பேரூராட்சிகளுக்கு முழு மானியமாக வழங்கும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நிதி உதவியைக் கொண்டு 100 பேரூராட்சிப் பகுதிகளில், சாலை, குடிநீர் வசதி, தெரு விளக்குகள், மழைநீர் வடிகால் போன்ற உள்கட்டமைப்பு வசதிகள் 10 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்படும்.

புகழ்பெற்ற திருக்கோயில்கள் மற்றும் சுற்றுலாத்தலங்கள் அமைந்துள்ள 40 பேரூராட்சிகளில் 6 கோடி ரூபாய் செலவில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்படும். 20 பேரூராட்சிகளில் 1 கோடி ரூபாய் செலவில் சிறிய மற்றும் மிகச் சிறிய பாலங்கள் அமைக்கப்படும்.

மாமல்லபுரம், திருச்செந்தூர், போரூர் ஆகிய பேரூராட்சிகளில் பாதாள சாக்கடை திட்டம் இந்த ஆண்டு 29 கோடியே 50 இலட்சம் ரூபாய் செலவில் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்படும்.

*பிற்பகல் 2-10*

பேரூராட்சிகளில் உள்ள சுமார் 663 கிலோ மீட்டர் நீளமுள்ள இணைப்புச் சாலைகளைப் பேருந்து செல்லும் சாலையின் தரத்திற்கு உயர்த்த 51 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் 393 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்படும். மேற்படி திட்டங்களைத் தவிர, பேரூராட்சிகள் தங்களுடைய நிதியாதாரங்களைக் கொண்டு செயல்படுத்தவுள்ள சில சிறப்புத் திட்டங்களையும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

நடப்பு ஆண்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் அனைத்து பேரூராட்சிகளிலும் மொத்தம் 500 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படும்.

சிறுவர், சிறுமிகள் நலம் பேணிட 100 பேரூராட்சிகளில் சிறுவர் பூங்கா, சிறுவர் விளையாட்டு மைதானங்கள், சிறுவர் கிரிக்கெட் தளம் மற்றும் சிறுவர் படிப்பகங்கள் இந்த ஆண்டு அமைக்கப்படும்.



இதுவரையில் அலுவலகக் கட்டடம் இல்லாத 4 பேரூராட்சிகளுக்கும், சொந்தக் கட்டடங்கள் இருந்தும், மிக மோசமான நிலையில் பழுதடைந்து, வேறு கட்டடங்களில் இயங்கி வரும் 25 பேரூராட்சிகளுக்கும் இந்த ஆண்டு 3 கோடியே 75 இலட்சம ரூபாய் செலவில் புதிய அலுவலகக் கட்டடங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகராட்சி பற்றிய அறிவிப்புகள். குறைந்த வருமானம் உள்ள மக்கள் அதிகமாக வாழும் வடசென்னைப் பகுதியில் போக்குவரத்து, சாலை, சுகாதாரம், கல்வி மற்றும் பொழுதுபோக்கு போன்ற கட்டமைப்பு வசதிகள் தேவையான அளவிற்கு இல்லையென்று நீண்டகாலமாகவே இருந்து வரும் குறையைப் போக்கும் வகையில் வடசென்னைப் பகுதி மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து கொடுக்க 217 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

வில்லிவாக்கம் மற்றும் மணியக்காரச் சத்திரச் சாலை ஆகிய இரயில்வே சந்திப்புகளில் வாகனச் சுரங்கப் பாதைகள் அமைக்கப்படும். கத்திவாக்கம் – காக்ரேன் பேசின் சாலை சந்திப்பில் மேம்பாலம், கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திப்பில் சுரங்கப்பாதை, ரங்கராஜபுரம் சந்திப்பில் மேம்பாலம் ஆகிய ஐந்து பணிகள் நடப்பாண்டில் 40 கோடியே 6 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

டர்ன்புல்ஸ் சாலை – பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சாலை சந்திப்பு, வடக்கு உஸ்மான் சாலை – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு, உஸ்மான் சாலை – துரைசாமி சாலை சந்திப்பு, ஜி.என். சாலை – திருமலை சாலை சந்திப்பு ஆகிய நான்கு இடங்களில் 40 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மேம்பாலங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடையாறு ஆற்றின் குறுக்கே சைதாப்பேட்டை – ஆலந்தூர் சாலையில் அமைந்துள்ள தரைமட்டப் பாலத்திற்கு மாற்றாக 5 கோடியே 41 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும்.

பெரம்பூர் மேம்பாலப் பணி மீண்டும் தொடங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) வடசென்னை மக்களை தென்சென்னையுடன் இணைத்திட முக்கியமான இணைப்பான, பெரம்பூர் மேம்பாலப்

பணிகள், தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 1998 ஆம் ஆண்டு 21 கோடி ரூபாய செலவில் தொடங்கப்பட்டது. 2001 ஆகஸ்ட் மாதம் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக முந்தைய அரசு விசாரணைக் கமிஷன் நியமித்து, நடைபெற்று வந்த பணிகள் முழுவதையும் முடக்கியது. ஆண்டுகள் எந்தவிதமான பணியும் நடைபெறாமல், மேம்பால வசதி இல்லாமல் பொதுமக்கள் மிகவும் அவதியுற்றனர். தி.மு.க. அரசு மீண்டும் பொறுப்பேற்றவுடன் இப்பணியை ஆய்வு செய்து மீண்டும் துவக்கி, ஒரு வருடத்திற்குள் பாலத்தை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆட்சியில் ஏற்பட்ட 5 ஆண்டு கால தாமதத்தால் இப்பொழுது கூடுதல் செலவு 5 முதல் 6 கோடி ரூபாய் வரை ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பணி 15 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்படும்.

அடையாறு பகுதியில் அடையாறு கிரீக் எனும் சிற்றோடையில் 58 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு பூங்கா அமைப்பது குறித்து 1997 ஆம் ஆண்டிலிருந்து தி.மு.க. அரசு பரிசீலித்து வந்தது. முந்தைய அரசு இப்பகுதியை 50 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்த 2005 நவம்பர் மாதம் ஆணையிட்டது. இதற்கு ஒரு அறக்கட்டளை நிறுவவும் ஆணையிடப்பட்டது. ஆனால், மேற்கொண்டு முன்னேற்றம் இல்லாமல் இருந்து வந்த நிலையில் இத்திட்டத்தை பரிசீலனை செய்த இவ்வரசு அடையாறு கிரீக் பகுதியை மட்டும் மேம்படுத்துவதற்குப் பதிலாக திரு.வி.க. பாலத்திற்கும், கிழக்கே அமைந்துள்ள அடையாறு கடல் முகம் அதில் அமைந்துள்ள தீவுகள் மற்றும் அடையாறு சிற்றோடைப் பகுதி உள்ளிட்ட ஒட்டுமொத்தமான பகுதியையும் சுமார் 100 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தி (மேசையைத் தட்டும் ஒலி) "அடையாறு பூங்கா" என்ற பெயரில் உலகத்தரம் வாய்ந்த ஒரு இயற்கை வளம்மிக்க பகுதியாகவும், சுற்றுலா மையமாகவும், இயற்கைச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் மையமாகவும் பெரிய அளவில் மாற்றி அமைக்க திட்டமிட்டுள்ளது. இதற்கான பணிகள் விரைவில் தொடங்கும்.

அடுத்து, சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில் அறிவிப்புகள். சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தால் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தைச் செயல்படுத்த கடந்த ஆட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒப்பந்ததாரரிடம் பேச்சு வார்த்தை நடத்தி, வாரியத்திற்கும், ஒப்பந்ததாரருக்குமிடையே போடப்பட்டுள்ள நிபந்தனைகளில்



அரசுக்கும், வாரியத்திற்கும் சாதகமான திருத்தங்களைச் செய்து, இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அதேபோல் மத்திய அரசு, ஏற்கெனவே அறிவித்த நிதியுதவியைப் பெற்று கடல் நீரைக் குடிநீராக்கும் மற்றொரு பெரிய திட்டமும் செயல்படுத்தப்படும்.

பிற்பகல் 2–15

தெலுங்கு கங்கைத் திட்ட ஒப்பந்தத்தின்படி அளிக்கப்பட வேண்டிய 12 டி.எம்.சி. தண்ணீரை ஒவ்வோர் ஆண்டும் தடையின்றிப் பெற இந்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி, 5–8–2006 அன்று நானும், மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களும் ஐதராபாத் சென்று ஆந்திர முதலமைச்சர் அவர்களைச் சந்தித்ததன் பலனாக, வருகிற 20 ஆம் தேதி அளவில் கண்டலேறு அணையில் இருந்து வரும் தண்ணீர் தமிழக எல்லையை அடையும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்னை மாநகரில் குடிநீர் விநியோகக் குழாய்கள் மற்றும் கழிவுநீர்க் குழாய்கள் இல்லாத அனைத்துத் தெருக்களுக்கும் குழாய்கள் பதிக்கும் பணி நடப்பாண்டில் முடிக்கப்படும். இப்பணிகள் அனைத்தும் முடிவடையும்போது, சென்னை மாநகரப் பகுதி முழுவதும் குடிநீர் மற்றும் கழிவு நீரமைப்புகள் முழுமை பெற்றதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுமக்கள் தங்கள் வசதிக்கேற்ப எந்த மையத்தில் வேண்டுமானாலும் குடிநீர்க் கட்டணத்தைச் செலுத்தவும், புகார்களைப் பதிவு செய்யவும் 9 கோடி ரூபாய் செலவில் வழிவகை செய்யப்படும்.

சென்னை நகரின் அனைத்துக் குடியிருப்புகளுக்கும் போதுமான அழுத்தத்தில் சமமான அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்ய ஜவஹர்லால் நேரு தேசிய நகர மறுபுனரமைப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் நிதி உதவியோடு 246 கோடியே 22 இலட்சம் ரூபாய் செலவில் குடிநீர்ப் பகிர்மான அமைப்புகள் மேம்படுத்தப்படும். முதற்கட்டமாக, கீழ்ப்பாக்கம் மற்றும் கலைஞர் கருணாநிதி நகர் மண்டலங்களில் இப்பணிகள் 131 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் நடப்பு ஆண்டிலேயே மேற்கொள்ளப்படும்.

பழைய மாமல்லபுரம் சாலையில் மென்பொருள் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் அதைச் சார்ந்த குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்கள் போன்றவற்றின் வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டு வருவதைக் கருதி, இப்பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் 72 கோடி ரூபாய் செலவில் சென்னைக் குடிநீர் வாரியம் மூலமாக செயல்படுத்தப்படும்.

சென்னை நகரைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளில் கழிவுநீரகற்று வசதி செய்து கொடுப்பதற்காக ஒரு ஒருங்கிணைந்த விரிவான திட்டத்தினைச் சென்னைக் குடிநீர் வாரியம் தயாரித்து வருகிறது. மணலி, அனகாபுத்தூர், பம்மல், திருவேற்காடு, பூந்தமல்லி ஆகிய ஐந்து நகராட்சிகளும், சின்னசேக்காடு, புழல், நரவாரிக்குப்பம், மீஞ்சூர், நந்தம்பாக்கம், மாங்காடு, குன்றத்தூர், பெருங்குடி, பள்ளிக்கரணை, சோழிங்கநல்லூர், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பீர்க்கங்கரணை, பெருங்களத்தூர், திருநீர்மலை, மீனம்பாக்கம், திருநின்றவூர், திருமழிசை ஆகிய 19 பேரூராட்சிகளும், கொட்டிவாக்கம், நெற்குன்றம், முகலிவாக்கம், கீழ்க்கட்டளை, மடிப்பாக்கம், பொழிச்சலூர், கௌல்பஜார், அயனம்பாக்கம் ஆகிய 8 கிராமப் பஞ்சாயத்துகளும், புனித தோமையார் மலை என்ற ஒரு கன்டோன்மென்ட் பகுதியும் இத்திட்டத்தின்மூலம் பயனடையும். ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டு அடுத்த ஆண்டில் திட்டம் செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம். இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற பகுதிகளில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவி வரும் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண, காவிரி நீரை ஆதாரமாகக் கொண்ட 671 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான திட்டம் இந்த ஆண்டே செயல்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் இராமநாதபுரம், பரமக்குடி, இராமேஸ்வரம், கீழக்கரை மற்றும் சிவகங்கை ஆகிய 5 நகராட்சிகள், முதுகுளத்தூர், மண்டபம், சாயல்குடி, கமுதி, தொண்டி, ஆர்.எஸ்.மங்கலம், திருப்பத்தூர், அபிராமம், இளையான்குடி, நெற்குப்பை, பொன்னமராவதி ஆகிய 11 பேரூராட்சிகள் மற்றும் சிவகங்கை புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வழியோர குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 3,163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும். இதன்மூலம் சுமார் 16 இலட்சம் மக்கள் நிரந்தரமாகக் குடிநீர் வசதிகளைப் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோன்று, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் புளோரைடால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில் 1,005 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை விரைவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின் தேவைபற்றி மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். இதை அடுத்து, ஜப்பானிலிருந்து குழு ஒன்று சென்னைக்கு வந்து திட்டத்தினை ஆய்வு செய்து ஜப்பானிய அரசிற்கு அறிக்கை அளித்துள்ளது. இதன் தொடர்ச்சியாக, ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு வங்கியின் முதுநிலை செயல் இயக்குநரும், குழும உறுப்பினரும் மற்றும் புதுடெல்லியில் உள்ள இந்த நிறுவனத்தின் தலைமைப் பிரதிநிதியும் 17-07-2006 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் என்னையும் சந்தித்தபோதும் இத்திட்டத்தின் தேவை குறித்து அவர்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இத்திட்டத்தை ஜப்பான் நாட்டின் அரசிற்குப் பரிந்துரை செய்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் செயலுக்கு வரும்போது தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர் ஆகிய 3 நகராட்சிகள், காரிமங்கலம், அரூர், கடத்தூர், பாப்பிரெட்டிபட்டி, பாலக்கோடு, பர்கூர், ஊத்தங்கரை, தேன்கனிக்கோட்டை உள்ளிட்ட 17 பேரூராட்சிகள் மற்றும் 6,755 குடியிருப்புகள் பயன்பெறும். இத்திட்டத்தின்மூலம் சுமார் 30 இலட்சம் மக்கள் பயன்பெறுவார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தற்போது நடப்பாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களை மாவட்ட வாரியாக தெரிவிக்க விரும்புகிறேன்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு சுமார் 10 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்லடம் நகராட்சி, 29 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்புகளுக்கு சுமார் 9 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

பிற்பகல் 2-20

49 கோடியே 93 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

30 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு சுமார் ஒரு இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

பெரம்பலூர் மாவட்டத்தில் 44 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரியலூர், செந்துறை, வேப்பூர், திருமானூர், ஆலத்தூர் ஒன்றியங்களைச் சார்ந்த 636 குடியிருப்புகளுக்கு சுமார் 4 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 43 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய பேரூராட்சிகள், வாசுதேவநல்லூர், பாப்பாகுடி ஒன்றியங்களைச் சேர்ந்த 78 குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் திருவில்லிபுத்தூர் நகராட்சிக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையிலே கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 42 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகள், அறந்தாங்கி நகராட்சி மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 120 குடியிருப்புகளுக்கு சுமார் 3 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 28 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 79 கடலோர குடியிருப்புகள் மற்றும் 17 பேரூராட்சிகள், 19 வழியோரக் குடியிருப்புகளுக்கான சுமார் 2 இலட்சம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

14 கோடி ரூபாய் மதிப்பீட்டில் குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதுக்கடை கூடடுக் குடிநீர்த் திட்டம் மற்றும் முஞ்சிறை குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நீர் சுத்திகரிக்கும் நிலையம் அமைக்கப்படும்.



நீலகிரி மாவட்டத்தில் 6 கோடியே 56 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சேரன்கோடு ஊராட்சிக்கு 38 ஆயிரம் மக்கள் பயன்பெறக்கூடிய வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருவள்ளூர் மற்றும் வேலூர் மாவட்டங்களில் 13 கோடியே 57 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருத்தணி மற்றும் அரக்கோணம் நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 9 கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேடசந்தூர் கூட்டுக் குடிநீர் விரிவாக்கத் திட்டம்.

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் சில முக்கிய குடிநீர்த் திட்டங்களைப் பற்றி தற்போது குறிப்பிட விரும்புகிறேன்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தாம்பரம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

திருவள்ளூர் மாவட்டத்தில் 4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நெற்குன்றம் மற்றும் 48 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

வேலூர் மாவட்டத்தில் 900 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நகர்ப்புற மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 4 கோடியே 64 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கீழ்பெண்ணாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விழுப்புரம் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தஞ்சாவூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், 70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் விரிவாக்கப் பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

4 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கரூர் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெரம்பலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

ஈரோடு மாவட்டத்தில் 8 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் விடுபட்ட பகுதிகளுக்கு முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர்த் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

சேலம் மாவட்டத்தில் 178 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேலம் மாநகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நரசிங்கபுரம் நகராட்சி, 12 பேரூராட்சிகள் மற்றும் ஏழு ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

நாமக்கல் மாவட்டத்தில் 3 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பள்ளிப்பாளையம் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

மதுரை மாவட்டத்தில் 148 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேலூர் நகராட்சி, எ. வெள்ளாளப்பட்டி பேரூராட்சி மற்றும் ஏழு ஒன்றியங்களைச் சார்ந்த 1,332 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

மேலும், 10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பரங்குன்றம் நகராட்சி மற்றும் ஆர்.வி.பட்டி பேரூராட்சிக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.

விருதுநகர் மாவட்டத்தில் 19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாத்தூர், விருதுநகர், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

தூத்துக்குடி மாவட்டத்தில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சாயர்புரம் மற்றும் பெருங்குளம் பேரூராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

திருநெல்வேலி மாவட்டத்தில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் தச்சநல்லூர் மற்றும் திருநெல்வேலி பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாநகராட்சியில் பாளையங்கோட்டை மற்றும் மேலப்பாளையம் பகுதிகளுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.



கன்னியாகுமரி மாவட்டத்தில் 3 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நாகர்கோவில் நகராட்சி குடிநீர் அபிவிருத்தித் திட்டம்.

இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் சரியானபடி பராமரிக்கப்பட்டால்தான் முழுப் பயனும் மக்களைச் சென்றடையும். நான் பல்வேறு மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்ய சென்ற போது கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் பராமரிப்பு பற்றிய பல்வேறு கருத்துகளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளெல்லாம் என்னிடம் தெரிவித்தார்கள்.

அந்த அடிப்படையிலே பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் இயங்குவதற்குத் தடையில்லாத மின்சாரம் பெறுவது அவசியமாகும். தற்போது இதுபோன்ற பல பெரிய திட்டங்களில் தனி மின் பாதை இல்லாததும், இதனால் குடிநீர் வழங்கலில் அடிக்கடி தடை ஏற்படுகிறது என்பதும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. அந்தக் கருத்தின் அடிப்படையிலே, கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 12 மணி நேரத்திற்கும் அதிகமாக இயங்க வேண்டிய திட்டங்களுக்கும், அதுபோல் ஒன்றுக்கு மேற்பட்ட துணை மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறும் திட்டங்களுக்கும், தங்கு தடையின்றி மின்சாரம் பெற ஏதுவாக தனி மின் பாதை புதிதாக அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2–25

மேலும், மாவட்டங்களில் உள்ள குடிநீர் வடிகால் வாரிய பராமரிப்புக் கோட்டங்கள் மற்றும் உப கோட்டங்களை மாவட்ட ஆட்சியரின் நேரடி நிர்வாகக் கண்காணிப்பின்கீழ் கொண்டு வரவும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அரசின் திட்டங்களை மக்களுக்குக் கொண்டு சேர்ப்பதிலே அரசுப் பணியாளர்கள் பெரும் பங்காற்றி வருவது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். முந்தைய அரசு, அரசுப் பணியாளர்களைக் கடுமையாக நடத்தி, அவர்களது உரிமைகளையும், சலுகைகளையும் பறித்ததை நாம் அறிவோம். மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் அரசு பொறுப்பேற்றவுடன் அரசுப் பணியாளர்களிடமிருந்து பறிக்கப்பட்ட உரிமைகளும், சலுகைகளும் மீண்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டு

இருக்கிறது. இதன் தொடர்ச்சியாக, இத்துறை சார்ந்த அரசுப் பணியாளர்கள் நலன் குறித்த சில அறிவிப்புக்களை வெளியிட விரும்புகிறேன்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுப் பணியாளர்களுக்கு 1 கோடி ரூபாய் செலவில் பாதுகாப்புக் கையுறைகள், காலணிகள் மற்றும் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படும்.

சென்னை மாநகராட்சியில் மலேரியா துறையில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்து வரும் 60 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் தொகுப்பூதியத்தில் ஒப்பந்த அடிப்படையிலே தற்போது பணிபுரிந்து வரும் 170 சமுதாய அமைப்பாளர்களின் பணியை, வரன்முறைப்படுத்தி அவர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

சென்னை மாநகரில் கழிவுநீர் அமைப்பைப் பராமரிக்கும் பணியாளர்களின் பாதுகாப்புக்காக 3 கோடி ரூபாய் செலவில் பாதுகாக்கும் பெல்ட், தலைக் கவசம், துர்நாற்றக் காற்று உட்புகாமல் தடுக்கும் கவசம், துர்நாற்றக் காற்றை கண்டறியும் உபகரணம், கையுறைகள், காலணிகள் வழங்கப்படும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் C & D பிரிவு பணியாளர்களுக்குக் கடந்த ஆட்சியால் வழங்கப்படாத 2004-2005-க்கான போனஸ் மற்றும் அன்பளிப்புத் தொகை உடனடியாக அவர்களுக்கு வழங்கப்படும். இதனால், சுமார் 8,000 பணியாளர்கள் பயன் அடைவார்கள். அரசுக்குக் கூடுதலாக 2 கோடி ரூபாய் செலவாகும்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் தற்போது தொகுப்பூதியப் பணியாளர்களாகப் பணிபுரிந்து வரும் 881 பணியாளர்கள் காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.

சென்னை மாநகராட்சியில் மழலையர் பள்ளிகளில் தொகுப்பூதியத்தில் பணிபுரியும் 102 ஆசிரியர்கள், 102 குழந்தை பராமரிப்பு அலுவலர்கள், 30 அலுவலக உதவியாளர்கள் ஆகிய 234 பணியாளர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டு, காலமுறை ஊதியத்திற்குக் கொண்டு வரப்படுவார்கள்.



முந்தைய அரசால் அறிவிப்பு செய்தபடி பேரூராட்சிகளில் ஊதிய ஏற்ற முறைக்குக் கொண்டு வரப்படாத 2,923 தொகுப்பூதிய பணியாளர்கள், ஊதிய ஏற்ற முறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள். இந்த ஊதிய ஏற்ற முறையால் ஆண்டுக்கு 13 கோடியே 26 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவினம் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதற்குமேல் அறிவிப்புகள் தேவையில்லை என்று நான் கருதுகிறேன். எனவே, இங்கே பல கருத்துகள், பல அறிவுரைகள் பல ஆலோசனைகள் எல்லாம், இந்தத் துறைக்காக உங்கள் மூலமாக வழங்கப்பட்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர்கள் மொத்தம் 568 வெட்டுத் தீர்மானங்களை இந்த இரண்டு மானியக் கோரிக்கைகளின்மீதும் கொடுத்து இருக்கிறீர்கள். அந்த வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தையும் நான் படித்துப் பார்த்து இருக்கிறேன். அதுசம்பந்தமாக அதற்குரிய அரசு அதிகாரிகளோடு அதுபற்றி விவாதித்து இருக்கிறேன். கலந்து பேசிக்கொண்டு இருக்கிறேன். அவையெல்லாம் முறையாக உரிய நேரத்தில், உரிய வகையிலே பரிசீலிக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இம்மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறை மானியத்தின்மீது பல்வேறு சிறப்பான அறிவிப்புகளை இங்கே வெளியிட்டிருக்கின்றீர்கள். என்னுடைய தொகுதி, பூவிருந்தவல்லிக்குப் பேருந்து நிலையம் அமைத்துத் தரப்படும் என்ற உறுதிமொழியையும் இங்கு அளித்திருக்கின்றீர்கள். அதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கின்ற இந்த நேரத்தில், தாங்கள் சென்னை மாநகரத்தினுடைய மேயராக இருந்து, உங்கள் பதவியைப் பறித்தவர்கள், பறிக்கச் சட்டம் கொண்டு வந்து, நீதிமன்றத்திலே அந்தச் சட்டம் செல்லாது என்று அறிவிக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே நீங்கள் மேயர் பதவியிலே இருப்பதைப் பார்க்க முடியாதவர்கள், உங்களுடைய பணியை அவர்களாலே ஜீரணிக்க முடியாதவர்கள், இங்கே நீங்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்து, சிறப்பாக அறிவிப்புகளை அறிவித்ததை, கேட்க பொறுக்க முடியாதவர்கள் வெளியேறிவிட்டார்கள்.

பிற்பகல் 2-30

இருந்தாலும் இவ்வளவு சிறப்பான அறிவிப்புகளை வெளியிட்டதற்கு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா, நன்றி சொல்லி, வாழ்த்து சொல்லி, உட்காருங்கள்.

**திருமதி டி. யசோதா:** அவ்வளவுதான். அவ்வளவுதான். நான் ஒன்றும் சொல்லவில்லை. என்ன சொல்ல வேண்டுமென்று நீங்களே சொல்லிவிட்டால் அப்புறம் நான் எதற்கு? பேரவைத் தலைவர் அவர்களே,

*"மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்"*

என்ற குறளுக்கு ஏற்ப முதன்முதலாக அமைச்சராகப் பொறுப்பேற்று, உள்ளாட்சித் துறையினுடைய அறிவிப்புகளை இன்றைக்கு மிகச் சிறப்பான முறையிலே அறிவித்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு எனது சிறிய கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாழ்த்து சொல்லிவிட்டு உட்காருங்கள் அம்மா.

**திருமதி டி. யசோதா:** பாதாள சாக்கடை திட்டம் எல்லா இடத்திற்கும் வந்திருக்கிறது. என் தொகுதியிலே உள்ள ஸ்ரீபெரும்புதூர், படப்பை ஆகிய இடங்களுக்கு வரவில்லை, சுற்றியிருக்கிற பகுதிகளுக்கு எல்லாம் வந்திருக்கிறது. என் தொகுதிக்கு வரவில்லை. அதையும் கொஞ்சம் பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியாளர்களாலே கொண்டு வரப்பட்ட கறுப்புச் சட்டத்தின் அடிப்படையில் ஜனநாயக உரிமை பறிக்கப்பட்ட நேரத்தில் நாங்கள் எல்லாம் குரல் கொடுத்து, அதையும் மீறி அந்தப் பதவியைத் தூக்கி எறிந்த நம்முடைய மாண்புமிகு தளபதி அவர்கள் இப்பொழுது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மானியக் கோரிக்கையில் பல்வேறு அறிவிப்புகளை நாடு போற்றக் கூடிய வகையில், இன்று நயவஞ்சகர்கள்



எல்லாம் அதைப் பார்க்க மனம் இல்லாதவர்கள், பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள் வெளியே சென்றாலும்கூட இன்று நாட்டு மக்கள் வரவேற்கக்கூடிய வகையில் நல்ல அறிவிப்புகளைச் செய்ததற்கு பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே வரவேற்று பாராட்டி அமர்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேநேரத்தில் என்னுடைய மேட்டூர் தொகுதிக்கு பாதாள சாக்கடை திட்டத்தை அறிவித்த அமைச்சர் அவர்களுக்கு தொகுதி மக்களின் சார்பிலே நன்றியைத் தெரிவித்து,

*"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்"*

என்ற குறளுக்கு ஏற்ப தாயுள்ளத்தோடு நம்முடைய கலைஞர் அவர்கள் இந்த நலத் திட்டத்தை வழங்கியிருக்கிறார்கள் என்பதை நன்றியுடன் சொல்லி அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50,000 கோடிகளுக்குமேல் நிதிநிலை பற்றாக்குறையோடு பொறுப்பேற்ற இந்த அரசு கிராம ஊராட்சி உதவியாளர்கள், பகுதிநேர எழுத்தாளர்களுக்கு 12,618 பேர்களுக்கு காலமுறை தொகுப்பூதியம் வழங்கப்படும் என்கிற முத்தான ஒரு அறிவிப்பை அறிவித்து 12,618 குடும்பங்களின் வாழ்வில் ஒளி விளக்கை ஏற்றி வைத்த முத்தமிழ் அறிஞர் முதல்வர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் ஒரே ஒரு கோரிக்கை – கிராமப் புறங்களிலே ரேடியோ, தொலைக்காட்சிப் பெட்டிகளை பழுது நீக்குகின்றவர்கள் 102 பேர்கள்தான் இருக்கின்றார்கள். கடந்தகால ஆட்சியில் பணிக்கு உத்தரவு போட்டு அவர்கள் வரன்முறைக்கு கொண்டுவரப்படாமல் இருக்கிறார்கள். அதையும் இந்த அரசு செய்வதற்கு, வருங்காலங்களில் ஆவன செய்வதற்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறப்பானதொரு பதிலுரையை, பல்வேறு தரப்பு மக்களுக்கும் பயன்தரத்தக்க பல அறிவிப்புகளை செய்து அதை, சிறப்பாக இங்கே அறிவித்திருக்கிற உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி

தெரிவிப்பதோடு, ஊரக வளர்ச்சித் துறையில் பணியாற்றக்கூடிய பலதரப்பட்ட ஊழியர்களுக்கு பணி உத்தரவாதம் வழங்கப்பட்டு இருப்பதும் பாராட்டுக்குரிய ஒரு நிகழ்வு என்பதையும் தெரிவித்து, நீண்டகாலமாக நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் துப்புரவுப் பணியாளர்கள் இன்னும் தொகுப்பூதியத்திலே தொடர்ந்திருக்கிறார்கள். ஆகவே, அதற்கும் ஒரு நல்ல தீர்வு ஏற்படுமானால் உண்மையிலேயே பாராட்டுக்குரிய அம்சமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரை அளிப்பார் என்று எதிர்பார்த்தோம். ஆனால், ஒரு மணி நேரத்திற்குமேலாக பெரும் சலுகை மழையாகவே இங்கே வழங்கியிருக்கிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என்னுடைய பாராட்டுகள். தாய் 8 அடி பாய்ந்தால், குட்டி 16 அடி பாயும் என்று சொல்லுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தந்தைக்குப் பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய பணி சிறப்பாகத் தொடர வேண்டும். மேலும், பல்வேறு சாதனைகளைப் படைக்க வேண்டுமென்று வாழ்த்துகிறேன். வணக்கம். என்னுடைய கோரிக்கை பின்னர் சொல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம்.

***திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் இந்த நிதிநிலை அறிக்கையிலே ஒரு நல்ல அறிவிப்பை அறிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம், மேம்பாட்டு நிதி 2 கோடி அறிவிப்பார் என்று ஆவலோடு எதிர்பார்த்தோம். இருந்தாலும் ரூ.1 கோடியே 20 லட்சம் அறிவித்திருக்கிறார். இருந்தபோதிலும் இதை அவர் அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும், அதைப்பற்றி அறிவிக்க வேண்டும். இந்த அறிவிப்பிற்கு விடுதலைச் சிறுத்தைகள் சார்பாக வாழ்த்துகிறோம். நன்றி.

*பிற்பகல் 2–35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவையின் சார்பாகவும், அத்தனை உறுப்பினர்களின் சார்பாகவும், என் சார்பாகவும் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.



## கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ். இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல்முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.

திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்னன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ரா. வரதராஜன்.

**திரு. ரா. வரதராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. வரதராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.கே. சேகர்பாபு, இருக்கையில் இல்லை.

திரு. பி.கே. சேகர்பாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.



திரு. எல். ரவிச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஜி. லதா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கு. செல்வம்.

**திரு. கு. செல்வம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. செல்வம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என்.ஆர். ரங்கராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. சேகர், இருக்கையில் இல்லை.

திரு. எஸ்.வி. சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. சந்திரகாசி, இருக்கையில் இல்லை.

திரு. மா. சந்திரகாசி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சின்னசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி இளமதி சுப்ரமணியன், இருக்கையில் இல்லை.

திருமதி இளமதி சுப்ரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி.வி. சண்முகம், இருக்கையில் இல்லை.

திரு. சி.வி. சண்முகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதி மோகன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.கே. பாரதி மோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீர. இளவரசன்.



**திரு. வீர. இளவரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீர. இளவரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். ஜெயபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. து. ரவிக்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.

திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,588,60,34,000/–, மூலதனக் கணக்கில் ரூ.705,47,09,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.87,01,69,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**கோரிக்கை எண் 42 - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

திரு. து. செல்வராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வீ. ராமநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.எல். இளவழகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி.க. ராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வீ.ஏ.டி. கலியவரதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. எதிரொலி மணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. உலகநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. கோவிந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. பொன்னுதுரை, இருக்கையில் இல்லை.

திரு. செ. பொன்னுதுரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. தமிழரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் க. நெடுஞ்செழியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், இருக்கையில் இல்லை.

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. பலராமன், இருக்கையில் இல்லை.



திரு. பி. பலராமன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள் அன்பரசு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. டி. இராமச்சந்திரன்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. இராமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. செ. தாமோதரன், இருக்கையில் இல்லை.

திரு. செ. தாமோதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ.ம. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. சண்முகவேலு, இருக்கையில் இல்லை.

திரு. சி. சண்முகவேலு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆ. அருண்மொழிதேவன், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. அருண்மொழிதேவன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பெ. கமலாம்பாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.டி. கணேசன், இருக்கையில் இல்லை

திரு. ஆர்.டி. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி பி. பத்மாவதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு.ப. வேலுமணி, இருக்கையில் இல்லை.

திரு. சு.ப. வேலுமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

திரு. இ. மகேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ரா. லீமா றோஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இல. வேலுசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். சாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஆர். சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. மாரிமுத்து அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். இராசசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

திரு. வே. செந்தில் பாலாஜி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஞா. செந்தமிழன், இருக்கையில் இல்லை.

திரு. ஞா. செந்தமிழன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** செல்வி கே. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி செல்வி இராமஜெயம், இருக்கையில் இல்லை.

திருமதி செல்வி இராமஜெயம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ராணி வெங்கடேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. தண்டபாணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். ஞானதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

திருமதி மு. சந்திரா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

திரு. கோ. அரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பி. தங்கமணி, இருக்கையில் இல்லை.

திரு. பி. தங்கமணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. காவேரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சொ. கருப்பசாமி, இருக்கையில் இல்லை.



திரு. சொ. கருப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

திரு. கே.ஏ. செங்கோட்டையன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. பா. வேல்துரை.

**திரு. பா. வேல்துரை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. வேல்துரை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். தேன்மொழி, இருக்கையில் இல்லை.

திருமதி எஸ். தேன்மொழி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ம. குணசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. ம. குணசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. டில்லிபாபு.

**திரு. ப. டில்லிபாபு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. டில்லிபாபு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஓ.கே. சின்னராஜ், இருக்கையில் இல்லை.

திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. கணபதி, இருக்கையில் இல்லை.

திரு. ந. கணபதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. இரா. துரைக்கண்ணு, இருக்கையில் இல்லை.

திரு. இரா. துரைக்கண்ணு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஆர்.கே. பாரதிமோகன், இருக்கையில் இல்லை.

திரு. ஆர்.கே. பாரதிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ந. சுப்பிரமணியன், இருக்கையில் இல்லை.

திரு. ந. சுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. செ. சின்னச்சாமி, இருக்கையில் இல்லை.

திரு. செ. சின்னச்சாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. இராமசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.2,368,15,51,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.844,36,16,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

என்னும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (12–8–2006) சனிக்கிழமை, காலை 9–30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2–37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



# 5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

– ஏதுமில்லை –

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

52. மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

53. மானியக் கோரிக்கை எண் 34 – நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்திறன் பற்றிய குறிப்பு, 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

54. மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007. (தமிழ், ஆங்கிலம்)

55. மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2005–2006. (தமிழ், ஆங்கிலம்)

# இணைப்பு I

*(65 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

# மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

# கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

## முகவுரை

மாநிலத்தில் உள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நிர்வாகத்திற்கும் அவை செயல்படுத்தும் திட்டங்களுக்கும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பொறுப்பு வகிக்கின்றது. மேலும் மாநிலத்தின் ஊரக மற்றும் நகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் பணிகளைத் திட்டமிட்டுச் செயல்படுத்துவதும் இத்துறையின் பொறுப்பாகும்.

குடிநீர் வழங்கல், சுகாதாரம், சாலைகள், திடக்கழிவுகளுக்குத் தீர்வு காணல் மற்றும் தெருவிளக்குகள் போன்ற அடிப்படை வசதிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. நகரங்களும், மாநகரங்களும் பொருளாதார வளர்ச்சியின் ஊக்கிகளாக விளங்கிவருகின்றன. அவை தங்கள் பகுதி மக்களுக்கு மட்டுமல்லாமல் சுற்றிலும் வாழும் ஊரகப் பகுதி மக்களுக்கும் முக்கிய சேவைகளை வழங்கி வருகின்றன. நலிவடைந்த மக்களும் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் காணும்வகையில் அவர்களுக்குக் கூடுதல் வாய்ப்புகளை நகரங்களும் மாநகரங்களும் வழங்கி வருகின்றன.

பொதுமக்களுக்கு அடிப்படை வசதிகளை வழங்கும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேவைப்படும் அனைத்து ஆதரவுகளையும் அளிக்க அரசு உறுதி பூண்டுள்ளது. நகரமைப்பில் சீர்த்திருத்தங்களை அறிமுகப்படுத்துவதில் தமிழகம், நாடு முழுவதுக்கும் முன்னோடியாகத் திகழ்கிறது. மாநிலத்தில் உள்ள நகர மற்றும் மாநகரங்களில் வாழ்வோருக்குத் தரமான வாழ்க்கை வசதிகளை வழங்கிட வழிவகுக்கும் இச்சீர்திருத்தப் பணிகள் தொடரும்.

[2006 ஆகஸ்ட் 11

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அவற்றில் வாழும் மக்களால் நிர்வகிக்கப்படும்பொழுதுதான் அவைகள் சிறப்பாகச் செயல்பட முடியும். தற்போது உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் இந்த ஆண்டு முடிவடைவதால், 25–10–2006–க்குள் புதிய மக்கள் பிரதிநிதிகள் பொறுப்பு ஏற்க ஏதுவாகத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்திட அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் இம்முறை, உள்ளாட்சி அமைப்புகளின் மேயர் மற்றும் தலைவர்களை, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள்மூலம் தேர்வு செய்யவும் அரசு முடிவு செய்துள்ளது. இம்முடிவு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் சிறப்பான செயல்பாட்டிற்கு வழி வகுக்கும்.

மாநிலத்தில் உள்ள அனைத்து மக்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படவேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. நகரிலும், மாநகரிலும் வழங்கப்படும் குடிநீரின் அளவையும் வழங்கும் நேரத்தையும் அதிகரிப்பதே அரசின் குறிக்கோளாகும். முன்னேற்றமடைந்த நாடுகளைப்போல் அனைத்து வீடுகளிலும் தடையின்றி தரமான குடிநீர் கிடைக்கும் நிலையை ஏற்படுத்துவதே அரசின் தலையாய கொள்கையாகும்.



2006 ஆகஸ்ட் 11]

## நகராட்சி நிருவாகம்

## நகரமயமாகும் தமிழ்நாடு

தமிழ்நாடு மிக வேகமாக நகரமயமாகி வருகிறது. நாட்டிலுள்ள மாநிலங்களில் நகரமயமாதலில் முதன்மை மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது. 2001 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி தமிழகத்தின் மக்கள் தொகை 6.21 கோடியாகும். அதில் நகர்ப்புற மக்கள் தொகை 2.72 கோடியாகும். மொத்த மக்கள் தொகையில் நகர்ப்புற மக்கள் தொகை 44 சதவீதமாகும். அடுத்த சில ஆண்டுகளில் மக்கள் தொகையில் பாதிக்கு மேல் நகர்ப்புறங்களில் வசிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாட்டில் அதிகரிக்கும் நகர்ப்புற மக்கள் தொகைக்கேற்ப, அனைத்து அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்தித் தருவது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும். இந்த வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காகத் தமிழகத்திலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் தங்களிடமுள்ள நிதி, நிதி நிறுவனங்கள், மத்திய–மாநில அரசுகளிடமிருந்து பெறும் கடன் மற்றும் மானியங்கள் மூலம் முயன்று வருகின்றன. தமிழ்நாட்டில், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி என 6 மாநகராட்சிகள் உள்ளன. சென்னையைத் தவிர, 5 மாநகராட்சிகளும், 50 மூன்றாம் நிலை நகராட்சிகள் உள்ளிட்ட 152 நகராட்சிகளும் நகராட்சி நிர்வாக ஆணையரின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. நடப்பாண்டில், திருப்பூர் நகராட்சியினை மாநகராட்சியாகத் உயர்த்திட அரசு கருதியுள்ளது.

நகராட்சிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:–

| வ. எண் | நிலை | ஆண்டு வருவாய் (ரூபாய் கோடியில்) | நகராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | சிறப்பு நிலை | 5.00–க்கு மேல் | 13 |
| 2 | தேர்வு நிலை | 2.00 – 5.00 | 28 |
| 3 | முதல் நிலை | 1.00 – 2.00 | 36 |
| 4 | இரண்டாம் நிலை | 1.00–க்குகீழ் | 25 |
| 5 | மூன்றாம் நிலை | 30,000 மக்கள் தொகைக்கு மேல் | 50 |
| | மொத்தம் | | 152 |

[2006 ஆகஸ்ட் 11

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்திறனை உயர்த்துதல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் பின்வரும் அடிப்படை வசதிகளை மக்களுக்கு செய்து கொடுப்பதை முக்கிய கடமையாகக் கொண்டுள்ளன:—

1. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல்
2. முறையான கழிவுநீர் மற்றும் வடிகால் வசதிகளை நிறுவி, பராமரித்தல்
3. திடக்கழிவு மேலாண்மை
4. பொது கழிவறைகள் கட்டுதல்—பொது இடங்களில்/சாலைகளில் அசுத்தப்படுத்தலைத் தடுத்தல்
5. தெரு விளக்குகள் அமைத்தல்
6. நடைபாதைகளுடன் கூடிய சாலை வசதிகள் அளித்தல்
7. தெரு விலங்குகளைக் கட்டுப்படுத்துதல்
8. மாசுத் தடுப்பு
9. மக்கள் பயன்பாட்டிலுள்ள சந்தைகள் மற்றும் பேருந்து நிலையங்களைப் பராமரித்தல்
10. திறந்த வெளி, பூங்காக்கள் மற்றும் பொழுது போக்கும் இடங்களைப் பராமரித்தல்
11. புதிய குடிசைப் பகுதிகள் ஏற்படுவதைத் தடுத்தல் மற்றும் ஆக்கிரமிப்புகளை அகற்றுதல்
12. வரிவிதிப்புகளை முறைப்படுத்துதல் மற்றும் பொறுப்பான நிர்வாகம்மூலம் மக்களிடையே நம்பகத்தன்மையை ஏற்படுத்துதல்.
13. பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்துதல்

### பலன் அளிக்கும் அடிப்படையில் பணிகள்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் அவை செயல்படுத்தும் திட்டங்களின் பலன்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டி போதிய நடவடிக்கைகளை எடுக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன.

### நகர்ப்புற வளர்ச்சிக்கு மனிதவள மேம்பாட்டு அறிக்கை தயாரித்தல்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் உண்மையான வளர்ச்சி அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தின் வாயிலாகவே பிரதிபலிக்கிறது.



2006 ஆகஸ்ட் 11]

மரபுவழிப் பொருளாதாரக் குறியீடுகள் மக்களின் உண்மையான வாழ்க்கைத் தரத்தினை வெளிப்படுத்துவது இல்லை. எனவே, துப்புரவு, குடிநீர் விநியோகம், சுகாதாரம், கல்வி, வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு உருவாக்குதல், ஊட்டச்சத்து, பாலின சமத்துவம் மற்றும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் முதலான நகர்ப்புற அடிப்படை வசதிகளைப் பெருக்குவதற்கான குறிப்பிட்ட திட்டங்களைத் தீட்டுவதற்கு ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பிலும் படிப்படியாக மனித வள மேம்பாட்டு அறிக்கை தயாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

### தமிழகத்திலுள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல்

ஒவ்வொரு நகரமும், நகரத்தின் மேம்பாடு குறித்து ஒரு தொலை நோக்குத் திட்டத்தை தயாரித்தல் அவசியமாகும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–ன்கீழ் 31 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இத்திட்டம் தயாரிக்கும் பணி தொடங்கப்பட்டு, முடிவடையும் நிலையில் உள்ளது. மேலும், 11 நகராட்சிகளுக்கும் இத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. படிப்படியாக எஞ்சிய அனைத்து நகராட்சி மற்றும் மாநகராட்சிகளுக்கும் இத்திட்டம் தயாரிக்கப்படும்.

## உள் கட்டமைப்பு மேம்பாடு

### குடிநீர் வழங்கல்

நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தினசரி குடிநீர் விநியோகத்தை உறுதி செய்வதும், குடிநீர் விநியோகிக்கும் நேரத்தை அதிகப்படுத்துவதும், பல்வேறு காலகட்டங்களில் நிறைவேற்றப்பட்ட குடிநீர்த் திட்டங்களை ஒருங்கிணைத்து உள்கட்டமைப்புகளைப் புனரமைப்பு செய்து குடிநீர் விநியோகத்தை விரிவாக்குவதும், புதிய நீர் ஆதாரங்களைக் கண்டறிந்து குடிநீர் பகுதிகளை விரிவுபடுத்தி, குறிப்பிட்ட கால வரையறைக்குள் நிறைவேற்றுவதும் அரசின் நோக்கமாகும்.

### சாலைகள் மற்றும் மழை நீர் வடிகால்

(அ) இத்துறையானது அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள சாலை மேம்பாடு மற்றும் அவற்றின் தரம் உயர்த்தும் பணிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும். அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள மண் சாலை மற்றும்

கற்சாலையினை முற்றிலுமாக அகற்றி அவற்றிற்குப் பதிலாக தார்ச் சாலைகளும், சிமெண்ட் கான்கிரீட் சாலைகளும் அடுத்த நான்கு ஆண்டுகளில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேவைப்படும் அனைத்து சாலைகளிலும் வீதிகளிலும் பாதசாரிகளுக்கான நடைமேடை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) மாநகராட்சிகளிலும், நகராட்சிகளிலும் போக்குவரத்தினை எளிதாக்கும்வகையில் இணைப்பு மற்றும் சுற்றுச் சாலைகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இப்பணி அடுத்த ஐந்தாண்டுகளில் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

(இ) தற்போது 43 சதவீத சாலைகள் மட்டும் மழைநீர் வடிகால் அமைப்புடன் உள்ளன. அனைத்துப் பேருந்து வழித்தடங்களில் முதலில் மழைநீர் வடிகால் அமைக்கப்படும். படிப்படியாக மீதமுள்ள சாலைகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**தெரு விளக்குகள்**

இரண்டாவது மாநில நிதி ஆணையம் தனது அறிக்கையில், தேவைப்படும் தெரு விளக்குகளில் 17 சதவீதம் குறைவாக உள்ளது எனத் தெரிவித்துள்ளது. கூடுதல் விளக்குகளை அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்வதன்மூலம் அடுத்த மூன்றாண்டுகளில் இந்த இடைவெளி நிவர்த்தி செய்யப்படும்.

தற்சமயம் 18 நகராட்சிகளிலும் 3 மாநகராட்சிகளிலும் தெரு விளக்குப் பராமரிப்பு தனியாருடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. இதனால் குறைந்த செலவில் சிறந்த சேவை அளிக்கப்படுகிறது. ஆகவே, விருப்பப்படும் ஏனைய நகராட்சிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும்.

மின் சேமிப்பு நிறுவனங்கள்மூலம் மின்சாரத்தைச் சேமிக்கும் பொருட்டு ஒரு புதிய வழிமுறை, சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தற்போதைய தெரு விளக்கு பராமரிப்பு நிலை குறித்து 45 நகராட்சிகளில் தேசிய சுற்றுப்புறச் சூழல் பொறியியல் ஆய்வுக் கழகம் மற்றும் தேசிய உற்பத்திக் கழகம் ஆகியன ஆய்வு செய்து அனைத்து நகராட்சிகளிலும் மின் சேமிப்புக்கு நல்ல வாய்ப்புள்ளது எனத் தெரிவித்துள்ளன. தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பு சேவை நிதி நிறுவனம் மேற்கண்ட ஆய்வினை நடத்த நிதியுதவி செய்ததுடன் மேலும் சிறப்பாகச் செயல்படுத்த ஆதரவும் தெரிவித்துள்ளது.





தெரு விளக்கு உபகரணங்கள் மற்றும் உதிரி பாகங்கள் வாங்குவதில் தரக் கட்டுப்பாடு முறைகள் கடைப்பிடிக்கப்படுவதால் மின் சக்தி சேமிப்பு செய்யப்படுவதுடன், தரக்குறைவு/குறைவான வெளிச்சம் போன்ற புகார்கள் தவிர்க்கப்படுகின்றன.

அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் மேலும் சிறப்பான முறையில் தெரு விளக்கு வசதி செய்துகொடுக்க நிர்ணயிக்கப்பட்ட 30 மீட்டர் இடைவெளிக்கு ஒரு விளக்கு என்ற அடிப்படையில் தேவைப்படும் இடங்களில் எல்லாம் கூடுதல் விளக்குகள் அமைக்க வழிவகுக்கப்படும். 2006–2007 ஆம் ஆண்டு, நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் அளவுகோலின்படி கூடுதல் விளக்குகள் அமைக்கத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**நவீன பேருந்து நிலையங்கள்**

பேருந்து நிலையங்கள் போன்ற பொது மக்கள் பயன்பாட்டு இனங்களை மேம்படுத்துவது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் நோக்கமாகும்.

(அ) இராஜபாளையம், கிருஷ்ணகிரி மற்றும் கோவில்பட்டி நகராட்சிகளில் புதிய பேருந்து நிலையங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இவை நடப்பாண்டில் முடிக்கப்படும்.

(ஆ) நெல்லிக்குப்பம் மற்றும் கொடைக்கானல் நகராட்சிகளிலும், கோயம்புத்தூர் மாநகராட்சியிலும் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்து நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

(இ) நாகர்கோயில் நகராட்சி பேருந்து நிலையத்தில் மேம்பாட்டுப் பணிகள் நடப்பாண்டிலேயே முடிக்கப்படும்.

(ஈ) திருவண்ணாமலை, மணலி, அனகாபுத்தூர், புழுதிவாக்கம், பொள்ளாச்சி மற்றும் பூவிருந்தவல்லி ஆகிய 6 நகராட்சிகளில் தற்போதுள்ள பேருந்து நிலையங்கள், நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்பட உள்ளன.

**பொது சுகாதாரம்**

பொது சுகாதாரம் மற்றும் கழிப்பிட வசதிகளை ஏற்படுத்தித் தருவது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியக் கடமையாகும். இதனை அடைவதற்காக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள்

சுகாதாரம் மற்றும் கழிப்பிட வசதிகளை மேம்படுத்த தொடர்ந்து பணியாற்றி வருகின்றன.

**பாதாள சாக்கடை**

சுற்றுச் சூழல் சீர்கேட்டைத் தடுப்பதில் பாதாள சாக்கடைத் திட்டம் மிக முக்கியமானதும் பயன் தரக்கூடியதும் ஆகும். மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் அறிவித்தவாறு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் பாதாள சாக்கடைத் திட்டத்தை குறிப்பிட்ட காலவரையறைக்குள் செயல்படுத்துவது இத்துறையின் முக்கியக் குறிக்கோளாகும்.

பாதாள சாக்கடைத் திட்டம் அனைத்து நகர்ப்புற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்படும். திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் மதுரை மாநகராட்சிகளிலும், மயிலாடுதுறை, கும்பகோணம், தஞ்சாவூர், கரூர் மற்றும் இனாம்கரூர் நகராட்சிகளிலும் தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பணிகளை விரைவுபடுத்தி நடப்பு ஆண்டிலேயே இத்திட்டங்கள் பயனுக்குக் கொண்டு வரப்படும்.

(அ) பல்லவபுரம், அம்பத்தூர் மற்றும் காஞ்சிபுரம் நகராட்சிகளில் நடைபெற்று வரும் திட்டங்கள் 2007–08 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

(ஆ) சேலம் மாநகராட்சி மற்றும் திருவொற்றியூர், விருதுநகர், தூத்துக்குடி, கடலூர், இராமநாதபுரம், உதகமண்டலம், திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் வேலூர் நகராட்சிகளில் நடப்பாண்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட உள்ளன.

(இ) திருவாரூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய மாவட்டத் தலைநகரங்களில் இந்த நிதியாண்டிற்குள் இத்திட்டம் துவங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் கோயம்புத்தூர் மாநகராட்சியில் விடுபட்ட பகுதிகளிலும் மற்றும் புறநகர் சுற்றியுள்ள பகுதிகளிலும் ஒருங்கிணைந்த பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்கப்படும்.





**மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பணி**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஆற்றும் சேவைகளில் மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலப் பணியும் ஒன்றாகும். தற்போதைய நிலையில் பச்சிளங்குழந்தைகளின் இறப்பு விகிதம் 44/1000 என்ற நிலையிலும், மகப்பேற்றின்போது தாயின் இறப்பு விகிதம் 1.3/1000 என்ற நிலையிலும் உள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இந்த இறப்பு விகிதத்தைக் குறைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**தொற்று நோய்கள் கட்டுப்படுத்துதல்**

தொற்று நோய்களைப் பரப்பும் கொசுக்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக ஒவ்வொரு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்கும் குறைந்தபட்சம் ஒரு சக்தி வாய்ந்த, புகைமூலம் கொசு ஒழிப்பு இயந்திரம் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**திடக்கழிவு மேலாண்மை**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பணியில் திடக்கழிவு மேலாண்மை முக்கியமான ஒன்றாகும். உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை அமைச்சகம் "நகராட்சி திடக் கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதி 2000"–ஐ நகர்ப்புற அமைப்புகளில் கட்டாயமாக நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்விதியின்படி, அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் உரக்கிடங்கிற்கான இடம் தேர்வு செய்யவும் குப்பைகளை உரமாக மாற்றவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

தற்போது அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தினசரி தோராயமாக 10,000 மெட்ரிக் டன் குப்பைகள் சேகரிக்கப்படுகின்றன. குப்பைகளை, மக்கும் குப்பை மக்காத குப்பை என்று சேகரிக்கும் இடத்திலேயே பிரித்து மறு உபயோகத்திற்குப் பயன்படுத்துவது பெரும்பான்மையான நகராட்சிகளில் பின்பற்றப்படுகிறது. வீடுதோறும் நேரடியாகக் குப்பைகளைச் சேகரிக்கும் திட்டம் அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் துவங்கப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மையில் 100 சதவீதம் குப்பைகளைச் சேகரிக்கும் நிலையிலேயே பிரித்தெடுத்தல், குப்பைகளை விஞ்ஞான முறையில் உரமாக மாற்றுதல், அதன்மூலம் நகரத்தை குப்பையற்ற நகரமாக்குதல் ஆகியவை முக்கிய குறிக்கோள்களாகும்.

[2006 ஆகஸ்ட் 11

அனைத்து நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் திடக் கழிவு மேலாண்மையை சுய உதவிக் குழுக்களைக் கொண்டு செயல்படுத்துவதன்மூலம் தனியார்மயமாக்கல் ஊக்குவிக்கப்படுகிறது.

152 நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகளில் 45 நகராட்சிகள் மற்றும் 4 மாநகராட்சிகளில் மட்டும் 2025 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் மக்கள் தொகைக்கு ஏற்ப தேவையான உரக்கிடங்குகள் அமைக்க நில வசதிகள் உள்ளன. தமிழ்நாடு அரசு, உரக் கிடங்கு அமைப்பதற்காக 69 நகராட்சிகளுக்கு ரூ.4.75 கோடி அனுமதித்துள்ளது. இதுவரை 20 நகராட்சிகளில் உரக்கிடங்கு அமைப்பதற்கான இடம் வாங்கப்பட்டுள்ளது. ஏனைய நகராட்சிகளுக்கு இடம் வாங்குதல் முன்னேற்றத்தில் உள்ளது.

குப்பைகளைச் சேகரிக்கும் திறமையை மேம்படுத்தவும், அவற்றைப் பிரிப்பதிலும் உரக்கிடங்கிற்கு மாற்றம் செய்வதிலும் முன்னேற்றத்தை உருவாக்கவும், குப்பைகளை உரமாக்க நவீன உபகரணங்களை அமைக்கவும் ரூ.181.68 கோடி மதிப்பீட்டில் செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சென்னைப் பெருநகரத்தைச் சுற்றியுள்ள நகராட்சிப் பகுதிகளில் திடக் கழிவு மேலாண்மை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த தமிழக அரசு 2005–2006–ல் ரூ.8.00 கோடி அனுமதித்துள்ளது. 2006–2007–ல் இப்பணிக்காக ரூ.8.00 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் நகராட்சி திடக் கழிவுகளை உரமாக்குவதும் அந்த உரத்தினை தமிழ்நாட்டின் உணவு உற்பத்திக்காக மண் வளத்தை பெருக்க பயன்படுத்துவதும் அவசியமான ஒன்றாகும். நாமக்கல், திருப்பூர் மற்றும் தாராபுரம் நகராட்சிகள் திடக் கழிவிலிருந்து உரம் உற்பத்தி செய்வதில் முன்னோடியாக விளங்குகின்றன. மேலும் பல உள்ளாட்சி அமைப்புகள் நகராட்சி திடக் கழிவிலிருந்து உரம் உற்பத்தி செய்கின்ற பணியை ஆரம்பிக்க உள்ளன.

**இறைச்சிக் கூடங்கள்**

அனைத்து மாவட்டத் தலைமையிடங்களிலுள்ள நகராட்சிகளிலும், மாநகராட்சிகளிலும் உள்ள இறைச்சிக் கூடங்கள் நடப்பாண்டில் ரூ.740.00 இலட்சத்தில் நவீன வசதிகளுடன் மேம்படுத்தப்படும். அதற்கான வடிவமைப்பு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மற்றும் இந்திய விலங்குகள் நல வாரியத்துடன் கலந்தாலோசித்து தயார் செய்யப்படும்.



2006 ஆகஸ்ட் 11]

**எரிவாயு சுடுகாடுகள்**

மாவட்டத் தலைநகர நகராட்சிகள் மற்றும் 5 மாநகராட்சிகள் உள்ளிட்ட 33 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.1,520.00 இலட்சம் மதிப்பீட்டில் நவீன எரிவாயு சுடுகாடுகள் அமைக்கப்படும்.

## ஆரோக்கியமான சுற்றுச்சூழல் ஏற்படுத்துதல்

**பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் மேம்படுத்துதல்**

நகராட்சி மற்றும் மாநகராட்சிகளால் சுமார் 400 பூங்காக்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. 2006–2007–ல் 50 பூங்காக்கள் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு வளர்ச்சி நிதியின்மூலம் மேம்படுத்தப்படும்.

**நீர் ஆதாரங்களைத் தூய்மைப்படுத்துதல்**

நீர் ஆதாரங்களில் கழிவுநீர் கலப்பதைத் தடுப்பது மற்றும் அவற்றைத் திசை திருப்பி விடுவதற்கான பணிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செயல்படுத்தும். மழைக் காலங்களில் மழை நீர் தேங்குவதைத் தடுப்பதற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நீர் ஆதாரங்களைத் தூர்வாருவதற்கும் அவற்றிற்கு வரும் கால்வாய்களைச் சுத்தப்படுத்துவதற்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். 2006–2007–ல் இந்த பணிகளை மேற்கொள்ள ரூ.5.00 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் நீராதாரங்களில் மாசுபட்ட நீர் கலப்பது தடுக்கப்படும். நீர் நிலைகளில் உயிரியல் தீர்வு (Bio–Remediation) முறையும் ஒரு பகுதியாக செயல்படுத்தப்பட உள்ளது.

**மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துதல்**

புதியதாகக் கட்டப்படும் கட்டடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த உரிய சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது. மேலும் நீர் ஆதாரங்களான குளங்கள், குட்டைகளிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

## கல்வி

**பள்ளிகள்**

அனைத்து நகராட்சிப் பள்ளிகளிலும் அனைத்து வசதிகள் ஏற்படுத்தும்விதமாக கழிப்பிடங்கள், ஆய்வுக் கூடங்கள், மிதிவண்டி நிறுத்துமிடம் ஆகிய வசதிகள் நடப்பாண்டில் நிறைவேற்றப்படும்.

**விளையாட்டு மைதானங்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள்**

"ஆரோக்கியமான உடலே ஆரோக்கியமான மனம்" என்ற சொல்லுக்கு ஏற்ப, மாநகராட்சிப் பள்ளிகளில் விளையாட்டு மைதானங்கள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் சிறப்பு நிலை நகராட்சிகளில் துவங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## வெளிப்படையான நிர்வாகம்

### நகராட்சி சேவையில் தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் பயன்பாடு

**மின்னணு ஆளுகை**

தகவல் மற்றும் தொலைத்தொடர்பு தொழில்நுட்பத்தின் உதவியோடு மக்களுக்குத் தேவையான சேவைகளை வீட்டிற்கு கொண்டு செல்வது நகராட்சிகளின் மின்னணு ஆளுகையின் நோக்கமாகும். இதன்மூலம் மின்னணு சேவை வழங்குவதன்மூலம், உள்ளாட்சி ஆளுகையில் மக்கள் பங்கேற்பினை அதிகப்படுத்தி, வெளிப்படையான நிர்வாகத்தை உருவாக்க முடியும்.

மின்னணு ஆளுகையின் முதற்கட்டமாக அனைத்துப் பதிவேடுகளையும் மின்னணு தகவல்களாக மாற்றுவதற்கு, கணினி உள்கட்டமைப்புகள் நகர்ப்புற உள்ளாட்சிகளில் ஏற்படுத்தப்படும். மக்கள் சேவை மையங்களின்மூலமாக பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் வழங்குவது, சொத்து வரி, குடிநீர்க் கட்டணம், வரியில்லா இனங்கள், தொழில்வரி, காலியிடவரி வசூலித்தல் போன்றவை நேரிடை தகவல் தொடர்பு மூலமாக வசூல் செய்யப்படுகின்றது. மக்களுக்கு வசதியாக பல்வேறு வரி இனங்களைச் செலுத்துவதற்காக பணம்—வங்கி காசோலை, வங்கி கேட்பு வரைவோலை மற்றும் கடன் அட்டைகள்மூலமாக வரி செலுத்தும் முறை நகர்ப்புற உள்ளாட்சிகளில் அமல்படுத்தப்பட்டுள்ளன.

இயல்பு கணக்கு முறை கணினிமயமாக்கப்பட்டு அனைத்து வருவாய் இனங்களுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது தகவல்களை உடனுக்குடன் பெற, அனைத்து கணினி அமைப்புகளும் உள், நகர, பரந்த தளத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. மின் ஆளுகை செயல்பாட்டுமுறையின் வளர்ச்சியினை நேரடியாக கண்காணிப்பதற்கு இணையதளம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகிறது. நகர்ப்புற





உள்ளாட்சி அமைப்புகளில் பணிபுரியும் அனைத்து தகவல் தொழில்நுட்ப அலுவலர்களுக்கும் உரிய பயிற்சிகள் அளிக்கப்படும்.

மின்னணு ஆளுகையின் அடுத்தகட்ட நடவடிக்கையாக மக்களுக்கு மேம்படுத்தப்பட்ட சேவையினை வழங்குவதற்கு பின்வருவன தேவைகளாகும்:—

* மின் ஆளுகையின் அடுத்த நிலையாக புவியியல் தகவல் அமைப்பு அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் படிப்படியாக அமைக்கப்பட்டு, நிலவியல் வரைபட மின்தகவல் அடித்தளமிடுவதுடன் இணையதளம் சார்ந்த அமைப்பு உருவாக்கி சொத்து மேலாண்மைக்கு பயன்படுத்தப்படும்.
* சமீபத்தில் நிலை உயர்த்தப்பட்ட 50 மூன்றாம் நிலை நகராட்சிகளிலும் மின்னணு ஆளுகை செயல்படுத்தப்படும்.
* நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் கோப்புகள் மற்றும் ஆவணங்களை, வேலை இலகு மேலாண்மை மற்றும் அமைப்பு மேலாண்மைமூலம் பணிகளை விரைவுபடுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

## நகர்ப்புற வறுமைக் குறைப்புத் திட்டம்

### பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம்

நம் முன்னுள்ள சவால், நகர்ப்புற வறுமையைக் குறைப்பது. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கூறுகளுக்கு, 1997—1998 முதல் 2005—2006 முடிய உள்ள காலத்திற்கு மத்திய அரசு ரூ.100.67 கோடியும் மாநில அரசு உரிய விகிதாச்சாரப்படி ரூ.65.12 கோடியும் ஒதுக்கியது. மொத்த தொகை ரூ.165.79 கோடியில், ரூ.153.73 கோடி பயன்படுத்தப்பட்டது.

இதன் சாதனைகள் பின்வருமாறு:—

- 3,501 நகர்ப்புற ஏழைகள் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பயன் அடைந்துள்ளனர். 3933 பெண்கள், நகர்ப்புற மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுக் குழு வழங்கிய மானியத்தின் உதவியுடன் கூட்டுத் தொழில் தொடங்கியுள்ளனர்.
- 8,122 நகர்ப்புற ஏழைகளுக்கு திறமையை வளர்க்கும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

- கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தில், ரூ.171.64 இலட்சம் செலவில் நகர்ப்புற ஏழைகளுக்கான உள்கட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

2006–2007 ஆம் ஆண்டு திட்ட செயலாக்கத்திற்கு மத்திய அரசால் ரூ.15.91 கோடியும் மற்றும் மாநில அரசால் உரிய விகிதாச்சாரப்படி ரூ.5.30 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டில் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் 2,461 நகர்ப்புற ஏழைகள் மானியத்துடன் கூடிய தனிநபர் கடன் பெற்றுப் பயனடைந்தனர். சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 7,384 உறுப்பினர்கள் கூட்டாகத் தொழில் செய்து பயனடைந்து வருகின்றனர். ஒரு பயிற்சியாளருக்கு ரூ.2000/– வீதம் 12,300 நகர்ப்புற ஏழைகளுக்கு திறமையை மேம்படுத்தும் பயிற்சி அளிக்கப்படும். கூலி வேலைவாய்ப்புத் திட்டத்தில் வடிகால் வசதி செய்து கொடுத்தல், தடுப்புச் சுவர்கள், பாதை அமைத்தல், சமுதாயக் கழிப்பிடம், பூங்கா அமைத்தல் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதன்வாயிலாக 1.35 இலட்சம் மனித வேலைநாட்கள் உருவாக்கப்படும்.

**மாநில நகர்ப்புற மேம்பாட்டு முகமை**

மாநில நகர்ப்புற மேம்பாட்டு முகமை உருவாக்கப்பட்டு தமிழ்நாடு சங்கங்கள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. இம்முகமை குறிப்பிட்ட காலத்தில் நகர்ப்புற ஏழைகள் அனைத்துப் பயன்களையும் அடையும்வகையில் வறுமை ஒழிப்புத் திட்டங்களை மறு சீரமைக்கும்.

இம்முகமை செயல்படுத்தும் திட்டங்கள் பின்வருமாறு:—

Ø நகராட்சி சுகாதார அலுவலர்/நகராட்சி துப்புரவு அலுவலரை ஒருங்கிணைப்பு அலுவலராகக் கொண்ட "நகர்ப்புற வறுமை ஒழிப்புக் குழு" உருவாக்கப்பட்டது. இக்குழு நகர அளவில் நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டங்களின் செயலாக்கத்தைக் கண்காணிக்கும்.

Ø அனைத்து துறைகளின் சேவைகளை ஒருங்கிணைப்பதற்கும், இவ்வசதிகளைப் பெற நன்கு ஒத்துழைப்பதற்கும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் நியமிக்கப்படுவார்.



2006 ஆகஸ்ட் 11]

Ø பேருந்து நிலையம் மற்றும் முக்கியமான இடங்களில் அமைந்துள்ள நகராட்சி கடைவளாகத்தில் ஒன்று அல்லது இரண்டு கடைகள் ஏழைப் பெண்கள் கொண்ட சுய உதவிக் குழுக்களுக்கு குறைந்த வாடகையில் ஒதுக்கப்படும்.

2006–2007 ஆம் ஆண்டில் நகர்ப்புறங்களில் 2,000 சுய உதவிக்குழுக்களுக்கு பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் உதவிகளை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**திட்டங்கள்**

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம்**

3–12–2005 அன்று மத்திய அரசால் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தில் பின்வரும் பிரிவுகள் உள்ளன.

**I. ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம்**

இது இரு உட்பிரிவுகளைக் கொண்டது. அவை—

அ) பெருநகரத் திட்டத்திற்கு மாற்றாக நகர்ப்புற உள்கட்டமைப்பு மற்றும் ஆளுகைத் துணைத் திட்டம்

ஆ) நகர்ப்புற ஏழைகளுக்கான அடிப்படை வசதிகள் வழங்கும் துணைத் திட்டம்

தமிழ்நாட்டில் 3 மாநகரங்கள் அதாவது சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகியன இத்திட்டத்தின்கீழ் தெரிவு செய்யப்பட்டு உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளும் அடிப்படை வசதிப் பணிகளும் செய்யப்படும். இத்திட்டத்தின்கீழ் நிதி உதவி பெறுவதற்கு முதலில் நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். மதுரை மாநகராட்சி ரூ.1,477.40 கோடிக்கு நகர மேம்பாட்டுத் திட்டம் தயாரித்துள்ளது. இதுபோன்று கோயம்புத்தூர் மாநகராட்சி ரூ.1,311.81 கோடிக்கு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் தயாரித்துள்ளது. மத்திய அரசு இத்திட்டங்களை அனுமதித்துள்ளது. மாநகராட்சிகள், மாநில மற்றும் மத்திய அரசு ஆகியவை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.

### II. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான நகர உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெறாத ஏனைய அனைத்து நகராட்சிகளுக்கும் மாநகராட்சிகளுக்கும் 2001 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின்கீழ் நடப்பு நிதியாண்டில் 10 நகர்ப்புற உள்ளாட்சிகளில் ரூ.82.00 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வழங்கல் திட்டமும் 13 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் சாலை அமைக்கும் திட்டமும் எடுத்துக்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### III. ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம்

மத்திய அரசு, தேசிய குடிசைப் பகுதி மேம்பாடுத் திட்டம் மற்றும் வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா என்ற திட்டத்தையும் இணைத்து "ஒருங்கிணைந்த வீட்டு வசதி மற்றும் குடிசை மேம்பாட்டுத் திட்டம்" என்ற புதிய திட்டத்தை அறிவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் நிதி வழங்குவதன்மூலம் நகர்ப்புற குடிசைப் பகுதிகளிலுள்ள ஏழை மக்கள் பயன்பெறுவார்கள்.

இத்திட்டத்தின்மூலம், நகர்ப்புற குடிசைப் பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III

74–வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டம் 1992–ன்படியும் மாநில நிதி ஆணையம் I மற்றும் II ஆகியவற்றின் பரிந்துரைகளின்படியும், தமிழ்நாடு நகர்ப்புறச் சீர்திருத்தம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக நகராட்சிகளில் இயல்பு நிலை கணக்கு முறையை அறிமுகப்படுத்தியும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களில் மின்னணு ஆளுகையைச் செயல்படுத்தியும் பொறியியல் பிரிவில் சீர்திருத்தமும் மேற்கொண்டுள்ளது.

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விடுபட்ட சில உள்கட்டமைப்பு வசதிகளைத் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–II–ன்மூலம் நிறைவேற்றப்பட்டது. தொடக்கத்தில் தமிழ்நாடு





நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அடிப்படை சேவைகள் மற்றும் குறிப்பிட்ட வருவாய் தரத்தக்க திட்டங்களிலும் முதலீடு செய்ய உதவியது. நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–I சிறிய அளவில் எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டமாகும். தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–II–ல் மாநில நிதி ஆணையத்தின் ஆய்வின் அடிப்படையில் நகராட்சி செயல்திறன் மற்றும் மேலாண்மையை உயர்த்தி நகராட்சி நிதியை உயர்த்திடவும், சேவையைத் துரிதப்படுத்தவும், அதிகக் கவனம் எடுத்துக் கொள்ளப்பட்டது. முதலீடுமூலமாக, திட்ட உருவாக்கம் மற்றும் அடிப்படை வசதிகளை மேற்பார்வையிடுதல் ஆகியவற்றை மேம்படுத்தியது. குறிப்பாக பாதாள சாக்கடைத் திட்டம் மற்றும் சாலைகள் ஆகிய திட்டங்கள் குறிப்பிடத்தக்க அளவில் நிறைவேற்றப்பட்டன.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–I, மேலாண்மை முன்னேற்றத்திற்கு உதவியது எனில் திட்டம்–II–ல் புதிய கணக்கு முறைமூலமாகவும், கணினிமயமாக்குதல், திறன் மேம்பாடு ஆகியவற்றினால் நகர்ப்புற உள்ளாட்சிகளின் பணியாளர்கள் பணித்திறன் மேம்படுத்தப்பட்டது. மக்களுக்கு வசதியான வாழ்க்கைச் சூழலை உருவாக்குதல் அரசின் கொள்கையாகும். அதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III மூலம் முனைப்புடன் முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–ன் நோக்கம்

இத்திட்டத்தின் நோக்கங்கள் பின்வருமாறு:–

(1) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் நிதி இடையீட்டாளராக இருந்து நகராட்சி அடிப்படை திட்டங்களுக்கு நிதி ஏற்பாடு செய்தல்.

(2) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–II–ன் சாதனைகளை நிலை நிறுத்தி நகராட்சித் திறனை வலுவூட்டுதல்.

(3) போக்குவரத்து மேம்பாட்டிற்கு, மானியம் அளித்து, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட பகுதியின் சாலைகளை அகலப்படுத்துதல், இருப்புப்பாதை மேம்பாலங்கள் மற்றும் சுரங்கப் பாதை போன்ற பணிகளைச் செய்தல்.

[2006 ஆகஸ்ட் 11

இத்திட்டத்தின் செயல்பாடுகள் பின்வருமாறு:—

**நிறுவன மேம்பாடு**

1) நகராட்சிப் பணியாளர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் செயல்திறனை அதிகரித்தல்

2) செய்தி மற்றும் தொடர்பு தொழில்நுட்பம்

3) நகராட்சிக் கடன் மேற்பார்வைப் பிரிவு

4) திட்டங்கள் உருவாக்கும் வசதி

5) திட்ட மேலாண்மை மற்றும் செயல்பாட்டு உயர்வுச் செலவினங்கள்

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்மூலம் நகர்ப்புறத்தில் முதலீடு**

1 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் தருதல்

2 மூலதன மானியம்

3 திட்ட மேம்பாட்டிற்கு அறிவுரை வழங்குதல்

4 சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு போக்குவரத்து திட்டங்களுக்கு மானியம் வழங்குதல்

5 சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்ட மேலாண்மை செயல்பாட்டு உயர்வுச் செலவினங்கள்

**நிதி ஆதாரம்**

முதல் மற்றும் இரண்டாம் மாநில நிதி ஆணையங்கள் தமிழ்நாடு நகர்ப்புற உள்கட்டமைப்பில் சுமார் ரூ.11,250.00 கோடி (2.5 பில்லியன் டாலர்) பற்றாக்குறை இருப்பதாகத் தெரிவித்துள்ளது. நிலையான அடிப்படை உள்கட்டமைப்பினை மேம்படுத்த அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.4,245.00 கோடி (950 மில்லியன் டாலர்) தேவைப்படும் என்று திட்டத்தைத் தயாரித்தபோது கண்டறியப்பட்டது. தேவையைக் கருத்திற்கொண்டு நகர்ப்புற ஆளுகையைச் சீர்திருத்துதல் மற்றும் சேவை அளித்தலில் திறன் மேம்பாடு ஆகியவற்றிற்கு தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—III வடிவமைக்கப்பட்டது.



2006 ஆகஸ்ட் 11]

**உட்பிரிவு வாரியாக நிதி முதலீடு செய்தல் பின்வருமாறு:**

**ரூபாய் கோடிகளில்**

| | | |
|---|---|---|
| அ. | நிறுவன வளர்ச்சிக் கூறு | 110.00 |
| ஆ. | நகர்ப்புற முதலீட்டுக் கூறு | 1,150.00 |
| இ. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு மானியம் | 665.00 |
| | மொத்தம் | 1925.00 |

**செயலாக்கம்**

**நிறுவன வளர்ச்சிக் கூறு:—**

இது மேலாண்மை முன்னேற்றம் மற்றும் மாற்றங்களுக்கு உதவுவது.

**நகராட்சிகளின் நிர்வாகத் திறனை அதிகரித்தல்:—**

**பயிற்சி/பயிற்சிப் பயணம்**

இதன்மூலம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்—II—ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை நிலைநிறுத்துதல்

⇒ நகராட்சிப் பணியாளர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு தொழில் நுட்பத் திறன் மற்றும் தேவையான மேலாண்மை பயிற்சி அளித்து அவர்தம் திறனை அதிகரித்தல்.

⇒ 2006—2007ல் பின்வருமாறு பயிற்சிகள் தாரப்படும்:

| I. | **மேலாண்மைத் திறன் உயர்த்துதல்** | |
|---|---|---|
| | **மூன்று சான்றிதழ் தரும் கல்வி மேம்பாட்டுத் திட்டங்கள்** | |
| | 1. | நகராட்சி ஆணையர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்குதல் |
| | 2. | நகராட்சி நிதி மற்றும் கணக்கு அலுவலர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல் |
| | 3. | நகராட்சி மேலாளர்களுக்குச் சான்றிதழ் வழங்குதல் |

[2006 ஆகஸ்ட் 11

| II. | பயிற்சித் திறன் மாற்றம் மற்றும் திறன் விரிவாக்குதல் |
|---|---|
| அ. | தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி |
| 1. | ஒருங்கு நிலை (அடித்தள) பயிற்சித் திட்டம் |
| 2. | நடுநிலைப் பயிற்சித் திட்டம் |
| 3. | மேம்படுத்தப்பட்ட சிறப்புப் பயிற்சித் திட்டம் |
| ஆ. | பணியாளர்களுக்குப் பயிற்சி |
| 1. | அடிப்படைப் பயிற்சித் திட்டம் |
| 2. | அலுவலர்களுக்கான நடுநிலைப் பயிற்சித் திட்டம் |
| 3. | மேம்படுத்தப்பட்ட சிறப்புப் பயிற்சித் திட்டம் |
| இ. | பட்டறிவுப் பயணங்கள் |
| 1. | தேசிய அளவிலானது |
| 2. | பன்னாட்டு அளவிலானது |
| 3. | நகராட்சி மேலாண்மை பற்றி கருத்தரங்கு, மாநாடு, பயிற்சி வகுப்பு மற்றும் சிறப்புச் சொற்பொழிவு ஏற்பாடு செய்தல் |
| ஈ. | தகவல் பரப்புதல் |
| 1. | தகவல் பரப்புதல் – செய்தி மடல், குறிப்பிட்ட பொருள் பற்றிய சிறு புத்தகங்கள் வெளியிடுதல் |

⇒ மேற்கண்டவை தவிர தேசிய அளவில் புகழ் பெற்ற பயிற்சி நிறுவனங்களில் அதிகாரிகள் பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

**செய்தி மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பம்**

இது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைக் கணினி மயமாக்குவதற்குத் தேவையான பொருட்கள் வாங்குதல் மற்றும் சேவைகள் அடங்கியது.



2006 ஆகஸ்ட் 11]

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களின் கடன்கள் மேற்பார்வையிடும் பிரிவு**

கடன்கள் மேற்பார்வையிடும் பிரிவு 2006–2007 ஆம் ஆண்டில் நகராட்சி நிர்வாக ஆணையரகத்தில் உருவாக்கப்படும். அது நகராட்சிகளின் நிதி சம்மந்தப்பட்ட விவரங்கள் அனைத்தும் பெறுவதற்காக உருவாக்கப்படும். மேலும், உண்மையான நிதிநிலையை வெளிப்படுத்தவும் நிதிச் சந்தைகளை அணுகவும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு உதவும். இந்தப் பிரிவு நிதி மேலாண்மைக்காக நகராட்சி நிர்வாக ஆணையர் கட்டுப்பாட்டிலுள்ள 5 மாநகராட்சிகள் மற்றும் 152 நகராட்சிகளுக்கு நிதி மேலாண்மை பற்றிய அறிவுரை தரும் வல்லுநராகச் செயல்படும்.

**திட்டம் உருவாக்குவதற்கான வசதி**

நகராட்சிகளில் அடிப்படை உள்கட்டமைப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கும் மேற்பார்வையிடுவதற்கும் ஆலோசனை நிறுவனங்களை அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையாளருக்கு ரூ.30 கோடி வழங்க அரசு முடிவெடுத்துள்ளது. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் இதன் மூலம் சிறப்பான திட்டங்களை உருவாக்க இந்தத் தொகை பயன்படுத்தப்படும்.

**நகர்ப்புற முதலீட்டுக் கூறுகள்**

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்–III–ன்கீழ், பின்வரும் பிரிவுகளில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன:

1. சாலைகள்
2. குடிநீர் வழங்கல்
3. பாதாள சாக்கடை திட்டம்
4. திடக் கழிவு மேலாண்மை

**பள்ளிக் குழந்தைகளுக்கான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களின் கட்டுப்பாட்டின்கீழுள்ள பள்ளிகளில் 1,843 சத்துணவு மையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் மாநகராட்சி மற்றும் நகராட்சியின் சொந்தக் கட்டடங்களில் இயங்கும் பள்ளி சத்துணவு மையங்கள் 1,485 ஆகும். இத்திட்டத்தில் 3,70,802 மாணவ/மாணவியர் பயன்பெறுகின்றனர்.

2005–06 ஆம் ஆண்டிற்குச் சத்துணவுக் கூடங்களில் உள்ள பழைய பாத்திரங்களுக்குப் பதிலாக புதிய அலுமினிய சமையல் பாத்திரங்கள் வாங்க ரூ.12,12,800/– அரசால் ஒப்பளிக்கப்பட்டு, இத்தொகை மாநகராட்சிகள்/நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டுவிட்டது.

**ஆழிப்பேரலையும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும்**

கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் தேதி நாகப்பட்டினம், வேதாரண்யம், கடலூர், குளச்சல், திருவொற்றியூர் மற்றும் கத்திவாக்கம் ஆகிய கடலோர நகரங்கள் ஆழிப்பேரலையால் தாக்கப்பட்டு கடலோரப் பகுதிகள் கடுமையான பாதிப்புக்குள்ளாயின.

**உள்கட்டமைப்பு மேம்பாடு**

தமிழ்நாடு அரசு, ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன், குடிநீர் விநியோகம், துப்புரவுப் பணி, சாலை மேம்பாடு, கட்டடங்கள் கட்டுவது முதலான 60 நிரந்தர உள்கட்டமைப்பு வளர்ச்சிப் பணிக்காக ரூ.36.61 கோடி இந்நகராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. தற்போது பணிகள் நடைபெற்றுவரும் நிலையில் 2006–2007 ஆம் ஆண்டுக்குள் 60% பணிகள் முடிக்கப்படும். மீதமுள்ள பணிகள் 2007–2008–ல் முடிக்கப்படும்.

இது தவிர 8 குடியிருப்புப் பகுதிகளில், ரூ.5.91 கோடியில் உள்கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளை ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம், வேதாரண்யம், கடலூர் ஆகிய 3 நகராட்சிகளுக்கு உலக வங்கி அவசர கால ஆழிப்பேரலை புனரமைப்புத் திட்டம் மூலம் செயல்படுத்த உள்ளது. இந்தப் பணிகள் 2006–2007–ல் செய்யப்படும்.

**வாழ்க்கை உதவித் திட்டம்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பகுதிகளில், ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொழில் உதவித் திட்டத்திற்காக ரூ.11.52 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1,105 குழுக்களுக்குச் சுழல் நிதியாக ரூ.331.50 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. புதிய குழுக்கள் உருவாக்குவதற்காக ரூ.10.08 இலட்சம் சம்பந்தப்பட்ட நகர்ப்புற உள்ளாட்சிகள்மூலம் விடுவிக்கப்பட்டுள்ளது.





தொடர்பாளர் மற்றும் முகவர் பயிற்சி, முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி, திறன் மேம்பாட்டுப் பயிற்சி மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வணிகப் பயிற்சி அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, நடப்பாண்டில் இலாபம் தரும் பொருளாதாரச் செயல்களுக்காக ரூ.3.00 கோடி செலவிடப்பட உள்ளது.

**நிதி மேலாண்மை**

**இரண்டாவது மாநில நிதிக்குழுவின் பகிர்வு நிதி (2002–2007)–நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப்பகிர்வு**

இரண்டாவது மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் 2005–06 ஆம் ஆண்டில் மாநிலத்தின் வரி வருவாயிலிருந்து 6 மாநகராட்சிகள் மற்றும் 152 நகராட்சிகளுக்கு ரூ.502.20 கோடி பகிர்வு நிதியாக அரசு விடுவித்துள்ளது.

மேற்கண்ட தொகை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புக்களுக்குப் பின்வருமாறு வழங்கப்பட்டுள்ளது:

87 சதவீதம் பகிர்வு நிதி
2 சதவீதம் காப்பு நிதி
6 சதவீதம் சமன்பாட்டு நிதி
5 சதவீதம் ஊக்க நிதி

2006–2007 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான பகிர்வு நிதியாக ரூ.638.02 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**மூன்றாம் மாநில நிதிக்குழு**

உள்ளாட்சி அமைப்புகளின் நிதி நிலையினை ஆய்வு செய்வதற்காகவும், மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கிடையே நிதிப் பகிர்வு பற்றிய பரிந்துரைகளை மேற்கொள்ளவும் மூன்றாவது மாநில நிதிக் குழு அமைக்கப்பட்டு அதற்கான ஆய்வு எல்லைகளும் வரையறுக்கப்பட்டுள்ளன. 2007–2012 ஆம் ஆண்டு காலத்திற்கான பரிந்துரைகளை இக்குழு வழங்கும். மூன்றாம் மாநில நிதிக் குழுவின் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

[2006 ஆகஸ்ட் 11

## 12-வது மத்திய நிதிக் குழு மானியம்

12-வது நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005-2006 முதல் 2009-2010 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு மத்திய அரசு ரூ.572 கோடி வழங்கிட உள்ளது. 2005-2006 ஆம் ஆண்டிற்கு ரூ.82.30 கோடி தொகை இரு தவணைகளில் வழங்கப்பட்டது. இதேபோன்று 2009-2010 வரை ஒவ்வோர் ஆண்டும் நிதியானது 6 மாநகராட்சிகள் மற்றும் 3 ஆம் நிலை நகராட்சிகள் உள்ளிட்ட 152 நகராட்சிகளுக்கும் வழங்கப்படும்.

இம்மானியத் தொகையானது 75 சதவீதம் மக்கள் தொகை அடிப்படையிலும், 25 சதவீதம் நிதி அளவீடுகளின்படியும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்திற்கு 50 சதவீதம் தொகை செலவிடப்பட வேண்டும்.

### நிர்வாகம்

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள பணியாளர்களின் திறனை மேம்படுத்த போதுமான பயிற்சிகள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி ஆகியன வழங்குவதோடு நகர மேலாண்மையின் தற்போதைய வளர்ச்சி அவர்களைச் சென்றடையும் வகையில் புதிய பயிற்சிகள் வழங்குவது அரசின் நோக்கமாகும்.

இதற்காக நடப்பாண்டில் பின்வருமாறு பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது:

### நகர மேலாண்மையில் சான்றிதழ் பயிற்சித் திட்டம்

நகர்ப்புற மேலாண்மையில் தரமான மற்றும் நடைமுறை அறிவுத் திறன் தேவையெனக் கண்டறியப்பட்டது. சான்றிதழ் பயிற்சித் திட்டமானது நகர்ப்புற மேலாண்மையில் பணித்திறனை வலுப்படுத்தவும் மற்றும் அங்குள்ள சவால்களையும் பொறுப்புகளையும் சந்திக்கின்ற திறன்வாய்ந்த மேலாண்மைக் குழுக்களை உருவாக்குவதுமாகும்.

இதற்கு தொழில்நுட்ப வல்லுநர்கள், சிறந்த பயிற்சி நிறுவனங்கள் மற்றும் உலக வங்கியின் பயிற்சி நிலையம் ஆகியவற்றுடன் கலந்தாய்வு செய்து நகர மேலாண்மைச் சான்றிதழ் பயிற்சித் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III-ன்கீழ் செயல்படுத்தப்படும்.



2006 ஆகஸ்ட் 11]

### சென்னை மாநகராட்சி

சென்னை மாநகரில் பல்வேறு அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளைச் சென்னை மாநகராட்சி செயல்படுத்தி வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் சாலைகள் அமைத்தல், மழை நீர் வடிகால்கள் அமைத்தல், தெரு விளக்குகள் அமைத்தல் மற்றும் இதர பணிகள் ரூ.241.72 கோடி மதிப்பில் மக்களின் தேவைகளுக்கேற்ப மேற்கொள்ளப்படவுள்ளன.

#### சாலைகள்

2006-2007 ஆம் நிதியாண்டில் ரூ.92.47 கோடி செலவில் 382 கி.மீ. உட்புறச் சாலைகள் மற்றும் 27.91 கி.மீ. பேருந்து சாலைகளைச் சீரமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

#### பாலங்கள்

ரூ.12.06 கோடி செலவில் பாலங்கள் கட்டவும் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. மேலும், நடப்பாண்டில் சென்னை மாநகரில் பெரம்பூர் இரயில் நிலையம் அருகில் மேம்பாலம் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

நடப்பு நிதியாண்டில் பின்வரும் இரயில்வே சந்திப்புகளில் வாகனப்பாலம் மற்றும் வாகனச் சுரங்கப்பாதை கட்டும் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| வரிசை எண் | சந்திப்புகளின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | கத்திவாக்கம் மற்றும் காக்ரேன் பேசின் சாலை இரயில்வே சந்திப்புகளில் வாகன மேம்பாலம். | 12.00 |
| 2 | கொருக்குப்பேட்டை இரயில்வே சந்திப்பில் வாகனச் சுரங்கப்பாதை. | 4.30 |
| 3 | வில்லிவாக்கம் இரயில்வே சந்திப்பு-2-ல் வாகனச் சுரங்கப்பாதை. | 13.86 |
| 4 | எம்.சி. ரோடு இரயில்வே சந்திப்பில் வாகனச் சுரங்கப்பாதை. | 11.60 |
| 5 | ரங்கராஜபுரம் இரயில்வே சந்திப்பில் வாகன மேம்பாலம். | 15.20 |

மேலும், நடப்பு நிதியாண்டில் பின்வரும் இடங்களில் சிறு மேம்பாலங்கள் கட்டும் பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது:

| வரிசை எண் | சிறு மேம்பாலங்கள் கட்டப்படவுள்ள சாலை சந்திப்புகள் | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 | டர்ன்புல்ஸ் சாலை – பசும்பொன் முத்துராமலிங்கம் சாலை சந்திப்பு | 9.50 |
| 2 | உஸ்மான் சாலை – கோடம்பாக்கம் நெடுஞ்சாலை சந்திப்பு | 6.50 |
| 3 | ஜி.என். செட்டி சாலை – திருமலை பிள்ளை சாலை சந்திப்பு | 15.00 |
| 4 | உஸ்மான் சாலை—துரைசாமி சாலை சந்திப்பு | 15.00 |

**மழைநீர் வடிகால்கள்**

50 கிலோ மீட்டர் நீள மழைநீர் வடிகால்கள் மொத்தம் ரூ.20.00 கோடி செலவில், மேம்படுத்தப்படும்/கட்டப்படும். பிரதான வடிகால்கள் மற்றும் பெரிய ஓடைகள் தூர்வாரும் பணி நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**தெரு விளக்குகள்**

200 கி.மீ. தூரத்திற்கு நிலத்தடி கம்பி வடங்களை மாற்றுவதற்குக் கருதப்பட்டுள்ளது. ஆறு இடங்களில் வாயுவினால் எரியூட்டப்படும் சுடுகாடுகள் அமைக்கவும் கருதப்பட்டுள்ளது. இந்த வருடத்தில் 7.50 புதிய தெருவிளக்குகள் அமைக்கப்படும். மேம்பாட்டுப் பணிகளோடு சேர்த்து தெருவிளக்குகளுக்கு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.7.30 கோடி தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**திடக் கழிவு மேலாண்மை**

பொது மக்களின் ஒத்துழைப்புடன் குப்பைகள் அகற்றும் பணி துரிதமாக நடைபெற்று வருகிறது. கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகங்களை மேம்படுத்த சாலை வசதி முதலியன மேற்கொள்ளப்படவுள்ளன. உரம் தயாரிக்கும்





தொழிற்சாலை கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது. ரூ.14.50 கோடி இந்த நிதியாண்டின் வரவு செலவுத் திட்டத்தில் திடக் கழிவு மேலாண்மைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**கல்வி**

ரூ.10.00 கோடி செலவில் மாநகராட்சிப் பள்ளிகளில் அடிப்படை வசதிகள் அமைக்கப்பட உள்ளன. கூடுதலாக வகுப்பறைகளும், பள்ளிக் குழந்தைகளின் எண்ணிக்கைக்கேற்ப தேவைப்படும் இடங்களில் அமைக்கப்படும்.

**பூங்கா மற்றும் பூந்தோட்டம்**

பூங்காக்கள் ரூ.7.00 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட உள்ளன. தனியார் ஒப்பந்ததாரர்கள் மூலம் பூங்காக்கள் காலமுறைப்படி பராமரிக்கப்படும். புதிதாக மேம்படுத்தப்படும் பூங்காக்களோடு ஏற்கெனவே உள்ள பூங்காக்களில் சரியான பராமரிப்புப் பணிகளையும் போதுமான அளவிற்கு மேற்கொள்வது உறுதி செய்யப்படும்.

**பெரம்பூர் இறைச்சிக் கூடம் நவீனமயமாக்கும் திட்டம்**

சென்னை நகரில் பெரம்பூரில் உள்ள இறைச்சிக் கூடம் மிகப்பெரியதும், பழமையானதும் ஆகும். இது 1903 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இவ்விறைச்சிக் கூடம் 10 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. இங்கு நாள் ஒன்றிற்கு சுமார் 1,000 ஆடுகளும், 150 மாடுகளும் இறைச்சிக்காக கால் நடை மருத்துவர்களின் பரிசோதனைக்குட்படுத்தப்பட்ட பின் வெட்டப்படுகிறது. இவ்விறைச்சிக் கூடத்தினை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் நவீனப்படுத்திட சென்னை மாநகராட்சி நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்திற்கென வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்க ஆலோசகரை நியமிக்க ஒப்பந்தங்கள் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் சுமார் ரூ.15.00 கோடி செலவில் மேற்கொள்ளப்படும். விரைவில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் பெறப்பட்டு வேலைகள் துவங்கப்படவுள்ளன.

**மாவட்ட குடும்ப நல மையங்கள்**

மாநகராட்சியின்கீழ் இயங்கி வரும் மாவட்ட குடும்ப நல மையங்கள் சென்னை நகரில் வாழ்ந்து வரும் பொதுமக்களுக்கு குடும்ப நலம்

மற்றும் தாய், சேய் நலப் பணிகளை மேற்கொள்கிறது. இப்பணிகளை மேற்கொள்ள 93 சுகாதார மையங்கள் இயங்கி வருகின்றன. பேறு காலத்திற்கு முந்தைய கவனிப்பு, மகப்பேறு பணிகள், அவசர மகப்பேறு பணிகள், குடும்ப நலப்பணிகள், மகப்பேறு மற்றும் தடுப்பூசிப் பணிகள் போன்றவை இந்த குடும்ப நல மையங்களில் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டு அவசர கால மகப்பேறு நிலையங்களில் இரத்த வங்கிகள் இயங்கி வருகின்றன. மகப்பேறு, புற்றுநோய் கண்டுபிடிப்பு குறித்தும் புதிய திட்டங்கள் தற்போது இப்பணிகளில் சேர்க்கப்பட்டுள்ளன. குழந்தை இறப்பையும், மகப்பேறின்போது தாயின் இறப்பையும் குறைப்பதை உறுதி செய்வதை மாநகராட்சி முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. அதேபோன்று, குழந்தை பிறப்பின் விழுக்காடு 12-லிருந்து 10 ஆக குறைக்கப்படும். வளரிளமை சுகாதார நலத்திட்டம் என்ற புதிய திட்டத்தை இந்த வருடத்திலிருந்து அறிமுகப்படுத்துகிறது.

**பொது சுகாதார நடவடிக்கைகள்**

**பிரச்சினையான இடங்களில் கழிவறை வசதி செய்து தருதல்**

சென்னையில் பொது இடங்களில் மலம் கழிக்கும் தொல்லைகளை ஒழிக்க மாநகராட்சி உறுதிகொண்டுள்ளது. இத்தகைய பிரச்சினைகள் காணப்பட்ட 288 இடங்களில், 225 இடங்களில் இதனை முற்றிலும் ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எங்கெங்கு தேவைப்படுகிறதோ அவ்விடங்களில் புதிய கழிவறைகள் அமைப்பதோடு, கழிவறை வசதிகள் உள்ள இடங்களை மேற்பார்வையிடுவதின் மூலம் இத்தொல்லைகள் ஒழிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 63 இடங்களிலும் இத்தொல்லைகளை ஒழிப்பதற்கு நடவடிக்கை தொடரப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் 300 நவீன வசதிகள் கொண்ட கழிப்பறைகளைக் கூடுதலாகக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**தெரு நாய்த் தொல்லைகளைத் தடுத்தல்**

அரசு சாரா நிறுவனங்கள் மூலம் தெரு நாய்களுக்குக் குடும்பக் கட்டுபாடு செய்து தெரு நாய்களின் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படும். இந்த நடவடிக்கையின் காரணமாக வெறிநாய்க்கடி நிகழ்வுகள் குறையும்.





**சுற்றித் திரியும் கால்நடை தொல்லைகளைத் தடுத்தல்**

சுற்றித் திரியும் கால்நடைகள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்.

பிடிக்கப்பட்ட மாடுகளை விடுவிப்பதற்கு அவற்றின் உரிமையாளர்களின் மீது அபராதம் விதிக்கப்படும். கேட்பாரற்ற கால்நடைகள் அரசு சாரா நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்படும். முனைப்போடு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சுற்றித் திரியும் கால்நடைகளின் தொல்லை கட்டுப்படுத்தப்படும்.

**மலேரியா தடுப்பு**

மலேரியா நோய் பரவுவதைத் தடுக்க கிணறுகள் மற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் கொசு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது கட்டாயமாக்கப்படும்.

**கொசுத் தொல்லைத் தடுப்பு**

கொசுக்கள் உற்பத்தியாவதைத் தடுக்க 800 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மழை நீர் வடிகால்கள் வருடத்திற்கு இரண்டு முறை தூர் வாரப்படும். கொசுத் தொல்லையைத் தடுப்பதற்கு அனைத்து நீர் வழிகளையும் சுத்தம் செய்வதோடு, கொசு மருந்தும் தெளிக்கப்படும்.

**பிறப்பு இறப்புச் சான்றிதழ்**

சம்மந்தப்பட்ட மருத்துவமனைகளிலிருந்து பிரசவம் முடிந்து செல்லும்போதே குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து பகுதி அலுவலகங்களும் பிறப்பு இறப்புச் சான்றிதழ்களை உடனுக்குடன் வழங்குவதற்காகக் கணினிகள் அனைத்தும் தலைமையிடத்திலுள்ள கணினியுடன் இணைக்கப்பட்டுள்ளன. 16–08–2004–லிருந்து இதுவரை 1,17,225 கணினி மயமாக்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்களும், 37,232 இறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

**உணவுக் கலப்படத்தைத் தடுத்தல்**

உணவுப் பொருட்களில் கலப்படத்தைக் கண்டறிவதற்காக ஒவ்வோர் உணவு ஆய்வாளரும் மாதத்திற்கு 10 மாதிரிகளை எடுக்க வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

## மதுரை மாநகராட்சி

### குடிநீர் விநியோகம்

வைகை அணையிலிருந்து நீர் பெற்று இரண்டாவது வைகைக் குடிநீர் வழங்கும் திட்டம் ரூ.60.00 கோடி மதிப்பீட்டில் 2006–2007–ல் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. மிகவும் பழமையான குடிநீர்க் குழாய்களை 25 கி.மீ. நீளத்திற்கு மாற்றியமைப்பதற்கும், விரிவாக்கப் பகுதிகளில் புதிய குடிநீர்க் குழாய் 15 கி.மீ. நீளத்திற்கு அமைப்பதற்கும் ரூ.75.00 இலட்சம் செலவிடக் கருதப்பட்டுள்ளது.

### சாலைப் பணிகள்

பாதாள சாக்கடை அமைப்பு ஏற்படுத்தியதனால் பழுதடைந்த சாலைகளைப் புதுப்பிக்கவும், முன்னிருந்த நிலைக்குக் கொணரவும் ரூ.35.26 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

### மழை நீர் வடிகால் வேலைகள்

முக்கிய பேருந்து வழித்தட சாலைகளில் 28 கி.மீ. தூரத்திற்கு மழைநீர் வடிகால் ரூ.5.98 கோடி செலவில் கட்டப்பட உள்ளது.

### பேருந்து நிழற்குடை

2006–2007–ல் மாநகராட்சியின் பல்வேறு பகுதிகளில் ரூ.75.00 இலட்சம் மதிப்பீட்டில் 30 நவீன பேருந்து நிழற்குடைகள் பொதுமக்கள்–தனியார் பங்களிப்புடன் அமைக்கப்பட உள்ளன.

### பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள்

ரூ.2.40 கோடி மதிப்பீட்டில் தற்போதுள்ள 30 பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்களை 2006–2007-ல் மேம்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சுற்றுலா மேம்பாடு

மதுரை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சியம்மன் திருக்கோவிலைச் சுற்றியுள்ள நான்கு சித்திரை வீதிகளில் சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைக்கப்பட உள்ளது. மேலும், இந்த நான்கு சித்திரை வீதிகளிலும் நிலத்தடிப் பாதை அமைத்து அதன் வழியாகக்



2006 ஆகஸ்ட் 11]

குடிநீர்க் குழாய்கள், உயர் மின் அழுத்த மின் கம்பிகள், தொலைத் தொடர்பு இணைப்புக் கம்பிகள் ஆகியவைகளைக் கொண்டு செலுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் திருக்கோவில் சுற்றுச்சுவர் கட்டும்பணி மற்றும் அழகுப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது. இப்பணிக்கான மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.2.94 கோடி சுற்றுலா மேம்பாட்டு நிதியிலிருந்து செலவழிக்கப்படும்.

### காய்கறிச் சந்தை

2006–2007-ல் ரூ.1.79 கோடியில் 13 காய்கறிச் சந்தைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

## கோயம்புத்தூர் மாநகராட்சி

### பில்லூர் குடிநீர்த் திட்டம்-II

கோயம்புத்தூர் மாநகராட்சியின் அனைத்துப் பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்குவதற்கு ரூ.172.80 கோடி மதிப்பீட்டில் மாநகராட்சிக்குத் தனியாக 2-வது பில்லூர் குடிநீர் வழங்கும் மேம்பாட்டுத் திட்டம் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டம் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ரூ.68.00 கோடி மாநகராட்சியின் பங்கீடு ஆகும்.

### பாதாள சாக்கடைத் திட்டம்

மாநகராட்சி மண்டலம் I, II, III பகுதியிலுள்ள பாதாள சாக்கடை அமைப்புக் குழாய்களைச் சீரமைக்கவும் மற்றும் IV, V, VI மண்டலங்களில் புதிதாக பாதாள சாக்கடை அமைப்புக் குழாய்களைப் பதிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு அரசு நிர்வாக அனுமதி ரூ.168.28 கோடிக்கு வழங்கப்பட்டு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

### சாலைகள்

2006–2007 ஆம் ஆண்டு ரூ.26.50 கோடி மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. நகரத்தின் மையப் பகுதியிலுள்ள சாலைகள் மழைநீர் வடிகால் அமைப்பதற்கும் பாதசாரிகள் நடைமேடை அமைப்பதற்கும் மாதிரி சாலைகளாக எடுத்துக்கொள்ளப்படும்.

### கால்வாய்களைத் தூய்மைப்படுத்துதல்

மாநகராட்சி எல்லையில் ஓடும் சங்கனூர்பள்ளம் கால்வாய் தூய்மைப்படுத்தப்பட்டு மாசற்ற கால்வாயாக ஆக்கப்படும். அதில் சிமெண்ட் கான்கிரீட் தளமும் சிறு வடிகால்களும் அமைக்கப்படுவதோடு கரைகளும் அமைக்கப்பட்டு, அதில் நடைபாதை, விளக்கு வசதி, அமர்வதற்கான இருக்கை வசதிகள் செய்துகொடுத்து அதன் மூலம் பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு இடமாக மாற்றியமைக்கப்பட உள்ளது.



2006 ஆகஸ்ட் 11]

### திடக் கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின்கீழ் ரூ.18.55 கோடிக்கு திட்டம் தயார் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளைச் சிறப்பாகச் செயல்படுத்திடப் போதுமான வாகனங்கள் மற்றும் குப்பைத் தொட்டிகளும் வாங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

குப்பைகளை உரமாக்கும் இயந்திரம் ஒன்று "கட்டி பராமரித்து மாற்றும்" திட்டத்தின்கீழ் நிறுவி, மக்கும் குப்பையிலிருந்து உரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் குப்பை சேகரிக்கும் பணியைத் தனியார்வசம் ஒப்படைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### உக்கடம் சந்தை

உக்கடம் சந்தையில் நவீன காய்கனிக் கடைகள் 2006–2007–ல் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், இச்சந்தையில் மீன் மற்றும் இறைச்சிக் கடைகள் கட்டவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### பேருந்து நிலையம்

காந்திபுரம் மத்திய பேருந்து நிலையத்தினுடைய நெருக்கடியைக் குறைக்கும் வகையில் புதிய நவீன பேருந்து நிலையம் மேட்டுப்பாளையம் சாலையில் 2006–2007–ல் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### அலுவலகக் கட்டடம்

மாநகராட்சி தெற்கு மண்டல அலுவலகத்திற்காக அலுவலகக் கட்டடம் 2006–2007–ல் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### விலாங்குறிச்சி சாலையில் நவீன மயானம் அமைத்தல்

நடப்பாண்டில் பொதுமக்கள் மற்றும் தனியாருடன் இணைந்து ரூ.1.02 கோடியில் நவீன மயானம் விலாங்குறிச்சி சாலையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

## திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

### குடிநீர் வழங்கல்

**மாநகராட்சியுடன் புதிதாக சேர்க்கப்பட்ட பகுதிகளுக்குச் சீரான குடிநீர் வழங்கும் திட்டம்**

மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்கும் சீரான குடிநீர் வழங்குவதற்கு குடிநீர் அபிவிருத்தித் திட்டம் ஒன்று தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**மாநகராட்சியுடன் புதியதாகச் சேர்க்கப்பட்ட பகுதிகளுக்குப் பாதாளச் சாக்கடை அமைப்பு**

மாநகராட்சியுடன் சேர்க்கப்பட்ட பகுதியிலுள்ள தெருக்களும் பயனடையும் வகையில் பாதாளச் சாக்கடை அமைப்பு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### சாலைகள் மற்றும் பாலங்கள்

**⇒ வ.உ.சி. சாலைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக சாலைக்கும் இடையிலான இணைப்புச் சாலை**

நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வ.உ.சி. சாலைக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகச் சாலைக்கும் இடையே இணைப்புச் சாலை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**⇒ அண்ணாநகர் இணைப்புச் சாலை**

மாநகரின் மையப் பகுதியில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க தென்னூர் அண்ணாநகர் சாலையையும் பாரதிதாசன் சாலையையும் இணைக்க 0.69 கி.மீ. சாலை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட நீதிமன்ற வளாகத்தின் அருகில் உய்யக்கொண்டான் கால்வாயின்மேல் பாலம் அமைக்கப்படும்.

**⇒ குழுமணிப் பாலம்**

குழுமணிச் சாலையில் குடமுருட்டி ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாலம் மிகவும் பழமை வாய்ந்த பழுதடைந்த குறுகலான பாலமாக உள்ளதால் போக்குவரத்துத் தடை அடிக்கடி ஏற்படுகிறது. இதனைத் தவிர்க்க புதிய பாலம் ஒன்று 2006–2007–ல் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 11]

### திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

திடக் கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகள் 2000–ஐ முழுமையாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 2006–2007–ல் ரூ.8.29 கோடி செலவில் திடக் கழிவு மேலாண்மைப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு முடிக்கப்படவுள்ளன.

சுற்றுப்புறச் சூழலை மாசுபடுத்தாத வகையில் குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கவும் உத்தேசம் உள்ளது.

### ஒருங்கிணைந்த பேருந்து நிலையம்

ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் ஒன்று திருச்சி மாநகருக்காக கட்ட உத்தேசிக்கப்பட்டு இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது.

### மத்தியப் பேருந்து நிலைய விரிவாக்கம்

மத்தியப் பேருந்து நிலையத்தில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அதன் அருகில் அமைந்துள்ள ரெயில்வேக்குச் சொந்தமான 11,204 சதுர மீட்டர் இடத்தினை ரூ.5.67 கோடிக்கு மாநகராட்சி நிதியிலிருந்து வாங்கி மத்தியப் பேருந்து நிலையத்துடன் சேர்க்கப்பட்டுள்ளது. பேருந்து நிறுத்துமிடங்களை 50–லிருந்து 77–ஆக உயர்த்தவும், புதியதாக கழிப்பறை வளாகங்கள், சுற்றுப்புறச் சுவர் கட்டவும், சாலைகள் பேவர் இயந்திரம் மூலம் அமைக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணி 2006–2007–ல் எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. இத்திட்ட மதிப்பீடு ரூ.2.00 கோடி ஆகும்.

### பொதுமக்கள்–தனியார் கூட்டாண்மை (Public–Private Partnership)

தனியார் மற்றும் வியாபார நிறுவனங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் மூலம், மாநகராட்சிப் பகுதியில் ஒளிரும் வண்ண விளக்கு வசதியுடன் கூடிய நவீன பயணிகள் நிழற்குடைகள், சாலை மையத் தடுப்பு கிரில் அமைத்தல் ஆகியன முக்கியப் பகுதிகளான மத்தியப் பேருந்து நிலையம், சத்திரம் பேருந்து நிலையம் மற்றும் காந்தி மார்க்கெட் ஆகியவற்றில் அமைத்து பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனைச் சுற்றியுள்ள குறிப்பிட்ட எல்லை வரை குப்பைகளை அகற்றுதல் உட்பட சுகாதார வளாகங்களைப் பராமரித்தல் போன்ற பணிகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் சுய உதவிக் குழுக்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டில் இத்திட்டத்தினைப் புதிய பகுதிகளுக்கும் விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

## சேலம் மாநகராட்சி

### குடிநீர் வழங்குதல்

பெருகிவரும் மக்கட்தொகையை கணக்கில் கொண்டும், குடிநீர் தேவையைக் கருத்தில் கொண்டும் சேலம் மாநகராட்சிக்குத் தனியாக குடிநீர் விநியோகத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட உள்ளது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் ரூ.176.00 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரித்துள்ளது.

### பாதாள சாக்கடை அமைப்பு

சேலம் மாநகராட்சியில் பாதாளச் சாக்கடை அமைப்பு ரூ.147.00 கோடி மதிப்பீட்டில் கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2006–2007–ல் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

### சாலைகள்

சேலம் மாநகராட்சியில் 712.79 கி.மீ. நீளமுள்ள சாலைகள், தெருக்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.38.00 கோடி மதிப்பீட்டில் சாலைப்பணிகள் செய்யப்பட உள்ளன.

### இறைச்சிக் கூடம்

சேலம் மாநகரப் பகுதியில் நவீன இரண்டு புதிய இறைச்சிக் கூடங்கள் மற்றும் மீன் அங்காடி ஆகியவை சுகாதாரமான முறையில் மாசுக் கட்டுப்பாடு வாரிய ஆலோசனையுடன் ரூ.60.00 இலட்சம் மதிப்பில் 2006–2007–ல் அமைக்கப்பட உள்ளன.

### மாநகராட்சி மகப்பேறு மருத்துவமனை மற்றும் குழந்தை நல்வாழ்வு மையம்

சேலம் மாநகராட்சிப் பகுதியில் கீழ்க்கண்டுள்ள இடங்களில் புதிய மகப்பேறு மருத்துவமனைகள் – குழந்தைகள் நல்வாழ்வு மையம் – மருத்துவமனை கட்டடங்கள் ஆகியன ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட உள்ளன.



2006 ஆகஸ்ட் 11]

| வ. எண் | இடம் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | எக்ஸ்–சர்வீஸ் மென் காலனி | 20 |
| 2 | கருங்கல்பட்டி | 20 |
| 3 | ஜாரி கொண்டலாம்பட்டி | 20 |

### மருத்துவமனைகள்

பேரறிஞர் அண்ணா மருத்துவமனையில் போதிய நவீன வசதிகள் செய்திட ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

### திருமணிமுத்தாறு அபிவிருத்தி திட்டம் பகுதி–II

திருமணிமுத்தாறு சேலம் நகரத்தின் மையப் பகுதியில் ஓடுகின்றது. குடியிருப்புகளில் உள்ள கழிவுநீர் இதில் கலப்பதால் மாசுபடுவதுடன், அடிக்கடி இதில் வெள்ளப்பெருக்கும் ஏற்படுகிறது. இந்த ஆற்றின் 1,500 மீட்டர் தூரம் ரூ.5.00 கோடி செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 2.880 கி.மீ. தூரம் வெள்ளக்குட்டி ஓடையிலும், 2.560 கி.மீ. தூரம் திருமணிமுத்தாறு இணையும் பகுதியிலும் ரூ.31.00 கோடி மதிப்பீட்டில் அபிவிருத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 11

## திருநெல்வேலி மாநகராட்சி

### குடிநீர் வழங்கல்

தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண் *1* முதல் *4* மற்றும் *55* (பகுதி) ஆகிய பகுதிகளில் குடிநீர் விநியோகத்தினை மேம்படுத்த ரூ.*5.94* கோடி மதிப்பீட்டிலான புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்று மேலப்பாளையம் டக்கரம்மாள்புரம் பகுதியில் குடிநீர் வசதி ஏற்படுத்திக் கொடுக்க ரூ.*4.50* கோடி மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும்.

### சாலைகள்

பாதாளச் சாக்கடை அமைப்பின்போது பழுதான சாலைகள் *334* கி.மீ. ரூ.*25.00* கோடியில் *2006–2007*–ல் மீண்டும் அமைக்கப்படும். மேலும், ரூ.*5.00* கோடி மதிப்பீட்டில் மேலப்பாளையத்தில் சாலை வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட உள்ளன.

### பேருந்து நிலையம்

வேய்ந்தான்குளத்தில் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் தனியார் பேருந்துகளுக்கான நிலையம் அமைக்க (Omni Bus Stand) நடவடிக்கை எடுக்கப்படும்.

### திடக் கழிவு மேலாண்மைத் திட்டம்

*2006–2007*–ல் திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தினை, திறம்பட செயல்படுத்த புதிய வாகனங்கள் வாங்குதல் மற்றும் உரக் கிடங்கு அபிவிருத்திப் பணிக்காக ரூ.*3.50* கோடி செலவு செய்யப்பட உள்ளது.

### இறைச்சிக் கூடம்

*2006–2007* ஆம் ஆண்டில் நவீன இறைச்சிக் கூடம் ஒன்று மேலப்பாளையம் பகுதியில் ரூ.*42.00* இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.



2006 ஆகஸ்ட் 11]

### எரிவாயு சுடுகாடு அமைத்தல்

*2006–2007* ஆம் ஆண்டில் தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் ரூ.*30.00* இலட்சம் மதிப்பீட்டில் வாயு மூலம் எரிவாயு சுடுகாடு (Gasifier) அமைக்கப்பட உள்ளது.

### தெரு விளக்குகள்

*2006–2007*–ல் *500* கூடுதல் தெரு விளக்குகள் ரூ.*20.00* இலட்சம் மதிப்பீட்டில் பொருத்தப்படும்.

## தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி (TNUDF)

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் 1988 முதல் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்துவதற்கும் நகர்ப்புற உள்கட்டமைப்புக்குத் தனியார் முதலீட்டை ஈர்ப்பதற்கும் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி, 1996 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியப் பொறுப்பாட்சிச் சட்டம் 1882–ன்கீழ் ஒரு பொறுப்பாட்சி நிறுவனமாக அமைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் மற்றும் பிற நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் உள்கட்டமைப்புச் சொத்துக்களை உருவாக்குவதற்காக தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பு முறையில் ஒரு நிதி இடையீட்டாளராக அமைக்கப்பட்டது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் உத்திரவாதம் கொடுக்காத முறையில் நகர உள்கட்டமைப்புக்கு நீண்டகாலக் கடன் வழங்கும் தமிழ்நாடு அரசு மற்றும் மூன்று நிதிநிறுவனங்கள் (ICICI, HDFC மற்றும் IL&FS) பங்கேற்கும் முதல் பொது மற்றும் தனியார் கூட்டமைப்பாகும்.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் குறிக்கோள்கள்:–

- நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி அளிப்பதன் மூலம், நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
- பொது மற்றும் தனியார் கூட்டு முயற்சிமூலமாக, உள்கட்டமைப்புகளில் தனியார் பங்கேற்க உதவுதல்
- நகர்ப்புற ஏழைகளின் பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் வகையில் மானிய நிதி எனும் துணைத் திட்டத்தைச் செயல்படுத்துதல்
- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் மூலதனச் சந்தையில் நிதி திரட்ட ஏதுவாக, அவற்றின் நிதி நிர்வாகத்தை மேம்படுத்துதல்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம் (TNUDF) தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் – 2 (TNUDP – II) என்னும் திட்டத்தை 1999 முதல் 2004 வரை உலக வங்கியின் தொடர் நிதியளிப்பின்மூலம் வெற்றிகரமாக அமல்படுத்தியது. மேலும் இதன்மூலம் மட்டுமல்லாமல், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி வெளிச்சந்தையில் கடன் பத்திரங்கள் வெளியிடுதல், உபயோகிப்பாளர் பங்களிப்பு ஆகியவற்றின்மூலம் கூடுதல் நிதியைத் திரட்டியது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியம்,





அடிப்படை உள்கட்டமைப்பு தேவைப் பணிகளான, சாலைகள், குடிநீர் வழங்கல், மழைநீர் வடிகால், திடக்கழிவு மேலாண்மை, பாதாளச் சாக்கடைத் திட்டம் போன்ற திட்டங்களுக்கு நிதி வசதி அளிப்பதோடு மட்டுமல்லாமல் வணிக நோக்குடைய திட்டங்களான பேருந்து நிலையம், வணிக வளாகங்கள் ஆகியவற்றிற்கும் நிதியளிக்கிறது.

### தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்– III

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-II–ன் சாதனைகளைத் தொகுத்து, தொடர்ந்து தமிழ்நாட்டு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கென தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III உருவாக்கப்பட்டது.

### இத்திட்டத்தின் நோக்கங்களாவன:–

- உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொடர்ந்து நிதி அளிக்கும் நோக்கத்தோடு செயல்படும் TNUDF என்னும் அமைப்பை, நிதி இடையீட்டாளராக மேம்படுத்துதல்
- நகர்ப்புற சீர்திருத்தத்தினைப் பலப்படுத்துதல் மற்றும் இரண்டாவது திட்டத்தின் சாதனைகளைத் தொகுத்து, அத்திட்டத்தின் நிறுவன மற்றும் தொழில்நுட்பப் பகுதிகளை மேம்படுத்துதல்
- சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் சாலைகளை அகலப்படுத்துதல், சாலை மேம்பாலம், சாலைக் கீழ்பாலம் ஆகிய போக்குவரத்து துணைத் திட்டங்களை எடுத்துக்கொள்ள ஒரு மானிய நிதியை ஏற்படுத்துதல்
- இத்திட்டம் 19–10–2005 முதல் ஐந்தாண்டு காலத்திற்கு ரூ.1,925 கோடியில் (434 மில்லியன் அமெரிக்க டாலர்), நிறைவேற்றப்படவுள்ளது. 300 மில்லியன் அமெரிக்க டாலர் உலக வங்கி நிதி உதவியுடன் தொடங்கப்பட்டுள்ளது
- இந்நிறுவனம், நிறுவன மேம்பாட்டுக்கூறு மற்றும் நகர்ப்புற முதலீட்டுக்கூறு என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. நிறுவன மேம்பாட்டுக்கூறு என்பது தொழில்நுட்ப உதவி மற்றும் பயிற்றுவித்தல்மூலம் இத்திட்டத்தை மேம்படுத்துவது

[2006 ஆகஸ்ட் 11

- நகர்ப்புற முதலீட்டுக்கூறு என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு முதலீட்டு மானியம் மற்றும் கடன் வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்கியது. உள்ளாட்சி அமைப்புகளின் தேவைக்கேற்ப அவற்றின் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளான குடிநீர் வழங்கல், கழிவுநீர் சேகரித்தல், திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் வடிகால், சாலைகள் மற்றும் பொது வசதிகளான போக்குவரத்து மற்றும் சுகாதார வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் இதன் முக்கிய நோக்கமாகும்

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி, தனது நிதி மேலாளரான தமிழ்நாடு நகர்ப்புற கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனம் (TNUIFSL) மூலம் பல்வேறு உள்ளாட்சி அமைப்புகளுக்குத் திட்ட ஆலோசனைகளும், நிதி ஆலோசனைகளும், மேலும் பல்வேறு கலந்தாய்வுப் பணிகளும் அளிக்கிறது.

**தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதியத்தின் துறைவாரியான ஒப்பளிப்பு**

கடந்த 2005–2006 ஆம் நிதியாண்டில் ரூ.381.25 கோடி அளவிற்கு கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதனையும் சேர்த்து கடந்த நிதியாண்டு இறுதிவரை மொத்தமாக ரூ.1,133.68 கோடி அளவிற்குக் கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**பணி வாரியான ஒப்பளிப்பு பின்வருமாறு:-**

| பணி விவரம் | ரூ. கோடியில் | விழுக்காடு |
|---|---|---|
| பாதாளச் சாக்கடைத் திட்டம் | 439.34 | 38.75 |
| சாலைகள் மற்றும் பாலங்கள் | 409.91 | 36.16 |
| குடிநீர் வழங்கல் | 212.80 | 18.77 |
| திடக்கழிவு மேலாண்மை | 34.24 | 3.02 |
| பேருந்து நிலையம் மற்றும் வணிக வளாகம் | 27.19 | 2.40 |
| மழைநீர் வடிகால் | 5.39 | 0.48 |
| மற்றவை | 4.81 | 0.42 |
| மொத்தம் | 1133.68 | 100.00 |



2006 ஆகஸ்ட் 11]

**2006–2007 ஆம் ஆண்டின் உள்கட்டமைப்புத் திட்டத்துக்காக ஒப்பளிக்கப்படவுள்ள மதிப்பீடு:-**

2006–2007 நிதியாண்டில் திடக்கழிவு மேலாண்மை, வடிகால்கள் அமைத்தல், குடிநீர் வழங்கல், மின்சார சிக்கனம், சாலைப் பணிகள் போன்றவற்றிற்கு ரூ.400.00 கோடி மொத்த மதிப்பீடு கொண்ட உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு ரூ.240.00 கோடி கடன் வழங்கக் கருதப்பட்டுள்ளது.

**நிதி திரட்டுதல்**

தமிழக நகர்ப்புற வளர்ச்சிக்காக, KfW என்னும் ஜெர்மானிய நாட்டு நிதி நிறுவனத்திடமிருந்து US $70 மில்லியன் அளவிற்கு கடன் பெற தமிழக நகர்ப்புற வளர்ச்சி நிதியம் உத்தேசித்துள்ளது.

**குடிநீர் மற்றும் சுகாதார பொது நிதி (WSPF)**

சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் குடிநீர் மற்றும் பொது சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்காக அரசு குடிநீர் மற்றும் சுகாதார பொது நிதி என்ற அரசு அறக்கட்டளையை ஏற்படுத்தியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் தேவைகளை ஒன்று திரட்டி வெளிச் சந்தையிலிருந்து கடன் பெறுவதன்மூலம் உள்கட்டமைப்பு வசதிகளுக்கான வட்டி மற்றும் வணிக நடவடிக்கைகளின் செலவினங்கள் குறைக்கப்படுகின்றன.

**குடிநீர் மற்றும் சுகாதார பொது நிதியின் குறிக்கோள்களாவன:-**

1. உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குதல்
2. பொது நிதி அமைப்புமூலம் உள்நாட்டு மூலதனச் சந்தையிலிருந்து நிதி திரட்டுதல்
3. நேரடி முதலீடு மற்றும் கூட்டு முயற்சியின்மூலம், குடிநீர் மற்றும் கழிவு நீர் துறைகளில், தனியார் துறை பங்கெடுக்க உதவுதல்
4. உள்ளாட்சி அமைப்புகள் வெளிச் சந்தையிலிருந்து கடன் மூலமாக நிதி திரட்ட உதவுதல் மற்றும்
5. குடிநீர், சுகாதாரம் மற்றும் பிற உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு ஒரு இடை முகவராகச் செயல்படுதல்

[2006 ஆகஸ்ட் 11

*2002–ல், 13* உள்ளாட்சி அமைப்புகளுக்கு கடன் பத்திர வெளியீடு மூலம் ரூ.*30.41* கோடி நிதி திரட்டப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் மற்றும் பாதாள சாக்கடைத் திட்டங்களுக்காக அதனுடைய நிதித் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு தகுந்த கடன் பத்திரங்கள்மூலமாக சந்தையிலிருந்து ரூ.*100.00* கோடி நிதி திரட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 11]

## தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம் (TUFIDCO)

தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிக்கும்பொருட்டு அமைக்கப்பட்ட ஒரு தமிழ்நாடு அரசு நிறுவனமாகும். மத்திய அரசு திட்டங்களுக்கான மாநில அளவிலான முகமை நிறுவனமாகவும் டுபிட்கோ நிறுவனத்தை மாநில அரசு நியமித்துள்ளது.

### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JNNURM)

ஏப்ரல் *2005*–ல் பெருநகரத் திட்டம் முடிக்கப்பட்டு, அந்த இடத்தில் இந்திய அரசு தனது புதிய திட்டமான ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தை *03–12–2005*–ல் தொடங்கியது. இத்திட்டத்திற்கு முகமை நிறுவனமாக டுபிட்கோவைக் கடந்த பிப்ரவரி *2006*–ல் மாநில அரசு தெரிவு செய்துள்ளது. இந்தச் சீர்திருத்தம் தொடர்புடைய திட்டத்தில் தமிழகத்தில் சென்னை, மதுரை, கோவை மாநகராட்சிகள் தகுதி பெற்றிருக்கின்றன.

சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரையில் மொத்த மதிப்பீட்டுத் தொகையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் மானியங்கள் முறையே *35%* மற்றும் *15%* ஆகும். மீதியுள்ள *50%* தொகையைச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, நிதி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது சொந்தமாகவோ ஏற்க வேண்டும்.

மதுரை மற்றும் கோவை மாநகராட்சிகளைப் பொறுத்த வரையில் மத்திய அரசு மற்றும் மாநில அரசின் மானியங்கள் முறையே *50%* மற்றும் *20%* ஆகும். மீதியுள்ள *30%* திட்டத் தொகையைச் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு நிதி நிறுவனங்கள் மூலமாகவோ அல்லது சொந்தமாகவோ ஏற்க வேண்டும்.

நடப்பு நிதியாண்டில் ரூ.*1,500.00* கோடி மதிப்புள்ள திட்டங்கள் மத்திய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட உள்ளன.

### சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT)

மத்திய அரசு தனது புதிய திட்டமான சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டத்தைக் கடந்த

2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 3 ஆம் தேதி தொடங்கியுள்ளது. இதன் முக்கியக் குறிக்கோளானது அடிப்படை வசதிகளான குடிநீர் வழங்கல், சுகாதாரம், சாலைப் பணிகள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் பாரம்பரியமிக்கப் பகுதிகளை மேம்படுத்தல் போன்றவற்றைக் குறிப்பிட்ட காலவரைக்குட்பட்டு நகரங்களிலும், மாநகரங்களிலும் மேம்படுத்துவதாகும். இத்திட்டம் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்திற்குட்படாத அனைத்து மாநகரங்களுக்கும் மற்றும் நகரங்களுக்கும் பொருந்தும்.

மொத்த திட்ட மதிப்பீட்டுத் தொகையில் 80% மத்திய அரசின் மானியமாகவும் 10% மாநில அரசின் மானியமாகவும் எஞ்சியுள்ள 10% உள்ளாட்சி அமைப்பும் ஏற்க வேண்டும். நடப்பு நிதியாண்டில் (2006–2007) ரூ.200.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் பெற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டம் (MIDF)**

பெருநகரத் திட்டம், பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டிற்கான வழிமுறைகள் தொடர்ச்சி அடிப்படையில் வகுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. இதன் அடிப்படையில் பெருநகரத் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட மத்திய மற்றும் மாநில அரசின் பங்குகளில் 75% சுழற்சி நிதியாக உருவாக்கப்பட வேண்டும். அதன்படி இந்நிறுவனம் சுழற்சி நிதியை உருவாக்கியுள்ளது.

பெருநகரத் திட்டம் கடந்த ஏப்ரல் 2005 முதல் நீக்கப்பட்டு விட்டதால், மத்திய அரசானது, இந்த சுழற்சி நிதியைச் சென்னைப் பெருநகர அடிப்படை வசதி மேம்பாட்டிற்கு பெருநகரத் திட்டத்தின் வழிகாட்டுதல் முறைப்படி பயன்படுத்திக் கொள்ள அனுமதி அளித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் (2006–2007) ரூபாய் 200.00 கோடி மதிப்புள்ள திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IDSMT)**

மத்திய அரசின் ஆதரவு பெற்ற மற்றுமொரு திட்டமான ஒருங்கிணைந்த சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற வளர்ச்சித் திட்டமானது



20,000 லிருந்து 5,00,000 வரை மக்கட் தொகை கொண்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களின் அடிப்படை வசதி மேம்பாட்டிற்காக உருவானது. 01–04–2005 முதல் இத்திட்டமானது மத்திய அரசின் ஆதரவு பெற்ற சிறிய மற்றும் நடுத்தர நகர்ப்புற அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டம் (UIDSSMT) என 3–12–2005 அன்று முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய அரசு 1995–1996 முதல் 2004–2005 வரை மொத்தம் ரூபாய் 15,201.16 இலட்சம் மதிப்பீட்டில் 88 நகரங்களில் 413 திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. இதில் 236 திட்டங்கள் நிறைவு பெற்றுவிட்டன. எஞ்சியுள்ள திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**டுபிட்கோ அடிப்படை வசதி நிதித் திட்டம்**

மத்திய அரசின் ஆதரவு பெற்ற மேற்கூறிய திட்டங்களுக்கு முகவராக இருப்பதோடு அல்லாமல் டுபிட்கோவானது நகர்ப்புற அடிப்படை வசதியை மேம்படுத்துவதற்காக டுபிட்கோ அடிப்படை வசதி நிதித் திட்டம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இந்த நிதித் திட்டத்தின்கீழ் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, வாரியம் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கு அடிப்படை வசதி மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்தில் அனைத்து அடிப்படை வசதித் திட்டங்களும், அதாவது, குடிநீர் வழங்கல், கழிவு நீர் அகற்றுதல், சாலைப் பணிகள், வடிகால் மற்றும் வணிக வளாகங்கள் போன்ற திட்டங்கள் கடன் பெறுவதற்கு ஏற்றுக் கொள்ளக்கூடியவையாகும். இந்நிறுவனமானது, மற்ற நிறுவனங்களில் அதிக வட்டி விகிதத்தில் கடன் பெற்ற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் அதன் கடன் சுமையைக் குறைத்துள்ளது.

இதுவரை இத்திட்டத்தின்கீழ் ரூபாய் 1,650.00 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டு அதில் 1,400.00 கோடி ரூபாய் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் அதாவது (2006–2007)–ல் ரூபாய் 150.00 கோடி ஒப்புதல் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பொது வைப்பீடு ஏற்பு**

அடிப்படை வளர்ச்சி மேம்பாட்டுப் பணிகளுக்குக் குறைந்த வட்டி விகிதத்தில் நகர்ப்புற மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கும் மற்றும்

[2006 ஆகஸ்ட் 11

அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் கடன் வழங்கும்பொருட்டு கடந்த 02–08–2004 முதல் பொது வைப்பீடுகள் திட்டத்தை டுபிட்கோ நிறுவனம் அறிமுகப்படுத்தி பொதுமக்களிடமிருந்து வைப்பீடுகளை ஏற்றுக்கொண்டு வருகிறது.

டுபிட்கோ நிறுவனம் இதுவரை ரூபாய் 59.00 கோடி வைப்பீடுகளை ஏற்றுக் கொண்டுள்ளது. (2006–2007) நடப்பு நிதியாண்டில் மேலும் ரூபாய் 36.00 கோடி வைப்பீடுகள் ஏற்றுக்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 11]

## புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டு நிறுவனம்

பல ஆண்டுகளாக பின்னலாடை ஏற்றுமதியில் திருப்பூர் முன்னணி நகரமாக உலகளவில் அங்கீகாரம் பெற்றுள்ளது. இந்த நகருக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகமானது மாநில அரசு கட்டமைப்பு குத்தகை நிதியாளர்கள் நிறுவனம் (IL & FS) மற்றும் திருப்பூர் ஏற்றுமதியாளர்கள் சங்கம் (TEA) முதலிய அமைப்புகளின் முயற்சியால் சிறப்பு நோக்கு நிறுவனமாக 1995 ஆம் வருடம் பிப்ரவரி மாதம் இந்திய கம்பெனி சட்டம் 1956–ன்கீழ் நிறுவப்பட்டது. இந்த திட்டமானது 185 mld சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குதல் மற்றும் சுகாதார வசதிகளை ரூ.1,023.00 கோடி செலவில் மேம்படுத்துவதாகும். இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கமானது திருப்பூர் பகுதி வளர்ச்சித் திட்டத்தினைச் செயல்படுத்துவதாகும். நாட்டிலேயே அரசு மற்றும் தனியார் இணைந்து குடிநீர் வழங்குவதற்காக நிறுவப்பட்ட முதல் திட்டம் இதுவே ஆகும். இத்திட்டமானது ஒரு முன்னோடியாகத் திகழ்ந்து, இம்மாநிலத்தில் பல்வேறு கட்டமைப்பு வளர்ச்சிப் பணிகளுக்குத் தனியார் துறையின் முதலீட்டினை ஈர்க்கும்.

### திட்ட நோக்கம்

இத்திட்டத்தின்மூலம் கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு திருப்பூரில் உள்ள சாயப்பட்டறை மற்றும் சலவைத் தொழிற்சாலைகள் மற்றும் திருப்பூர் நகராட்சி, 15 கிராம பஞ்சாயத்துகள், 3 பேரூராட்சிகள் ஆகியவற்றுக்குக் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், வழிப்பாதையில் அமைந்துள்ள 5 ஒன்றியங்களுக்கும் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்காக நவம்பர் 2002–ல் துவங்கப்பட்ட கட்டுமானப் பணியானது முடிவடைந்து தொழிற்சாலைகள் மற்றும் வீட்டு உபயோகத்திற்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கான கட்டுமானப் பணிகள் செப்டம்பர் 2006–ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 11

**நிதி பற்றிய குறிப்பு**

இத்திட்டத்திற்குத் தேவையான மொத்த செலவான ரூ.1,023.00 கோடியானது பின்வரும் வகையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| சமபங்கு | ரூ. 322.70 கோடி |
| சாதாரணக் கடன் | ரூ. 86.50 கோடி |
| கடன் | ரூ. 613.80 கோடி |
| மொத்தம் | ரூ. 1,023.00 கோடி |

இத்திட்டத்திற்காக 31 ஜூலை 2006 வரை ரூ.947.00 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசிடமிருந்து சமபங்குத் தொகையான ரூ.50.00 கோடி முழுவதும் பெறப்பட்டது.



2006 ஆகஸ்ட் 11]

## தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம்

**குடிநீர் வழங்கல்**

தமிழகத்தில் உள்ள அனைத்து ஊரக மற்றும் நகர்ப்புறப் பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை அளிப்பது அரசின் முக்கிய குறிக்கோளாகும். நிலத்தடி நீர் செறிவூட்டுதல்மூலம் குடிநீர் ஆதாரங்களின் நிலைத் தன்மையை மேம்படுத்துவதற்கும் அரசு சமமான முக்கியத்துவம் அளிக்கிறது.

குடிநீர் மற்றும் வடிகால் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், நீர் சேமிப்பு மற்றும் அத்தியாவசியத் தேவைக்கேற்ப குடிநீரைப் பயன்படுத்துவதிலும் பொதுமக்களின் ஈடுபாடு மற்றும் பங்களிப்பு ஆகியவற்றை உணர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு உறுதி அளிக்கிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 14—4—1971 அன்று அமைக்கப்பட்டது. இவ்வாரியம், சென்னை மாநகர் நீங்கலாக மாநிலம் முழுவதும் குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பாதாளச் சாக்கடைத் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பை ஏற்றுள்ளது.

தமிழக அரசால் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு வழங்கப்படும் குறைந்தபட்ச பாதுகாக்கப்பட்ட குடிநீரின் அளவு பின்வருமாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| மாநகராட்சிகள் | — 110 லிட்டர்கள் |
| நகராட்சிகள் | — 90 லிட்டர்கள் |
| பேரூராட்சிகள் | — 70 லிட்டர்கள் |
| ஊரகக் குடியிருப்புகள் | — 40 லிட்டர்கள் |

மேற்கண்ட நிர்ணயிக்கப்பட்ட அளவுகளின் அடிப்படையில் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**ஊரகக் குடிநீர்த் திட்டம்**

மாநில அரசின் குறைந்தபட்ச தேவைத் திட்டம் மற்றும் மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் அளிக்கப்படும் முழு மானியத்தில் ஊரகப் பகுதிகளில் குடிநீர்த் திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. ஊரகக் குடியிருப்புகளில்

வழங்கப்படும் குடிநீர் வசதி நிலையை அறியும் வகையில், அவ்வப்போது ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊரகக் குடியிருப்புகளின் குடிநீர் வசதி நிலையை அறியும் பொருட்டு 2002–2003 ஆம் ஆண்டில் இறுதியாக மறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. எனவே, மேற்கண்ட ஊரகக் குடியிருப்புகளின் தற்போதைய குடிநீர் வசதி நிலையை அறியும்பொருட்டு துரிதமாக மறு ஆய்வு மேற்கொள்ளப்பட உள்ளது.

மேற்கண்ட மறு ஆய்வை அடிப்படையாகக் கொண்டு, நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் அனைத்திற்கும் மூன்றாண்டுகளில் முழு அளவு குடிநீர் வழங்க, குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டில் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்கும் குறைவாக குடிநீர் வசதி பெறும் 968 குடியிருப்புகளுக்கும் முழு அளவு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். மேலும், குடிநீர் தரம் பாதிக்கப்பட்ட 678 குடியிருப்புகளுக்கும் நடப்பு நிதியாண்டில் (2006–2007) முழு அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டில், தமிழக அரசின் ரூ.41.00 கோடி நிதி ஒதுக்கீடு மற்றும் மத்திய அரசின் ரூ.120.00 கோடி நிதி ஒதுக்கீட்டின்மூலம் ஊரகக் குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

## 2006–2007 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்:

### ஊரகக் குடிநீர்த் திட்டங்கள்

- Ø நடப்பு நிதியாண்டில், 7,000 ஊரகக் குடியிருப்புகளுக்குத் தனி மின்விசைத் திட்டங்கள் மற்றும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் மூலமாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி அளிக்கப்படும்.
- Ø நடப்பு நிதியாண்டில், நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டருக்கும் குறைவாகக் குடிநீர் வசதி பெறும் 968 ஊரகக் குடியிருப்புகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டு குடிநீர் வசதி வழங்கப்படும்.





- Ø நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 10 லிட்டரிலிருந்து 20 லிட்டர் வரை குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகளுக்கு நடப்பாண்டில் முன்னுரிமை வழங்கப்பட்டு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.
- Ø ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையால் நடத்தப்படும் 227 பள்ளிகளையும் சேர்த்து 3,274 குடிநீர் வசதியற்ற அரசுப் பள்ளிகளுக்கு ரூபாய் 29 கோடி மதிப்பீட்டில் குடிநீர் வசதி செய்து தரப்படும்.
- Ø ஏற்கெனவே பயனில் உள்ள குடிநீர்த் திட்டங்களில் புனரமைப்பு தேவைப்படும் திட்டங்களுக்கு புனரமைப்புப் பணிகள் ரூபாய் 50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

### கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள்

நடப்பாண்டில் 105 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ரூபாய் 956.00 கோடி மதிப்பீட்டில் செயலாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் 60 கூட்டுக் குடிநீர் திட்டங்கள் ரூபாய் 441.00 கோடி மதிப்பீட்டில் 5 நகராட்சிகள், 26 பேரூராட்சிகள், 2,420 ஊரகக் குடியிருப்புகளில் உள்ள சுமார் 2.9 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் நிறைவேற்றப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும். இவற்றுள், நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட உள்ள சில முக்கியமான கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் விவரம் பின்வருமாறு:–

- Ø **நாமக்கல் மாவட்டத்தில்** சேந்தமங்கலம், காளப்பநாயக்கன்பட்டி, நாமகிரிப்பேட்டை, ஆர். புதுப்பட்டி, பட்டினம், சீராப்பள்ளி பேரூராட்சிகள் மற்றும் 1,399 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 126.85 கோடி மதிப்பீட்டில் சுமார் 5.81 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- Ø **நாகப்பட்டினம் மாவட்டத்தில்** நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேளூர், வேளாங்கன்னி பேரூராட்சிகள் மற்றும் 890 ஊரகக் குடியிருப்புகளுக்கு மொத்த குடிநீர் ஒதுக்கீட்டுடன், ரூபாய் 98.85 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.34 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- **தூத்துக்குடி மாவட்டத்தில்** 239 கடலோர/ஊரகக் குடியிருப்புகள் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் அருப்புக்கோட்டை மற்றும் விருதுநகர் நகராட்சிகள், மல்லாங்கிணறு மற்றும் காரியாப்பட்டி பேரூராட்சிகள் ஆகியவற்றிற்கு ரூபாய் 68.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.31 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- **கன்னியாகுமரி மாவட்டத்தில்** பொன்மனை, குலசேகரம், வேர்க்கிளம்பி, குமாரபுரம், கோதநல்லூர், விலவூர், நெய்யூர் ஆகிய பேரூராட்சிகள் மற்றும் 26 வழியோரக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 12.86 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.19 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

இவை தவிர பின்வரும் முக்கியத் திட்டங்கள் நடப்பு நிதியாண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

- தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில், புளோரைடினால் பாதிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கு, பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வகையில், இந்த மாவட்டங்களில் உள்ள 3 நகராட்சிகள் (தருமபுரி, கிருஷ்ணகிரி மற்றும் ஓசூர்) 17 பேரூராட்சிகள் மற்றும் 6,755 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ஒகேனக்கல் அருகே காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு ரூபாய் 1,005 கோடி மதிப்பீட்டில் சுமார் 29.80 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ஜப்பானிய பன்னாட்டுக் கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- இராமநாதபுரம் மாவட்டத்தில், காவிரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு 5 நகராட்சிகள் (இராமநாதபுரம், பரமக்குடி, கீழக்கரை, இராமேஸ்வரம் மற்றும் சிவகங்கை) 11 பேரூராட்சிகள் மற்றும் சிவகங்கை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சார்ந்த வழியோரக் குடியிருப்புகளையும் சேர்த்து மொத்தம் 3,163 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 671 கோடி மதிப்பீட்டில் சுமார் 15.65 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் இராமநாதபுரம் மொத்த குடிநீர்த் திட்டம்.



மேலும், 2006–2007 ஆம் ஆண்டில் பின்வரும் பெரிய அளவிலான கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

- **கோயம்புத்தூர் மாவட்டத்தில்** கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு ரூபாய் 120 கோடி மதிப்பீட்டில் சுமார் 9.94 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.
- **கோயம்புத்தூர் மாவட்டத்தில்** பல்லடம் நகராட்சி, 29 பேரூராட்சிகள் மற்றும் 965 குடியிருப்புகளுக்கு ரூபாய் 70 கோடி மதிப்பீட்டில் சுமார் 9.24 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் பில்லூர் அணையை நீராதாரமாகக் கொண்ட கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- **கோயம்புத்தூர் மாவட்டத்தில்** குறிச்சி, குனியமுத்தூர் நகராட்சிகள் மற்றும் கிணத்துக்கடவு பேரூராட்சிக்கு ரூ.49.93 கோடி மதிப்பீட்டில் சுமார் 1.59 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- **பெரம்பலூர் மாவட்டத்தில்** அரியலூர், செந்துறை, வேப்பூர் ஒன்றியங்களைச் சார்ந்த 525 குடியிருப்புகள் மற்றும் திருமானூர் ஒன்றியத்தில் 45 குடியிருப்புகள், ஆலத்தூர் ஒன்றியத்தில் 66 குடியிருப்புகளுக்குக் குடிநீர் ஒதுக்கீட்டுடன் மொத்தம் 636 குடியிருப்புகளுக்கு ரூபாய் 44.12 கோடி மதிப்பீட்டில் சுமார் 4.13 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- **திருநெல்வேலி மாவட்டத்தில்** ராயகிரி, சிவகிரி, வாசுதேவநல்லூர், ஆலங்குளம் பேரூராட்சிகள், வாசுதேவநல்லூர், பாப்பாகுடி ஒன்றியங்களைச் சார்ந்த 78 குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலும் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்கு குடிநீர் ஒதுக்கீட்டுடன் ரூபாய் 43.32 கோடி மதிப்பீட்டில் சுமார் 2.64 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

[2006 ஆகஸ்ட் 11

- Ø **புதுக்கோட்டை மாவட்டத்தில்** அரிமளம், அறந்தாங்கி, ஆவுடையார்கோவில், மணமேல்குடி ஒன்றியங்களைச் சார்ந்த 706 குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலும்; அறந்தாங்கி நகராட்சி மற்றும் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் 120 வழியோரக் குடியிருப்புகளுக்கு குடிநீர் ஒதுக்கீட்டுடன் ரூபாய் 42.22 கோடி மதிப்பீட்டில் சுமார் 3.04 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- Ø **கோயம்புத்தூர் மாவட்டத்தில்** கவுண்டம்பாளையம் நகராட்சி மற்றும் வடவள்ளி பேரூராட்சிக்கு ரூ.30.48 கோடி மதிப்பீட்டில் சுமார் 84,000 மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- Ø **கன்னியாகுமரி மாவட்டத்தில்** 79 கடலோரக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலும் மற்றும் 17 பேரூராட்சிகள், 19 வழியோரக் குடியிருப்புகளுக்கான குடிநீர் ஒதுக்கீட்டுடன் ரூபாய் 28.02 கோடி மதிப்பீட்டில் சுமார் 2.99 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

- Ø **கன்னியாகுமரி மாவட்டத்தில்** குழித்துறையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், பைங்குளம் கூட்டுக் குடிநீர்த் திட்டம், புதுக்கடை கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் முஞ்சிறை குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களுக்கு நீர் சுத்திகரிக்கும் நிலையம் ரூ.14 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**நீர் செறிவூட்டுதல்மூலம் நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்துதல்:**

விரைவுபடுத்தப்பட்ட ஊரக குடிநீர்த் திட்டத்தின்கீழ், நடப்பு நிதியாண்டில் நிலத்தடி நீரை மேம்படுத்தி குடிநீர் நீராதாரங்களை நிலைப்படுத்தும்பொருட்டு ரூபாய் 8.32 கோடி மதிப்பீட்டில் 250 நீர் செறிவூட்டுக் கட்டமைப்புகள் (245 தடுப்பணைகள், 5 கசிவுநீர்க் குட்டைகள்) கரூர், ஈரோடு, கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி மற்றும் மதுரை மாவட்டங்களில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

நபார்டு வங்கி நிதி உதவியுடன் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் 564 ஊரணிகள் ரூபாய் 22.56 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட உள்ளன.



2006 ஆகஸ்ட் 11]

**நகர்ப்புறக் குடிநீர்த் திட்டம்**

தமிழகத்தில், சென்னை மாநகராட்சி நீங்கலாக 5 மாநகராட்சிகள், 152 நகராட்சிகள், 561 பேரூராட்சிகள் அடங்கிய மொத்தம் 718 நகரங்கள் உள்ளன. தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவைக் கொண்டு, நகரங்கள் அனைத்தும் முழுமையான அளவு, சராசரி அளவு, குறைந்த அளவு குடிநீர் வசதி பெறும் நகரங்கள் என மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1–4–2006 நிலவரப்படி நகரங்களில் குடிநீர் வசதி நிலை பின்வருமாறு:–

| உள்ளாட்சி அமைப்பு | மொத்தம் | முழு அளவு | சராசரி அளவு | குறைந்த அளவு |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 5 | 1 | 4 | – |
| நகராட்சிகள் | 152 | 54 | 83 | 15 |
| பேரூராட்சிகள் | 561 | 257 | 280 | 24 |
| மொத்தம் | 718 | 312 | 367 | 39 |

**2006–2007 ஆம் ஆண்டுக்கான திட்டங்கள்:**

2006–2007 ஆம் ஆண்டில், ஒரு மாநகராட்சி, 14 நகராட்சிகள் மற்றும் 89 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் 104 நகரங்களுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்து செயலாக்கப்பட்டு வருகின்றன. மேலும் சேலம், கோயம்புத்தூர் மாநகராட்சிகள், 12 நகராட்சிகள், 46 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் மத்திய அரசின் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டம் (JNNURM) மற்றும் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் (UIDSSMT) ரூபாய் 365.00 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இவற்றில் திருச்சி மாநகராட்சி, 11 நகராட்சிகள், 48 பேரூராட்சிகள் பயன்பெறும் வகையில் ரூபாய் 190.00 கோடி மதிப்பீட்டில் 60 நகரங்களில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு பயனுக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளது.

### திட்ட உருவாக்க நிலையில் உள்ள புதிய திட்டங்கள்

- ***சேலம் மாநகராட்சிக்கு*** ரூ.178.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 7.57 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.
- ***மதுரை மாவட்டத்தில்*** மேலூர் நகராட்சி, ஏ.வெள்ளாளப்பட்டி பேரூராட்சி மற்றும் கொட்டாம்பட்டி, மேலூர், அலங்காநல்லூர், திருமங்கலம், திருப்பரங்குன்றம், மதுரை கிழக்கு மற்றும் மேற்கு ஒன்றியங்களில் 1,332 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூ.148.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 8.79 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- ***சேலம் மாவட்டத்தில்*** நரசிங்கபுரம் நகராட்சி, 12 பேரூராட்சிகள் மற்றும் அயோத்தியாபட்டினம், பனமரத்துப்பட்டி, வாழப்பாடி, பெத்தநாயக்கன் பாளையம், ஆத்தூர், கங்கவள்ளி, தலைவாசல் ஒன்றியங்களைச் சார்ந்த 743 குடியிருப்புகளுக்கு ரூபாய் 100.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 5.98 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.
- **மதுரை மாவட்டத்தில்** திருப்பரங்குன்றம் நகராட்சி மற்றும் அவனியாபுரம் பேரூராட்சிக்கு ரூபாய் 10.00 கோடி மதிப்பீட்டில் 39,000 மக்கள் பயன்பெறும் வகையில் குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்.
- **திருச்சி மாவட்டத்தில்** ரூ.70.00 கோடி மதிப்பீட்டில் சுமார் 7.46 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் திருச்சி மாநகராட்சியில் உள்ள விடுபட்ட மற்றும் விரிவாக்க பகுதிகளுக்கான குடிநீர் மேம்பாட்டுத் திட்டம்

### பாதாள சாக்கடைத் திட்டங்கள்

### மாவட்ட தலைநகரங்களுக்கான பாதாள சாக்கடைத் திட்டங்கள்

தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களுக்கும் பாதாள சாக்கடைத் திட்டங்கள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்ட தலைநகரங்களில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை பின்வருமாறு:—



| வ. எண் | திட்ட விவரம் | நகரங்கள் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நடப்பு நிதி ஆண்டில் முடிக்கப்படவுள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 5 | 478.50 |
| 2. | நடப்பு நிதி ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 1 | 12.59 |
| 3. | நடப்பு நிதி ஆண்டில் ஒப்புதல் வழங்கப்பட்டு பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 13 | 623.66 |
| 4. | நிதி ஆதாரம் முடிவு செய்யப்பட்டு பணிகள் துவங்கப்பட உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 5 | 177.85 |
| 5. | 2007–2008 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள் | 5 | 187.80 |
| . | மொத்தம் | 29 | 1,480.40 |

இவை தவிர, நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை நகராட்சியில் ரூபாய் 46.20 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பாதாள சாக்கடைத் திட்டம் நடப்பு நிதியாண்டில் முடிக்கப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்படும்.

### ஆய்வில் உள்ள பாதாள சாக்கடைத் திட்டங்கள்

அனைத்து நகராட்சிப் பகுதிகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளுக்காக ஆய்வுப் பணிகள் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டு, ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டவுடன் இத்திட்டங்கள் படிப்படியாக செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[2006 ஆகஸ்ட் 11

**சுனாமி நிவாரணப் பணிகள்**

**ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படவுள்ள சுனாமி அவசர நிதியுதவி குடிநீர்த் திட்டங்கள்**

சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகக் குடியிருப்புகளுக்கு தொலைதூர நீராதாரங்களைக் கொண்டு நிரந்தர நிலையான குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றிட குடிநீர் வசதி அளிக்கும் 36 திட்டங்களும், நீர்செறிவூட்டு கட்டுமானத்திற்கான 5 திட்டங்களும் சேர்த்து மொத்தம் 41 திட்டங்களை ரூபாய் 82.18 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கியின் சுனாமி அவசர நிதியுதவியுடன் 2006–2007 ஆம் ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

**நீர்ப் பரிசோதனை மற்றும் தரக் கண்காணிப்பு**

பொது மக்களுக்கு தூய்மையான மற்றும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதைக் கண்காணிப்பதற்காக ஒரு மாநில அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடமும், 28 மாவட்ட அளவிலான நீர்ப் பரிசோதனைக் கூடங்களும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் தற்சமயம் இயங்கி வருகின்றன. இந்திய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள "தேசிய ஊரகக் குடிநீர் தர மேலாண்மை மற்றும் கண்காணிப்புத் திட்டம்," தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் செயல்படுத்தப்படவுள்ளது. மத்திய அரசு முதல் கட்டமாக பின்வரும் பணிகளுக்கு ரூபாய் 295.58 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

- 2,748 களநீர் பரிசோதனைக் கலன்கள் தயாரித்து குடிநீர் ஆதாரங்களில் கிராம அளவிலான நீர்ப் பரிசோதனை செய்ய ஊராட்சிகளுக்கு அளித்தல்.
- ஊரகப் பகுதியில் உள்ள மக்களிடையே குடிநீர்த் தரம் பற்றிய முக்கியத்துவம் மற்றும் மாசுபட்ட குடிநீர் உபயோகத்தால் ஏற்படும் நோய்கள் ஆகியவற்றைப் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திடத் தேவையான தகவல், கல்வி மற்றும் செயல்பாடுகள்.
- ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசு சாரா தொண்டு நிறுவன உறுப்பினர்கள், பள்ளி ஆசிரியர்கள், சுகாதார உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள் ஆகியோருக்கு கிராம அளவிலான குடிநீர்ப் பரிசோதனை மற்றும் கண்காணிப்பு பற்றிய பயிற்சி அளித்தல்.



2006 ஆகஸ்ட் 11]

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்கீழ் இயங்கி வரும் நீர்ப் பரிசோதனைக் கூடங்கள், வாரியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் 454 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் உட்பட பல்வேறு திட்டங்கள்மூலம் வழங்கப்பட்டு வரும் நீரின் தரத்தை முறையாகக் கண்காணித்து வருகின்றன. உலக சுகாதார நிறுவனத்தின் உதவியோடு ரூபாய் 22.65 இலட்சம் செலவில் தமிழ்நாட்டிலுள்ள 12 கடலோர மாவட்டங்களில் "நீரின் அளவு மற்றும் நீரின் தரக் கண்காணிப்புத் திட்டம்" ஒன்று தற்சமயம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் பராமரிப்பு**

அரசின் கொள்கை முடிவின்படி, ஒன்றுக்கு மேற்பட்ட உள்ளாட்சிகள் பயன்பெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பராமரிக்கப்பட வேண்டும். இதன்படி, தற்போது, 4 மாநகராட்சிகள், 50 நகராட்சிகள், 253 பேரூராட்சிகள், 15,724 ஊரகக் குடியிருப்புகள் மற்றும் 391 நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் அடங்கிய 454 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள், 1.78 கோடி மக்கள் பயன்பெறும் வகையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

- 15 ஆண்டுகளுக்கு முன் செயல்படுத்தப்பட்ட கூட்டுக் குடிநீர் திட்டங்களில் புனரமைப்புப் பணிகள் ரூபாய் 9.00 கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.
- வாரியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுக் குடிநீர் திட்டங்களில் தினமும் 12 மணி நேரத்திற்கு மேல் மின்னிறைப்பான்கள் இயங்க வேண்டிய 114 திட்டங்களில் தங்குதடையின்றி மின்சாரம் பெற தனி மின் பாதை ரூபாய் 45.00 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படும்.

**கணிப்பொறி மேலாண்மைத் திட்டம்:**

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் கணினிமயமாக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்தும்பொருட்டு, ரூபாய் 727.05 இலட்சங்கள் மதிப்பீட்டிலான திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், மாவட்டங்களில் உள்ள தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலகங்களின் முக்கிய செயல்பாடுகளைத் தமிழ்நாடு மாநில பெரும்பரப்பு வலையமைப்பு (WAN) மூலம் இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள தேசிய தகவல் மையம் (NIC), இத்திட்டத்திற்கான மென்பொருளை உருவாக்கும் பணியை மேற்கொண்டு வருகிறது. 2006–2007 நிதியாண்டில் இதற்கான முன்னோடித் திட்டமாக, சென்னை தலைமையகம் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தலைமைப் பொறியாளர் அலுவலகம், வட்ட அலுவலகம் மற்றும் நான்கு கோட்ட அலுவலகங்கள் ஆகியவற்றை இணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. முன்னோடித் திட்டம் வெற்றிகரமாக முடிந்தவுடன் மாநில அளவில் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

**தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம்**

ஊரகப் பகுதியிலுள்ள அனைத்து மக்களுக்கும், பாதுகாப்பான குடிநீர் வழங்கிடும் வகையில் மக்கள் பங்கேற்புடன் திட்டம் தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் பராமரிப்பு செய்தல் என்ற கோட்பாட்டினை எய்தும் வகையில் "தமிழ்நாடு ஊரகக் குடிநீர் வழங்கல் திட்டம்" ரூபாய் 3,000 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த, நிதியுதவி பெறும் பொருட்டு உலக வங்கியுடன் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது.

**தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுக் குழு (CCDU)**

தகவல் தொடர்பு மற்றும் திறன் மேம்பாட்டுப் பிரிவு 1–6–2005 அன்று உருவாக்கப்பட்டது. குடிநீர் வழங்கல் மேலாண்மை மற்றும் தூய்மையான சுகாதார செயல் நடவடிக்கைகளை அனைவரும் அறியும் வகையில் தகவல், கல்வி தொடர்பு மற்றும் மனித வள மேம்பாடு மூலம் செயல்படுத்த மத்திய அரசு ரூபாய் 188.85 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

இதன் அடிப்படையில், பல்வேறு துறைகளைச் சேர்ந்த பயிற்சியாளர்களுக்கும், ஆசிரியர் பயிற்சியாளர்களுக்கும் பயிற்சி முகாம் நடத்தவும் தகவல், கல்வி, தொடர்பு மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை மேற்கொள்ளவும் 2006–2007 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

**2006–2007 ஆம் ஆண்டிற்கான பகுதி–II திட்டங்கள்**

சிவகங்கை மாவட்டத்தில், திருப்பத்தூர் பேரூராட்சி குடிநீர்த் திட்டத்தின் நிலைத் தன்மையை மேம்படுத்தும் வகையில் குடிநீர்





அபிவிருத்தி மற்றும் நீர் செறிவூட்டும் அமைப்புகள் ஒருங்கிணைந்த முன்னோடித் திட்டம் ரூபாய் 2.80 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், பில்லூர் கூட்டுக் குடிநீர் திட்டத்தை முழுவதுமாகக் கண்காணிக்கவும், பராமரிக்கவும் தொலை தூர அளவை / தகவல் அறிதல் மற்றும் கண்காணித்துக் கட்டுப்படுத்தும் (SCADA / Telemetry System) திட்டம் ரூபாய் 1.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

**சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம்**

அரசு எடுத்த பல்வேறு முயற்சிகளால் சென்னைப் பெருநகரப் பகுதிகளின் பொருளாதார செயற்பாடுகளில் அதிவேக வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தேவையான அளவு மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரை முறையாக அகற்றுதல் போன்றவைதான் எந்த ஒரு பெருநகருக்கும் தேவையான அடிப்படை உள்கட்டமைப்பு ஆகும். சென்னைப் பெருநகரப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் அமைப்பு வசதிகளைப் பன்னாட்டு தரத்தின்படி அரசு வழங்க உறுதி செய்துள்ளது. சென்னை நகர மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதி செய்வதற்காக அரசு பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்த உள்ளது. அவற்றில் வறட்சிக் காலங்களில்கூட சென்னை நகர மக்களுக்கு நாளொன்றுக்கு 200 மில்லியன் லிட்டர் அளவு குடிநீர் வழங்கும் அளவிற்கு கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் அமைத்தல், குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் கட்டமைப்பை மேம்படுத்தல், பருவமழைக் காலத்தின்போது கிடைக்கின்ற அதிக அளவு நீரை ஆறுகளின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுவதன்மூலம் நீர் ஆதாரங்களை மேம்படுத்துதல், தெலுங்கு–கங்கா திட்டத்திலிருந்து 12 டி.எம்.சி. தண்ணீர் பெறுதல் ஆகியவை அடங்கும். இந்த முயற்சிகளால் சென்னையில் அதிக அளவு குடிநீர் கிடைக்கவும் மற்றும் கழிவு நீரைத் திறம்பட சுத்திகரித்து பயன்படுத்தவும் மற்றும் வெளியேற்றவும் அரசு ஆர்வத்துடன் செயல்படுகிறது.

சென்னைப் பெருநகரப் பகுதிகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று அமைப்புகளை வளர்ந்து வரும் தேவைக்கேற்பத் திட்டமிட்டு அபிவிருத்தி செய்து முறைப்படுத்தவும், குறிப்பாக மக்களின்

[2006 ஆகஸ்ட் 11

சுகாதாரத்தைப் பாதுகாக்கவும், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் வாரியம் 1978 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் சட்டம் (தமிழ்நாடு அரசு சட்ட எண் 28, 1978) மூலம் ஒரு அரசு உரிமையாக்கப்பட்ட குழுமமாக உருவாக்கப்பட்டது.

**வாரியத்தின் பணிகள்**

அ. சென்னைப் பெருநகரப் பகுதியில் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று அமைப்புகளை திட்டமிட்டு, மேம்பாடு செய்து நிலை நிறுத்தி, திறம்பட இயக்கி பராமரித்து முறைப்படுத்துதல்.

ஆ. கணக்கெடுப்பு மற்றும் இதர தகவல்களின் அடிப்படையில் சென்னைப் பெருநகரப் பகுதியின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று அமைப்பில் எதிர்காலத் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு நீர் இருப்பு மற்றும் பயன்பாடு ஆகியவற்றை மதிப்பீடு செய்து நீண்ட காலத் திட்டங்களைத் தயாரித்தல், மேலும் அவற்றை அவ்வப்பொழுது ஆய்வு செய்து காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.

இ. சென்னைப் பெருநகரப் பகுதியின் எதிர்காலத் தேவைக்கு ஏற்ப குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று அமைப்புகளை மேம்படுத்தும் வகையில் பணிகளை மேற்கொள்ளுதல்.

ஈ. சென்னைப் பெருநகரப் பகுதியில் வசிப்போருக்கு மிகுந்த பலன் அளிக்கும் வகையில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று அமைப்புகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல்.

**வாரியத்தின் வளர்ச்சி**

சென்னை நகரத்திற்குட்பட்ட 175.18 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும், அருகில் உள்ள நகரப்பகுதியின் 7.88 சதுர கிலோ மீட்டர் பரப்பிலும் உள்ள 53.20 இலட்சம் மக்களுக்கு சென்னைக் குடிநீர் வாரியம் தற்போது சேவை செய்து வருகிறது.

கடந்த 28 ஆண்டுகளில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் பணிகளில் பின்வருமாறு தனித்தன்மை பெற்ற வளர்ச்சியும் மற்றும் முன்னேற்றங்களும் ஏற்பட்டுள்ளன:—



2006 ஆகஸ்ட் 11]

**குடிநீர் வழங்கல்**

| விவரம் | 1978 | ஜூன் 2006 |
|---|---|---|
| இயக்கப்படும் பகுதி | நகரப்பகுதி 170 சதுர கி.மீ. | நகரப் பகுதி + அருகிலுள்ள நகரப்பகுதி (175.18+7.88 சதுர கி.மீ.) |
| மக்கள் தொகை | 30 இலட்சம் | 53.2 இலட்சம் |
| நாளொன்றுக்கு வழங்கப்படும் நீரின் அளவு (சாதாரண வருடங்களில்) | 240 மில்லியன் லிட்டர் | 640 மில்லியன் லிட்டர் |
| குழாய் மூலம் நீர் வழங்கும் பகுதி | 80% | 98% |
| சுத்திகரிப்புத் திறன் | நாளொன்றுக்கு 182 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 750+(530)* மில்லியன் லிட்டர் |
| குடிநீர்க் குழாய்களின் நீளம் | 1250 கி.மீ. | 2870 கி.மீ. |
| குடிநீர் இணைப்புகளின் எண்ணிக்கை | 1,16,000 | 3,49,857 |
| குடிநீர் பகிர்மான நிலையங்கள் | 3 | 16 |

❖ தற்போது செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட ஒரு புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் 2007 ஆம் ஆண்டு மே மாதம் முடிவடையும்.

**கழிவு நீரகற்றும் அமைப்பு**

| விவரம் | 1978 | ஜூன் 2006 |
|---|---|---|
| கட்டமைப்பு உள்ள பகுதி | 74% | 98% |
| கழிவுநீர் இணைப்புகளின் எண்ணிக்கை | 1,14,000 | 3,92,326 |
| கழிவுநீர்க் குழாய்களின் நீளம் | 1223 கி.மீ. | 2650 கி.மீ. |
| கழிவு நீரகற்று நிலையங்களின் எண்ணிக்கை | 58 | 180 |
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் | 3 | 5 |
| கழிவுநீர் சுத்திகரிப்புத் திறன் | நாளொன்றுக்கு 57 மில்லியன் லிட்டர் | நாளொன்றுக்கு 481 மில்லியன் லிட்டர் |

**நீர் மேலாண்மை**

பூண்டி, சோழவரம் மற்றும் செங்குன்றம் ஏரிகள்தான் சென்னை மாநகரம் மற்றும் அதற்கு அருகிலுள்ள நகரப் பகுதிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் பிரதான நீர் ஆதாரங்கள் ஆகும். 1996 ஆம் ஆண்டில் இருந்து மேற்பரப்பு நீர் ஆதாரமாக தெலுங்கு கங்கைத் திட்டமும், அக்டோபர் 2004–ல் இருந்து வீராணம் ஏரியும் சென்னை மாநகரின் குடிநீர் வழங்கலுக்கு கூடுதல் ஆதாரங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. நகரின் குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற்காக திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள ஆரணியாறு, கொசத்தலையாறு நீர்பிடிப்புப் பகுதிகளில் அமைந்துள்ள ஊற்றுத் தளங்களில் இருந்தும் தெற்குக் கடற்கரை நீர்ப்படுகை, ரெட்டை ஏரி மற்றும் போரூர் ஏரியில் இருந்தும் நீர் எடுக்கப்படுகிறது. மேலும், சென்னைக் குடிநீர் வாரியம் இயக்கிவரும் மூன்று எதிர்மறை சவ்வூடு பரவுதல் நிலையங்கள் மூலம் உவர் நீர் சுத்திகரிக்கப்பட்டு நகருக்கு வழங்கப்படுகிறது.

2005–2006–ல் நீர்த் தேக்கங்களில் குறைந்த அளவு நீர் இருந்ததால் குழாய்கள் மூலம் நகருக்கு ஒருநாள் விட்டு ஒரு நாள் குடிநீர்



வழங்கப்பட்டது. 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திலிருந்து அக்டோபர் மாதம் வரை வீடுகளுக்கும், தொழிற்சாலைகளுக்கும் இதர நுகர்வோருக்கும் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை சராசரியாக 680 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டது.

1–11–2005 முதல் தினமும் குழாய்கள் மூலம் குடிநீர் வழங்குதல் மீண்டும் துவங்கப்பட்டு வீட்டு உபயோகத்திற்கு சராசரியாக நாளொன்றுக்கு 540 மில்லியன் லிட்டர் குடிநீரும், தொழிற்சாலைகளுக்கும் மற்ற மொத்த உபயோக நுகர்வோருக்கும் சராசரியாக நாளொன்றுக்கு 60 மில்லியன் லிட்டரும் வழங்கப்பட்டது. குழாய்களின் மூலம் குடிநீர் வழங்க இயலாத தெருக்களுக்கு சராசரியாக 2,856 லாரி நடைகள் மூலம் தினமும் குடிநீர் வழங்கப்பட்டது.

நடப்பு ஆண்டிலும் தினமும் குழாய்களின்மூலம் வீட்டு உபயோகத்திற்கு நாளொன்றுக்கு 570 மில்லியன் லிட்டரும், தொழிற்சாலைகள் மற்றும் மொத்த உபயோக நுகர்வோருக்கு நாளொன்றுக்கு 65–ல் இருந்து 70 மில்லியன் லிட்டர் குடிநீரும் வழங்கப்பட்டு வருகிறது. சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயல்பாட்டு எல்லைக்குட்பட்ட சென்னை மாநகர் மற்றும் அருகில் நகர்ப்புறங்களிலும் உள்ள 15460 தெருக்களில் 14948 தெருக்களுக்கு தினமும் குழாய்கள்மூலம் குடிநீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 176 தெருக்களில் குடிநீர் வழங்குவதற்கான கட்டமைப்புகள் இருந்தும் குழாய்கள்மூலம் குடிநீர் கிடைக்கப்பெறவில்லை. இந்தத் தெருக்களுக்கு குழாய்கள்மூலம் குடிநீர் வழங்குவதற்கு, குடிநீர் விநியோக அமைப்பில் தேவைப்படும் மேம்பாட்டுப் பணிகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் முடிக்கப்படும். இது சமமான அளவு குடிநீர் வழங்க ஏதுவாக அமையும்.

2006 ஆம் ஆண்டு ஜூலை மாத நிலவரப்படி 336 தெருக்களில் குடிநீர் விநியோகக் குழாய்கள் இல்லை. இந்தத் தெருக்களில் குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிகள் 2006–2007–ல் முடிக்கப்படும்.

குடிநீர் விநியோகக் குழாய்கள் இருந்தும், குடிநீர் வராத தெருக்களுக்கும், குடிநீர் விநியோகக் குழாய் இல்லாத தெருக்களுக்கும் லாரிகள் மூலம் சராசரியாக 1860 நடைகள் தினமும் குடிநீர் வழங்கப்படுகிறது.

மக்களின் குடிநீர் மற்றும் சமையல் தேவை அல்லாத பிற உபயோகத்திற்காக நகரின் பல்வேறு பகுதிகளில் 7726 இந்தியா மார்க் 2 பம்புகள் செயல்பாட்டில் உள்ளன.

[2006 ஆகஸ்ட் 11

ஆந்திர மாநிலத்திலிருந்து, தெலுங்கு கங்கைத் திட்டத்தின்மூலம் தண்ணீர் பெற அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆகஸ்ட் 2006—ல் இருந்து இத்திட்டத்தின்கீழ் தண்ணீர் கிடைக்கப் பெறும். இந்த திட்டத்தின்மூலம் பெறப்படும் தண்ணீருடன், பூண்டி, சோழவரம், செங்குன்றம் ஏரிகளில் உள்ள தண்ணீரையும் கொண்டு சென்னை நகருக்கு, அக்டோபர்/நவம்பர் 2006—ல் துவங்க இருக்கும் வடகிழக்கு பருவ மழை வரை, தற்போது வழங்கப்படும் குடிநீரின் அளவு தொடர்ந்து வழங்கப்படும்.

### கழிவுநீரகற்றல் பணிகள் மேலாண்மை

கழிவுநீரைத் தடையின்றி சேகரித்து, சுத்திகரித்து வெளியேற்ற அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இதற்காக சென்னைக் குடிநீர் வாரியம் 2650 கிலோ மீட்டர் நீளமுள்ள கழிவுநீர்க் குழாய்கள், 180 கழிவு நீரேற்று நிலையங்கள் மற்றும் 5 கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களைப் பராமரித்து வருகிறது. தற்போது சென்னை மாநகரம் மற்றும் அருகிலுள்ள நகரப் பகுதிகளிலும் மொத்தமுள்ள 15460 தெருக்களில், 177 தெருக்களுக்கு கழிவுநீர்க் குழாய்கள் பதிக்கப்படவில்லை. இந்தத் தெருக்களுக்கும் 2006—2007—ல் கழிவுநீர்க் குழாய்கள் பதிக்க சென்னைக் குடிநீர் வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. இதன்மூலம் சென்னை மாநகரில் 100 விழுக்காடு பகுதிகளில் கழிவுநீர் அமைப்புகள் உருவாகும்.

### செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் திறனுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்

சென்னைக்கு தெலுங்கு கங்கைத் திட்டத்தின்மூலம் நீர் கிடைக்க உள்ளதாக எதிர்பார்த்து கூடுதல் நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தேவையை உணர்ந்து 1996 ஆம் ஆண்டில் ரூபாய் 296 கோடி மதிப்பீட்டில் சென்னைக்கு அருகே உள்ள செம்பரம்பாக்கத்தில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்புத் திறன் கொண்ட குடிநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப்பணி வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுத்திகரிப்பு நிலையத்தையும், நீர் அனுப்பும் குழாயையும் ஒவ்வொரு பகுதியாக நிர்மாணித்து இயக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. செம்பரம்பாக்கம் நீர்த்தேக்கத்தில் உள்ள நீரை உபயோகப்படுத்தவும், நகர மக்களுக்கு அதிகமான அளவில் குடிநீர் வழங்கவும் கட்டுமானப் பணிகளைத் துரிதப்படுத்தி முதல் கட்டமாக சென்னை நகருக்கு நாளொன்றுக்கு 200 மில்லியன் லிட்டர் குடிநீர் செப்டெம்பர் 2006—ல் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. எஞ்சியுள்ள அனைத்துப் பணிகளும் மே மாதம் 2007—ல் முடிக்கப்படும்.



2006 ஆகஸ்ட் 11]

### கடல் நீரை நன்னீராக்கும் நிலையம்

தற்போதுள்ள நீர் ஆதாரங்கள் பெரும்பாலும் பருவ மழையைச் சார்ந்துள்ளதால் சென்னைக் குடிநீர் வாரியம் மத்திய அரசின் உதவியுடன் நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன்கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் நிலையம் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. நாளொன்றுக்கு 100 மில்லியன் லிட்டர் திறன் கொண்ட கடல் நீரை நன்னீராக்கும் நிலையத்தை முந்தைய அரசில் ஒப்பந்ததாரர் தன் நிதியில் வடிவமைத்து, கட்டி, இயக்கி, திருப்பித் தரும் முறையில் உடன்படிக்கை செய்துள்ள ஒப்பந்தத்தில் உள்ள சில நிபந்தனைகளும் கட்டுப்பாடுகளும் மறு ஆய்வு செய்து அந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சு வார்த்தை நடத்தி, அரசுக்கு திருப்திகரமான நிபந்தனைகள் ஏற்பட்டால் அந்த திட்டமும் இந்த அரசால் தொடரப்படும்.

### சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்-2

சென்னைக் குடிநீர் வழங்கல் பெருக்கத் திட்டம்—2—ற்காக, தமிழக அரசு ரூபாய் 124 கோடி மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இந்தத் திட்டத்தின் நோக்கம் நிலத்தடி நீரின் அளவை மேம்படுத்த, கூவம் ஆற்றின் குறுக்கே பருத்திப்பட்டு மற்றும் கண்ணாபாளையத்தில் உள்ள தடுப்பணைகளை மேம்படுத்துதல், மணப்பாக்கம் மற்றும் நந்தம்பாக்கம் ஆகிய இடங்களில் அடையாறு ஆற்றின் குறுக்கே புதிய தடுப்பணை கட்டுதல் ஆகும். மேலும் வாயலூர் அருகே பாலாற்றின் குறுக்கேயும் தடுப்பணை கட்டி நாளொன்றுக்கு 20 மில்லியன் லிட்டர் தண்ணீர் எடுத்து தென் சென்னையிலுள்ள தகவல் தொழில்நுட்ப சாலைப் பகுதிக்கு வழங்கப்படும்.

தற்போது நந்தம்பாக்கம், பருத்திப்பட்டு மற்றும் கண்ணாபாளையம் ஆகிய இடங்களில் தடுப்பணை கட்டும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

### சென்னை பெருநகரப் பகுதி அருகிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குடிநீர் வழங்குதல்

சென்னை நகருக்கு அருகிலுள்ள திருவொற்றியூர், கத்திவாக்கம், மாதவரம், அம்பத்தூர், மதுரவாயல், வளசரவாக்கம், போரூர், ராமாவரம், மணலி, புழல், ஆலந்தூர், மீனம்பாக்கம், புழுதிவாக்கம், பம்மல், அனகாபுத்தூர், பொழிச்சலூர் மற்றும் கவுல் பஜார் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு சென்னைக் குடிநீர் வாரியம் மொத்தமாக குடிநீர் வழங்கி வருகிறது. இந்தப் பகுதிகளில் உள்கட்ட பகிர்மானம் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளால்

செயல்படுத்தப்படுகிறது. கடந்த வருடம் இதே காலகட்டத்தை ஒப்பிடும்போது தற்போதைய குடிநீர் வழங்கலின் அளவு இரட்டிப்பாக்கப்பட்டுள்ளது.

### சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம்

சென்னை மாநகர நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கழிவுநீரகற்றல் அமைப்பு வசதிகள் மேம்பாட்டுப் பணிகள் ரூ.720.15 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டன. இந்தப் பணிகள் மத்திய அரசின் மானியத் தொகையான ரூ.491.52 கோடியிலும், மீதமுள்ள தொகையான ரூ.228.63 கோடி வாரிய நிதியிலும் செயல்படுத்தப்பட்டன. இந்தப் பணிகள் 2001 ஆம் ஆண்டில் துவக்கப்பட்டு அனைத்தும் முடிக்கப்பட்டுள்ளன. கழிவு நீர் சேகரிப்பு முறையில் மேம்பாடு, இடைமறித்தல் கழிவுநீர்க் குழாய்கள் அமைத்தல், புதிய கழிவு நீரகற்று நிலையங்கள் கட்டுதல், தற்போதுள்ள கழிவு நீரகற்று நிலையங்களின் மேம்பாடு மற்றும் 4 புதிய கழிவு நீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டுமானம் ஆகியவை இதில் அடங்கும்.

விடுபட்ட பகுதிகளுக்கு கழிவுநீர் அமைப்பை மேம்படுத்துவதற்கான பணிகள் ரூபாய் 56.12 கோடி மதிப்பீட்டில் சென்னை மாநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட உள்ளன.

### தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டம் (மதுரை & கும்பகோணம்)

மதுரை மாநகராட்சி மற்றும் கும்பகோணம் நகராட்சியின் கழிவுநீர் அகற்று கட்டமைப்புத் திட்டத்தைச் செயலாக்கும் பணியை சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டுள்ளது.

மதுரை மாநகராட்சியில் கழிவுநீர் அகற்று கட்டமைப்புத் திட்டம் ரூ.165 கோடி மதிப்பீட்டில் பிப்ரவரி 2001–ல் தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக ஆறு வட்டாரங்களில் கழிவுநீர் சேகரிப்பு அமைப்பு, கழிவு நீரகற்று நிலையங்கள் கட்டுமானம் மற்றும் கழிவுநீர் அனுப்பும் குழாய்கள் பதித்தல் போன்ற பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இரண்டாம் கட்டமாக ரூ.70.25 கோடி மதிப்பீட்டில் வைகை நதிக்கு வடக்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் கழிவுநீர் சேகரிக்கும் அமைப்பு, கழிவு நீரகற்று நிலையங்கள் கட்டுமானம் மற்றும் கழிவுநீர் அனுப்பும் குழாய் பதித்தல் ஆகிய பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. இந்தப் பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும். மூன்றாம் கட்டமாக அவனியாபுரம் (நாளொன்றுக்கு 67 மில்லியன் லிட்டர் திறன்) மற்றும் சக்கிமங்கலம் (நாளொன்றுக்கு 32 மில்லியன் லிட்டர் திறன்) ஆகிய





இரு இடங்களிலும் கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலைய கட்டுமானப் பணிகள் ரூ.10.15 கோடி செலவில் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

கும்பகோணம் நகராட்சியில் கழிவுநீர் அகற்று கட்டமைப்புப் பணிகள் ரூ.50.60 கோடி மதிப்பீட்டில் ஏப்ரல் 2001–ல் தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக கழிவுநீர் அகற்று அமைப்புகளை மேம்படுத்துதல் மற்றும் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. இரண்டாம் கட்டமாக கழிவுநீர் அமைப்புகள் இல்லாத இடங்களில் கழிவுநீர் அகற்று கட்டமைப்பு அமைத்தல் நடைபெற்று வருகின்றது. இப்பணிகள் நடப்பு ஆண்டில் முடிக்கப்படும். நாளொன்றுக்கு 17 மில்லியன் லிட்டர் சுத்திகரிப்பு திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய கட்டுமானப் பணி மூன்றாம் கட்டமாக இந்த ஆண்டில் மேற்கொள்ளப்படும்.

மதுரை மாநகராட்சி மற்றும் கும்பகோணம் நகராட்சியில் கழிவுநீர் அகற்றுதல் கட்டமைப்புப் பணிகள் முடிவு பெற்றபின் அங்குள்ள மக்களுக்கு பாதாள சாக்கடை வசதிகள் கிடைப்பதோடு வைகை மற்றும் காவேரி நதிகள் மாசுபடுவதும் கணிசமாகக் குறையும்.

### நிதி மேலாண்மை

### மின்னணு ஆளுகைப் பட்டியல் மற்றும் வரி வசூலித்தல்

நுகர்வோர் தங்களது குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை எளிதாகச் செலுத்தும் வகையில் 10 பகுதி அலுவலகங்கள், 59 பணிமனை அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள வரி வசூலிப்பு மையங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. இது தவிர நுகர்வோரின் வசதிக்காக மேலும் 10 மின்னணு சேவை மையங்களும் (EDS Counters) மற்றும் கனரா வங்கியின் 22 கிளைகளுக்கும் வரி வசூலிப்புக் காலங்களில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில், வரி மற்றும் கட்டணத்தை வசூலிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் வரி வசூல் செய்யும் அமைப்பில் அதிக வங்கிக் கிளைகளை இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் தங்களது குடிநீர் வரி மற்றும் கட்டணத்தை மின்னணுவியல் சேவை முறையிலும் (ECS) செலுத்தலாம்.

தற்போது ஒரு சில குறிப்பிட்ட வங்கிகளின் கடன் அட்டைகள் (Credit Card) மூலம் தான் நுகர்வோர் தங்களது குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி மற்றும் குடிநீர்க் கட்டணத்தை சென்னைக் குடிநீர் வாரிய

இணையதளம் **www.chennaimetrowater.com** மூலம் செலுத்த முடியும். இனி நுகர்வோர் வசதிக்காக மேலும் பல வங்கிகளின் கடன் அட்டைகள் (Credit Card) மூலம் வரி மற்றும் கட்டணங்களைச் செலுத்த வசதிகள் செய்யப்பட உள்ளன.

### தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம்

நுகர்வோர் தங்களது குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் இணைப்புகள் சம்பந்தப்பட்ட குறைகளை எளிதில் பதிவு செய்யவும், மேலும், குடிநீர் மற்றும் கழிவு நீர் வரி, குடிநீர்க் கட்டணம் ஆகியவற்றை அருகிலுள்ள இடங்களில் செலுத்தவும் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன்படி தற்போது பகுதி 5 மற்றும் அதன் 18 பணிமனை அலுவலகங்களிலும் செயற்பட்டு வரும் தகவல் அமைப்பு மற்றும் தொழில்நுட்பத் திட்டம் சென்னை நகர் முழுவதும் விரிவுபடுத்தப்படும். இதற்காக நடப்பு ஆண்டில் ரூபாய் 9 கோடி செலவில் சென்னைக் குடிநீர் வாரியத்தின் செயலாக்கப் பகுதிகளில் முழுவதிலும் உள்ள வரி வசூல் செய்யும் இடங்களுக்குத் தேவையான கணினிகள் மற்றும் மென்பொருட்கள் (Hardware & Software) வழங்கப்பட்டு அனைத்து மையங்களும் கணினிமயமாக்கப்படும். இதன்மூலம் நுகர்வோர் தாங்கள் செலுத்தவேண்டிய குடிநீர் வரி மற்றும் கட்டணங்களை தங்கள் குடியிருப்பு அமைந்திருக்கும் இடத்தில் மட்டும்தான் செலுத்த வேண்டிய நிலை மாறி சென்னை நகரின் எந்தப் பகுதியிலும் செலுத்தமுடியும் என்ற ஒரு நிலை ஏற்படும். சென்னைக் குடிநீர் வாரியம் இணைய தளத்தின்மூலம் பொது மக்கள் தங்களது குறைகளைப் பதிவு செய்தல், குறைகள் நிவர்த்தி செய்தல் பற்றிய தகவல்களை அறிந்து கொள்ளத் தேவையான அனைத்து வசதிகளையும் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. இந்த அமைப்பு, நுகர்வோரின் குறைகளை விரைவில் நிவர்த்தி செய்ய ஏதுவாக இருக்கும்.

### பணியாளர் நலன்

சென்னைக் குடிநீர் வாரியத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் பணியாளர்களின் நலனைக் காப்பது அரசு மற்றும் வாரியத்தின் தலையாய கடமையாகும். வாரியப் பணியாளர்களுக்கான மருத்துவ வசதிகள், அரசுப் பணியாளர்களுக்கு இணையாக விரிவுபடுத்தப்பட்டு வருகின்றன. அவர்கள் பணி புரியும் இடங்களில் அவ்வப்போது மருத்துவ முகாம்கள் நடத்தப்படுகின்றன.



சென்னைக் குடிநீர் வாரியம், களப்பணியாளர்களுக்காக தற்போதுள்ள மருத்துவ சோதனை முறைகளை மேம்படுத்த உள்ளது. இனி களப்பணியாளர்களுக்கு முழு உடல் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்ளப்படும். இந்த வசதி அவர்கள் குடும்பத்தினருக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த ஆண்டிலிருந்து ஹெப்படைடிஸ் பி மற்றும் டைபாய்டு வியாதிக்கான தடுப்பூசி போடுதல் நடைமுறைப்படுத்தப்படும்.

### எதிர்காலத் திட்டங்கள்

#### ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள குடிநீர் விநியோக மேம்பாட்டுப் பணிகள்

1997 ஆம் ஆண்டு திருத்தியமைக்கப்பட்ட பெருந்திட்டத்தின்படி சென்னை நகரின் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் அமைப்புகளை மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் உலக வங்கி, ஹட்கோ, டுபிட்கோ மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையிலிருந்தும் சொந்த நிதியிலிருந்தும் மேற்கொள்ளப்படுகின்றன.

சென்னை நகரின் குடிநீர் விநியோக அமைப்பு 16 மண்டலங்களில், 12 மண்டலங்களில் குடிநீர் பகிர்மான நிலையங்களை மேம்படுத்தும் பணியும், 11 மண்டலங்களில் குடிநீர் பகிர்மான அமைப்பினை மேம்படுத்தும் பணியும் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள 4 பகிர்மான நிலையங்கள் மற்றும் 5 பகிர்மான அமைப்புகள் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும் செங்குன்றத்திலிருந்து கீழ்ப்பாக்கம் வரையுள்ள பழைய நீரனுப்பும் பிரதானக் குழாய்களைப் புதுப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் அனைத்துக்குமான திட்டம் ரூ.338.36 கோடி எனப் பின்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான விரிவான திட்ட அறிக்கை, இந்திய அரசுக்கு ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் நிதி கோரி அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் இந்த ஆண்டு துவங்கப்பட்டு இரண்டு வருட காலங்களில் முடிக்கப்படும்.

[2006 ஆகஸ்ட் 11

| வ. எண் | விவரம் | திட்ட மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|
| 1. | கீழ்ப்பாக்கம் குடிநீர் விநியோக நிலைய மேம்பாட்டுப் பணிகள் | 48.25 |
| 2. | அண்ணா பூங்கா குடிநீர் விநியோக நிலைய மேம்பாட்டுப் பணிகள் | 12.32 |
| 3. | தென் சென்னை குடிநீர் விநியோக நிலைய மேம்பாட்டுப் பணிகள் | 1.92 |
| 4. | கலைஞர் கருணாநிதி நகர் குடிநீர் விநியோக நிலைய மேம்பாட்டுப் பணிகள் | 23.96 |
| 5. | கீழ்ப்பாக்கம் குடிநீர் விநியோக குழாய் மேம்படுத்தும் திட்டம் | 84.18 |
| 6. | அண்ணா பூங்கா குடிநீர் விநியோக குழாய் மேம்படுத்தும் திட்டம் | 13.03 |
| 7. | தென் சென்னை குடிநீர் விநியோக குழாய் மேம்படுத்தும் திட்டம் | 10.35 |
| 8. | கலைஞர் கருணாநிதி நகர் குடிநீர் விநியோக குழாய் மேம்படுத்தும் திட்டம் | 23.01 |
| 9. | திருவல்லிக்கேணி குடிநீர் விநியோக குழாய் மேம்படுத்தும் திட்டம் | 13.20 |
| 10. | 16 குடிநீர் விநியோகப் பகுதிகளில் வால்வு அமைக்கும் பணி | 16.00 |
| 11. | குடிநீர் கசிவு மற்றும் சரி செய்யும் பணி பாகம்-VI | 34.00 |
| 12. | சென்னை நகரின் குறைந்த வருவாய் பிரிவினர் உள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் | 12.04 |
| 13. | செங்குன்றத்திலிருந்து கீழ்ப்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு சுத்திகரிக்கப்படாத நீரை எடுத்து வரும் மூடு குழாய் I & III ஆகியவற்றைப் புதுப்பித்தல் மற்றும் மூடு குழாய் II பழுது பார்க்கும் பணி (ஒவ்வொரு மூடு குழாய் 10 கி.மீ.) | 46.10 |
| | மொத்த மதிப்பு | 338.36 |



2006 ஆகஸ்ட் 11]

### தகவல் தொழில்நுட்பச் சாலையில் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதி செய்து கொடுத்தல்

பழைய மாமல்லபுரம் சாலையில் தகவல் தொழில்நுட்ப வளர்ச்சியை ஏற்படுத்த இந்த அரசு முக்கியத்துவம் அளித்ததன் விளைவாக, அந்தப் பகுதிகளில் மென்பொருள் நிறுவனங்கள், தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் மற்றும் அதைச்சார்ந்த குடியிருப்பு மற்றும் வணிக வளாகங்கள் போன்றவற்றின் வளர்ச்சி மிக வேகமாக ஏற்பட்டுள்ளது. தொழில் நுட்ப வளாகத்தை ஒட்டியுள்ள பகுதிகளில் ரூபாய் 72 கோடி செலவில் குடிநீர் வழங்கவும் மற்றும் கழிவு நீரகற்றல் உள் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### சென்னைக்கு அருகிலுள்ள நகர்ப்புறப் பகுதிகளுக்குக் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று அமைப்புத் திட்டங்கள் அமைத்தல்

சென்னை நகரின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு, சென்னைக்கு அருகிலுள்ள உள்ளாட்சி அமைப்புகளும் அதி விரைவில் வளர்ச்சி அடைந்து வருகின்றன. இந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கு அடிப்படை சுகாதார வசதிகளான குடிநீர் வசதி மற்றும் கழிவு நீரகற்று வசதிகளை படிப்படியாகவும் அதே சமயத்தில் விரைவாகவும் செய்து தர வேண்டும் என தமிழக அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது. இதன்படி சென்னைக் குடிநீர் வாரியம் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்றல் திட்டங்களை தயாரிக்கவும் மற்றும் செயல்படுத்தவும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

### குடிநீர் வழங்கும் திட்டங்கள் அமைத்தல்

கத்திவாக்கத்துக்கு ரூ.6.23 கோடி செலவிலும், ஆவடிக்கு ரூ.38.57 கோடி செலவிலும், போரூருக்கு ரூ.6.11 கோடி செலவிலும் மற்றும் உள்ளகரம் புழுதிவாக்கத்துக்கு (பகுதி) ரூ.2.08 கோடி செலவிலும் விரிவான குடிநீர்த் திட்டங்களை சென்னைக் குடிநீர் வாரியம் தயாரித்துள்ளது. திருவொற்றியூர், திருவேற்காடு, மாதவரம், அம்பத்தூர் மற்றும் மதுரவாயல் ஆகிய உள்ளாட்சி அமைப்புகளுக்கான விரிவான திட்ட அறிக்கை சென்னைக் குடிநீர் வாரியத்தால் தயார் செய்யப்பட்டு வைப்பு நிதியின்கீழ் செயல்படுத்தப்படும்.

### பாதாளச் சாக்கடைத் திட்டங்கள்

பல்லவபுரம் நகராட்சியில் கழிவுநீரகற்றுக் கட்டமைப்பு செயற்படுத்தும் பணி ரூபாய் 52.72 கோடி திட்ட மதிப்பீட்டில்

[2006 ஆகஸ்ட் 11

சென்னைக் குடிநீர் வாரியத்தால் வைப்பு நிதிப் பணியாக மேற்கொள்ளப்பட்டு தற்பொழுது நடைபெற்று வருகிறது. இப்பணிகள், ஆகஸ்ட் 2007–ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

அம்பத்தூர் நகராட்சிப் பகுதியில் 19 வார்டுகளில் முதற்கட்டமாக கழிவு நீர் சேகரிப்பு அமைப்பு அமைக்கும் பணி சென்னைக் குடிநீர் வாரியத்தின் தொழில்நுட்ப மேற்பார்வையில் அம்பத்தூர் நகராட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டமாக சென்னைக் குடிநீர் வாரியம் இறுதி கழிவு நீரகற்று நிலையக் கட்டுமானம் மற்றும் கோயம்பேடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு கழிவு நீரை அனுப்ப குழாய் பதித்தல் போன்ற பணிகளை ரூபாய் 7.50 கோடி திட்ட மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் மேற்கொள்ள உள்ளது. மூன்றாம் கட்டமாக அம்பத்தூர் நகராட்சியில் விடுபட்ட இடங்களுக்கு கழிவு நீரகற்றும் வசதி அமைப்பதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க ஆய்வுப் பணி துவங்கப்பட்டுள்ளது.

திருவொற்றியூர் நகராட்சிப் பகுதியில் கழிவுநீர் அமைப்பை மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்தும் பணி ரூபாய் 25.60 கோடி திட்ட மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் வைப்பு நிதியின்கீழ் மேற்கொள்ளப்படும். போரூர், மதுரவாயல், கத்திவாக்கம் மற்றும் மாதவரம் ஆகிய இடங்களுக்கு முழுமையான கழிவுநீர் வசதி அமைப்பதற்காக சென்னைக் குடிநீர் வாரியத்தால் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு வருகிறது.

மேலும் சென்னைக் குடிநீர் வாரியம், சென்னைப் பெரு நகரப் பகுதிகளில் உள்ள பின்வரும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு முழுமையான கழிவு நீரகற்று வசதி செய்து கொடுப்பதற்காக அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் ஒப்புதலுடன் விரிவான திட்ட அறிக்கையைத் தயாரித்து அளிக்கும். அவை, ஐந்து நகராட்சிகள் **(Municipalities)** *(1. மணலி 2. அனகாபுத்தூர் 3. பம்மல் 4. திருவேற்காடு 5. பூந்தமல்லி)*, பத்தொன்பது பேரூராட்சிகள் **(Town Panchayats)** *(1. சின்னசேக்காடு 2. புழல் 3. நரவாரிக்குப்பம் 4. மீஞ்சூர் 5. நந்தம்பாக்கம் 6. மாங்காடு 7. குன்றத்தூர் 8. பெருங்குடி 9. பள்ளிக்கரணை 10. சோழிங்கநல்லூர் 11. செம்பாக்கம் 12. சிட்லபாக்கம் 13. மாடம்பாக்கம் 14. பீர்க்கங்கரணை 15. பெருங்களத்தூர் 16. திருநீர்மலை 17. மீனம்பாக்கம் 18. திருநின்றவூர் 19. திருமழிசை)*, எட்டு கிராமப் பஞ்சாயத்துகள் **(Village Panchayats)** *(1. கொட்டிவாக்கம் 2. நெற்குன்றம் 3. முகலிவாக்கம்*



2006 ஆகஸ்ட் 11]

*4. கீழ்க்கட்டளை 5. மடிப்பாக்கம் 6. பொழிச்சலூர் 7. கௌல்பஜார் 8. அயனம்பாக்கம்)* மற்றும் ஒரு கன்டோன்மென்ட் (புனித தோமையர் மலை – St. Thomas Mount) ஆகும்.

### செம்மஞ்சேரியில் தமிழ் நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வசதிகள் செய்து கொடுத்தல்

தற்பொழுது சென்னை நகர ஆற்றோரங்களில் குடியிருக்கும் குடும்பங்களை பழைய மாமல்லபுரம் சாலையில் (தகவல் தொழில் நுட்பச் சாலை) செம்மஞ்சேரியில் மறு குடியமர்த்தும் பணியில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஈடுபட்டுள்ளது. இதற்காக ரூ.227.82 இலட்சம் செலவில் ஒரு விரிவான குடிநீர்த் திட்டப் பணியையும் ரூ.317.5 இலட்சம் செலவில் ஒரு விரிவான கழிவு நீரகற்று வசதி திட்டப் பணியையும் சென்னைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டுள்ளது. இப்பணிகள் வைப்பு நிதிப் பணியாக மேற்கொள்ளப்பட்டு நடப்பு ஆண்டில் முடிவுறும்.

### அலுவலகக் கட்டடங்கள் கட்டுமானம்

நடப்பாண்டில் 10 இடங்களில் பணிமனை மற்றும் துணைப் பகுதி பொறியாளர் அலுவலகங்கள் கட்டப்படும். நுகர்வோர்கள் எளிதாக அணுகவும் திறமையான இயக்கத்திற்குத் தேவையான வசதிகளுடன் பகுதி 6–ல் பகுதி அலுவலகக் கட்டடம் கட்டப்படும். இந்த ஆண்டில், அலுவலகக் கட்டுமானப் பணிகளுக்காக ரூபாய் 232.79 இலட்சம் செலவு செய்யப்படும்.

### தொலைத் தொடர்பு வசதி அமைப்பு அமைத்தல்

தற்போது குடிநீர் வழங்கல் பகிர்மான நிலையங்கள், கழிவு நீரகற்று நிலையங்கள் மற்றும் நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயக்கங்கள் பணியாளர்களால் இயக்கப்படும் அதிகாரிகளின் நேரடிக் கண்காணிப்பிலும் நடைபெற்று வருகிறது. இந்த இயக்குதலை ஒரு மைய இடத்திலிருந்தே கணினிமயமாக்கப்பட்ட அமைப்பின்மூலம் கண்காணித்து, மேம்படுத்துவதற்காகச் சென்னைக் குடிநீர் வாரியம் பகுதி 7–ல் மாநில அரசு நிதியுடன் ரூபாய் 2.50 கோடி மதிப்பீட்டில் தொலைத் தொடர்பு வசதி அமைப்பை ஏற்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இதனால் குடிநீர் மற்றும் கழிவு நீர் அமைப்புகளை சரிவரக் கண்காணித்து முறைப்படுத்தி இயக்குவது சாத்தியமாகி நுகர்வோருக்கான சேவைகளில் கூடுதல் திருப்தி ஏற்படும்.

[2006 ஆகஸ்ட் 11

## குடிநீர் மற்றும் கழிவுநீர் பராமரிப்புப் பணிகளில் ஈடுபடும் களப்பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்குதல்

கழிவுநீர் அமைப்பைப் பராமரிக்கும் பணியை இயந்திரமயமாக்குவதற்கு சென்னைக் குடிநீர் வாரியம் முயற்சி எடுத்து வருகிறது. இயந்திரமயமாக்கும் முயற்சிகள் எடுக்கப்பட்டுவந்தாலும், தொழிலாளர்களும் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறார்கள். பாதுகாப்பு உபகரணங்களான பாதுகாப்பு பெல்ட், தலைக்கவசம், நச்சுக்காற்று உட்புகாமல் தடுக்கும் கவசம், நச்சுக்காற்றைக் கண்டறியும் உபகரணம், காற்று அழுத்த மானி/வெளியேற்றும் அமைப்பு, கையுறைகள், காலணிகள் ஆகியவை கழிவுநீர் மற்றும் குடிநீர் அமைப்புகளைப் பராமரிக்கும் பணியை செய்து வருகின்ற களப்பணியாளர்களின் பாதுகாப்பிற்காக வழங்கப்படும். நடப்பு ஆண்டில் அரசின் மானியத்தில் ரூபாய் 3.00 கோடி செலவில் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

## பேரூராட்சிகள்

பேரூராட்சிகள் ஊரகத் தன்மையிலிருந்து நகர்ப்புறமாக உருவாகி வரும் உள்ளாட்சி அமைப்பாகும். தமிழ்நாட்டில் தற்பொழுது 561 பேரூராட்சிகள் உள்ளன. சில காலம் முன் வரை இப்பேரூராட்சிகள் "சிறப்பு சிற்றூராட்சிகள்" என்று வகைமாற்றம் செய்யப்பட்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994—ன்கீழ் இயங்கி வந்தன. கூடுதல் நிதி ஆதாரத்தை பெறுவதே "சிறப்பு சிற்றூராட்சிகள்" வகை மாற்றத்திற்கான முக்கிய நோக்கமாகும். ஆனால், கூடுதல் நிதி கிடைக்கப்பெறாமையால், இந்நோக்கம் நிறைவேறவில்லை. எனவே, "பேரூராட்சிகள்" என்ற அமைப்பை மீண்டும் மாற்றி அமைக்கும்படி, மன்றங்கள் கோரிக்கை வைத்தன. "சிறப்பு சிற்றூராட்சிகள்" மன்றத் தீர்மானங்கள் வாயிலாக பெறப்பட்ட இக்கோரிக்கையினைப் பரிசீலித்து இந்த அரசு 561 சிறப்பு சிற்றூராட்சிகளை "பேரூராட்சிகள்" என வகைமாற்றம் செய்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920—ன்கீழ் கொண்டு வந்தது.

நகரங்கள் மக்களிடம் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தை வளர்ப்பவை. எனவே இந்த நகரங்களைப் பொருளாதார வளர்ச்சியின் உந்து சக்தி என்றே கூறலாம். மாநிலத்தின் மொத்த மக்கள் தொகையில் 12 விழுக்காட்டைக்கொண்டு 76,46,386 மக்கள்தொகையை உள்ளடக்கியது பேரூராட்சியாகும். இதில் உழைக்கும் வர்க்கத்தைச்



2006 ஆகஸ்ட் 11]

சார்ந்தவர்களில் வேளாண்மையைத் தொழிலாகக் கொண்டோர் 6,53,143; வேளாண் அல்லாத பிற தொழில் புரிவோர் 16,77,600 ஆவர். இப்பகுதியில் தேவையான குடிநீர் வழங்கல், பொது சுகாதாரம், சாலை வசதிகள், தெரு விளக்குகள் மற்றும் குடிசைப் பகுதிகளை மேம்படுத்துவது அத்தியாவசியமான ஒன்றாகும். இந்த அரசு இந்நகரங்களில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் மேம்படுத்த திட்டமிட்டுள்ளது. ஏனெனில் இப்பகுதிகளில் புராதன பெருமை வாய்ந்த நகரங்கள், சுற்றுலா மற்றும் புனிதத் தலங்கள் உள்ளன. மேற்படி திட்டங்கள் தீட்டும் போதும் இப்பகுதி வளர்ச்சியை நோக்கும் போதும் சுற்றுச்சூழல் பராமரிப்பும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

ஆமைப்

### அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள்

### குடிநீர் வழங்கல்

பேரூராட்சிகளில் தற்போது வ்ழங்கப்படும் குடிநீர் வழங்கல் குறித்த விவரம் பின்வருமாறு:—

| அளவு | எண்ணிக்கை |
|---|---|
| 20 லிட்டருக்குக்கீழ் | 4 |
| 21 லிருந்து 39 லிட்டர் வரை | 103 |
| 40 லிருந்து 69 லிட்டர் வரை | 303 |
| 70 மற்றும் அதற்கும் மேல் | 151 |
| மொத்தம் | 561 |

5 ஆண்டுகளுக்குள் நகரப் பகுதிகளில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு 70 லிட்டர் குடிநீர் வழங்குவதற்காக நீர் ஆதாரங்களை வளப்படுத்துதல், புதிய நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்தல் போன்ற வசதிகளை இந்த அரசு மேம்படுத்தும். மேலும் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகளையும் மேற்கொள்ளும்.

மழைநீர்ச் சேகரிப்புத் திட்டத்திற்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, நீர்நிலைகள் வளப்படுத்தப்படும். இந்நீர்நிலைகள் மழைநீரைப் பாதுகாப்புடன் சேகரிக்கும் நீர்நிலை ஆதாரமாக மேம்படுத்தப்படும்.

[2006 ஆகஸ்ட் 11

**சாலைகள்**

நகர்ப் புறங்களில் பொருளாதார நிலை உயர்வதற்குச் சாலைகள் இன்றியமையாதவை. தற்பொழுது 14,655 கி.மீ. நீளம் சாலைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. அவற்றின் வகைப்பாடுகள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் | 2153 | கி.மீ. |
| தார்ச்சாலைகள் | 5727 | கி.மீ. |
| கருங்கல் ஜல்லி சாலைகள் | 2639 | கி.மீ. |
| சரளைக்கல் சாலைகள் | 653 | கி.மீ. |
| மண் சாலைகள் | 3483 | கி.மீ. |
| மொத்தம் | 14655 | கி.மீ |

தற்போதுள்ள 14655 கி.மீ. சாலை நீளத்தில், ரூ.81.23 கோடி செலவில் நபார்டு மற்றும் ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன் 861 கி.மீ. தார்ச்சாலை/சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மாற்றுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு திட்டங்களின்கீழ் உள்ள நிதி ஆதாரங்களைப் பயன்படுத்தி சுமார் 500 கி.மீ. நீளச் சாலைகள் சிமெண்ட் கான்கிரீட் சாலைகளாக மேம்படுத்தப்படும்.

**தெரு விளக்குகள்**

தெரு விளக்குகள் 2,84,592 தற்போது பயன்பாட்டில் உள்ளன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

| | |
|---|---|
| உயர்கோபுர மின் விளக்குகள் | 93 |
| மெர்குரி விளக்குகள் | 2222 |
| சோடியம் ஆவி விளக்குகள் | 38905 |
| குழல் மின் விளக்குகள் | 241749 |
| மற்றவை | 1623 |
| மொத்தம் | 284592 |

நடப்பு நிதியாண்டில் 50 உயர்கோபுர மின் விளக்குகள், 1000 சோடியம் ஆவி விளக்குகள் மற்றும் 5000 குழல் மின் விளக்குகள் புதிதாக அமைத்திட முடிவு செய்யப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 11]

**மழை நீர் வடிகால்**

மழைக் காலங்களில் தேங்கும் மழைநீரை உரிய முறையில் வெளியேற்றுவதற்கான மழைநீர் வடிகால்கள் அனைத்துப் பேரூராட்சிகளிலும் அமைக்கப்படும். ஏற்கெனவே பயன்பாட்டில் உள்ள 5512 கி.மீ. நீளத்திலுள்ள மழைநீர் வடிகால்களைச் சீரமைக்கவும், புதியதாக 5 கோடி ரூபாய் செலவில் 500 கி.மீ. நீளத்திற்கு புதிய மழைநீர் வடிகால்கள் அமைக்கவும் இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

**பேருந்து நிலையம்**

தற்போது பயன்பாட்டில் இருந்து வரும் 206 பேருந்து நிலையங்களில் 50 பேருந்து நிலையங்களை ரூ.8.00 கோடிச் செலவில் மேம்படுத்த நடப்பு ஆண்டில் திட்டமிடப்பட்டுள்ளது.

**பொதுச் சுகாதாரம்**

**பாதாளச் சாக்கடைத் திட்டம்**

பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஆய்வுப் பணிகள் 10 பேரூராட்சிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 3 பேரூராட்சிகளில் இத்திட்டத்தை விரைவாகத் தொடங்குவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு பணிகள் துவங்கப்படவுள்ளன.

**திடக் கழிவு மேலாண்மை**

திடக் கழிவுகள் சரியான முறையில் அகற்றப்படவில்லையெனில், பொதுச் சுகாதாரமும், சுற்றுச்சூழலும் பாதிக்கப்படும் என்பதால் திடக்கழிவு மேலாண்மையைச் செயல்படுத்துதல் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். குப்பைகளை அவை உருவாகும் இடத்திலேயே தரம் பிரித்தல், பிரித்தெடுக்கப்பட்ட குப்பைகளை மக்கச் செய்து உரமாக்குதல், மறு சுழற்சிக்காகப் பயன்படுத்துதல், அவற்றில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளைப் பயன்படுத்தித் தார்ச்சாலைகள் அமைத்தல் ஆகியவை திடக்கழிவு மேலாண்மையின் முக்கிய செயல்பாடுகளாகும். நடப்பு நிதியாண்டில் அனைத்து பேரூராட்சிகளிலும், திடக்கழிவு மேலாண்மையை நடைமுறைப்படுத்த இவ்வரசு திட்டமிட்டுள்ளது.

### கழிவு நீர் சுத்திகரிப்பு

நீர்வளத்தைப் பராமரிக்கவும், நீரைச் சிக்கனமாக பயன்படுத்துதலிலும் கழிவுநீர் மறு சுழற்சி முறை முக்கியமானதொன்றாகும். தற்போது திருக்குருங்குடியில் கழிவுநீரை தெளிந்த நீராக மாற்றும் அமைப்பு செயல்பட்டு வருகிறது. ஜலகண்டபுரத்தில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வரும் கழிவு நீரைச் சுத்திகரிப்பு செய்யும் மையம் செயல்பட உள்ளது. மேலும், பொன்னேரி, கும்மிடிபூண்டி, துடியலூர், சோளிங்கர், சிட்லபாக்கம், செம்பாக்கம், திருநீர்மலை, பெருங்களத்தூர், மாமல்லபுரம், ஊத்துக்கோட்டை, நாரவாரிக்குப்பம், காந்தி நகர், ஆனைமலை, ஒரத்தநாடு மற்றும் சரண்டை ஆகிய 15 பகுதிகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

### தகனமேடை

சுற்றுச்சூழல் மாசுபடாமல் காக்கும் வண்ணம் தகனமேடை சூலூர், பெத்தநாயக்கன்பாளையம், துடியலூர் மற்றும் நாரவாரிக்குப்பத்தில் அமைய உள்ளது. இடுகாடு மற்றும் சுடுகாடுகளைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைப்பதுடன் மரங்களை வளர்க்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### இறைச்சிக் கூடம்

தற்பொழுதுள்ள 178 பேரூராட்சிகளில் இறைச்சிக் கூடங்களை நடப்பு நிதியாண்டில் நவீனமயமாக்க திட்டமிடப்பட்டுள்ளது.

### மக்கள் பணியில்...

அனைத்துப் பேரூராட்சிகளிலும், பணிகளை நவீனமயமாக்கவும், சேவைகளைக் கணினிமயமாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் அனைத்துப் பேரூராட்சிகளுக்கும் கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் எளிமையான தொடுதிரை கணினிகளைப் படிப்படியாக அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பிறப்பு மற்றும் இறப்பு குறித்து பதிவு செய்த விவரங்களை, விசையைத் தொட்டவுடன் அறிந்திட இயலும். மேலும் வலைதளம் ஒன்றை ஒவ்வொரு பேரூராட்சிக்கும் உருவாக்கவும் அதன் வழி பொதுமக்கள் தங்களுக்குத் தேவையான விவரங்களை அறியவும், புகார்களைப் பதிவு செய்யவும், பொதுமக்கள் சேவையை விரிவுபடுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.



ஒப்பந்தப்புள்ளிகள் கோருதல், ஒப்பந்தப்புள்ளி ஆணை வழங்குதல் மற்றும் பொருட்கள் வாங்குதல் ஆகியவற்றைச் செயல்படுத்தவும், வெளிப்படையான நிர்வாகத்தினை நடைமுறைப்படுத்திடவும், இவ்வலைதளங்கள் பயன்படும்.

### வறுமை ஒழிப்பு மற்றும் வேலைவாய்ப்பு

நகர்ப்புறங்களில் 24 விழுக்காட்டினர் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக பல்வேறு வறுமை ஒழிப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 22,712 சுய உதவிக் குழுக்கள் பேரூராட்சிகளில் உருவாக்கப்பட்டு பல்வேறுவிதமான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

### திட்டங்கள்

### ஆழிப்பேரலை அவசர கால உதவித் திட்டம்

"ஆழிப்பேரலை அவசர கால உதவித் திட்டத்தின்"கீழ் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் பின்வரும் புனரமைப்புப் பணிகள் ரூ.56.15 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பணிகள் – ரூ.8.95 கோடி
- சாலை மற்றும் வடிகால் வசதி மற்றும் கட்டடங்கள் – ரூ.34.76 கோடி
- வாழ்வாதாரப் பணிகள் – ரூ.12.44 கோடி

இவ்வரசு இரண்டாவது நிதி ஆணையத்தின் பரிந்துரையின் அடிப்படையில் ரூ.248.87 கோடி நிதியை மாநில பகிர்வு நிதியாக ஒதுக்கீடு செய்துள்ளது. முழுமையாக வரி வசூல் செய்வதில் சாதனை படைத்துள்ள பேரூராட்சிகளுக்கு இந்நிதியில் ஒரு பகுதியினை சமன்பாடு, ஊக்க மற்றும் காப்பு நிதியாக அரசு வழங்கியுள்ளது.

மேலும், கூடுதலாக 12-வது நிதி ஆணையத்தின் மானியமாக ரூ.32.10 கோடி பேரூராட்சிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## கோரிக்கை எண் 34

## நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

### 2006–2007-ல் செலவிற்கு வேண்டியுள்ள தொகை பற்றிய மதிப்பீடு

### 2006–2007 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு

(ரூபாய் ஆயிரத்தில்)

| | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| மானியக் கோரிக்கை அனுமதித்தது | 1,588,60,34 | 705,47,09 | 87,01,69 | 2,381,09,12 |
| மொத்தத் தொகை சாட்டியது | 1 | — | — | 1 |

நிகரச் செலவு ரூபாய் ஆயிரத்தில்

| கணக்குத் தலைப்பு | | 2004–2005 கணக்குகள் | 2005–2006 திருத்திய மதிப்பீடு | 2006–2007 இடைக்கால வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2006–2007 திருத்த வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| 2215 | குடிநீர் வழங்கலும் துப்புரவும் | 165,89,59 | 22,09,47 | 30,09,21 | 56,38,73 |
| 2217 | நகர்ப் பகுதி வளர்ச்சி | 99,07,93 | 197,64,42 | 99,20,23 | 487,58,66 |
| 2236 | சத்துணவு | 8,53,93 | 12,15,15 | 12,80,06 | 13,47,08 |
| 2251 | தலைமைச் செயலகம்–சமூகப் பணிகள் | 2,59,55 | 2,78,86 | 2,73,88 | 2,95,47 |
| 2505 | ஊரக வேலை வாய்ப்பு | 9,00,00 | — | — | — |
| 2515 | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் | 2,18,99 | — | — | 21,03,95 |
| 3475 | ஏனைய பொதுவான பொருளாதாரப் பணிகள் | 1,90,52 | 5,71,72 | 5,84,45 | 5,86,79 |
| 3604 | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங் களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 633,62,26 | 600,49,75 | 623,36,37 | 1,001,29,67 |
| 4215 | குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 1,341,40,53 | 459,61,75 | 506,58,72 | 510,21,72 |
| 4217 | நகர்ப் பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 60,52,08 | 92,19,14 | 74,54,01 | 90,11,42 |
| 4515 | ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | — | — | — | 80,14,28 |
| 5054 | சாலைகள், பாலங்கள் குறித்த மூலதனச் செலவு | — | 2,00,00 | 24,99,67 | 24,99,67 |
| 6215 | குடிநீர் வழங்கல் துப்புரவுக்கான கடன்கள் | 161,08,44 | 275,79,24 | 54,59,69 | 54,59,69 |
| 6217 | நகர்ப் பகுதி வளர்ச்சிக்கான கடன்கள் | — | 25,00,00 | 106,82,00 | 31,82,00 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | 50,00 | 60,00 | 60,00 | 60,00 |

## இணைப்பு II

(65 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 42 – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2006–2007

### 1. முகவுரை

"கிராம ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இந்திய மக்களாட்சியின் அடித்தளமாக அமைந்துள்ளன. கிராம ஊராட்சிகளையும், ஊராட்சி ஒன்றியங்களையும் நாம் வலுப்படுத்தவில்லையெனில், நமது மக்களாட்சி அமைப்பு வலுவானதாகவும், செயல்திறன் மிக்கதாகவும் இருக்க முடியாது. உலக அறிவினை ஊரகப் பகுதிகளிலுள்ள நமது மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும். நமது நாட்டை வலுப்படுத்துவதற்கு இதைத் தவிர வேறு வழியேதுமில்லை."

–பேரறிஞர் அண்ணா

இந்தியாவின் மக்கள் தொகையில் 72% கிராமப்புறங்களில் வாழ்வதால், இந்தியா பெரும்பான்மையாக ஊரகத்தன்மை கொண்டுள்ளது. தமிழ்நாடும் இதற்கு விதிவிலக்கல்ல. 2001 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கட் தொகையில் 3.62 கோடி, அதாவது 58% மக்கள் ஊரகப் பகுதிகளில் வாழ்பவர்கள் ஆவர். பெரம்பலூர் (86.7%), விழுப்புரம் (85.5%), தருமபுரி (84.9%), புதுக்கோட்டை (84.6%), கிருஷ்ணகிரி (84.3%), திருவண்ணாமலை (82.1%), திருவாரூர் (79.8%) மற்றும் நாகப்பட்டினம் (77.8%) ஆகிய மாவட்டங்கள் ஊரகத் தன்மையில் மிகப்பெரும்பான்மை கொண்டதாக இருக்கின்றன. அதேநேரத்தில், கன்னியாகுமரி (34.6%), கோயம்புத்தூர் (38.3%), நீலகிரி (41.8%), தேனி (45.9%) மற்றும் மதுரை (48.3%) ஆகிய மாவட்டங்களில் நகரத் தன்மை மிகுந்துள்ளன. இவற்றில் 50 விழுக்காட்டிற்கும் குறைவான மக்கள் ஊரகப் பகுதிகளில் வாழ்கின்றனர்.

ஊராட்சி அமைப்புகள் திறம்பட செயல்படும் உள்ளாட்சி அமைப்புகளாக விளங்கிட வழிவகை செய்வது ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் பொறுப்பாகும். மத்திய, மாநில அரசுத்





திட்டங்களான, வறுமை ஒழிப்பு, அடிப்படை வசதிகள், வேலை வாய்ப்பு உருவாக்குதல், சுகாதாரம், திறன் மேம்பாடு, மகளிருக்கான சமூகப் பொருளாதார மேம்பாடு போன்றவற்றை நிறைவேற்றும் பொறுப்பும், இத்துறையைச் சார்ந்தது.

### 2. ஊராட்சி அமைப்புகள்

தமிழகத்தின் உள்ளாட்சி அமைப்புகள் பாரம்பரியமான பழம்பெரும் வரலாறு உடையவை. காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள உத்திரமேரூர் கல்வெட்டுக் குறிப்புகள் இதற்கு சாட்சியமாகும். அந்த காலகட்டங்களில், சமுதாயக் குழுக்கள் தங்கள் பகுதிகளின் மேம்பாட்டிற்காக பல்வேறு செயலதிட்டங்களை மேற்கொள்ளும் கிராமக் குடியரசுகளாக விளங்கின. 10 மற்றும் 11 ஆம் நூற்றாண்டுகளில் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் இந்தப் பாரம்பரியம் அதன் சிகரத்தை எட்டியது. இதன்படி கிராமக் குழுக்கள் தங்களின் வரையறுக்கப்பட்ட பகுதிகளில் வரி விதித்தல், சமூக வாழ்வை மேம்படுத்துதல். மற்றும் நீதி வழங்குவது போன்றவற்றை மேற்கொண்டிருந்தன. கிராமக் குழுக்களுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் "குடவோலை முறை" எனப்படும் இரகசிய வாக்களிப்பு முறை பின்பற்றப்பட்டது. இந்தக் கிராமக் குழுக்கள், சோழ ஆட்சியாளர்களுடன் நல்ல தொடர்பு கொண்டவையாக இருந்தன. சோழர்கள் ஆட்சியின் வீழ்ச்சிக்குப் பிறகு இந்நாடு கிராம சுயாட்சியின் சரிவையும், அதிகாரத்தை மையப்படுத்தும் நிலப்பிரபுத்துவ நிர்வாக முறையின் மேலாண்மையையும் சந்தித்தது. இம்முறை ஆங்கிலேயப் பேரரசின் நிர்வாக வசதிக்காக தலசுயாட்சி முறைகளை அறிமுகப்படுத்தும் வரையில் வழக்கில் இருந்தது.

நாடு விடுதலையான பிறகு, சனநாயக அதிகார பரவலாக்கல் குறித்து முதன்முதலில் இயற்றப்பட்ட சட்டம் "மதராஸ் பஞ்சாயத்துச் சட்டம் 1950" ஆகும். 1957 ஆம் ஆண்டு "உள்ளாட்சி நிர்வாகச் சீரமைப்பு" குறித்து வெளியிடப்பட்ட வெள்ளை அறிக்கையைத் தொடர்ந்து "மதராஸ். பஞ்சாயத்துச் சட்டம் 1958" மற்றும் "மதராஸ் மாவட்ட வளர்ச்சி மன்றச் சட்டம் 1958" ஆகியவை பின்வரும் சிறப்பியல்புகளுடன் இயற்றப்பட்டன.

(அ) கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கிய இரண்டு அடுக்கு ஆட்சிமுறை

(ஆ) வளர்ச்சி வட்டாரங்களுடன் இணையான ஊராட்சி ஒன்றியங்களை உருவாக்குதல்

(இ) கிராம ஊராட்சித் தலைவர்கள் தங்களின் பதவி வழி ஊராட்சி ஒன்றியக் குழுவில் உறுப்பினர்களாக அங்கம் வகித்தல். இத்துடன் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்களை நேர்முகமாக/மறைமுகமாகத் தேர்ந்தெடுத்தல்

(ஈ) மிகுந்த எண்ணிக்கையிலான வளர்ச்சி மற்றும் நலப் பணிகளை கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒப்படைத்தல்

(உ) மாவட்ட போர்டுகளைக் கலைத்தல்

(ஊ) மாவட்ட வளர்ச்சிக் குழுக்களை ஆலோசனை வழங்கும் அமைப்பாக்குதல்

இந்த இரண்டு அடுக்கு முறை, 1979 ஆம் ஆண்டு வரை சனநாயக அடிப்படையில் முறையான தேர்தல்கள்மூலம் செயல்பட்டது. அதன் பிறகு, ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 7 ஆண்டுக் காலம் தேர்தல்கள் நடைபெறாததால், ஊரக உள்ளாட்சி அமைப்புகள் தனி அலுவலர்கள் மூலம் நிர்வகிக்கப்பட்டன. மீண்டும் 1986–ல் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக் காலம் மார்ச் 1991 வரை நீட்டிக்கப்பட்டது. மீண்டும் 1996 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தேர்தல் நடைபெறும் வரை ஊரக உள்ளாட்சி அமைப்புகளை தனி அலுவலர்கள் நிர்வகித்தனர்.

1992 ஆம் ஆண்டில் பஞ்சாயத்துராஜ் அமைப்பு முறையில் பல்வேறு மாறுதல்களை உள்ளடக்கிய அரசமைப்பு (73-வது திருத்தச்) சட்டம் இயற்றப்பட்டது. இதன் விளைவாக 22–04–1994 முதல் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 நடைமுறைக்கு வந்தது. 73–வது அரசமைப்பு சட்டத் திருத்தம் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஆகியவை மாநில அளவில், பஞ்சாயத்துராஜ் அமைப்பு முறையில் பின்வரும் பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவந்தது:

(அ) மூன்றடுக்கு ஊராட்சி முறை அறிமுகம் – கிராமம், இடைநிலை (வட்டாரம்) மற்றும் மாவட்ட அளவில்.

(ஆ) ஐந்தாண்டுகளுக்கொருமுறை கட்டாய உள்ளாட்சித் தேர்தல்கள்.

(இ) ஒவ்வொரு ஊராட்சி அமைப்புகளின் மக்கள் தொகையில் ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் மக்கள் தொகை



விகிதாச்சாரத்திற்கேற்ப, உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களில் சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையைஅறிமுகப்படுத்தியது.

(ஈ) உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களில் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கு சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்யும் முறையை அறிமுகப்படுத்தியது.

(உ) ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு சுயசார்புடைய அமைப்பாக மாநிலத் தேர்தல் ஆணையத்தை அமைத்தல்.

(ஊ) மாநில அரசின் நிதி ஆதாரங்களை, நகர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பகிர்ந்தளிப்பதற்கு பரிந்துரை செய்வதற்காக, ஐந்தாண்டுகளுக்கொரு முறை மாநில நிதி ஆணையத்தை அமைத்தல்.

(எ) மாவட்டத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் தயாரிக்கப்பட்ட திட்டங்களை ஒருங்கிணைத்து, மாவட்டம் முழுவதறகுமான ஒட்டுமொத்த மாவட்ட வளர்ச்சித் திட்டம் தயாரிக்க, மாவட்ட திட்டக் குழுவை ஏறபடுத்துதல்.

(ஏ) கிராம ஊராட்சியிலுள்ள பதிவு செய்யப்பட்ட அனைத்து வாக்காளர்களையும் உள்ளடக்கிய "கிராம சபை" கோட்பாட்டை அறிமுகப்படுத்துதல்.

## 2.1 உள்ளாட்சித் தேர்தல்கள்

### 2.1.1 உறுப்பினர் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான தேர்தல்கள்

வார்டு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கத்திற்காக ஒவ்வொரு ஊராட்சியும் வார்டுகள் எனப்படும் தேர்தல் தொகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சியும், தலைவர், துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களைக் கொண்டது. இதைப்போலவே, ஊராட்சி ஒன்றியமும், மாவட்ட ஊராட்சியும், தலைவர், துணைத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ளன.

[2006 ஆகஸ்ட் 11

கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் வார்டு உறுப்பினர்களின் பதவியிடங்களுக்கு நேரடித் தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர்கள், அரசமைப்புச் சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளவாறு, மறைமுகத் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். கிராம ஊராட்சித் தலைவர்களின் பதவியிடங்களுக்குத் தேர்தல்களை அரசமைப்புச் சட்டத்தின்படி, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தேர்ந்தெடுக்க ஏற்றபடி நடத்திட இயலும். தமிழ்நாடு அரசு நேரடித் தேர்தலை நடத்திட முடிவு செய்தது. அட்டவணை–1 (அ) மற்றும் அட்டவணை–1 (ஆ) இந்நிலையைத் தெளிவாக்கும்.

**அட்டவணை–1 (அ)**

**நேர்முகத் தேர்தல்கள் மூலமாக நிரப்பப்படும் உறுப்பினர் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள்**

| | |
|---|---|
| கிராம ஊராட்சி | வார்டு உறுப்பினர், தலைவர் |
| ஊராட்சி ஒன்றியம் | வார்டு உறுப்பினர் |
| மாவட்ட ஊராட்சி | வார்டு உறுப்பினர் |

**அட்டவணை–1 (ஆ)**

**மறைமுகத் தேர்தல்கள் மூலமாக நிரப்பப்படும் தலைமைப் பதவியிடங்கள்**

| | |
|---|---|
| கிராம ஊராட்சி | துணைத் தலைவர் |
| ஊராட்சி ஒன்றியம் | தலைவர், துணைத் தலைவர் |
| மாவட்ட ஊராட்சி | தலைவர், துணைத் தலைவர் |

ஆகவே, ஊராட்சிப் பகுதியில் உள்ள ஒவ்வொரு வாக்காளரும், மூன்றடுக்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பின்வரும் பதவிகளுக்கு நான்கு வாக்குகள் அளிக்க வேண்டும் :

1. கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்,
2. கிராம ஊராட்சித் தலைவர்,
3. ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் மற்றும்
4. மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர்.



2006 ஆகஸ்ட் 11]

ஊராட்சி ஒன்றிய மற்றும் மாவட்ட ஊராட்சிகளில் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவிகளுக்குக் கட்சி அடிப்படையில் தேர்தல்கள் நடைபெறும்போது, கிராம ஊராட்சியில் உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவிகளுக்குக் கட்சி சார்பற்ற முறையில் தேர்தல்கள் நடைபெறுகின்றன.

மேலும், ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி வார்டுகள் ஒரு உறுப்பினர் வார்டுகளாக உள்ள நிலையில், கிராம ஊராட்சி வார்டுகள் பல உறுப்பினர் வார்டுகளைக் கொண்டதாகும். தமிழ்நாட்டில், கிராம ஊராட்சிகள் குறைந்தது இரண்டு வார்டுகளையும் அதிகபட்சமாக ஐந்து வார்டுகளையும், அதேபோல் முறையே குறைந்தபட்சம் ஆறு வார்டு உறுப்பினர்களையும், அதிகபட்சமாக பதினைந்து வார்டு உறுப்பினர்களையும் உள்ளடக்கியுள்ளன.

மூன்றடுக்கு ஊராட்சிகளில் இடம் பெறும் உறுப்பினர் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களின் எண்ணிக்கை அட்டவணை–2-ல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை–2**

**உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவியிடங்களின் விவரம்**

| | | |
|---|---|---|
| 1 | கிராம ஊராட்சி வார்டுகள் | 40,879 |
| 2 | கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர்கள் | 97,458 |
| 3 | ஊராட்சி ஒன்றிய வார்டுகள் | 6,570 |
| 4 | மாவட்ட ஊராட்சி வார்டுகள் | 656 |
| 5 | கிராம ஊராட்சித் தலைவர்கள் | 12,618 |
| 6 | ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் | 385 |
| 7 | மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் | 29 |

### 2.1.2 உறுப்பினர் மற்றும் தலைமைப் பதவி இடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை.

அரசமைப்புச் சட்டக் கூறு 243–D, ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான உறுப்பினர் பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்களுக்கான இட ஒதுக்கீடு மற்றும் சுழற்சி முறை குறித்ததாகும். இது தொடர்புடைய சட்டக் கூறுகள் தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ல்

பிரிவுகள் 11, 20, 32 மற்றும் 57 ஆகும். தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் சுழற்சி முறையில் பதவியிடங்களுக்கான ஒதுக்கீடுகள்) விதிகள், 1995 இதற்குத் துணை செய்வதாகும். இந்த விதியின்படி, வார்டுகள் அல்லது ஊராட்சிகளில் ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் பெண்கள் மக்கட்தொகையின் விகிதாச்சாரம் இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தப்பட்டு, அவர்களின் விகிதாச்சாரத்தின் எண்ணிக்கையும் பதவியிடங்களின் எண்ணிக்கையும் இணையாக இருக்கும் இடத்தில் இடஒதுக்கீடு எண்ணிக்கை வரையறுக்கப்படும். மேற்படி விதிகளின்படி சுழற்சி முறையின் கால அளவு நிர்ணயிக்கப்படுகிறது.

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994—ல் உள்ள சட்டப் பிரிவுகள் மற்றும் தமிழ்நாடு ஊராட்சிகள் (பதவியிடங்களுக்கான ஒதுக்கீடுகள் மற்றும் சுழற்சி முறையில் பதவியிடங்களுக்கான ஒதுக்கீடுகள்) விதிகள், 1995—ன்படி தமிழ்நாட்டில் இட ஒதுக்கீடு குறித்த நிலையை அட்டவணை—3 விளக்குகிறது.

**அட்டவணை-3**

**ஊராட்சிகளில் இடஒதுக்கீடு விவரம்**

| வகை | விகிதாச்சார இட ஒதுக்கீட்டைத் தீர்மானிக்கும் மக்கட்தொகை அளவு | இட ஒதுக்கீட்டை அறிவிப்பு செய்யும் அதிகாரம் |
|---|---|---|
| கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் | கிராம ஊராட்சி மக்கட்தொகை | ஊராட்சிகளின் ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித் தலைவர்) |
| கிராம ஊராட்சித் தலைவர் | ஊராட்சி ஒன்றிய மக்கட்தொகை | அரசு |
| ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | ஊராட்சி ஒன்றிய மக்கட்தொகை | அரசு |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர் | மாவட்ட ஊரக மக்கட்தொகை | அரசு |
| மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | மாவட்ட ஊரக மக்கட்தொகை | அரசு |
| மாவட்ட ஊராட்சித் தலைவர் | மாநில ஊரக மக்கட்தொகை | அரசு |





**2.1.3 2006-ல் உள்ளாட்சித் தேர்தல்கள் நடத்துதல்**

தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இயற்றப்பட்டபோதிலும், 1996 ஆம் ஆண்டு மே மாதம் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர்தான், பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்கள் அக்டோபர் மாதம் 1996 ஆம் ஆண்டு நடத்தப்பட்டன. இரண்டாவது முறையாக அக்டோபர் 2001—ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்கள் நடைபெற்றன. வரும் அக்டோபர் 2006—ல் உள்ளாட்சி அமைப்புகளுக்கான அடுத்த சாதாரண தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும். இந்நிலையில் பின்வரும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன:—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 பழைய பிரிவு 4—ன்படி 500-க்கும் குறையாத மக்கட்தொகை கொண்ட பகுதிகளை கிராம ஊராட்சியாக, ஊராட்சிகளின் ஆய்வாளர் (மாவட்ட ஆட்சித் தலைவர்) அறிவிக்கை செய்வார். இதைப்போலவே, மக்கட்தொகை 500-க்கும் குறைந்தால், அப்பகுதியை அருகிலுள்ள கிராம ஊராட்சியுடன் இணைத்து அறிவிக்கை செய்வார். 1991 மக்கட்தொகை கணக்கெடுப்பின்படி, 500-க்கும் அதிகமான மக்கட்தொகை கொண்ட 66 கிராம ஊராட்சிகள், 2001 மக்கட்தொகை அடிப்படையில், 500-க்கும் குறைவான மக்கட்தொகை கொண்ட கிராம ஊராட்சிகளாக மாறியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், இத்தகைய கிராம ஊராட்சிகளை அருகிலுள்ள கிராம ஊராட்சியுடன் இணைப்பதற்கு எதிராக மனுக்கள் பெறப்பட்டதோடு, சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகளையும் எதிர்கொள்ள நேரிடும் எனக் கருதப்படுகிறது. ஆகவே, அரசு, பிரிவு 4—ல் சட்டத் திருத்தம் செய்து கிராம ஊராட்சி அமைப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச மக்கட்தொகை 500 என்ற வரையறையை நீக்கியுள்ளது.

(ஆ) ஊராட்சிகளின் தற்போதைய பதவிக் காலம் 24—10—2006—ல் முடிவடைவதால், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான அடுத்த சாதாரண தேர்தல்கள் அதே நாளுக்குள் நடத்தப்பட வேண்டும். கிராம ஊராட்சி வாரியாக 2001 மக்கட் தொகை

[2006 ஆகஸ்ட் 11

விவரம் மே 2006–ல்தான் பெறப்பட்டது. ஊராட்சிகளின் வார்டுகளைப் புதிதாக வரையறை செய்தால், 2006 அக்டோபர் மாதத்திற்குள் தேர்தல் நடத்த இயலாது. மேலும், நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகள் வரையறை செய்த பிறகு, ஊராட்சி வார்டுகளின் எல்லைகளை வரையறை செய்வது மிகவும் பொருத்தமாக இருக்கும். எனவே, தற்போதுள்ள ஊராட்சி வார்டுகளின் எல்லைப் பகுதிகளையும், வார்டுகளின் எண்ணிக்கையையும், அந்த வார்டுகளின் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் மாற்றாமல், அடுத்த சாதாரண தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு முடிவெடுத்துள்ளது. மேலும், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ல் 28–ஏ என்ற புதிய பிரிவை அறிமுகப்படுத்தி பொருத்தமான சட்டத் திருத்தத்தை கொண்டு வந்துள்ளது.

(இ) கருத்துகளைத் தெரிவிக்க போதிய வாய்ப்புக் கொடுத்து, அதன்பின் பெரும்பான்மையான கருத்தினை கவனத்தில் எடுத்துக்கொண்டு, இந்த அரசு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994-க்குட்பட்ட 561 சிறப்பு சிற்றூராட்சிகளை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920–ன்கீழ் பேரூராட்சிகளாக மாற்றியமைப்பது என முடிவு செய்துள்ளது. இதற்குத் தேவையான சட்டத் திருத்தங்களும் செய்யப்பட்டுள்ளன.

(ஈ) ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பதவியிடங்கள் மற்றும் தலைமைப் பதவியிடங்கள் வரும் அக்டோபர் 2006 தேர்தலில் விதிமுறைப்படி சுழற்சி செய்யப்படும்.

(உ) அக்டோபர் 2006–ல் நடைபெற உள்ள தேர்தல்களை மேற்பார்வையிட, தேர்தல் பார்வையாளர்கள் நியமிக்கப்படுவது தற்போது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது.

(ஊ) தேர்தல் செலவினத் தொகை பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது:–

மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு – ரூ.50,000-லிருந்து ரூ.75,000



2006 ஆகஸ்ட் 11]

ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு – ரூ.25,000-லிருந்து ரூ.37,500

கிராம ஊராட்சித் தலைவர் தேர்தலுக்கு – ரூ.10,000-லிருந்து ரூ.15,000

கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் தேர்தலுக்கு – ரூ.2,500-லிருந்து ரூ.3,750

## 2.2 கிராம சபை

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடித்தள சனநாயக அமைப்பாக இருப்பது கிராம சபையாகும். கிராம ஊராட்சிகள் செவ்வனே செயல்படத் தேவையான நிர்வாகமும், பொறுப்புடன் செயல்படுவதை ஊக்குவிக்க, திட்டமிடுவதிலும், திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் பொதுமக்களின் பங்கேற்பினை அதிகரிக்கவும் மற்றும் சமூகத் தணிக்கைக்கு வழிவகுப்பதற்கும், செயல்திறன்மிக்க ஒரு கிராம சபை அவசியமாகிறது. ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும், ஓர் ஆண்டில் குறைந்தது நான்கு முறையாவது, அதாவது சனவரி 26, மே 1, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களில் கிராம சபைக் கூட்டம் நடத்த அரசு ஆணையிட்டுள்ளது. கிராம சபைகளின் செயல்பாட்டினை மேலும் செம்மைப்படுத்துவதற்கு ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர் மற்றும் மகளிர், கிராம சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள துணை குறைவெண் வரம்பினை அறிமுகப்படுத்தவும், கிராம ஊராட்சியிலுள்ள ஒவ்வொரு வார்டிலும் சுழற்சி முறையில் கிராம சபையை நடத்திடவும் மற்றும் கிராம சபை கூட்ட நடவடிக்கைகளை புகைப்படம் மூலம் பதிவு செய்யவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

## 2.3 அதிகாரப் பகிர்வு

ஊராட்சி அமைப்புகள் செயல்திறன் வாய்ந்த தன்னாட்சி நிர்வாக அமைப்புகளாக செயல்படவேண்டும் என்பதில் இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. 1996 ஆம் ஆண்டு மூன்றடுக்கு ஊராட்சிகளுக்குத் தேர்தல்கள் முதன்முறையாக நடத்தி முடிக்கப்பட்ட பிறகு, மாநிலத் திட்டக் குழுவின் அப்போதைய முழு நேர உறுப்பினரான திரு. எல்.சி. ஜெயின் அவர்களைத் தலைவராகக் கொண்டு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதற்காக குழு

ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழு தனது அறிக்கையை ஏப்ரல் மாதம், 1997-ல் அரசுக்குச் சமர்ப்பித்தது. அக்குழுவின் பெரும்பான்மையான பரிந்துரைகளுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரம் அளிக்கும்வண்ணம் செயல் வடிவம் கொடுக்கப்பட்டது. ஊரக வளர்ச்சித் துறை மட்டுமல்லாது அரசின் பிற துறைகளான வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, வனம், சமூக நலம், வருவாய், காதி மற்றும் கிராமத் தொழில்கள், கல்வி, சுகாதாரம் மற்றும் குடும்ப நலம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு போன்ற துறைகளும் மூன்றடுக்கு ஊராட்சிகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளித்து அரசாணைகள் வெளியிட்டுள்ளன.

இவ்வாறு முதன்முறையாக ஊராட்சி அமைப்புகளுக்கு அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பிறகு, ஊராட்சிகளுக்கு மேலும் கூடுதலாக அதிகாரங்களை வழங்கிடும் வழிவகைகளைப் பரிந்துரைப்பதற்காக 1997 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் அப்போதைய ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கோ.சி. மணி அவர்கள் தலைமையில், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட, அனுபவம் வாய்ந்தவர்களை உறுப்பினர்களாகக் கொண்டு ஓர் உயர்நிலைக் குழுவினை அரசு அமைத்தது. இந்த உயர்நிலைக் குழு 1,209 பரிந்துரைகளுடன் தனது அறிக்கையை 11–01–1999 அன்று அரசுக்குச் சமர்ப்பித்தது. இதில் 718 பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு, அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது.

ஊராட்சிகளுக்கு அதிகாரப் பரவலும், அதிகாரப் பகிர்வும் உயிரோட்டமான ஒரு தொடர் நிகழ்வாகும். ஊரக உள்ளாட்சி அமைப்புகள், குறிப்பாக, கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கூடுதல். அதிகாரங்கள் மற்றும் பொறுப்புகளைப் பகிர்ந்தளிப்பது என்ற கருத்து இந்த அரசுக்கு எப்போதும் ஏற்புடையதே. இது தொடர்பாக, இந்த அரசு முந்தைய தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1958-ல் இருந்தவாறு வலிமையான, செயல்திறன் மிக்க கிராம ஊராட்சியும், ஊராட்சி ஒன்றியமும் அடங்கிய இரண்டடுக்கு ஊராட்சி அமைப்புகள் தேவையென்பதை எப்போதும் வலியுறுத்தி வந்துள்ளது. மாவட்ட போர்டுகளை கலைத்ததற்கான காரணங்கள் இப்பொழுதும் செல்லுபடியாகும் என்பதே இந்த அரசின் கருத்தாகும். மூன்றாவது அடுக்கான மாவட்ட ஊராட்சிக்கும் இவை பொருந்தும். கிராம ஊராட்சிகளை அனைத்து மாநிலங்களுக்கும் கட்டாயமாக்குவதுடன், வட்டார அளவில் அல்லது மாவட்ட அளவில் அல்லது இரண்டு





அளவிலும் ஏற்புடைய ஊராட்சிகளை மாநில அரசுகள் தங்களின் விருப்பப்படி அமைத்துக்கொள்ள ஏதுவாக அரசமைப்புச் சட்டத்தில் உரிய திருத்தங்கள் கொண்டு வர இந்த அரசு, மத்திய அரசை வலியுறுத்தும்.

## 2.4 கிராம ஊராட்சிகள்

மாநிலத்தின் 29 மாவட்டங்களில் உள்ள 385 வட்டாரங்களில் 12,618 கிராம ஊராட்சிகள் உள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சராசரியாக 435 கிராம ஊராட்சிகளும், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் சராசரியாக 32 கிராம ஊராட்சிகளும் உள்ளன. நீலகிரி (35), கன்னியாகுமரி (99), தேனி (130), கரூர் (158) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை குறைவாகவும், விழுப்புரம் (1,104), திருவண்ணாமலை (860), வேலூர் (753), கடலூர் (681), காஞ்சிபுரம் (648) ஆகிய மாவட்டங்களில் கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை அதிகமாகவும் உள்ளன. தமிழகத்தில் கிராம ஊராட்சிகளின் மக்கட் தொகை மிகப் பெரிய அளவில் மாறுபடுகிறது. சில ஊராட்சிகளில் மக்கட் தொகை 500-க்கும் குறைவாகவும், சில ஊராட்சிகளில் 25,000-க்கு மிகுந்தும் உள்ளன. இதனை அட்டவணை 4-ல் காணலாம்.

### அட்டவணை–4

**மக்கட்தொகை அடிப்படையில் கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு**

**(2001 மக்கட் தொகை கணக்கெடுப்பு)**

| மக்கட்தொகை | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 500–க்கு கீழ் | 66 |
| 501 முதல் 3,000 வரை | 8,418 |
| 3,001 முதல் 10,000 வரை | 3,948 |
| 10,001 முதல் 25,000 வரை | 174 |
| 25,000–க்கு மேல் | 12 |
| மொத்தம் | 12,618 |

[2006 ஆகஸ்ட் 11

இதே போன்று பல்வேறு கிராம ஊராட்சிகளில் வருமான அளவுகளும் பெருமளவில் மாறுபடுகின்றன. இதன் விவரம் அட்டவணை 5-ல் காணலாம்.

**அட்டவணை–5**

**2005–06 வரவினத்திற்கேற்ப கிராம ஊராட்சிகளின் வகைப்பாடு**

| வ. எண் | வருவாய் குறியீடு | கிராம ஊராட்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ரூ.50,000 வரை | 16 |
| 2 | ரூ.50,000 முதல் ரூ.1 இலட்சம் வரை | 142 |
| 3 | ரூ.1 இலட்சம் முதல் ரூ.5 இலட்சங்கள் வரை | 7,028 |
| 4 | ரூ.5 இலட்சங்கள் முதல் ரூ.10 இலட்சங்கள் வரை | 3,718 |
| 5 | ரூ.10 இலட்சங்கள் முதல் ரூ.25 இலட்சங்கள் வரை | 1,444 |
| 6 | ரூ.25 இலட்சங்கள் முதல் ரூ.50 இலட்சங்கள் வரை | 195 |
| 7 | ரூ.50 இலட்சங்கள் முதல் ரூ.1 கோடி வரை | 45 |
| 8 | ரூ.1 கோடி முதல் ரூ.3 கோடிகள் வரை | 29 |
| 9 | ரூ.3 கோடிகளுக்கு மேல் | 1 |
| | மொத்தம் | 12,618 |

தற்போது மாநில நிதிக் குழு மானியத்தில் 3.48 விழுக்காடு (58%-ல் 6%) நலிவடைந்த கிராம ஊராட்சிகளுக்கு சமன்பாட்டு நிதியாக வழங்கப்படுகிறது. சமன்பாட்டு நிதியின் அளவினை அதிகரிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்த அரசு அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை அறிவித்துள்ளது. அதன்படி இத்திட்டம் செயலாக்கப்படுவதில் நலிவடைந்த கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது.



2006 ஆகஸ்ட் 11]

**2.4.1 கடமைகள்**

**கிராம ஊராட்சிகளின் சில முக்கிய கடமைகள்—**

(அ) ஊராட்சியிலுள்ள அனைத்து கிராமச் சாலைகளையும் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

(ஆ) வீட்டு மனைப் பிரிவுகளுக்கு மற்றும் கட்டட வரைபடங்களுக்கு அனுமதி வழங்குதல்

(இ) கட்டடம் உள்ள பகுதியில் உள்ள பொது இடங்கள் மற்றும் பொதுச் சாலைகளில் தெரு விளக்குகள் அமைத்தல்.

(ஈ) வடிகால்கள் கட்டுதல்.

(உ) தெருக்களைச் சுத்தமாக வைத்தல் மற்றும் கிராமச் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

(ஊ) பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

(எ) கிணறுகள், குளங்கள் மற்றும் குட்டைகள் வெட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல், மேலும், குடிநீர் வழங்கும் நீர்நிலைகளை அமைத்தல் மற்றும் பராமரித்தல்.

(ஏ) சுடுகாடு மற்றும் இடுகாடுகளைப் பராமரித்தல்.

(ஐ) பூங்கா மற்றும் படிப்பகங்களைப் பராமரித்தல்.

(ஒ) மத்திய அரசின் திட்டங்களான இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம், சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டப் பணிகள், மத்திய நிதிக் குழு மானியங்கள்மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள்.

(ஓ) அவ்வப்போது அரசு அறிவிக்கை வாயிலாக வரையறை செய்யப்படும் பிற கடமைகள்.

### 2.4.2 நிதி ஆதாரங்கள்

கிராம ஊராட்சியின் முக்கிய வருவாய் ஆதாரங்கள்

**(அ) வரி வருவாய்**

மூன்றடுக்கு ஊராட்சிகளில், கிராம ஊராட்சிகளுக்கு மட்டும்தான் வரி விதிக்கும் அதிகாரம் உள்ளது. வீட்டு வரி, தொழில் வரி, விளம்பர வரி ஆகியவை பொதுவாக விதிக்கப்படும் வரிகள்.

**(ஆ) வரி அல்லாத வருவாய்**

கட்டடங்கள் மற்றும் வரைபட அனுமதிக்கான உரிமக் கட்டணம், அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமம், குடிநீர்க் கட்டணம், வண்டி நிலையங்களுக்கான கட்டணம், சமூகக் காடுகள் ஏலத் தொகை, மீன் பாசி குத்தகை, 2சி மரப்பட்டா, பொருட்காட்சிகள் மற்றும் சந்தைகளிலிருந்து பெறப்படும் வருமானம், படகுகளிலிருந்து வருமானம், அபராதங்கள் மற்றும் தண்டத் தீர்வை போன்றவை ஆகும்.

**(இ) ஒதுக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வரி வருவாய்**

தல வரி, முத்திரைத் தாள் கட்டணம் மீதான மேல் வரி, கேளிக்கை வரி (70% பங்கு), சிறு கனிமம் மீதான உரிமக் கட்டணம்மூலம் கிடைக்கும் வருவாய்கள்.

**(ஈ) மானியம்**

மத்திய நிதி ஆணைய மானியம், மாநில நிதி ஆணைய மானியம், மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி.

### 2.4.3 நிர்வாக அதிகாரங்கள்

கிராம ஊராட்சிகளுக்கு பகுதி நேர ஊழியர் ஒருவர் மட்டுமே இருப்பதால் கிராம ஊராட்சித் தலைவரே செயல் அலுவலர் ஆவார். தலைவர் மற்றும் துணைத் தலைவர் இருவரும் இணைந்து காசோலை வழங்குவதற்கு கையொப்பமிடவேண்டும். இவர்களுக்கிடையே சுமுகமான உறவுகள் இல்லையென்றால், மாவட்ட ஆட்சித் தலைவர், ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் கிராம ஊராட்சியிலுள்ள வேறொரு உறுப்பினரை காசோலையில் தலைவருடன் இணைந்து கையொப்பமிடுவதற்கு நியமிப்பார்.



கிராம ஊராட்சிகள் அவற்றின் பொது நிதியிலிருந்து ரூ.1 இலட்சம் வரை மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு வெளி நிர்வாக அனுமதி பெறத் தேவையில்லை. இருப்பினும், மத்திய, மாநில அரசின் திட்டங்களை மேற்கொள்வதற்கு மாவட்ட ஆட்சியரின் முன் அனுமதி தேவையாகும். கிராம ஊராட்சிகள், ரூ.2,000 வரை மதிப்பீடு இல்லாமல் ஒரே தடவையில் அவசர பணிகளுக்கு செலவிடவும் மற்றும் ஆண்டொன்றிற்கு ரூ.5,000 வரை தொழில்நுட்ப ஒப்புதல் இல்லாமல் பணிகள் மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சில்லரைச் செலவினம் மேற்கொள்ள ரூ.500 வரை காசோலைமூலம் தனது பெயரில் ஊராட்சி நிதியிலிருந்து ஊராட்சித் தலைவர் பெற்று செலவிடலாம்.

கைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும். தெரு விளக்கு பராமரிப்புப் பணிகளை உடனடியாக மேற்கொள்ளத் தேவையான அதிகாரங்கள் கிராம ஊராட்சிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. பொறியாளரை மதிப்பீடு தயாரிக்கவோ அலலது பட்டியலுக்காகவோ அணுகாமல் ஒரு விசைப்பம்புக்கு ஆண்டுக்கு ரூ.7500—க்கு மிகாமல் அவர்கள் செலவினம் மேற்கொள்ளலாம். தெருவிளக்கு உபகரணங்களை குறிப்பிட்ட தரத்துடன் அவர்களே வாங்கிக்கொள்ளலாம்.

### 2.5 ஊராட்சி ஒன்றியக் குழு

மாநிலத்தில் இடைநிலை அளவில் 385 ஊராட்சி ஒன்றியங்கள் (வட்டாரங்கள்) உள்ளன. சராசரியாக ஒரு மாவட்டத்திற்கு 13 ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. நீலகிரி மாவட்டத்தில் குறைந்த அளவு எண்ணிக்கையில் அதாவது (4) ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன. விழுப்புரம் மாவட்டத்தில் அதிக அளவில் (22) ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளன.

### 2.5.1 பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள்

ஊராட்சி ஒன்றியக் குழுவின் சில முக்கிய பொறுப்புகள்—

(அ) ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று வகைப்படுத்தப்பட்ட அனைத்து பொதுச் சாலைகளையும் அமைத்தல், பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல்.

(ஆ) குடிப்பதற்கும், குளிப்பதற்கும் மற்றும் துணி துவைப்பதற்கும் தண்ணீர் வசதிகளை ஏற்படுத்துதல்.

[2006 ஆகஸ்ட் 11

(இ) ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்கு கட்டடங்கள் கட்டுதல் மற்றும் பராமரித்தல்

(ஈ) ஊராட்சி ஒன்றியத்தால் வகைப்படுத்தப்பட்ட பொருட்காட்சிகள் மற்றும் விழாக்களை கட்டுப்படுத்துதல்

(உ) ஊராட்சி ஒன்றியச் சந்தை என வகைப்படுத்தப்பட்ட பொதுச் சந்தைகளை ஏற்படுத்துதல் மற்றும் பராமரித்தல்

(ஊ) மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களை செயல்படுத்துதல்.

(எ) தொற்று நோய் அல்லது மலேரியா குறித்து தடுப்பு நடவடிக்கைகள் எடுத்தல்

### 2.5.2 நிதி ஆதாரங்கள்

ஊராட்சி ஒன்றியங்கள் வரிகள் ஏதும் விதிக்க இயலாது. ஊராட்சி ஒன்றியங்களின் வருவாய்கள்—

**(அ) வரி அல்லாத வருவாய்கள்**

உரிமக் கட்டணம், சந்தைக் கட்டணம், வாடகை மற்றும் சொத்துக்கள்மீது வருவாய் மற்றும் அபராதங்கள்.

**(ஆ) ஒப்படைக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்கள்**

தலவரி மேல்வரி, கேளிக்கை வரி (30 விழுக்காடு)

**(இ) மானியங்கள்**

மத்திய நிதிக் குழு மானியம், மாநில நிதிக் குழு மானியம், மத்திய, மாநில அரசு திட்டங்களுக்கான மானியங்கள், மகப்பேறு நிலையங்களுக்கு மானியம், ஊரக மருந்தகங்களுக்கான மானியம்.

ஊராட்சி ஒன்றியங்கள் அவற்றின் பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு வெளி நிர்வாக அனுமதி இல்லாமல் ரூ.5 லட்சம் வரை அனுமதி அளிப்பதற்கும், பணிகளைச் செயல்படுத்துவதற்கும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும் மத்திய, மாநில அரசு திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் முன்நிர்வாக அனுமதி தேவை.



2006 ஆகஸ்ட் 11]

### 2.6 மாவட்ட ஊராட்சிகள்

மாநிலத்தில் 29 மாவட்ட ஊராட்சிகள் உள்ளன.

### 2.6.1 பொறுப்புகள்

மாவட்ட ஊராட்சிகளின் பொறுப்புகள் பெரும்பாலும் ஆலோசனை வழங்குவதாக பின்வருமாறு உள்ளது—

(அ) மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டத்தை தயாரித்தல்

(ஆ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியக் குழுவின் நிர்வாக அறிக்கையை ஒருங்கிணைத்து மாவட்டத்தின் ஆண்டு அறிக்கையை தயாரித்தல்.

(இ) விவசாயம் நில மேம்பாடு, கால்நடை, பால் உற்பத்தி, கோழிப் பண்ணை, மீன் வளம், மற்றும் ஊரகத் தொழில்கள் போன்றவற்றை திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

(ஈ) ஊரக குடியிருப்புத் திட்டங்களை குறிப்பாக ஆதி திராவிடர்/ பழங்குடியினருக்கான குடியிருப்புகளுக்கான திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

(உ) பெரிய அளவிலான குடிநீர்த் திட்டங்களைக் கண்டறிதல்.

### 2.6.2 நிதி ஆதாரங்கள்

மாவட்ட ஊராட்சிக்கு வரி விதிக்கும் அதிகாரங்கள் இல்லை. சட்டப்படியான மாநில நிதிக் குழு மானியம் மற்றும் மத்திய திட்டங்களின்கீழ் வளர்ச்சி மானியம் மட்டுமே இதன் நிதி ஆதாரமாகும்.

மாவட்ட ஊராட்சிகள் அவைகளின் பொது நிதியிலிருந்து எடுக்கப்படும் பணிகளுக்கு வெளி நிர்வாக அனுமதி இல்லாமல் ரூ10 இலட்சம் வரை அனுமதி அளிக்கவும், பணிகளைச் செயல்படுத்தவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எனினும் மத்திய அரசுத் திட்டங்களைச் செயல்படுத்த மாவட்ட ஆட்சியரின் முன்அனுமதிதேவை.

### 2.7 மாநில நிதி ஆணைய மானியம்

உள்ளாட்சிகளின் நிதி ஆதாரத்தைப் பெருக்குவதற்கு மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிதிப் பங்கீடு செய்யப்படுகிறது. தற்போது மாநிலத்தின் சொந்த நிகர வரி வருவாய்களில் கேளிக்கை வரி நீங்கலாக

8 விழுக்காடு நிதி ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு முறையே 58:42 என்ற விகிதத்தில் பங்கீடு செய்யப்படுகிறது. ஒதுக்கீட்டின் 87 விழுக்காடு ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கிடையே முறையே 47:45:8 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இந்த மானியம் உள்ளாட்சிகளுக்கு ஒவ்வொரு மாதமும் விடுவிக்கப்படுகிறது. மீதமுள்ள 13 விழுக்காடு, சமன்பாடு நிதி (6 விழுக்காடு), ஊக்க நிதி (5 விழுக்காடு) மற்றும் சேம நிதி (2 விழுக்காடு) ஆகியவற்றைக் கொண்டதாகும்.

மாநில நிதிக் குழு மானியம் பின்வரும் பணிகளுக்காகப் பயன்படுத்தப்படுகிறது–

(அ) ஊதியம், ஓய்வூதியம், அலுவலகப் பராமரிப்பு போன்றவை

(ஆ) குடிநீர் வழங்கல் பராமரிப்பு

(இ) தெரு விளக்குகள் பராமரிப்பு மற்றும் மின் கட்டணம் செலுத்துதல்

(ஈ) கிராம ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் பராமரிப்பு

(உ) சிறு பாசனக் குளங்கள் பராமரிப்பு

(ஊ) பொதுச்சுகாதாரம், துப்புரவு, கழிவுநீர் கால்வாய் போன்ற பணிகள்

2006–07 ஆம் ஆண்டிற்கு, அரசு ரூ.1,224.76 கோடி மாநில நிதி ஆணைய மானியமாக ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

### 2.8 மத்திய நிதி ஆணைய மானியம்

மத்திய அரசு, பனிரெண்டாவது நிதி ஆணைய பரிந்துரைகளின் அடிப்படையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு 2005–2006 முதல் 2009–2010 ஆம் ஆண்டு வரை மொத்தம் ரூ.870 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

மத்திய அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டும் நெறிமுறைகளின்படி, இந்த மானியத்தை குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டிற்கான பணிகளில் பயன்படுத்த வேண்டும். மேலும், இந்த மானியத்தை குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரப் பணிகளில் பழுதுபார்க்கவும்,





புனரமைக்கவும், பராமரிப்பு செய்யவும் பயன்படுத்தலாம். இந்த மானியம் கிராம ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களிடையே முறையே 80:20 விகிதத்தில் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

2006–07 ஆம் ஆண்டுக்கு ரூ.174 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 2.9 சிறந்த கிராம ஊராட்சிகளுக்கான விருது

சில கிராம ஊராட்சித் தலைவர்கள், தங்களுடைய ஊராட்சிகளில் தன்னிகரற்ற, பாராட்டத்தக்க பல்வேறு புதிய முயற்சிகளை எடுத்துள்ளனர். மரபு சாரா எரிசக்தி, எரிசக்தி சேமிப்பு, திடக்கழிவு மேலாண்மை, சுய உதவிக் குழு பொருட்களை விற்பனை செய்தல் போன்றவற்றை மிகச் சிறப்பாக நிறைவேற்றியுள்ளனர்.

**அட்டவணை-6**

**மிகச் சிறந்த சாதனையாளர்கள்**

| வ. எண் | கிராம ஊராட்சி | மாவட்டம் | சாதனை விவரம் |
|---|---|---|---|
| 1 | ஒடந்துறை | கோயம்புத்தூர் | காற்றாலை, சூரிய ஒளிவிளக்கு, தாவர எரிவாயு கலன், சுய உதவிக் குழுக்கள் மூலம் குடிநீர் பாட்டில் தயாரிப்பு மற்றும் விற்பனை |
| 2 | திண்டல் | ஈரோடு | திடக் கழிவு மேலாண்மை மற்றும் மண்புழு உரம் |
| 3 | மைக்கேல்பட்டினம் | இராமநாதபுரம் | மழை நீர் சேகரிப்பு மற்றும் தாவர எரி பொருள் |
| 4 | குத்தம்பாக்கம் | திருவள்ளூர் | எரிசக்தி சேமிப்பு மற்றும் வறுமை ஒழிப்பு |
| 5 | கடச்சநல்லூர் | நாமக்கல் | தாவர எரிவாயுக் கலன் மற்றும் எரிசக்தி சேமிப்பு |

இத்தகைய பாராட்டத்தக்க முயற்சிகள் இதுகாறும் அங்கீகரிக்கப்படவில்லை. ஆகையால், இந்த ஆண்டு முதல், ஊராட்சிகள் மேற்கொள்ளும் அரிய மற்றும் சிறப்பான முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில் சிறந்த ஊராட்சிகளுக்கு விருது வழங்க

அரசு முடிவு செய்துள்ளது. இதுபோன்ற விருதுகள் ஊராட்சிகளிடையே ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையை ஏற்படுத்துவதோடு, சிறப்பாகச் செயல்படுகின்ற ஊராட்சிகளை அங்கீகரிக்கும் வகையில் அமையும். கடந்த ஐந்தாண்டுகளின் ஊராட்சியின் செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு இவ்விருதிற்கு ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்படும். இந்த விருதிற்குத் தேர்வு செய்யப்படும் ஊராட்சிக்கு சான்றிதழ், நினைவுப் பரிசு மற்றும் பரிசுத் தொகையாக ரூ.5 இலட்சம் வழங்கப்படும். மேலும், சம்பந்தப்பட்ட ஊராட்சியின் தலைவருக்கு ஒரு சான்றிதழும், பதக்கமும் வழங்கப்படும். மாவட்டங்களிலிருந்து பெறப்படும் கருத்துருக்களின் அடிப்படையில், மாநில அளவில் 15 கிராம ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கப்படும்.

இந்த விருது வழங்குவதற்காக 2006–07 ஆம் ஆண்டில் ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. துறையின் அமைப்பில் மாறுதல்**

561 சிறப்பு சிற்றூராட்சிகளில் மிகப்பெரும்பான்மையானவை மீண்டும் பேரூராட்சிகளாக வகைப்பாடு செய்யப்பட விரும்பியதால் இந்த அரசு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994 மற்றும் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 ஆகிய சட்டங்களில் தேவையான சட்ட திருத்தங்களை செய்து அரசாணை நிலை எண் 55, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 14–7–2006–ன்மூலம் சிறப்பு சிற்றூராட்சிகளை மீண்டும் பேரூராட்சிகளாக வகைப்பாடு மாற்றம் செய்தது.

சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டை ஒருங்கிணைத்து செம்மைபடுத்திட தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் 20–07–2006 முதல் அரசாணை நிலை எண்.81 நாள் 20–07–2006–ன்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்த அரசு பதவியேற்றவுடன், 31–05–2001 அன்று முந்தைய அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்ட மக்கள் நலப் பணியாளர்களின் பதவியிடங்கள் மீண்டும் தோற்றுவிக்கப்பட்டன. மக்கள் நலப் பணியாளர்கள் வரி வசூல், சொத்து பராமரிப்பு போன்றவற்றில் கிராம ஊராட்சிக்கு உதவி செய்வர்.



**4. மத்திய அரசுத் திட்டங்கள்**

**4.1 இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம்**

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டம் தனித் திட்டமாக 1997–1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர்கள், பழங்குடியினர், கொத்தடிமைகளாக இருந்து விடுவிக்கப்பட்டவர்கள் மேலும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் அல்லாத ஊரக ஏழை மக்கள் ஆகியோருக்கு வீடுகட்ட மானியம் வழங்குவது இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். உடல் ஊனமுற்றோருக்கு 3 விழுக்காடு நிதி ஒதுக்கப்படுகிறது. கிராம சபையினால் அங்கீகரிக்கப்பட்ட வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களின் பட்டியலிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர். புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை மேம்படுத்தல் ஆகியவை இத்திட்டத்தின்கீழ் எடுத்து செய்யப்படும் பணிகளாகும். இத்திட்டத்திற்கு மத்திய மற்றும் மாநில அரசுகள் முறையே 75:25 என்ற விகிதத்தில் நிதி வழங்குகின்றன.

**4.1.1 புதிய வீடுகள்**

1–4–2005 முதல் சாதாரண நிலத்தில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றுக்கு ரூ.25,000/– எனவும், கடின வகை நிலப்பரப்பில் கட்டப்படும் புதிய வீடு ஒன்றுக்கு ரூ.27,500/– எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இது தவிர, மாநில அரசு, தனது பங்களிப்புடன் சேர்த்து, ஒவ்வொரு புதிய வீட்டிற்கும் சிமெண்ட்/கான்கிரிட் மேற்கூரை அமைக்க தலா ரூ.9,000/– கூடுதல் நிதியாக வழங்குகிறது. வீட்டின் குறைந்தபட்ச பரப்பளவு 20 ச.மீ ஆகும். புதிய வீடுகள் அனைத்தும் சுகாதாரக் கழிப்பிடம் மற்றும் புகையில்லா சூளா அடுப்புகளுடன் கட்டப்படுகின்றன. உள்ளூரில் கிடைக்கும் பொருட்கள்மூலம், செலவு குறைவான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பயனாளிகள் கட்டுமானப் பணியினை மேற்கொள்கின்றனர்.

**4.1.2 கச்சா வீடுகளை மேம்படுத்துதல்**

இந்திரா நினைவு குடியிருப்புத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் அதிகபட்சமாக 20 விழுக்காடு நிதியை, கச்சா வீடுகளை மேம்படுத்தப் பயன்படுத்தலாம். கச்சா வீடு ஒன்றிற்கானத் தொகை ரூ.12,500/–.

[2006 ஆகஸ்ட் 11

2006–2007 ஆம் ஆண்டு 49,850 புதிய வீடுகள் கட்டவும், 11,078 கச்சா வீடுகளை மேம்பாடு செய்யவும் ரூ.183.33 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கான்கிரீட் மேற்கூரை அமைப்பதற்கு மாநில அரசு வழங்கும் கூடுதல் பங்குத் தொகையான ரூ.45.99 கோடியும் இதில் அடங்கும்.

### 4.2 சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம்

ஊரகப் பகுதிகளில் ஊதிய வேலைவாய்ப்பிற்கு வழிவகை செய்து, அதன்மூலம் உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து அளவினை மேம்படுத்துவது இத்திட்டத்தின் முதன்மையான நோக்கமாகும். ஊரகப் பகுதிகளில் நிலைத்திருக்கக்கூடிய சமூக மற்றும் பொருளாதார சொத்துகள் மற்றும் உள் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் இத்திட்டத்தின் இரண்டாவது நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதி மாவட்ட ஊராட்சி, வட்டார ஊராட்சி மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு முறையே 20:30:50 என்ற விகிதத்தில் வழங்கப்படுகிறது. இத்திட்டப் பணிகளில் ஈடுபடும் தொழிலாளர்களுக்கு ஊதியத்தின் ஒரு பகுதி பணமாகவும், ஒரு பகுதி பொது விநியோகக் கடைகள் மூலம் அரிசியாகவும் வழங்கப்படுகிறது. தமிழக அரசு தொழிலாளர்களின் குறைந்தபட்ச தினசரி ஊதியம் ரூ.80/– என நிர்ணயித்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதித் தேவையை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதத்தில் வழங்குகின்றன. உணவு தானியத்திற்கான மொத்தச் செலவினையும் மத்திய அரசு ஏற்கிறது.

கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுவிட்டதால், இத்திட்டம் 2006–2007 ஆம் ஆண்டில் ஏனைய 23 மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்படுகிறது.

2006–2007 ஆம் ஆண்டில் பின்வரும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும்–

(அ) 500 முதல் 1000 வரை மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலை.

(ஆ) அங்கன்வாடிகள் / பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல்.

(இ) வரத்து மற்றும் பாசனக் கால்வாய்களைத் தூர்வாருதல்.



2006 ஆகஸ்ட் 11]

(ஈ) வெள்ளத் தடுப்புப் பணிகள்.

(உ) தடுப்பு அணைகள், கசிவுநீர்க் குட்டைகள் மற்றும் நீர்க்கால் அடைப்புகள்.

(ஊ) சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள்

(எ) மதிய உணவு மையங்கள் / சமையல் கூடங்கள்.

நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.251.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.3 தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், 2005

### தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம்

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்படி, தமிழ்நாடு ஊரக வேலை உறுதித் திட்டம், 2–2–2006–ல் கடலூர், திண்டுக்கல், நாகப்பட்டினம், சிவகங்கை, திருவண்ணாமலை மற்றும் விழுப்புரம் ஆகிய ஆறு மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

### இத்திட்டத்தின் நோக்கங்கள்

தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம் 2005, ஊரகப் பகுதிகளில் உடல் உழைப்பினை மேற்கொள்ள விருப்பமுள்ள வயது வந்தோர் உள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வருடத்தில் 100 நாட்களுக்குக் குறையாமல் வேலைவாய்ப்பினை அளிப்பதை உறுதி செய்கிறது. இச்சட்டம் வேலைக்கான உரிமையை நிலைநாட்டுவதற்கு எடுக்கப்பட்ட முக்கிய நடவடிக்கையாகும். இச்சட்டம் ஊரகப் பகுதி மக்களின் சமூக மற்றும் பொருளாதார உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன்மூலம் நிரந்தரமான வாழ்வாதாரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பதிவு செய்யப்பட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும் கிராம ஊராட்சி வேலைக்கான அட்டையை வழங்கும். வேலைக்காக விண்ணப்பம் செய்த 15 நாட்களுக்குள் பணி வழங்கப்பட வேண்டும். தவறினால், சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மாநில அரசு வேலையில்லா படியை வழங்கும். சட்டபூர்வமான குறைந்தபட்ச ஊதியம் மற்றும் ஆண், பெண் இருபாலருக்கும் சமமான ஊதியம் போன்றவை இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

[2006 ஆகஸ்ட் 11

**நிதிப் பங்கீடு**

இத்திட்டத்திற்கு ஆகும் செலவினை மத்திய, மாநில அரசுகள் 90:10 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன. மத்திய அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்—

(அ) திறன்சாரா உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கான முழு ஊதியச் செலவு முழுவதும்

(ஆ) கட்டுமான பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த, தொழிலாளர்களின் ஊதியச் செலவில் 75 விழுக்காடு

(இ) வட்டார, திட்ட அலுவலர் மற்றும் அவருக்கான உதவி பணியாளர்கள் மேலும் பணியிட வசதிகள் உள்ளிட்ட நிர்வாகச் செலவு

(ஈ) மத்திய வேலை உறுதிக் குழுவின் நிர்வாகச் செலவினங்கள்

மாநில அரசு பின்வரும் இனங்களுக்கான செலவினத்தை ஏற்கும்—

(அ) கட்டுமான பொருட்களின் விலை, திறன் சார்ந்த மற்றும் பகுதி திறன் சார்ந்த தொழிலாளர்களுக்கான ஊதியச் செலவில் 25 விழுக்காடு

(ஆ) தொழிலாளர்கள் விண்ணப்பித்த 15 நாட்களுக்குள் வேலை கொடுக்க இயலவில்லையெனில் வழங்கக்கூடிய வேலையில்லா படி முழுவதும்

(இ) மாநில வேலை உறுதிக் குழுவின் நிர்வாகச் செலவினங்கள்

தமிழக ஊரகச் சூழ்நிலையை கருத்திற்கொண்டு பின்வரும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.:–

(அ) புதிய குளங்கள்

(ஆ) பாரம்பரிய நீர் ஆதார அமைப்புகளாக விளங்கும் குளங்கள், குட்டைகள், ஊரணிகள், கோவில் குளங்கள் மற்றும் பாசன குளங்களைப் புனரமைத்தல்



2006 ஆகஸ்ட் 11]

(இ) பாசனக் கால்வாய்களைத் தூர் வாருதல்

(ஈ) பாசனக் குளங்களைத் தூர் வாருதல் மற்றும் கரையினைப் பலப்படுத்துதல்

(உ) புதிய சாலைகள் அமைத்தல்

(ஊ) இதர நீர்வளப் பாதுகாப்பு, மண்வளப் பாதுகாப்பு நடவடிக்கைகள்/வெள்ளத் தடுப்புப் பணிகள்

இதுவரை 2005–2006 மற்றும் 2006–2007 ஆண்டுகளுக்காக ரூ.164.73 கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 31–3–2006 வரை செலவழிக்கப்பட்ட தொகை ரூ.3.00 கோடி ஆகும். இத்திட்டத்தின்கீழ் பயன்பெற முன்வரும் திறன்சாரா தொழிலாளர்கள் (அதில் 85 விழுக்காடு பெண்கள்) குறிப்பிடப்பட்ட அளவிற்கும் குறைவாகவே பணி மேற்கொண்டதால், பொதுப் பணித் துறையின் விலைப்புள்ளி விகிதப்படி தின ஊதியமாக ரூ.40/– முதல் ரூ.50/– வரை தான் பெற முடிந்தது. இந்தத் திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பு பெற விரும்புபவர்கள் சட்டப்பூர்வ குறைந்தபட்ச ஊதியமான ரூ.80/– பெறமுடியாதது குறித்து இவ்வரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவுடன், அரசாணை நிலை எண் 77, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 14–7–2006–ன்மூலம் தனியான ஊரக விலைப் பட்டியல் வெளியிடப்பட்டது. அதன்படி ஒரு நாளில் 7 மணி நேரம் வேலை செய்தால் தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டம், 2005–ன்படி சட்டப்பூர்வ குறைந்தபட்ச ஊதியம் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த முடிவின்படி, தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதில் இருந்த முக்கிய தடையை இந்த அரசு நீக்கியுள்ளது. இந்த ஊரக விலைப் பட்டியல் இத்திட்டத்திற்கு மட்டுமே பொருந்தும்.

இத்திட்டத்தின்கீழ் 5.94 இலட்சம் குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டு 80,000 குடும்பங்கள் வேலை கோரி விண்ணப்பித்துள்ளன. இதுவரை 1,523 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2006–2007–ல் மாநில அரசு தனது பங்குத் தொகையாக ரூ.26 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

## 4.4 பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம்

பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டம் 1999 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் ஊரகப் பகுதிகளில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களின் வறுமைத் துயர் போக்கிடும் பொருட்டு செயல்படுத்தப்பட்டு வரும் முக்கியத் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள மக்களைக் கொண்டு பல்வேறு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. இந்த சுய உதவிக் குழுக்களுக்கு திறன்வளர் பயிற்சி அளிப்பதுடன் பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் உதவி பெற்றுத் தரப்படுகிறது. மேலும் அடிப்படை கட்டுமான வசதிகளையும், இந்த சுய உதவிக் குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு ஏதுவான இதர உதவிகளையும் இத்திட்டம் வழங்குகிறது. சுய வேலை வாய்ப்புத் திட்டத்திற்கான செலவினத்தை மத்திய, மாநில அரசுகள் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் ஏற்கின்றன.

இத்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில், பயிற்சிக்காக 10 விழுக்காடும், உள்கட்டமைப்பு வசதிக்காக 20 விழுக்காடும், சுழல் நிதி மற்றும் மானியத்திற்காக 70 விழுக்காடும் வழங்கப்படுகிறது. சுய உதவிக் குழுக்கள் முதலில் தரம் பிரிக்கப்பட்ட பிறகு சுழல் நிதியாக ரூ.25,000/– (வங்கிக் கடன் ரூ.15,000/– மற்றும் மானியம் ரூ.10,000/–) வழங்கப்படுகிறது. இரண்டாவது முறை தரம் பிரிக்கப்பட்ட பிறகு தகுதி வாய்ந்த குழுக்களுக்கு அதிகபட்சமாக திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது ரூ.1.25 இலட்சத்திற்கு மிகாத மானியத்துடன் பொருளாதாரக் கடன் வழங்கப்படுகிறது.

2006–2007 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்திற்கு ரூ.131.79 கோடி கடன் இலக்குடன், ரூ.69.39 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 4.4.1 பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டம் – சிறப்புத் திட்டங்கள்

பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் அனுமதிக்கப்பட்ட சிறப்புத் திட்டங்கள் தற்போது செயல்பாட்டில் உள்ளன. அதன் விவரம் அட்டவணை–7–ல் காணலாம்.



2006 ஆகஸ்ட் 11]

**அட்டவணை–7**

**சிறப்பு பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்ட விவரம்**

| வ. எண். | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | செயல்படுத்தும் துறை |
|---|---|---|---|
| 1 | முந்தைய இலவச வேட்டி, சேலை திட்டத்தில் பங்கு பெற்ற நெசவாளர்களின் வாழ்க்கைத்தர மேம்பாடு | 25.30 | கைத்தறித் துறை |
| 2 | சுனாமியால் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு மாற்று வாழ்வாதார வாய்ப்புகள் (இரண்டு திட்டங்கள்) | (அ) 14.37<br>(ஆ) 13.79 | மீன்வளத் துறை |
| 3 | உடல் ஊனமுற்றோர் மற்றும் மனநலம் குன்றியோருக்கான திட்டங்கள்<br>1. இராமநாதபுரம் மாவட்டம்<br>2. கோயம்புத்தூர் மாவட்டம்<br>3. தூத்துக்குடி மாவட்டம் | <br><br><br>2.10<br>1.90<br>4.11 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| 4 | விற்பனைக்கான உள்கட்டமைப்பு வசதித் திட்டம் | 14.64 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை |
| 5 | மீனவர் அங்காடிகள் சிறப்புத் திட்டம் | 2.56 | மீன்வளத் துறை |

## 4.5 முழு சுகாதார இயக்கம்

மத்திய அரசு 1–4–1999 முதல் ஒருங்கிணைந்த ஊரக சுகாதாரத் திட்டத்தை மாற்றியமைத்து முழு சுகாதார இயக்கமாக துவங்கியது. தீவிர பிரச்சாரத்தின்மூலம் முழு சுகாதாரத்தின் அவசியத்தை உணர்த்தி, தேவையை ஏற்படுத்தி, மாற்று வழிமுறைகள் மூலமாக அத்தேவையை நிறைவு செய்வது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

[2006 ஆகஸ்ட் 11

1–4–2006 முதல் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பின் விவரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது—

(அ) தகவல், கல்வி மற்றும் தொடர்பு நடவடிக்கைகள், நிர்வாகச் செலவினங்கள் மற்றும் ஊரக சுகாதார விற்பனை அங்காடிகள் – 80:20

(ஆ) பள்ளிகள் மற்றும் அங்கன்வாடிகளில் கழிப்பறைகள் – 70:30

(இ) தனிநபர் இல்லக் கழிப்பிடங்கள், திட மற்றும் திரவ கழிவு மேலாண்மை மற்றும் சமுதாய சுகாதார வளாகங்கள், 20 விழுக்காடு பயனாளிகள்/ஊராட்சிகளின் பங்களிப்புடன் – 60:20:20

இத்திட்டத்தின்கீழ் 2006–2007 ஆம் ஆண்டிற்கு, ரூ.33.62 கோடி நிதி மாநில அரசின் பங்குத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முழு சுகாதார இயக்கத்தின் மூலமாகவும் மற்றும் மாநில அரசின் திட்டங்கள் மூலமாகவும், 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட அதிக விழுக்காட்டில் ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள் (13,064) தண்ணீர் வசதியின்மை, தவறான இடத் தேர்வு, பராமரிக்க பணியாளர் இல்லாமை, சரியான தேவையை கண்டறியாமை போன்ற காரணங்களினால் முழுவதும் பயன்படுத்தப்படாமலும், குறைவாகவே பயன்படுத்தப்படுவதும் தெரிய வந்துள்ளது. இந்த அரசு முழு சுகாதார இயக்கத்தினை செயல்படுத்துவதில் கொண்டுள்ள உறுதிப்பாட்டினை நிலைநிறுத்தும் வகையில், தேவைகளின் அடிப்படையில் மட்டுமே இத்திட்டம் செயல்படுத்தப்படும். மேலும், பயன்பாட்டில் இல்லாத ஒருங்கிணைந்த சுகாதார வளாகங்களை செயல்பாட்டிற்குக் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### 4.5.1 நிர்மல் கிராம புரஸ்கார்

முழு சுகாதாரத் திட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் முழு சுகாதாரம், தூய்மையான சுற்றுச்சூழல் மற்றும் திறந்த வெளியில் மலம் கழித்தல் இல்லாத கிராம ஊராட்சிகள், வட்டார ஊராட்சிகள் மற்றும் மாவட்டங்களுக்கு ஊக்கம் தரும் வகையில் 'நிர்மல் கிராம புரஸ்கார்' என்ற விருதினை 2003 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மத்திய அரசு தொடங்கியது. 5,000 மக்கள் தொகைக்குக் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு ரூ.2 இலட்சம், 5,000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள



2006 ஆகஸ்ட் 11]

கிராம ஊராட்சிகளுக்கு ரூ.4 இலட்சம் என்று மக்கள் தொகையின் அடிப்படையில் ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது.

### 4.6 நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

மத்திய, மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டப் பணிகள் மூலம் உருவாக்கப்படும் உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்படும் இடைவெளிகளை நிறைவு செய்து, அதன் மூலம் முழுமையான வளர்ச்சிக்கு வித்திடுவது இத்திட்டத்தின் நோக்கமாகும். நாடாளுமன்ற உறுப்பினரால் தேர்வு செய்யப்பட்ட வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்வதற்காக, ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் (மக்களவை, மாநிலங்களவை) தலா ரூ.2.00 கோடி ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மக்களவை உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், நாடாளுமன்ற உறுப்பினரின் தொகுதிக்குட்பட்ட மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மாநிலங்களவை உறுப்பினர்களை பொறுத்தவரை பணிகளை மாநிலத்திற்குள் பரிந்துரைக்கலாம். நியமன உறுப்பினர்களைப் பொறுத்தவரை இந்தியாவில் எந்த மாவட்டத்திற்கும் பணிகளை பரிந்துரைக்கலாம். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனைத்துப் பணிகளுக்கும் நிர்வாக அனுமதி வழங்குவர். தனிப்பட்ட வேலையின் அதிகபட்ச மதிப்பீடு ரூ.25 இலட்சமாகும். இத்திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளில் தடை செய்யப்பட்ட பணிகளுடைய பட்டியலும் மற்றும் அனுமதிக்கப்பட்ட பணிகளின் பட்டியலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

2006–07 ஆம் ஆண்டில் மத்திய அரசால் ரூ.114 கோடி இத்திட்டத்திற்கென வழங்கப்படும்.

### 4.7 பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம்

25–12–2000 அன்று பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டம் மத்திய அரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் முன்னுரிமை அடிப்படையில், 1000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள சாலை வசதியற்ற குடியிருப்புகளுக்கு 2003 ஆம் ஆண்டிற்குள் அனைத்துப் பருவ கால நிலைக்கும் ஏற்ற சாலைகள் அமைக்கவும், 2007 ஆம் ஆண்டிற்குள் 500–லிருந்து 1000–க்குட்பட்ட மக்கள் தொகையுள்ள ஊரக குடியிருப்புகளுக்கு இத்தகைய சாலை வசதி ஏற்படுத்தப்படும். இது 100 விழுக்காடு மத்திய அரசின் நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டமாகும். முதல் மூன்று கட்டங்கள் ஊரக வளர்ச்சித் துறையால் செயல்படுத்தப்பட்டன. முதல் மூன்று கட்டங்களில் ரூ.434.10 கோடி

மதிப்பீட்டில் 3364.62 கி.மீ. சாலைப் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இதுவரை 3159.56 கி.மீ. சாலைப் பணிகள் ரூ.372.09 கோடி செலவில் முடிக்கப்பட்டுள்ளன. நான்காம் கட்ட செயலாக்கம் நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டது. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் திட்டத்தின் ஐந்தாவது கட்டப் பணிகளை, மீண்டும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின்மூலம் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

### 4.8 தேசிய கரிமவாயுத் திட்டம்

இது 100 விழுக்காடு மத்திய அரசு நிதியின்மூலம் செயல்படுத்தப்படும் திட்டமாகும். இத்திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மற்றும் சிறு விவசாயிகளுக்கு ரூ.2,800/–ம், பிறருக்கு ரூ.2,100/–ம் மற்றும் மலைப் பகுதியில் அனைவருக்கும் ரூ.3,500/–ம் மானியமாக வழங்கப்படுகிறது. 2006–2007 ஆம் ஆண்டிற்கு உத்தேசமாக ரூ.62 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. மாநிலத் திட்டங்கள்

### 5.1 அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

ஒவ்வொரு கிராம ஊராட்சியிலும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் போதுமான அளவில் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தும் நோக்கில் ஒரு திருப்புமுனைத் திட்டமாக "அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்" எனும் புதிய திட்டத்தை இந்த அரசு அறிவித்துள்ளது. தற்போது செயலாக்கத்தில் உள்ள அனைத்து மத்திய, மாநிலத் திட்டங்களில், நிதி ஒதுக்கீட்டை பொறுத்தமட்டில் இதுதான் மிகப் பெரிய திட்டமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 2,500 கிராம ஊராட்சிகளுக்கு, ஒரு கிராம ஊராட்சிக்கு ரூ.20 இலட்சம் வீதம் ஒவ்வொரு வருடமும் ரூ.500 கோடியை இந்த அரசு ஒதுக்கீடு செய்யும். அநேக கிராம ஊராட்சிகள் மிகவும் குறைந்த வருவாய் உள்ளவையாக இருப்பதாலும், சட்டபூர்வ கடமைகள் ஆற்றுவதற்கு அல்லது உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு சிரமப்படுகின்ற காரணத்தாலும், இத்திட்டத்தின்கீழ் தனிநபர் வருமானம் மிகவும் குறைவாக உள்ள கிராம ஊராட்சிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள ஐந்தில் ஒரு பங்கு கிராம ஊராட்சிகளை ஒவ்வொரு வருடமும் தனிநபர் வருமானத்தை





ஏறுவரிசைப்படுத்தி அதனடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் ஐந்து ஆண்டுகளில் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். 1997 முதல் 2002 ஆம் ஆண்டு வரை நடைமுறையில் இருந்த முந்தைய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்ட கிராம ஊராட்சிகள் ஐந்தாம் ஆண்டான (2010–2011)–ல் எடுத்துக்கொள்ளப்படும்.

மத்திய அரசுத் திட்டங்களின் வழிகாட்டும் நெறிமுறைகள் வழக்கமாக எவ்வித தளர்வும் இல்லாத விதிமுறைகளைக் கொண்டுள்ளன. மேலும், மக்கள் விரும்புகின்ற பணிகளை எடுத்துச் செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையற்றதாகவும் உள்ளன. அதுமட்டுமல்லாமல், தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், 1994–ன்படி சட்டபூர்வமான கடமைகளை நிறைவேற்றிட கிராம ஊராட்சிகளுக்கு போதிய நிதி வசதியும் அளிக்கப்படவில்லை. மத்திய அரசின் திட்டங்களில் உள்ள இந்த இரண்டு இடைவெளிகளையும் நிறைவு செய்யும் வகையில் ஒவ்வொரு ஊராட்சிக்கும் அளிக்கப்படும் மொத்த நிதியான ரூ.20 இலட்சத்தில் ரூ.5 இலட்சம் வரையறுக்கப்படாத நிதியாக அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் வழங்கப்படும். எஞ்சியுள்ள நிதி பின்வரும் சட்டபூர்வ பணிகளை மேற்கொள்ள செலவு செய்யலாம்.

(அ) சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள்

(ஆ) தெருவிளக்குகள் மற்றும் சோடியம் ஆவி விளக்குகள்

(இ) குட்டைகள்

(ஈ) உள்நாட்டு மீன்வளம்

(உ) இடுகாடு/சுடுகாடு

(ஊ) குடிநீர் விநியோகம்

(எ) விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதிகள்

(ஏ) படிப்பகங்கள்

(ஐ) ஊராட்சி அங்காடிகள் மற்றும் சந்தைகள்

முன்னர் அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஒவ்வொரு ஆண்டிலும் ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒரு ஊராட்சியில் மட்டுமே செயல்படுத்தப்பட்டது. அதுபோல் அல்லாமல் புதிய அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஒவ்வொரு வருடமும் சராசரியாக 12 கிராம

ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளும் ஐந்தாண்டு காலத்தில் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்படும். வறிய நிலையில் உள்ள கிராம ஊராட்சிகளுக்கு தனிக் கவனம் செலுத்தப்படும். மேலும், 2004 முதல் 2006 வரை செயல்படுத்திய 'நமது கிராமம்' திட்டத்தின்கீழ் நிதி ஆதாரங்கள் மிகக் குறைந்த அளவில் மாநிலத்தில் உள்ள 12,618 கிராம ஊராட்சிகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டது (ஊராட்சி ஒன்றுக்கு 2004–2005–ல் ரூ.1.10 இலட்சம், 2005–2006–ல் ரூ.1.25 இலட்சம்). இதன் விளைவாக, எந்த கிராம ஊராட்சியிலும் குறிப்பிடத்தகுந்த மாறுதல்கள் காணப்படவில்லை. புதிய அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் நிதி ஆதாரங்களை ஒருமுகப்படுத்தி, ஒவ்வொரு ஊராட்சிக்கும் ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், பொன்விழா கிராம சுயவேலைவாய்ப்புத் திட்டம், ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி போன்ற திட்டங்களை இத்திட்டத்துடன் இயன்ற அளவு ஒருங்கிணைத்து ஒவ்வொரு ஆண்டும் எடுத்துக் கொள்ளப்படவுள்ள 2,500 கிராம ஊராட்சிகளிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

### 5.2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம்

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்திற்கு திட்ட நிதி முழுவதும் மாநில அரசால் வழங்கப்படுகிறது. சட்டமன்றத் தொகுதிக்குத் தேவையான அத்தியாவசியமான உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சட்டமன்ற உறுப்பினர் தமது தொகுதியில் நிறைவேற்றப்படவேண்டிய பணிகளை பரிந்துரை செய்வார். ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதிக்கும் திட்ட நிதியாக ரூ.1.00 கோடி வழங்கப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்தில் பின்வரும் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படவுள்ளன:–

(அ) சிமெண்ட் கான்கிரீட் தெருக்கள் (25 விழுக்காடு)

(ஆ) சோடியம் ஆவி விளக்குகள் (15 விழுக்காடு)

(இ) தற்போதுள்ள சாலைகளை மேம்படுத்துதல் (20 விழுக்காடு)

எஞ்சியுள்ள 40 விழுக்காடு நிதியை, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட வழிகாட்டி நெறிமுறைகளில் குறிப்பிட்டுள்ள தடை செய்யப்பட்ட பணிகளைத் தவிர பிற பணிகளைத் தேர்வு செய்யலாம்.





மாநகராட்சிப் பகுதிகளில், 60 விழுக்காடு நிதியில் அடிப்படை வசதிகளுக்கான பணிகளை மேற்கொள்ளலாம்.

2006–2007 ஆம் ஆண்டு இத்திட்டத்தின்கீழ் அரசு ரூ.235 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### 5.3 ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி

நபார்டு வங்கி மூலமாக ஊரக உள்கட்டமைப்புத் திட்டங்களுக்கு நிதி வழங்கும் பொருட்டு 1995–1996–ல் மத்திய அரசால் ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதி தொடங்கப்பட்டது. இந்நிதியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகளாவன—

(அ) ஊரகச் சாலைகள்/பாலங்கள்/நீர்பிரி முகடு மேம்பாடு

(ஆ) சிறு பாசனத் திட்டங்கள்

(இ) மண்வளப் பாதுகாப்பு/வெள்ளத் தடுப்புப் பணிகள், மேலும்

(ஈ) குடிநீர் வசதி/சுகாதாரம் போன்றவை.

பேருந்து செல்லும் ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை வலுப்படுத்த ஊரக உள்கட்டமைப்பு, வளர்ச்சி நிதிமூலம், ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்புத் திட்டம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையினால் செயல்படுத்தப்படுகிறது. நடப்பு நிதியாண்டில் நபார்டு வங்கி நிதி உதவியுடன் 1,543.32 கி.மீ. நீளத்திற்கான பேருந்து செல்லும் 889 ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகளை மேம்படுத்திட ரூ.107.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் இந்த அரசு, ஊரக உள்கட்டமைப்பு வளர்ச்சி நிதியிலிருந்து பெரும் அளவில் நிதி பெற்று ஊரக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது.

### 5.4 கிராமச் சந்தை மேம்பாட்டுத் திட்டம்

தற்போது ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியங்களால் பராமரிக்கப்படும் சந்தைகள் அடிப்படை கட்டுமான வசதிகளின்றி பராமரிக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ், கடைகள், குடிநீர் வசதி, பொதுக் கழிப்பிடம், தெரு விளக்கு வசதி போன்றவை அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2006–2007–ல் இத்திட்டத்திற்கு அரசு ரூ.1 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

**5.5 தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களுக்கான சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம்**

தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய பின்தங்கிய மாவட்டங்களில் நக்சலைட்டுகள் உருவாகும் சூழ்நிலையை தடுக்கும் பொருட்டு 2003–2004–லிருந்து சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.7.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**6. நிலுவைப் பணிகள்**

1991–1996 மற்றும் முந்தைய ஆண்டுகளில் நீண்ட காலமாக முடிக்கப்படாமல் நிலுவையில் இருந்த 1.14 இலட்சம் பணிகள் மே 1996–ல் கண்டறியப்பட்டு, இரண்டு வருட காலங்களில் முடிக்கப்பட்டன. மே–ஜூலை 2006–ல் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, 2001–2006 மற்றும் அதற்கு முந்தைய வருடங்களில், மீண்டும் 1.54 இலட்சம் பணிகள் நிலுவையில் உள்ளதாக கண்டறியப்பட்டன. இந்த எண்ணிக்கையில், 31–3–2006–க்குள் முடித்திருக்க வேண்டிய 39 இலட்சம் கழிப்பறைப் பணிகளில் முடிக்கப்படாமல் உள்ள 19 இலட்சம் தனிநபர் இல்லம் மற்றும் இதர கழிப்பறைப் பணிகள் சேர்க்கப்படவில்லை. இப்பணிகளை விரைந்து முடிக்க, போர்க்கால அடிப்படையில் சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**7. பகுதி–2 திட்டங்கள்**

2006–2007 ஆம் ஆண்டில் பின்வரும் புதிய திட்டங்கள் செயல்படுத்தப்படும்—

**7.1 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் அலுவலகத்தை நவீனமயமாக்கல்**

ரூ.35 இலட்சம் செலவில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநரகத்தினை நவீனமயமாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் துறையின்மூலம் செயல்படுத்தப்படுகின்ற பல்வேறு திட்டங்களைக் கண்காணித்திட கணினி மென்பொருள் ஏற்படுத்துவதற்கு மேலும் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2006 ஆகஸ்ட் 11]

**7.2 உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகத்திற்கு ஒளிநகல் இயந்திரம் வாங்குதல்**

நடப்பாண்டில் ரூ.1.00 இலட்சம் வீதம் 29 உதவி இயக்குநர்கள் (ஊராட்சிகள்) அலுவலகங்களுக்கு ஒளிநகல் இயந்திரம் வாங்க ரூ.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7.3 நான்கு ஊரக வளர்ச்சி முகமைகளில் திட்ட அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல்**

நடப்பாண்டில் ரூ.90 இலட்சம் மொத்த செலவினத்தில், கன்னியாகுமரி, திருவாரூர், திருவண்ணாமலை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் திட்ட அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்ட அரசு தீர்மானித்துள்ளது. இதற்காக, நடப்பாண்டு ரூ.36 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. கணினிமயமாக்கல்**

ஏற்கெனவே எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்மூலம் 385 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 29 உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) அலுவலகங்களுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள 12,618 கிராம ஊராட்சிகளை பொருத்தமட்டில், 6,522 ஊராட்சிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 6,096 ஊராட்சிகளுக்கு இந்நிதியாண்டிற்குள் கணினிகள் வழங்கப்படும்.

**9. சுனாமி புனரமைப்புத் திட்டங்கள்**

26–12–2004 அன்று சுனாமியால் தமிழகத்திலுள்ள கடலோர மாவட்டங்களில் உயிருக்கும் உடமைக்கும் பெரும் அழிவு ஏற்பட்டது. வாழ்வாதாரத்தை மீளப்பெறச் செய்தல், சாலைகள் மற்றும் பொது உள்கட்டமைப்பு வசதிகளைச் சீரமைத்தல் போன்ற நிவாரணப் பணிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ள பின்வரும் நிதி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் கையெழுத்தானது—

(1) உலக வங்கி வழங்கிய சுனாமி மறுகட்டமைப்பு அவசர காலத் திட்டம் (ETRP)

(2) ஆசிய வளர்ச்சி வங்கி (ADB) வழங்கிய சுனாமி அவசர கால உதவித் திட்டம் (TEAP)

(3) பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியம் (IFAD) வழங்கிய சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் (PTSLP)

சுனாமி புனரமைப்புத் திட்டங்களை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை உட்பட தமிழக அரசின் பல்வேறு துறைகள் செயல்படுத்துகின்றன. இதனை வருவாய்த் துறையில் உள்ள திட்ட மேலாண்மை அலகு ஒருங்கிணைப்பு செய்து வருகின்றது. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு அதிகமான ஒதுக்கீடு செய்யப்பட்டதனால், இத்திட்டத்தின் செயலாக்கத்தை மேற்பார்வையிட, ஒரு தனி திட்டச் செயலாக்கப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு 1-8-2005 முதல் செயல்பட்டு வருகிறது.

உலக வங்கி நிதி, ஆசிய வளர்ச்சி வங்கி நிதி, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியம் அளித்துள்ள நிதி ஆகியவற்றின்மூலம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் 13-5-2006 வரை நிறைவேற்றப்பட்ட சுனாமி புனரமைப்புப் பணிகள் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது—

**அட்டவணை - 8**

**சுனாமி புனரமைப்புத் திட்டங்களின் நிதிப் பயன்பாடு**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்ட உட்பிரிவு விவரம் | ஊ.வ. துறை நிதி ஒதுக்கீடு | விடுவிக்கப் பட்ட நிதி | செலவின[illegible] |
|---|---|---|---|---|
| 1. | உலக வங்கி நிதியின்கீழ் சுனாமி மறுகட்டமைப்பு அவசர காலத் திட்டம் | 1350.00 | 16.11 | [illegible] |
| 2. | ஆசிய வளர்ச்சி வங்கி நிதியின்கீழ் சுனாமி அவசர கால உதவித் திட்டம் | 301.22 | 22.86 | 4.9[illegible] |
| 3. | பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் நிதியின்கீழ் சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் | 283.69 | 0 | [illegible] |
| | மொத்தம் | 1,934.91 | 38.97 | 4.9[illegible] |



ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1,935 கோடியில் ரூ.5.00 கோடி மட்டுமே கடந்த சுமார் ஓராண்டு காலமாக புனரமைப்புப் பணிகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது.

## 9.1 உலக வங்கி நிதி உதவி அளிக்கும் சுனாமி மறு கட்டமைப்பு அவசர காலத் திட்டம் (ETRP)

சுனாமி மறு கட்டமைப்பு அவசர காலத் திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 8 மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றது. இந்தத் திட்டம் 9-8-2005 முதல் 3 ஆண்டுகளுக்குச் செயல்படும். இத்திட்டத்தின்கீழ் உலக வங்கி பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் முக்கிய கூறுகள் 31-07-2006 வரையிலான நிதி முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன—

**அட்டவணை - 9**

**திட்டக் கூறுகள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் | திட்ட உட்பிரிவு விவரம் | ஊ.வ. துறை நிதி ஒதுக்கீடு | திட்ட ஒப்புதல் | விடுவிக்கப் பட்ட நிதி | 31-7-2006 வரை செலவினம் |
|---|---|---|---|---|---|
| 1. | வீடுகள் மறுகட்டமைப்பு | 1,080 | 0 | 0 | 0 |
| 2. | அடிப்படை வசதிகள் உருவாக்குதல் | 270 | 67.20 | 30.11 | 0.93 |
| 3. | செயலாக்க ஆதாரம் | | 1.03 | 0 | 0 |
| | மொத்தம் | 1,350 | 68.23 | 30.11 | 0.93 |

உலக வங்கித் திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்ட ரூபாய் 1,080 கோடியும், குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதி ஏற்படுத்த ரூ.270 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், இந்தத் திட்டத்தின்கீழ் வீடு ஒன்றிற்கு ரூபாய் 1.50 இலட்சம் மதிப்பீடு என்று நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டுள்ள ஒரு வீட்டிற்கான மதிப்பீட்டுத்

[2006 ஆகஸ்ட் 11

தொகையில் ரூபாய் 30,000 அடிப்படை வசதிகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கட்டப்படும் வீடுகளுக்கு மட்டுமின்றி தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அவர்களது சொந்த நிதியினைக் கொண்டு புதியதாகக் கட்டி வரும் குடியிருப்புகளுக்கு இணைப்புச் சாலைகள், உட்புறச் சாலைகள், சுகாதார வசதிகள், தெருவிளக்குகள், வடிகால்கள் ஆகிய அடிப்படை வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

அரசின் மூலமாக இத்திட்டத்தின்கீழ் வீடுகள் ஏதும் இதுவரை கட்டித் தரப்படவில்லை. ஊரகப் பகுதிகளில், 154 குடியிருப்புகளில் கட்டப்பட்டு வரும் 20,898 வீடுகள் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களால் கட்டப்பட்டு வருகின்றன. இந்த அரசு உலக வங்கியிடமிருந்து வீடுகள் கட்டுவதற்காகப் பின்வரும் இரண்டு திட்டங்களின் அடிப்படையில் ஒப்புதல் கோரியுள்ளது:-

1. முதலாவது, கடற்கரையிலிருந்து 200 மீட்டருக்குள் வசிக்கும், நேரிடையாக பாதிப்பு அடையாத, ஏறத்தாழ 20,000 குடும்பங்களுக்கு அவர்களது விருப்பத்திற்கேற்ப 200 மீட்டருக்கு அப்பால் குடியிருப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டம்.
2. இரண்டாவது திட்டமாக, கடலோர மாவட்டங்களில் வெள்ளம், புயல், சுனாமி போன்ற இயற்கைச் சீற்றங்களால் அடிக்கடி பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளில் குடிசை வீடுகள், பழமையான முறையில் கட்டப்பட்ட வீடுகள் போன்றவற்றில் வாழும் ஏழை, எளியோரின் குடும்பங்களுக்குப் புதிய வீடுகளைக் கட்டித் தரும் பணியாகும். இவ்வாறு கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 50 ஆயிரம் இருக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இக்குடும்பங்கள் தற்போது தங்கும் இடங்களிலேயே தேவையான இடம் இருப்பின், அந்தந்த இடங்களிலேயே அனைத்து இயற்கைச் சீற்றங்களையும் தாங்கக்கூடிய உறுதியான வீடுகள் கட்டித் தரப்படும். அவ்வாறு இடம் இல்லாதிருப்பின், தேவைப்படும் நிலத்தை நில எடுப்பு செய்து வீடுகள் கட்டும் பணி தொடரப்படும்.

புதிய வீடுகளுக்கான நிலங்கள் வருவாய்த் துறையினால் கையகப்படுத்தப்பட்டு, பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டபின், மேற்கண்ட இரண்டு திட்டங்களுக்கு உலக வங்கியின் ஒப்புதல்



2006 ஆகஸ்ட் 11]

பெறப்பட்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைமூலம் புதிய வீடுகள் கட்டும் பணி மேற்கொள்ளப்படும்.

பணிகளை ஆரம்பிக்கும் முன் நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல், கடலோரக் கட்டுப்பாடு பகுதி ஆணைக் குழுவின் ஒப்புதல், சுற்றுப்புறச் சூழல் ஒப்புதல் பெற வேண்டுமென்று உலக வங்கி வலியுறுத்தி உள்ளது. உலக வங்கியின் கடுமையான கொள்முதல் நடைமுறைகள் திட்ட முன்னேற்றத்தில் முக்கிய தடையாக இருந்தன. இந்த அரசு சுனாமி திட்டங்களுக்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெறுவதிலிருந்து விதிகளை ஒட்டுமொத்தமாகத் தளர்த்தி அரசாணை எண் 150, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 24–06–2006–ல் வெளியிட்டுள்ளது. இதேபோன்று பிற இரண்டு நடைமுறைகளையும் களைய அரசு துரித நடவடிக்கை எடுத்து வருகிறது. மாதிரி ஒப்பந்தப் புள்ளிப் படிவங்கள் உலக வங்கியின் ஒப்புதல் பெறாமல் நீண்ட காலமாக நிலுவையில் இருந்த நிலையினை மாற்றி, தற்பொழுது ஒப்புதல் பெறப்பட்டு அனைத்துப் பணிகளும் விரைவில் துவங்கப்பட உள்ளன.

இத்திட்டத்தின்கீழ் 09–08–2005 முதல் 13–05–2006 வரை எவ்விதச் செலவும் செய்யப்படவில்லை. எனினும் 13–5–2006–க்கு பின், சுமார் ரூபாய் 1 கோடி செலவிடப்பட்டுள்ளது. 13–05–2006–க்கு முன்பு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருந்த நிலையை மாற்றி, தற்பொழுது பணியிடங்கள் வேகமாக நிரப்பப்பட்டு வருகின்றன.

**9.2 ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவி அளிக்கும் சுனாமி அவசர கால உதவி திட்டம் (TEAP)**

இத்திட்டம், ரூ.301.22 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 06–04–2005 முதல் மூன்று ஆண்டுகள் செயல்படும். இத்திட்டத்தின்கீழ் 12 கடலோர மாவட்டங்களான திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, தூத்துக்குடி, இராமநாதபுரம், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்கள் பயன்பெறும். ஆசிய வளர்ச்சி வங்கி வாழ்வாதார உதவி மற்றும் சுகாதார மேம்பாடு ஆகிய பணிகளுக்கு 100 சதவீதம் முழு மானியமாக நிதி ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின் கூறுகளும் 31–07–2006 வரையிலான நிதித் திறனும் அட்டவணை 10–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

[2006 ஆகஸ்ட் 11

## அட்டவணை - 10

## திட்டக் கூறுகள்

(ரூபாய் கோடியில்)

| வ. எண். | திட்ட விவரம் | ஊ.வ.துறை ஒதுக்கீடு | விடுவிக்கப் பட்ட நிதி | செலவினம் (31-07-2006 வரை) |
|---|---|---|---|---|
| 1. | வாழ்வாதாரத் திட்டம் | 190.10 | 69.50 | 8.20 |
| 2. | சுகாதாரத் திட்டம் | 5.86 | 1.95 | 0.92 |
| 3. | ஊரக உள் கட்டமைப்பு வசதிகள் | | | |
| | அ. சாலை மற்றும் வடிகால் வசதி | 77.06 | 38.50 | 1.17 |
| | ஆ. பொதுக் கட்டடங்கள் | 22.79 | 0 | 0 |
| 4. | நிர்வாகச் செலவினங்கள் | 5.41 | 5.41 | 0.92 |
| | மொத்தம் .. | 301.22 | 115.36 | 11.21 |

சுய உதவிக் குழுக்கள் மற்றும் தனி நபர்களின் வாழ்வாதாரத்தை சீரமைப்பதற்கு வருவாய் ஈட்டக் கூடிய தொழில்களில் அவர்களை ஈடுபடுத்தி நிதி உதவி வழங்கும் பொருட்டு ரூ.190.10 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.133.49 கோடி சுழல் நிதி மற்றும் பொருளாதார உதவிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திறன் மேம்பாட்டிற்காக ரூ.19 கோடி மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவக்கூடிய தரச் சோதனை, தரக் கட்டுபாடு, போக்குவரத்து வசதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ரூ.38 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட கட்டமைப்பு வசதிகளின் மேலாண்மை கிராம அளவிலான சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்புகளிடம் ஒப்படைக்கப்படும். இத்திட்டம்மூலம் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூ.30,000/–மும் மற்றும் வங்கிக் கடனாக ரூ.15,000/–மும் வழங்கப்படும். மானியத்துடன் கூடிய



2006 ஆகஸ்ட் 11]

பொருளாதார கடன்களுக்கு 4 சதவீதம் வட்டி மானியமாக வழங்கப்படும். உடல் ஊனமுற்றோர் வங்கிகள்மூலம் கடன் பெறுவதில் சிரமம் உள்ளதை கருத்தில் கொண்டு அவர்களுடைய வாழ்வாதார உதவிக்காக ரூ.10,000 முழு மானியமாக வழங்குவது இந்த அரசின் சிறப்புத் திட்டமாகும்.

வாழ்வாதார உதவித் திட்டத்தின்கீழ் விடுவிக்கப்பட்ட ரூபாய் 5.5 கோடி நிதியில், 6–4–2005 முதல் 13–05–2006 வரை ரூபாய் 3.02 கோடி மட்டுமே செலவிடப்பட்டுள்ளது. அதற்குப் பிறகு, 31–07–2006 வரை மேலும் ரூபாய் 64 கோடி விடுவிக்கப்பட்டு ரூபாய் 5.18 கோடி செலவிடப்பட்டுள்ளது. 31–03–2007–க்குள் ரூபாய் 50.00 கோடி செலவினம் மேற்கொள்ள செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

சாலைகள் மற்றும் வடிகால் கூறின்கீழ் 577.09 கி.மீ. நீளமுள்ள 496 சாலைகளை 225 தொகுப்புகளாக (Packages) உள்ளடக்கி, அச்சாலைகளைத் தார்ச் சாலைகளாகவும் / சிமெண்ட் சாலைகளாகவும் மறுசீரமைக்க ரூபாய் 77.06 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை 162 தொகுப்புகளுக்கு ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டுள்ளன. 63 தொகுப்புகளில் உள்ள பணிகளுக்கு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. இப்பிரிவின்கீழ் விடுவிக்கப்பட்ட ரூபாய் 10 கோடி நிதியில் 6–4–2005 முதல் 13–05–2006 வரை ரூபாய் 1.01 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. அதன்பின் இத்திட்டப் பணிகளை விரைந்து நிறைவேற்ற ஏதுவாக அரசிடமிருந்து 31–07–2006 வரை ரூபாய் 28.50 கோடி நிதி கூடுதலாக விடுவிக்கப்பட்டுள்ளது. 31–03–2007 இறுதிக்குள் ரூபாய் 52.72 கோடி செலவினம் மேற்கொள்ள செயல் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

### 9.3 பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் (IFAD) நிதி உதவியுடன் சுனாமிக்குப்பின் செயல்படுத்தப்படும் நிலைத்த வாழ்வாதார திட்டம் (PTSLP)

மத்திய அரசு, பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்துடன் 6–10–2005–ல் இந்தத் திட்டத்திற்கான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. இத்திட்டம் திருவள்ளூர், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் கன்னியாகுமரி உள்ளிட்ட 6 கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்ட காலம் 8 ஆண்டுகள் ஆகும்.

இத்திட்டக் கூறுகள் பின்வருமாறு,

(அ) கடற்கரை பகுதி வள ஆதார மேலாண்மை

(ஆ) ஊரக நிதி மற்றும் இடையூறு காப்பீடு

(இ) வேலை வாய்ப்பு உருவாக்குதல் மற்றும் தொழில் திறன் பயிற்சி

(ஈ) சமுதாய அடிப்படையிலான கடல் பாதுகாப்பு மற்றும் பேரிடர் மேலாண்மை

(உ) திட்ட மேலாண்மை

இந்தத் திட்டம் ரூ.283.69 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இதில் ரூ.130.43 கோடி கடனுதவியை பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியமும், ரூ.13.26 கோடியை தமிழக அரசின் பங்காகவும், ரூ.95.45 கோடியை வங்கிக் கடனாகவும், ரூ.44.55 கோடியைப் பயனாளிகளின் பங்காகவும் பெற்று இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டத்தினை மாநில அளவில் செயல்படுத்தும் பொறுப்பை தமிழ்நாடு சுய உதவிக் குழுக்களின் நல சங்கத்திற்கும் (TNWS), மாவட்ட அளவில் மாவட்ட வழங்கல் விற்பனை சங்கங்கள் (DSMSs), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகள் (DRDAs) மற்றும் இதர தகுதிவாய்ந்த அமைப்புகளுக்கும் வழங்கி அரசாணை எண் 136, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 19–10–2005–ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சுய உதவிக் குழுக்கள் நலச் சங்கம் மற்றும் மாவட்ட வழங்கல் விற்பனைச் சங்கங்களிடம் முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டத்தினைச் செயல்படுத்த போதுமான அளவு திறன், அனுபவம் மற்றும் தேவையானப் பணியாளர்கள் இல்லை என இந்த அரசு கருதுகிறது. இந்தத் திட்டம் ஏற்கெனவே திட்டமிட்டபடி செயல்படுத்தப்படாமல் காலதாமதமாவதால் இத்திட்டத்தின் செயலாக்க அமைப்பினை மாற்றுவது இன்றியமையாததாகும். எனவே, இந்த திட்டத்தின் செயலாக்க அமைப்பினை மாற்றி அமைக்காவிடில், இன்னும் தொடங்கப்படாமல் உள்ள இத்திட்டம் மேலும் காலதாமதமாக நேரும். இந்நிலையில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் இதுபோன்ற திட்டங்களை 17 ஆண்டுகளாக செயல்படுத்திய அனுபவம் பெற்றுள்ளது. இந்த நிறுவனம் ஏற்கெனவே பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்தின் நிதி உதவி பெற்று மகளிர் சுய உதவிக் குழுத் திட்டத்தை 1989 முதல் 1995 வரை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.



தமிழக அரசு, சமூக நலம் மற்றும் சத்துணவு துறையின் நிர்வாக கட்டுப்பாட்டிலிருந்த, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தை 20–7–2006 முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு மாற்றியுள்ளதால், இத்திட்டத்தினைச் செயலாக்கும் பொறுப்பை தமிழ்நாடு சுய உதவிக் குழுக்களின் நல சங்கத்திற்கு பதிலாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு மாற்றிட பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்திடம் அரசு பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. இந்தத் திட்டம் மூன்று மாத காலத்திற்குள் செயல் வடிவம் பெறும்.

## 10. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் பெண்கள் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சி மற்றும் ஆற்றல் பெற வேண்டுமென்ற நோக்கத்துடன் 1983 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்த நிறுவனம், தொடக்கத்திலிருந்து ஜூலை 2006 வரை சமூக நலத் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் இருந்து வந்தது. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் அரசாணை எண் 81, நாள் 20–7–2006–ன்படி இந்நிறுவனம் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டிற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுய உதவிக் குழுக்களுக்கான திட்டங்களைச் செம்மையாகவும், நல்ல ஒருங்கிணைப்புடனும் செயல்படுத்த இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதல் முறையாக சுய உதவிக் குழுக்களை இந்த அரசு 1989 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் தர்மபுரி மாவட்டத்தில் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி (IFAD) நிறுவனத்தின் நிதி உதவியுடன் அமைக்கத் தொடங்கியது. பின்பு இத்திட்டம், 1991–1992 ஆம் ஆண்டு சேலம் மற்றும் தென்னாற்காடு மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது. அதேபோன்று 1992–1993 ஆம் ஆண்டு இத்திட்டம் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

### 10.1 மகளிர் திட்டம்

பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதி உதவியுடன் 1989 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்ட திட்டம் வெற்றிகரமாக நடைபெற்றதால் மிகவும் பிரசித்தி பெற்ற "மகளிர் திட்டம்" என்ற பெயரில் இந்தத் திட்டம் 1997–1998 ஆம் ஆண்டு மாநில அரசு நிதியுடன் விழுப்புரம், தர்மபுரி (கிருஷ்ணகிரி), நாமக்கல், கடலூர், இராமநாதபுரம், மதுரை, தேனி, கரூர்,

விருதுநகர், சேலம், திருவாரூர், தூத்துக்குடி, வேலூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் தொடங்கப்பட்டது.

இரண்டாம் கட்டமாக இத்திட்டம் 1998–1999 ஆம் ஆண்டு திருநெல்வேலி, திருவண்ணாமலை, ஈரோடு, புதுக்கோட்டை, சிவகங்கை, நீலகிரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் விரிவுபடுத்தப்பட்டது.

மூன்றாம் கட்டமாக இத்திட்டம் 1999–2000 ஆம் ஆண்டு, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், பெரம்பலூர் (அரியலூர்), தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டது.

சென்னைக்கு இத்திட்டம் கடைசியாக 2001–2002 ஆம் ஆண்டு விரிவுபடுத்தப்பட்டது.

"மகளிர் திட்டம்" அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் வங்கிகளின் துணையோடு செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா நிறுவனங்களின் உதவியுடன் இத்திட்டத்தின்கீழ் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.

### 10.2 சுய உதவிக் குழுக்கள்

ஒத்த கருத்துடைய ஏழை மகளிர் தாமாகவே முன் வந்து ஒன்று சேர்ந்து ஒரு சிறு குழு அமைப்பதே சுய உதவிக் குழுவாகும். இக்குழுவில் 12–லிருந்து 20 மகளிர் உறுப்பினராக இருக்கலாம். குழு உறுப்பினர்கள் 18 முதல் 60 வயதுடையவர்களாக இருக்க வேண்டும். குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு கடன் வழங்குவதற்காக அவர்கள் அனைவரும் சேமிப்பு மூலம் பொது நிதி உருவாக்க ஏகமானதாக உடன்பட வேண்டும்.

சுய உதவிக் குழுவின் சிறப்பு அம்சம் என்பது உறுப்பினர்களிடையே சிக்கனத்தையும், வங்கியில் சேமிக்கும் பழக்கத்தையும் கொண்டு வருவது ஆகும். கந்து வட்டிக்காரர்களின் கோரப் பிடியிலிருந்து விடுபடவும், தனி நபராகச் செயல்படும்போது வங்கிகளிலிருந்து பெற இயலாத நிதி உதவியைப் பெறுவதற்கும் சுய உதவிக் குழுக்கள் சிறந்த அமைப்புகளாக பெயர் பெற்றுள்ளன.





காலம் தவறாமல் கூட்டங்கள் நடத்துதல், அதில் கட்டாயமாகக் கலந்து கொள்ளுதல் மற்றும் சேமிப்பு ஆகியவை சுய உதவிக் குழு கோட்பாட்டின் முக்கிய அம்சங்களாகும். கூட்டங்கள், வாரந்தோறும் அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை, உறுப்பினர்களின் வசதிக்கு ஏற்ப நடத்தப்படுகிறது. பொதுவாக, ஒவ்வொரு சுய உதவிக் குழு உறுப்பினரும் ரூ.100/– வரை ஒரு மாதத்திற்கு சேமிக்கிறார்கள். குழுவை வழி நடத்த, உறுப்பினர்கள் அவர்களிடையே ஒரு ஊக்குநர் மற்றும் இரண்டு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கின்றனர். ஊக்குநரின் தலையாய பணி குழுவை வழி நடத்திச் செல்வதும், குழுவின் பதிவேடுகளை பராமரிப்பதுமாகும். ஊக்குநருக்கு உதவி செய்வது, குழுவின் கணக்குகளை பராமரிப்பது மற்றும் வங்கிக்கு செல்வது ஆகிய பணிகளை பிரதிநிதிகள் மேற்கொள்கின்றனர்.

சுய உதவிக் குழுவின் வெற்றிக்கான முழு முதல் காரணம் – இப்பெண்கள் தாம் பெறுகின்ற கடனை சரியான முறையில் திரும்பச் செலுத்துவதுதான். இதுவே இக்குழுக்களின் வெற்றியின் ரகசியம். சுய குழுக்கள் 98 விழுக்காடு கடன்களைத் திருப்பிச் செலுத்தியுள்ளன. சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தங்களுடைய ஒருங்கிணைந்த திறமைகளையும், ஆற்றலையும் பயன்படுத்தி தாங்கள் பெற்ற கடனை சிறந்த முறையில் பயன்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குள் திரும்ப செலுத்துகின்றனர்.

### 10.3 திறன் வளர்த்தல்

சுய உதவிக் குழுக்கள் துவங்கப்பட்டபின் அவை திறம்பட செயல்படுவதற்கு, அக்குழுக்களின் திறன்கள் மேம்படுத்தப்பட வேண்டும். எனவே, குழுக்களின் அடிப்படைப் பயிற்சிகளான, குழு உறுப்பினர் பயிற்சி மற்றும் ஊக்குநர் பிரதிநிதி பயிற்சிகள், குழு ஆரம்பித்து 6 மாத காலத்திற்குள் அளிக்கப்படுகின்றன.

#### 10.3.1 குழு உறுப்பினர் பயிற்சி

குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் இப்பயிற்சி 4 நாட்களில் 4 பாடத் திட்டங்களாக அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கமே, உறுப்பினர்களிடையே மறைந்துள்ள திறன்களை வெளிக் கொணர்வது ஆகும். 2005–2006 ஆம் ஆண்டில் இப்பயிற்சிக் காலம் 2 நாட்களில் 2 பாடத் திட்டங்களாக குறைக்கப்பட்டது.

### 10.3.2 ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி

ஒவ்வொரு குழு ஊக்குநருக்கும் மற்றும் குழுவிலுள்ள ஒரு பிரதிநிதிக்கும் இப்பயிற்சி 6 நாட்களில் 3 பாடத் திட்டங்களாக அளிக்கப்படுகிறது. 2005–2006–ல் இப்பயிற்சியானது 3 நாட்களில் 3 பாடத் திட்டங்களாக குறைக்கப்பட்டது. குழுவை வழி நடத்திச் செல்லும் பண்பு, குழுவாக செயல்படும் திறன், பதிவேடுகளை பராமரிக்கும் திறன் ஆகிய திறன்களை மேம்படுத்துவதே இப்பயிற்சியின் முக்கிய நோக்கமாகும்.

### 10.4 தர மதிப்பீடு

சுய உதவிக் குழுக்கள் ஆரம்பித்த 6 மாதங்களுக்குப் பிறகு தர மதிப்பீடு செய்ய தகுதியுடையவர் ஆவர். தர மதிப்பீடு என்பது சுய உதவிக் குழுக்களின் கடன் பெறும் தகுதியை நிர்ணயம் செய்ய உதவும் அளவுகோல் ஆகும். தர மதிப்பீட்டு குழுவில் இடம் பெறும் உறுப்பினர்கள்:

1. மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர்
2. ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்
3. வங்கியாளர்
4. அரசு சாரா நிறுவன பிரதிநிதி

தொடர்ந்து சேமித்தல், குழுக் கூட்டங்களின் எண்ணிக்கை, பதிவேடுகளை நல்ல முறையில் பராமரித்தல், உட்கடன் வாங்குதல், கடனைத் திருப்பிச் செலுத்துதல் ஆகியவை தர மதிப்பீட்டில் கருத்தில் கொள்ளப்படும் முக்கிய காரணிகளாகும்.

தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற குழுக்கள் கடன் இணைப்பு பெற தகுதி அடைகிறார்கள். இவர்களுக்கு எஸ்.ஜி.எஸ்.ஒய், தாட்கோ ஆகிய திட்டங்களின்கீழ் சுழல் நிதி அல்லது வங்கிகளில் நேரடிக் கடன் வழங்கப்படுகிறது. ஆறு மாதங்களுக்குப் பின்னர் தொழில் கடன் பெற



விரும்பும் குழுக்களுக்கு அவர்களின் தகுதியை நிர்ணயம் செய்ய இரண்டாவது தர மதிப்பீடு செய்யப்படுகிறது. இரண்டாவது தர மதிப்பீட்டில் தேர்வு பெற்ற குழுக்களுக்கு, தொழில் கடன் எஸ்.ஜி.எஸ்.ஒய், தாட்கோ ஆகிய திட்டங்களின்கீழ் மானியம் வங்கிக் கடனுடன் சேர்த்து வழங்கப்படுகிறது.

### 10.5 அரசு சாரா நிறுவனங்கள்

மகளிர் திட்டத்தில் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி, அவர்களுக்கு பயிற்சி அளிப்பது மற்றும் பராமரிப்பது தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் பணி ஆகும். மகளிர் திட்டத்தில் இணைந்து செயல்பட விரும்பும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

100 மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்குவது, குறைந்தபட்சம் மூன்று ஆண்டுகள் சிறப்பான செயல்பாடு போன்றவை தொண்டு நிறுவனங்களைத் தேர்ந்தெடுப்பதற்கான விதிமுறைகளாக வகுக்கப்பட்டிருந்தன. இந்த வரைமுறைகள் 50 சுய உதவி குழுக்கள் மற்றும் ஓராண்டு சிறப்பானச் செயல்பாடு என்று ஜூலை 2005–ல் தளர்த்தப்பட்டது. தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்வதற்கு, முன்பு பின்பற்றப்பட்ட விதிமுறைகளை மீண்டும் கொண்டு வந்து, தரமான மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. தற்சமயம் 638 தொண்டு நிறுவனங்கள் மகளிர் திட்டத்தில் இணைந்து செயல்படுகின்றன.

### 10.6 சுய உதவிக் குழுக்களின் தற்போதைய நிலை

1989 ஆம் ஆண்டில் ஒரு சிறு விதையாக விதைக்கப்பட்ட சுய உதவிக் குழு இயக்கம் ஆல் போல் தழைத்து தமிழகத்தின் எல்லாத் திசைகளிலும் பரவியிருக்கின்றது. 30–06–2006 அன்று நிலவரப்படி தமிழ்நாட்டில் 3,19,713 மகளிர் சுய உதவிக் குழுக்கள் மகளிர் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இந்தத் தேதியில் சுய உதவிக் குழுக்களின் விவரம் அட்டவணை–II–ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை -11**

**சுய உதவிக் குழுக்களின் விவரம்**

| | |
|---|---|
| மொத்த சுய உதவிக் குழுக்கள் | 3,19,713 |
| மொத்த குழு உறுப்பினர்கள் (இலட்சத்தில்) | 51.68 |
| கிராமப்புற குழுக்கள் எண்ணிக்கை | 2,62,270 |
| கிராமப்புற குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை | 42,68,195 |
| நகர்ப்புற குழுக்கள் எண்ணிக்கை | 57,443 |
| நகர்ப்புற குழு உறுப்பினர்கள் எண்ணிக்கை | 9,00,067 |
| மொத்த சேமிப்பு (ரூ. கோடியில்) | 1127.89 |
| தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்ற குழுக்கள் | 2,50,678 |
| கடனுதவி பெற்ற குழுக்கள் | 2,29,562 |
| வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ. கோடியில்) | 1837.61 |

### 10.7 பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு

மகளிர் திட்டத்தின்கீழ் பஞ்சாயத்து அளவில் சுய உதவிக் குழுக்களின் கூட்டமைப்பினை ஏற்படுத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பில் சம்மந்தப்பட்ட ஊராட்சியில் இயங்கிவரும் சுய உதவிக் குழுக்களிலிருந்து குழு ஒன்றுக்கு 2 உறுப்பினர்கள் வீதம் அங்கம் வகிப்பர். பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு சுய உதவிக் குழுக்களுக்கு அவர்களின் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும், குறைகளை வெளிப்படுத்துவதற்கும் ஒரு களமாகச் செயல்படும். ஒரு சுய உதவிக் குழு தனியாகச் சாதிக்க முடியாததை ஒரு கூட்டமைப்பில் இணைந்து ஆற்றல்களையும், வளங்களையும் ஒருங்கிணைப்பதின்மூலம் சாதிக்கலாம். பொருட்கள் கொள்முதல் செய்வதிலும், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதிலும் கூட்டமைப்புகள் பயனுள்ள முறையில் காரியமாற்றலாம். கூட்டமைப்புகள் ஊராட்சியில் புதிய சுய உதவிக் குழுக்களை அமைத்து, பயிற்சிகள் வழங்கலாம். மேலும் அவற்றை பராமரிக்கும் பணியையும் மேற்கொள்ளலாம்.



கூட்டமைப்புகளை வலுப்படுத்துவதன்மூலம்தான் சுய உதவிக் குழுக்கள் வருங்காலங்களில் நிலைத்த தன்மை அடைய இயலும்.

2002 ஆம் ஆண்டிலேயே ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்க அரசாணை வழங்கப்பட்டிருந்தும், 12,263 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்பட்டிருந்தும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கு அவர்களது பொறுப்புகள் மற்றும் கடமைகளை உணர்த்தும் வண்ணம் முறையானப் பயிற்சி அளிக்கவில்லை. இந்த அரசு, ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளை வலுப்படுத்தி, அவற்றை சுய உதவிக் குழுக்களின் தேவைகளை நிறைவு செய்யும் துடிப்புள்ள மக்கள் இயக்கமாக மாற்ற கூட்டமைப்பின் நிர்வாகிகளுக்கு 2006–2007 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கவும், அவர்களுக்கு பொறுப்புகள் வழங்கவும் திட்டமிட்டுள்ளது.

### 10.8 தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி

சுய உதவிக் குழு மகளிரை பல்வேறு தொழில் வாய்ப்புகளுக்கு அறிமுகப்படுத்தவும், அவர்கள் தொழில் தொடங்க ஊக்குவிக்கவும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தால் தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி நடத்தப்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் முன்னோடி நிறுவனமான தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் பிற அரசுத் துறை நிறுவனங்களான தாட்கோ, ஊரக வளர்ச்சித் துறை, குடிசைப் பகுதி மாற்று வாரியம், வேளாண்மைத் துறை, தொழில் மற்றும் வணிகத் துறை, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை, பட்டு வளர்ச்சித் துறை போன்றவற்றுடன் ஒருங்கிணைந்து செயல்பட்டு 31–03–2006 வரை 6,34,991 பெண்களுக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளித்துள்ளது. இதில் மகளிர் மேம்பாட்டு நிறுவனம் மட்டும் 1,14,747 பெண்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தை வலுப்படுத்தி 22,000 மகளிருக்கு, பயிற்சி அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 10.9 திறன் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி

சுய உதவிக் குழுவில் உள்ள பெண்கள் வருமானம் தரும் பொருளாதார ரீதியானத் தொழில்களைச் சுயமாக துவங்க ஏதுவாக திறன் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் வழங்கப்பட்டு வருகிறது. பயிற்சிக் காலமும் பயிற்சிக்கான செலவினமும் உறுப்பினர்களால்

தேர்ந்தெடுக்கப்படும் தொழில் தன்மையை பொறுத்ததாகும். மார்ச் 2006 வரையிலும் 60,957 பெண்களுக்கு திறன் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. 2006–2007 ஆம் ஆண்டில் 23,000 மகளிருக்கு இப்பயிற்சியை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## 10.10 சுய உதவிக் குழுக்களின் தாக்கம்

மகளிர் திட்டத்தின் ஆதார நடவடிக்கைகளான மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், அடிப்படைப் பயிற்சி மற்றும் திறன் வளர்த்தல் போன்றவை குறிப்பிடத்தக்க அளவில் மகளிரின் குறிப்பாக ஊரக மகளிரின் சமூக நிலையை உயர்த்தி உள்ளது. சுய உதவிக் குழு இயக்கம் பின்வரும் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது.

- அரசு நலத் திட்டங்கள் பற்றி ஏழைப் பெண்களிடையே விழிப்புணர்வு
- சாதி சமயம் போன்ற சமூகத் தடைகளைத் தகர்த்து பெண்கள் ஒருங்கிணைந்துள்ளனர்.
- சுய உதவிக் குழுவில் உள்ள பெண்களின் தன்னம்பிக்கை உயர்ந்துள்ளது.
- தொடர்புத் திறனில் முன்னேற்றம்.
- கிராம சபா மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தீவிரப் பங்கேற்பு.
- கிராம அளவில் பிரச்சினைகளுக்கான தீர்வு காணுதல்
- வங்கி மற்றும் பிற இடங்களுக்குச் செல்வதில் சிறந்த விழிப்புணர்வு
- கந்துவட்டி முறை ஒழிக்கப்பட்டுள்ளது.
- 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் சுய உதவிக் குழு மகளிர் பெருமளவில் பங்கேற்று, 2,597 பேர் வெற்றி பெற்றுள்ளனர்.

சுய உதவிக் குழு இயக்கம் ஏழைப் பெண்களிடையே நல்ல பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. தற்போது சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்கள் பலவகையான தொழில்களில் வெற்றிகரமாக ஈடுபட்டுள்ளனர். 452 பொது விநியோக கடைகள் சுய



உதவிக் குழுக்களால் நடத்தப்படுகின்றன. கல்குவாரி, கூரியர் சர்வீஸ், மினி பஸ், ஆட்டோ ஓட்டுதல், சிற்றுண்டி சாலை நடத்துதல், பேப்பர் கோப்பைகள் தயாரிப்பு, இன்டர்நெட் தகவல் மையங்கள், இயற்கை உரம் தயாரிப்பு, சணல் பைகள் தயாரிப்பு, ஆயத்த ஆடை தயாரிப்பு. குறைந்த விலையில் சுகாதாரமான நாப்கின்கள் தயாரிப்பு போன்ற பல்வேறு வருமானம் ஈட்டும் தொழில்களை சுய உதவிக் குழு பெண்கள் செய்து வருகின்றனர்.

## 10.11 சுய உதவிக் குழுக்களின் தரம்

மகளிர் திட்டத்தின்மூலமாக முறையாக வழங்கப்பட்ட பயிற்சியே, சுய உதவிக் குழு மகளிரை பண்பட்டவர்களாகவும், திறன் வாய்ந்தவர்களாகவும் மாற்றி அவர்களது சமூக மற்றும் பொருளாதார நிலையில் பெருமளவிற்கு உயர்வைத் தந்துள்ளது. இந்நிலையில் 2002 ஆம் ஆண்டு மகளிர் திட்டத்தில் பின்வரும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

- சுய உதவிக் குழு உறுப்பினருக்கு பயிற்சியின்போது நாளொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த பயிற்சித் தொகை (தினசரி ஊதிய இழப்பை ஈடுகட்டும் வகையில்) ரூ.45/–லிருந்து ரூ.7.50 ஆக குறைக்கப்பட்டது.
- அரசு சாரா நிறுவனங்களுக்கு, வழங்கப்பட்டு வந்த குழு அமைப்புத் தொகை மற்றும் குழு பராமரிப்பு தொகை கணிசமாக குறைக்கப்பட்டது.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் பணியாற்றிய உதவித் திட்ட அலுவலர்கள் 6 பேர் என்பது 3 பேராகக் குறைக்கப்பட்டது.

சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கான பயிற்சித் தொகை வெகுவாகக் குறைக்கப்பட்டதால், பயிற்சிகளுக்கு சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வருகை குறைந்தது. மறு சீரமைப்பிற்குப்பின் 30 சதவீதம் உறுப்பினர்களே சுய உதவிக் குழு உறுப்பினர் பயிற்சியின் 4 பாடத் திட்டங்களிலும் பங்கேற்றுள்ளனர்.

2005–2006 ஆம் ஆண்டில் 7 மாதக் குறைந்த இடைவெளியில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின்மூலம் 1,15,000 குழுக்களும், ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் 60,000 குழுக்களும் மற்றும் வேளாண்மைத் துறைமூலம் 25,000 குழுக்களும் ஆக மொத்தம் 2 இலட்சம் சுய உதவிக் குழுக்களை அமைக்க அரசாணை வழங்கப்பட்டது.

குறுகிய கால இடைவெளியில் அதிக எண்ணிக்கையிலான சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டதால், புதிய சுய உதவிக் குழுக்களுக்குப் போதுமான பயிற்சிகள் வழங்க இயலவில்லை. 1,20,000 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு (வட்டார வளர்ச்சி அலுவலர்களால் ஏற்படுத்தப்பட்ட குழுக்களையும் சேர்த்து) அடிப்படைப் பயிற்சிகள் வழங்கப்படவில்லை. 1,29,000 சுய உதவிக் குழுக்கள் தர மதிப்பீட்டிற்கு தகுதி பெறவில்லை.

இந்த அரசு குழுக்களின் எண்ணிக்கையை விட தரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்க திட்டமிட்டுள்ளது. 2005–2006 ஆம் ஆண்டு மிகவும் குறுகிய காலத்தில் அதிக அளவில் சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டதால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண அரசு முடிவு செய்துள்ளது. இந்த நிதி ஆண்டிலிருந்து சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குப் பயிற்சித் தொகை முன்பு வழங்கப்பட்டது போல நாளொன்றுக்கு ரூ.45/- ஆக வழங்கப்பட உள்ளது. 2005–2006 ஆம் ஆண்டில் புதிதாக அமைக்கப்பட்ட 2 இலட்சம் சுய உதவிக் குழுக்களின் பயிற்சித் தேவைகளை ஆராய்ந்து, இக்குழுக்களை வலுப்படுத்துவதற்குத் தேவையான பயிற்சிகள் வழங்கப்பட உள்ளன.

### 10.12 2006–2007 ஆம் ஆண்டில் முன்னுரிமை அளிக்கப்படவுள்ள பணிகள்

- அடுத்த 5 ஆண்டுகளுக்குள் சுய உதவிக் குழு இயக்கத்திலுள்ள மகளிர் எண்ணிக்கை 1 கோடியாக உயர்த்தப்படும். இதில் சிறுபான்மையினர், தாழ்த்தப்பட்ட/மலை ஜாதியினர் மற்றும் நகர்ப்புற குடிசைப் பகுதியிலுள்ள மகளிரை சேர்ப்பதற்கு சிறப்புக் கவனம் செலுத்தப்படும். 2006–2007 ஆம் ஆண்டில் 2.5 ஆயிரம் புதிய சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும்.
- பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்புகளின் நிர்வாகிகளுக்கு அவர்களது பங்கு மற்றும் பொறுப்புகள் குறித்து பயிற்சி அளித்து, கூட்டமைப்புகள் வலுப்படுத்தப்படும்.
- சுய உதவிக் குழு உறுப்பினர் பயிற்சி, ஊக்குநர் மற்றும் பிரதிநிதிப் பயிற்சி ஆகிய பயிற்சிகளின்போது வழங்கப்பட்ட பயிற்சித் தொகையை நாளொன்றுக்கு ரூ.7.50–லிருந்து ரூ.45/–ஆக உயர்த்தி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்.





- சுய உதவிக் குழுக்கள் தயாரித்த பொருட்களின் விற்பனையை உயர்த்த தேசிய, மாநில, மண்டல மற்றும் மாவட்ட அளவில் அரசுத் துறைகள் நடத்தும் விற்பனைக் கண்காட்சி/ பொருட்காட்சிகளில் சுய உதவிக் குழுக்களைப் பங்கேற்கச் செய்தல் போன்ற வசதிகள் செய்யப்படும்.
- சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்த பொருட்களைச் சந்தைப்படுத்த, வாகனம், இயந்திரங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த ரூ.10 இலட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வழங்கப்படும்.
- 10,000 இளைஞர் குழுக்கள் அமைக்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்குவது போல், ரூபாய் 10 கோடியில் அனைத்து உதவிகளும் வழங்கப்படும்.
- அரவாணிகளுக்கென சிறப்பு சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படும்.
- 22,000 மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி ரூ.88 இலட்சம் செலவில் வழங்கப்படும்.
- 23,000 மகளிருக்கு தொழில் பயிற்சி ரூ.3.50 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

8 ஆண்டுகளில் செயல்படுத்தப்பட உள்ள சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பை தமிழ்நாடு சுய உதவிக் குழுக்கள் நலச் சங்கத்திடமிருந்து இந்நிறுவனத்திற்கு மாற்றுவதற்குப் பன்னாட்டு வேளாண்மை வளர்ச்சி நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

### 10.13 முற்றம்

தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் "முற்றம்" என்ற சங்கத்தைப் பதிவு செய்து, இதன்மூலம் "முற்றம்" என்ற மாத இதழ் பிரதி மாதமும் வெளியிட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் சுய உதவிக் குழு மகளிர் முன்னேற்றம் மற்றும் செயல்பாடு குறித்த விவரங்களைச் சேகரித்து மாநிலம் முழுவதும் சென்றடையச் செய்வதாகும்.

தற்பொழுது ஒவ்வொரு மாதமும் 1,10,000 பிரதிகள் அச்சிடப்பட்டு, வெளியிடப்படுகிறது.

[2006 ஆகஸ்ட் 1

## 10.14 தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்று தன்னார்வலர்கள் ஆதார மையம் (டி.என்.வி.ஆர்.சி.)

2001 ஆம் ஆண்டில், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் தமிழ்நாடு மாநில தன்னார்வத் தொண்டு நிறுவனம் மற்று தன்னார்வலர்கள் வள ஆதார மையத்தினை அரசு சார்ந்த, அரசு சாரா மற்றும் சமூகம் சார்ந்த நிறுவனங்களின் திறன்களை மேம்படுத்துவதற்காக உருவாக்கியது. 2006–2007 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் பலவிதமான பயிற்சிகள் மற்றும் பணிப்பட்டறைகள் மூலம் சுய உதவிக் குழுக்கள் கூட்டமைப்பு போன்ற சமுதாய அமைப்புகள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் திறன்களை மேம்படுத் திட்டமிட்டுள்ளது.

## 10.15. உலக வங்கி உதவி பெறும் தமிழ் நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமை குறைப்புத் திட்டம்

தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை செயல்படுத்துவதன்மூலம் வறுமை மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை மாற்ற உறுதி பூண்டுள்ளது மகளிர் திட்டம் மற்றும் பிற திட்டங்கள் ஏழைகளை ஒருங்கிணைத்து சுய உதவிக் குழுக்களாக அமைப்பதில் வெற்றிபெற்றிருப்பினும் பின்வரும் நிலைகளை எய்துவதற்கு அதிக அளவில் முயற்சிகள் தேவைப்படுகின்றன.

- ஏழை, எளியோர் மற்றும் நலிவுற்றோரை அரசுத் திட்டங்கள் சென்றடைதல்
- தற்போதுள்ள சுய உதவிக் குழுக்களைப் பலப்படுத்தி அவர்களின் திறன் மற்றும் வளங்களை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களைத் தன்னிறைவு பெற்றவர்களாகவும் தன்னம்பிக்கை மிகுந்தவர்களாகவும் ஆக்குதல்.
- சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களையும், வியாபாரத் தொடர்புகளையும் ஏற்படுத்தி வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வளத்தினை மேம்படுத்துவதன்மூலம் அவர்களது வருமானத்தை உயர்த்துதல்
- சுய உதவிக் குழுக்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் இடையே வலுவான தொடர்புகளை ஏற்படுத்துதல்



2006 ஆகஸ்ட் 11]

மேற்கண்ட நோக்கங்களை மனதில் கொண்டும், மகளிர் திட்டம் ஏற்படுத்தியுள்ள வலுவான அடித்தளத்தை கொண்டும், தமிழ்நாடு ஆற்றலளிப்பு மற்றும் வறுமைக் குறைப்புத் திட்டம் வடிவமைக்கப்பட்டு உலக வங்கியின் நிதி உதவிக்காக அனுப்பப்பட்டது. உலக வங்கி இத்திட்டத்திற்கு 2005 ஆம் ஆண்டு அனுமதி அளித்தது. ஆறு வருட காலம் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ரூபாய் 717 கோடிகளாகும்.

மக்களே செயல்படுத்தும் வண்ணம் அமைந்துள்ள இத்திட்டம், மகளிர் திட்டத்தின்கீழ் குழுக்கள் உருவாக்குதல் மற்றும் சமூக ஆற்றலளிப்பு போன்ற குறிக்கோள்களிலிருந்து மாறுபட்டு, ஏழை எளிய மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கும், வாழ்வாதார மேம்பாட்டிற்கும் முக்கியத்துவம் அளிக்கிறது. இத்திட்டத்தின் இலக்கு ஏழை எளிய குடும்பங்கள், மிகவும் நலிவுற்றோர், ஒதுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் ஊனமுற்றோர் ஆவர். இத்திட்டத்தில் பயன்பெறுவோர் மக்கள் பங்கேற்புடன் கூடிய ஆய்வு மூலம் கண்டறியப்படுகின்றனர்.

### 10.15.1 இத்திட்டத்தின் சிறப்பம்சங்கள்

- மக்களே செயல்படுத்துதல் என்ற அணுகுமுறையை அடிப்படையாகக் கொண்டு மக்களே தங்களுக்குத் தேவையான திட்டங்களை முடிவு செய்து, திட்டமிட்டுச் செயல்படுத்துவது.
- மிகவும் நலிவுற்றோர் மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு சிறப்பு கவனம்.
- ஏற்கெனவே உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு உதவி மற்றும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிதாகக் குழுக்கள் அமைத்தல்.
- சுய உதவிக் குழுக்களுக்குத் தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகளைத் தொடர்ந்து அளிப்பது (திறன் வளர்ப்பு, விற்பனை, தொழில்நுட்பம்) மற்றும் வியாபார இணைப்புகளை ஏற்படுத்துவது
- நிலைத்த தன்மைக்காக கூட்டமைப்புகளை உருவாக்குதல்.

- ஒவ்வொரு 10–15 ஊராட்சிகளுக்கும் 5 ஒருங்கிணைப்பாளர்கள் கொண்ட அணி திட்டப் பணிகளில் மக்களுக்கு தொடர்ந்து உதவி புரிவார்கள்.
- ஊராட்சிகளுக்கு ஊக்க நிதி அளிப்பதன்மூலம் அவர்களையும் திட்டத்தில் ஈடுபடுத்துவது.
- ஒவ்வொரு ஊராட்சியிலும் ஏழைப் பெண்களைக் கொண்ட சுய உதவிக் குழுக்களிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராம வறுமைக் குறைப்புச் சங்கம் என்ற அமைப்பு ஊராட்சித் தலைவர் தலைமையில் அமைக்கப்பட்டு திட்டம் செயல்படுத்தப்படும்.

இத்திட்டம் மகளிர் திட்டத்திலிருந்து பின்வரும் இனங்களில் வேறுபட்டுள்ளது.–

- மக்களே முடிவெடுத்துச் செயல்படுத்துவது
- திட்ட நிதியை நேரடியாக கிராம மக்களே கையாளுவது
- தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின்மூலம் அல்லாது திட்டப் பணியாளர்களின் உதவியுடன் மக்களே செயல்படுத்துவது.
- கிராமப் பஞ்சாயத்துகளுக்கு ஊக்க நிதி அளிப்பதன்மூலம் அவர்களையும் திட்டப் பணிகளில் ஈடுபடுத்துவது.
- தொழில் திறன்களை வளர்த்து, வியாபாரத் தொடர்பை ஏற்படுத்தி, ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார வளத்தினை மேம்படுத்துவது.
- ஏழைப் பெண்கள் மட்டுமின்றி நலிந்தோர், ஊனமுற்றோர் மற்றும் பழங்குடியினர் ஆகியோருக்கு சிறப்புக் கவனம்.

### 10.15.2 திட்ட செயலாக்க பகுதிகள்

இத்திட்டம் மிகவும் பின்தங்கிய 70 வட்டாரங்களை உள்ளடக்கிய 15 மாவட்டங்களில் உள்ள 2,432 ஊராட்சிகளில் செயல்படுத்தப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ள மாவட்டங்களும், வட்டாரங்களும் கீழ்க்கண்ட அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.



- 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி வட்டாரங்களில் வசிக்கும் ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மக்களின் எண்ணிக்கைக்கு 50 விழுக்காடு மதிப்பு.
- அவ்வட்டாரங்களில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள மக்களின் எண்ணிக்கைக்கு 50 விழுக்காடு மதிப்பு.

### 10.15.3 திட்டச் செயலாக்க அமைப்புகள்

இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கானத் திட்டச் செயலாக்க அமைப்புகள் பின்வருமாறு:

- மாநில அளவிலான சங்கம்
- மாவட்ட அளவிலான சங்கங்கள்
- 10–15 ஊராட்சிகளுக்கு ஒன்று என்ற விகிதத்தில் திட்ட ஒருங்கிணைப்பு அணிகள்.
- கிராம அளவில் அனைத்து பிரதிநிதிகளை கொண்ட முக்கிய செயலாக்க அமைப்பாக கிராம வறுமை குறைப்புச் சங்கம்.

சங்கங்களின் பதிவு சட்டத்தின்படி, மாநில மற்றும் மாவட்ட அலகுகள் தனித் தனி சங்கங்களாக செயல்படும். மாவட்ட திட்ட அலுவலகமும், மாநில திட்ட அலுவலகமும் தனி சங்கங்களாகப் பதிவு செய்யப்பட்டு 15 மாவட்டங்களிலும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன..

### 10.15.4 திட்டப் பணியாளர்கள்

உலக வங்கியின் நிபந்தனைப்படி, மாவட்ட அளவில் உள்ள மாவட்டப் பணியாளர்களையும், திட்ட ஒருங்கிணைப்பு அணியில் உள்ள பணியாளர்களையும் தனியார் மனித வள நிறுவனம்மூலம் தேர்வு செய்யப்பட்டனர். உலக வங்கியின் கொள்முதல் விதிகளின்படி, தேர்வு செய்யப்பட்ட ஸ்ரீஜன் இன்ஃப்ராடெக் என்ற தனியார் மனித வள நிறுவனம் இப்பணியை செய்து முடித்தது.

[2006 ஆகஸ்ட் 11

### 10.15.5 திட்டத்தின் தற்போதைய நிலை

இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடான ரூ.717 கோடியில், 2005–2006 ஆம் ஆண்டிற்கு ரூ.38 கோடி ஒதுக்கப்பட்டது. இந்த ஒதுக்கீட்டில் 31–3–2006 வரை ரூ.2.17 கோடி மட்டுமே செலவிடப்பட்டது.

இந்த அரசு பதவி ஏற்றபின், இத்திட்டத்தின் செயலாக்கம் விரைவுப்படுத்தப்பட்டு, பின்வரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

- 105 உதவித் திட்ட மேலாளர்களுக்கும், 17 திட்ட ஒருங்கிணைப்பு அணிகளுக்கும் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.
- திட்டக் கையேடு மற்றும் செயல் திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது.
- திட்டப் பணியாளர்களின் பயிற்சிக்கான பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- முதல் கட்டமாகத் திட்டம் செயல்படுத்தப்படும் 15 வட்டாரங்கள், மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்தாலோசித்து முடிவு செய்யப்பட்டுள்ளன.

பின்வரும் கால அட்டவணைப்படி படிப்படியாக 70 வட்டாரங்களிலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை–12**

**செயல் திட்டம்**

| நிலை | செயல்படுத்தப்படும் மாவட்டங்களின் எண்ணிக்கை | செயல்படுத்தப்படும் வட்டாரங்களின் எண்ணிக்கை | காலம் |
|---|---|---|---|
| முதல் கட்டம் | 15 | 15 | அக்டோபர் 2006 |
| இரண்டாம் கட்டம் | 15 | 15 | பிப்ரவரி 2007 |
| மூன்றாம் கட்டம் | 15 | 20 | ஜூன் 2007 |
| நான்காம் கட்டம் | 15 | 20 | அக்டோபர் 2007 |



2006 ஆகஸ்ட் 11]

இத்திட்டத்திற்காக நடப்பு ஆண்டில் (2006–2007) ரூ.162.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 11. வரவு-செலவுத் திட்டம் – 2006–2007

2006–2007 திருத்திய மதிப்பீட்டில் ரூ.3,212.52 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் எதிர்பார்க்கப்படும் வருவாய் செலவினம் ரூ.2,368.16 கோடி மற்றும் மூலதன செலவினம் ரூ.844.36 கோடி ஆகும்.

### 12. முடிவுரை

அதிக எண்ணிக்கையில் நிறைவேற்றப்படாமல் நிலுவையில் உள்ள பணிகளை முடிக்க வேண்டிய சூழ்நிலையில் இந்த அரசு பொறுப்பேற்றுள்ளது. இருந்தபோதிலும் நாங்கள் கடந்த காலத்தை நினைவு கூர்ந்து காலம் கடத்த விரும்பவில்லை.

தமிழக மக்கள் எங்களுக்கு அளித்துள்ள மகத்தான பொறுப்பினை இணையில்லா ஈடுபாட்டுடன் நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது. விட்டுச் சென்றுள்ள அதிக அளவிலான நிலுவைப் பணிகளை முடிப்பதோடு மட்டுமல்லாமல் வறுமை ஒழிப்பு, வேலைவாய்ப்பு, மகளிர் மேம்பாடு, ஊரகக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் சுனாமி புனரமைப்பு போன்ற பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் போர்க்கால அடிப்படையில் நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்துவோம். மேலும் ஊராட்சி நிர்வாகத்தின் அனைத்து அம்சங்களையும் மேம்படுத்துவோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் எழுச்சிமிகு தலைமையில் அனைத்துத் தரப்பினரின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

227424
சென்னை-600 009